உ

ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் துணை.

# ஸ்ரீ மீனாக்ஷி திக்விஜய நாடகரத்னாவளி.

OFFICE OF THE REGISTRAR
4 - JAN 1915
MADRAS.

மதுரை

அசனாத்தம்பி அவர்களால்

இயற்றப்பட்டு

மாயவரம்

ஸரஸ்வதி விலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1914

Q25:417
M14
170148.

உ

ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் துணை.

# ஸ்ரீ மீனாக்ஷி திக்விஜய

# நாடகாத்னுவளி.

OFFICE OF THE REGISTRAR OF ...
4 - JAN 1915
MADRAS

மதுரை
அசனாச்தம்பி அவர்களால்
இயற்றப்பட்டு

மாயவரம்
ஸரஸ்வதி விலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1914

விலை அணா 12.]

170148

750

OFFICE OF ... 4 - JAN 1915 MA R.

உ

ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் துணை

# ஸ்ரீமீனாக்ஷிதேவி திக்விஜய நாடகரத்னாவளி

விருத்தம்

]த்தில்

பூவின்மணம்போல் அண்டபுவனமெங்கும் நிறைந்திந்தப் பூதல
மாவினருள் சிறந்தோங்கும் மதுரைமன்னன்சேயாகிமகுடம்சூடி
மேவிஇருநான்கு திக்கும்விஜயம் செய் தீசர்க் கு விவாகமாகி
தேவி என அமர்ந்து வளர்செல்வமீனாக்ஷிபதம் சிந்தைவைப்
[போ

சீர்சிறந்தமதுரை நிதம் செழித்தோங்கும்படி
செங்கோல் செலுத்திவாழ்க
பார்சிறந்த மலைத்துவஜபாண்டிரா ஜேந்திரன் பாலுதித்து
பேர்சிறந்த அங்கயற்கண் பேசதிக்கு விஜயம்செய்த
பெருமை சொல்ல வார்சிறந்தஉமை ஈன்ற வளர்சித்தி
விநாயகர்தான் வணங்குவேனே

அகம்செழிக்கும் புகழ்தழைக்கும்
அழகு செழித்தோங்கு வளர் ஆலவாயில்
ஜெகம்விளக்கும் திருச்செங்கோல்சிறந்த
மலையத்துவஜ ராஜேந்திரன் செய்யும்
மகமுளைத்த அமிருதகுணமகராஜி
ஸ்வயவீரியமகிமைபாட ஸ்தானம்விளக்கும் பழனிமலை
ஸ்வாமி சேவடி நாளும் தொழுகுவேனே

மாதவர்போற்றிய மூதூர்மகராஜன் தவமீதில் மாதாய்வந்த
ஸ்ரீயரிஸ்ரீமீனாக்ஷிதேவிதிக்குஜெயம்செய்த ஸ்ரீங்காரங்கன்
நாதமிகுசங்கீத நாடகமாய்ப்பாடி யெங்கும் நவிலுதற்கு
வேதமுதல்துதித்தேத்தும் வேந்தர் சொக்கலிங்கர்பதம்வேண்டு
[வேனே

சென்னல்கன்னல் கமுகு பிலா தேங்கு
பின்னைகதனிகஞ்சம்சிறந்தமூதூர்
மன்னரெனும் மலையத்துவஜன் மகமதில்வந்த
அங்கயற்கண்மகுடம் சூடி
பொன்னகர்முதல் எண்திக்கில்போர்செய்து
ஜெயம்கொண்ட புகழைச்சொல்ல
நன்னயம்சேர் அலங்கிருத

வையகம் விண்டுதிதேவி வளர்மதுரைமலையத்துவஜ
மகராஜேந்திரன்செய்த
தவமவதரித்து ஜகத்ரக்ஷகியாய் மகுடம் சிறயணிந்து
கைதனில்தனுவெடுத்து கணங்கொள்திக்கு
ஜெயங்கொண்ட கதையைச்சொல்ல
துய்பகலைமகள் மருவும் சுகிருதவி திபதப்நிதமும்தொழுகுவேனே

ஆமாகி ஓமாகி அகிலபுவனங்களை துவுமாகிதேவி
ஸ்ரீமானெண்டுலகாளும் ஸ்ரீமலயத்துவஜராஜன்செல்வியாகி
தாமாக அஷ்டதிக்கில்சமர்செய்து ஜெயங்கொண்டதகதைசொல்ல
பூமாதுதவமவந்தபுனிததிருமாதுபதம் போற்றுவேனே

மலைமகளாகிய தேவி மலையத்துவஜன்மகளாகி மகுடம் சூடி
...லைகடல் சூல்அகிலமுழுதாண்டிட்க சக்கிரவர்த்தியாகத்தா...
சலைபதுகொண்டிரு நாலுதிக்குகளும் ஜெயம் செய்ததிறமை
[சொல்ல
கலைமகள் ஸ்ரீங்காரபதசபலத்து அனுதினமும் காப்புத்தானே

தோடயம் ராகம் நாடைதாளம் ஜம்பை

சீர்விளங்கும் மாமதுரை தங்கள் குலபாண்டியர்கள்
பேர்விளக்க வந்துதித்த பெண்ணரசுகாதல
பார்விளங்கும் செந்தமிழால் பாடிநிதம
போற்றிசெய்ய தார்விளங்குமைந்தரா
தந்திமுகன் துணையே ஜெய ஜெய (௧)

அந்தமிகுந்தோங்கும் மதுராபுரியாள்
மீனவர்க்கு ஸந்ததியதாக அவதாரம் செய்து
தேவி விந்தையுகந்தஷ்டதிக்கும்
விஜயம்செய்த வீரம் சொல்ல கந்தபலமணி ஜெய ஜெய(௨)

செந்தூர்கந்தர்பதம்துணையே
தங்கர்துதிமாமலையத்துவஜபாண்டியர் செய்தவதத்தில்
மங்கள கல்யாணி கௌமாரி அவதரித்து
சங்கைபொருந்திய விஜயம்தான்சிறந்த
காதலசொல்ல கெங்கையணி சொக்கவிக்கர்
கடவுள்பதம்துணையே ஜெய ஜெய (௩)

தேவிதிக்குகளில் விஜயம் செய்திடும்
ஸ்ரீரங்காரபதை காவிய புராணங்கள்
...ல்கதையிலெடுத்தடியேன்
...னத்தில் நாடகமாய்ப்பாடிநிதம்
...ய மூவுலகும்சொல்
...பதம் ...ணையே ஜெய ஜெய (௪)

பந்துவராளி ராகம் ஆதிதாளம்

மங்களம் ஸ்ரீமீனாக்ஷிக்கு மங்களம் மங
ஸ்ரீமீனாக்ஷிக்குமகஸுந்தரேசருக்கும் அங்கமலைபத்துவஜர்
தோகை காஞ்சனைமாலைக்கும் மங்க
அஷ்டதிக்குபாலருக்கும் ஐங்கரர்க்
வேலவர்க்கும் இஷ்டமந்திரிஸுமதிக்கு
இன்பசதாநந்தருக்கும் மங்களம
மங்கையர்க்கும் மாயவர்க்கும் பார்வதிக்கும் லெக்ஷ்மிக்கும்
எங்குமிருபாவலர்க்கும் ஈரேழுலகத்தோருக்கும் மங்களம்
திசைகளெங்கும் துதிசெய் தேவி மீனாக்ஷிக்குவிஜய
நாடகபிரபந்தம் விளம்பசனு தம்பிக்கும் மங்களம்
ஸ்ரீமீனாக்ஷிக்கு மங்களம்

ஆசரிய விருத்தம்

அதி செல்வ மதுரைவளர் ஐப்பர் சொக்கலிங்கேசர்
அறுபத்திநான்கு விளையாட்டருளியதில் மனோன்மண
அவதாரமுதல் அனைத்துமி அளித்தவரையில் விதிக்கதை
ஐந்தையும் புகழ்மதுரம்பொழிதிக்கு விஜயநாடகமதாக
வெள்ளிமலை நாதரெனும் வள்ளலோடு பெரியவள் விளங்கு
அழகிகோங்குத்தேங்கூர் பதியதில்துதியுக்த தீரன்
அரிகரபுத்திரன்பர் தீவன் தவமுதித்த பாலன்
வெகு வாஞ்சாலன் ஸுகுணனசனுத்தம்பி
பாதநயமுகந்து பாடிஹிதசாலியவாகன சகாப்தமதில்
ஆயிரத்தெண்ணூத்திமுப்பத்தைந்தில்
இலகுமதை பூசமதில் தலங்கு பெரியவள்
முன்னுக்கெழுலறங்கேத்தினரெ

அகவல் ராகம் பியாகு தாளம் ஆதி.

திருநிறைமதுரை செழுமதிவம்சமதுரை
குலசேகரன் ஸுதன் மலையத்துவஜன்
பாண்டியராஜனும் பாரிபொன்மாலையும்
வேண்டிய மந்திரிவீரிய ஸுமதியும்
தினம் வளர்செங்கோல் செலுத்திடுமநாளில்
கனம்தரும் புதல்வன் கவலையுண்டாகி
ஆண்டுபதினாயிரம் அடுத்திடகர்த்தனை
வேண்டுதல் செய்து வெகுதபம் செய்து
ஆறுபதிநாரரை அலைமகம்செய்து
நூறுவதுசெய்யநோக்கையிலிந்திரன்
புத்திரயாகம் புரிந்திடுநாளில் சித்தியென்றுரைக்க
தென்னவன்நடத்த

காஞ்சனைமுன்செய் கனதவபேரில்
வாஞ்சையதர்கிபாலைமனோன்மணி
வயதொருமூன்றுவளர்தனமூன்று
நயமிகுலெக்ஷணம் நாலெட்டும்பூண்டு
மகமதிலிருந்து மாதகவல்லியாய்
தக புக தகனதானெழுந்துதித்தாள்
உதித்தபெண்ணரசை உகந்தெடுத்தேந்தி
துதித்துள்ளம் குளிந்து துரைமலையத்துவஜன்
ஸ்தனமூன்றிருப்பதை தான்கண்டுகலங்கி
மனம்நொந்துருகி மயங்கும் போது
ஆகாசமதிலோரந்திரவசனம் லோகாம்பிகையெ
உன்மகளானுள் தனமொன்று கணவன்தனைக்கண்டால்
மறையும் கனம்பொருந்திபபேர்கயல்கண் தடாதகை
ஆண்பிள்ளைக்குகந்த அடுக்கெல்லாம்செய்து
நீண்டமுடிதரித்துநீமகிழென்று
சொன்னதில் தெளிந்து தோகையை வளர்த்து
பன்னகரத்தின பணிமுடிதரித்து
மலையத்துவஜனும்மகிமை சேரீசன் நிலைபக்குரித்து
நேமமதாய்ச்சேர்ந்தான்
அம்பிகைதானெ அரசதையாண்டுதென்புயர்
யௌவனம் சிறந்தவளெழுந்து
இந்திரனக்கினிஎமனிருதிவருணன்
சுந்தரவாயுசுகுணகுபேரன்
திக்குகள் ஜெயித்து ஜெயம்மிகசிறந்து
மெய்க்குமீசான்னியம் மேவிவந்திறங்கி
நந்தியைநகைத்து நாதன்வந்தெதிர்க
சுந்தரஸ்தனமதில் சுழித்தொன்றுமறைய
அங்கயற்கண்கண்டடிபணியந்தேற்ற
திங்கள்தன்வாரம் திருகல்லியாணம்
நடவென்றுரைத்த நாதரைப்பணிந்து
மடமயிலெழுந்து மதுரையில்வந்து
அடவுடன்வேகிமை அடங்கலும் செய்து
விடையவர்வந்து விவாகமும்நடந்து
பதஞ்சலி வியாக்கிரபாதருக்காக
சிதம்பரநடனம் செய்திங்கெஅருளி
கொடும்பசியடுத்தகுண்டோதரர்க்கு
அடும்பலத்துடனே அன்னக்குழியளித்து
வைகையுண்டாக்கிவலுவிடாய்நீக்கிசெய்கைகள்
முழுதும் செய்துஜெகதீசர்
சுந்தரபாண்டியதுங்கராயிருந்து

சங்கிரவம் சதடாதகையுடனே
செங்கோல்செலுத்திசிறப்புடன்வாழ்ந்த
மங்களசுதையை மகிழ்க்குவிஜயம்
நாடகம்செய்துநான்துதிசெய்ய
பாடகர்நாவலர்பதம் தொழுதேனே

அவையடக்க விருத்தம்

பாச்சியென்றும் சோச்சியென்றும் பகரும்சிறுமதலைமொழிப்பணி கண்டேத்தும்
காச்சியவெண்பாலை அமுதுகனிந்தளிக்கும் அன்னைப்போல [சவிஞரெல்லாம்
பேச்சுநிதம் தெரியாத பேதைதிக்கு விஜயதமிழ்பேசினத்தை
சாச்சுசுந்துமுறியாமல் ஸகலபிழைகளும் திருத்திசதம்செய்வீரே
கானமயிலாடுவதைக்கண்டாடும் வான்கோழிகருத்துபோலெ
ஞானமிகு அதிமதுரநாவலரைதரிசனம்செய்நன்மையால்யானும்
தீனதயாபரியானதேவி திக்குவிஜயத்தமிழ்செப்புகின்றேன்
ஆனதமிழுடன் இதுவோர் அறிந்தமிழெனறெவரும் உகந்தருளு [வீரே

விருத்தம்

உறங்கள்மெத்தமலையத்துவஜன்ஓங்கு
மதுராபுரியான உயர்வெண்முத்துச்சாங்கள்
நவரத்ன முடிஜரிகையாடப்பதக்கம்
தரித்தோரைந்து கரங்களெழில்
சிறந்திந்தகாசினியில் அடியவர்கள் கருத்துக்கேத்த வரங்கள்
தந்து ஆதரித்துதினம்வளர்ஸித்தி விநாயகர்தான் வருகின்றாரெ.

தரு. பைரவி ராகவும். ரூபக தாளம்.

விநாயகர்வந்தாரெ மதுரை, ஸித்திவிநாயகர்வந்தாரெ
விநாயகர்வந்தாரெவேண்டடியோரைநத்தி
ஸகாயங்கள் செய்தாண்டுதேர்க்காத்துரக்ஷிஸித்தி விநாயகர்
பக்திசெய்தெவர்களும் நித்தியம்பணிந்திட
நதியகர்மமும் முக்தியும் தந்திட
எத்திசையும்புகழும் சக்திதன்மகனை
வெற்றிவேல்ஸோதரனத் சமுகத்திஸித்தி விநாயகர்
துதிபொருந்தியவைகைமதிசிறந்தமதுரை
பதிநிறைந்தவர்க்கும் கதிதரும் செயலதாய்
நிதியுலகமார்க்கதிபதிமுதலந்த
விதிஹரிபணிந்தேத்தும் மதிதரிசுதவித்தி விநாய

உறம்பெருந்திருதர்கள் புமறைநனரித்திடும்
மறன்மகிழ்ந்திட—ழில் குஞ்சரமுகமும் துலங்க
சிரம்வணங்கள் பார்க்குபாசுகங்கள்பொருந்த
வரமருளிபநல்லவிதாம்செய் ஐங்கரசித்தி விநாயகர்

விருத்தம்

நீதிமேவியசெல்வங்கள் நிறைந்திடும்மதுரைதன்னில்
வேதநூல்துதிக்கும் வித்திவிநாயகராகுமேவரி
ஆதவனுதபம்போலஅலஙகிருதமாகவந்து
சீதசிங்காஸனத்தில் சிறப்புடன் வீற்றிருந்தார்

வித்தஸித்திவிநாயகரை வேண்டி நித்தியபூஜைசெய்து வேதம் [சொல்லி
போதகமனமன்போடெபுனிதஸபாபாயுடன் புகழ்நல்லாடை
தீர்த்தம்பலபடிகட்டளை திவ்யநைவேத்தியம் சொல்தூபதீபம்
வாய்த்தசெந்தமலர்கொண்டுபாலஸுந்தரகுருக்கள்வருகின்றுரெ

சுருட்டி ராகம் ரத்தி தாளம்.

பாலசுந்தரகுருக்கள் ஸ்ரீங்காரவைபோகமாய்வந்து தோணிரை
வேலவன்துதிஸோதரவித்தி விநாயகன்தன்
பூஜைதாயகமாய்செய்ய பாலசுந்தரகுருக்கள்
வெள்ளையாய்புடிபூணூல்தரித்துவேதசாஸ்திரம் நர்வ் லுச்சரித்து
சள்ளையாய்வரும்தர்க்கங்கள் பூரித்து
சரஸமாய்மொழிபேசிசிரித்து பாலசுந்தரகுருக்கள்
தங்கங்கட்டியருத்திராக்ஷத்தொண்டு தரித்து
விபூதிபைகையில்கொண்டு அங்கமேவியபிரபுக்களைக்கண்டு
ஆமாசீர்வாதமெமெயண்டு பாலசுந்தரகுருக்கள்
காதில்கடுக்கன் அசைபஆட்டி கைக்கிபவித்திர
மோதிரமாட்டி ஆதிநான்மறைநூல்களைமீட்டி
ஆறுக்கும்விபூதிஅள்ளிகைநீட்டி பாலஸந்தரகுருக்கள்
வாசைசந்தனம்மார்பினில்பூசி மகிழ்ந்து
உல்லாஸமாகக்கவிசி ராஜர்வாழ்மதுராபுரிவாஸி
ரஞ்சிதமிஞ்சியஇங்கிதம்பேசி பாலசுந்தரகுருக்கள்

விருத்தம்

உருமையாய்குருக்கள்தான் வந்தோங்கிபமதுரைதன்னில்
பெருமையாய் வீற்றிருக்கும் பிள்ளையார்தமக்குமுன்னுள்
அருமையாய்ச்சாத்தினவத்த அணிமலர்டைதள்ளி
திருமெய்யில்அபிஷேகங்கள்செய்யவும்தொடங்கினுரெ
ங்கிநற்றையிலம்பால்தேன் சுகிருதமாம்இளநீர்தெங்கை

கோடங்களால் சொரிந்துமேனிகுளிர்ந்திட அபிஷேகித்து
திடங்களாய்ச்சரிகையாடைசேர்ந்த பொன்னணிபூமாலை
அடங்கலுஞ்சாத்திநெய்வேதனஞ்செய்து அர்ச்சிப்பாரே

அர்ச்சனை தூபதீபம் அலங்கிருதஉபசாரங்கள்
வர்ச்சிதையாய் ஒங்கிவளரும் கர்ப்பூரதீபம்
உச்சிதமாகத்தான்செய்துள்ளன்புமிகவும்வைத்து
மெச்சியதமிழுறைலவிளங்கும்ஸ்தோத்திரம் செய்வாரே

ராகம், மத்தியமாவதி, தாளம் ஆதி.

சுக்லாம்பரதரநமோ நமோ

சுந்தரலிங்கா நமோ நமோ சுக்கலாம்பரதரநமோ நமோ
சுக்லாம்பர சுந்தரலிங்கா திக்கெல்லாம் துதிபெற
ஜெயகந்தவோதர சுக்கலாம்பரதரநமோ
அத்திமுகனே ஹரிதன்மருமகனே சித்திதரும்சுதனே
தேவி அருள்மகனே சுக்கலாம்பரதரா
வல்லபைமகிழ்வரயாவராவர்புகழும்நேயா எல்லவர்க்கும்ஸகாயா
இன்பம்தருமபிரதாயா சுக்கலாம்பரதரா
வேதம்துதிஉல்லாஸாவிளங்கும் மதுரைவாஸா
சிதஞானபிரகாசா ஸித்திவிக்னேசா
சுக்கலாம்பரதரா நமோநமோ

விருத்தம்

மருக்கொழுந்தலரிமுல்லை மலரிருவாக்ஷிசாத்தி
உருக்கம்வைத்தெழில்நாக ஓங்குசெந்தமிழால்போத்தி
பெருக்கமேவியசிபொங்கபேருயர்மதுரைதன்னில்
குருக்கள்தன்மனைவியாழும் குடிமனைசேர்ந்திட்டாரே

நித்தியஓமம்வேழ்விநிறைந்ததேவாலயம் பூஜை
ஸத்தியந்தவறுநீதிதழைக்குமாமதுரைதன்னில்
வெத்திசேர்பாண்டியராஜன்வெகுபுகழ்இன்பமாவில்
புத்திபால்தெரிந்தமட்டும் புகழந்தினிசொல்லுவேனே.

கட்டியகாரன் விருத்தம்

தனம்பெருக்செல்வம் ஓங்கிதழைத்திடமால்தன்தேவி
மனமுகந்திருந்துவாழும் மதுரைமாநகரின்நீதிதினம்
தினம்வளரும்செங்கோல்செலுத்திடபாண்டியராஜர்க்கு
அரைக்கும் கட்டியகாரனும் வருகின்றானே

தரு சாவேரி ராகம் ரூபகதாளம்

கட்டியக்காரனும் வந்தானே ஸ்ரீங்காரமாகவே
கட்டியக்காரனும் வந்தானே

கட்டியகாரன்வந்தான்கையில்தங்கதடிக்கொண்டுமட்டில்லாப்புகழ்
படைத்தமலயத்துவஜபாண்டியன்வாசல் கட்டியக்காரன
சுந்தரஜரிகைதுஸ்து சூட்டி
முண்டாசுவைத்து சந்திரஹாரவெண்முத்து
ஸரப்பதக்கம்தரித்து கட்டியகாரன்
துஷ்டரைஅடக்கி கீர்த்தி
சூழ்மலயத்துவஜமூர்த்தி இஷ்டர்புகழ்வளர்ந்தேத்தி
எங்கும்சொல்ல வெகுநேத்தி கட்டியக்காரன்
பங்கஜவதனசிங்கம் பாரில்பிரபலசிங்கம்
மங்கயாக்குமாதர்சிங்கம் மலயத்துவஜ
பாண்டியசிங்கம் கட்டியக்காரன்

விருத்தம்

சூரியசந்திரரோங்கி துலங்குநாள்வரைக்குமிந்த
பார்தனில் கீர்த்திபெத்த பாண்டியராஜருக்கேத்த
காரியமறிந்தெப்போதும் கணிசயோசனைகள் செய்யும்
சீரியசுமதிமந்திரி திரனும்வருகின்றானே

தரு. கல்லியாணி. ரூபகம்

மந்திரிசுமதிவந்தானே சுந்தரமாக
மந்திரிசுமதி வந்தானே
மந்திரிசுமதிவந்தான் மாமதுராபுரியாளும்
சுந்தரமிகுமலயத்துவஜபாண்டியர் ஸமுகத்தில் மந்திரி
முத்துநவரத்னத்தாலே நிறைஇசைபோகனத்ததோங்சல்களும்
மேலே பளபளன்ன பத்துலெக்ஷம் பொன்பெத்த
பணிகளணிந்துமெத்த இத்தலசொத்தவர் நத்த
இங்கிதயோசனைசித்த மந்திரி
உன்னிதஜரிகையுடையும் தகட்டிமுண்டாசுகந்தஉல்லாஸ
நடையும நடந்துகொண்டு கன்னியர்நடனமாட
கவரிஇருபார்போட இன்னிலத்தவர்கொண்டாட
இன்பமாய்சப்பிரமத்தோட மந்திரி
உச்சிதர்மகைள் ஓங்கியே மதுராபுரிஓங்கும் நற்செங்கோல்
தாங்கியேமலயத்துவஜன் மெச்சிய யோஜனைதீரன்
விளங்கும்நயகெம்பீரன் விசித்திரசுமுகவீரன்
வெகுஜெனஉபகாரன் மந்திரி சுமதி

விருத்தம்

மந்திரஜெபதபயோகமகிமை மிகத்தழைத்தோங்கும் மதுரை [ஆளும்
சந்திரகுலதிலகன் வெகுதாரன் குலசேகரன் சன்தவமுதித்த
கந்தரமன்மதன் மலயத்துவஜபாண்டிய மகராஜசுகுணரூபன்
இந்திரவைபோகம்சிறந்திலங்குஸிம்மாஸனத்தலகொலு விருக்கி [ன்றானே

## விருத்தம்

[யோக

சங்கத்திற்பத்மாசநந் தழைத்தோங்கும் மதுரைப்பதிதனையாள்
தங்கமனுமலயத்துவஜபாண்டியமகராஜனெனுந் தணபூபன்
தவசநவரத்தின சிங்காதனத்தில் வைபோக ஸம்பிரமஞ்சேர்
மங்கள சிங்காரமதாய்மனமகிழ்ந்தமோகக் கொலுவாகினனே

௨௫. அசாவேரி. ராகம். ஆதி தாளம்.

இராஜன் மதுரைமகராஜன் மலயத்துவஜன்
ராஜன்கொலுவிருந்தானே

வாசவன் சுரர்பணி — தேசவனிவனென்றே
தேசம் எண்மொழியுள்ள — ராஜர்புகழ்ந்து கொள்ள ராஜன்
சங்கச்சரிகைதுஸ்து — மின்னைச்சேருவெணுடுத்து
பங்கிமணிமகுடம் — சிகைபுகுகடயம்
பொற்கமதாய்த்தரித்து — ஆங்கமிப்பூரித்து
சிங்காஸனதிபதியாய் — எவர்க்குமநல
மங்களம்தரும் நிலையாய் — பங்கயமுகமென்னமாமயிலாபமின்ன
அங்கனுனைவந்து — அங்கிருகமென்ன
தங்கமேருவென்ன — சிங்கம்போலுமென்ன
துங்கரூபமேபேச — கவரிவீச
பெருநிலாவ — பகைராஜராஜன்
முத்துக்குடைசூட்டி — வெத்திவெள்ளைக்கோட்டி
சித்ரசெம்மீனக்கொடி — சுந்தரசொல் தங்கத்தடி
பத்திபத்தியகாய்ப்பிடித்து — மதத்தப்புப்பநல்வதந்தி
தீவட்டி விளங்க — நரதாபத்ய வாத்தியமுழங்க
துத்திமத்தளம் — ஸ்வரதத்தை டேபேட
தித்திமியெனப்பெண்கள் — நர்த்தனமாட
ஸப்தஸாகரங்கள் ஒத்தமேஸனைதன — கர்த்தர்மிதநரர் கூட
சத்துருவாட — புழ்தேட
கொண்டாட — ராஜன்
வந்துமுபஸக்காரன் — முந்திநின்றுவாக்க
எந்தமன்னரும் அஞ்சி — பிந்திநின்றுபேசிக்க
மந்திரிமார்யோஜிக்க — வந்துஅனேகர்பூஜிக்க
வித்தைகள்பிரவேசிக்க — சட்டியம்சொல்
சுந்தரம் பிரகாசிக்க — தந்திபரியும் பரிபந்திபதிலும் வீரா
வந்துநின்று ஸலாமென்று — கண்டுசொல்ல
இந்திரசந்திரர்முதல் — ஈடுஜோடில்லாத

இந்துகுலமுடியாய ஐந்தறிவெனும்படியாய்
வெகுதுடியாய் கெடியாய் ராஜன்

விருத்தம்

ஹரிபூஜை சிவபூஜை அனேகஆலயம் பூஜை அடக்காய் செய்து
பரியாகமதில் ஆறுபதினாறரை செய்துபலரும் ஏகத ப்ருமாலாய்
அரசாளும்ஸ்ரீமலயத்துவஜபாண்டியதினமே சொல்தருமேவஉன்
முரிச்சுமதி ஸாஷ்டாங்கம் சரணம்வைத்துத்தாங்குவாயே

கொத்தவர்மெய்த்திடுசந்திரகுலதிலகமலயத்துவஜன் கொலுவி
[ருந்து
உத்தமெளந்தபத்தினிவந்துகந்தருகில்வித்திருக்கஉரைசெய்தேவி
சித்தசந்தன்தேவியிலும் திர்க்கசௌந்தரமணிமென்றுசெம்பயானை ம
மொத்திடுகொங்கைமங்கை காஞ்சனமாலைவருகின்றாளென[ஸ்தக

தரு. ராகம். பந்துவராளி தாளம். திருபுடை.

வந்தாள்காஞ்சனமாலைவந்தாள் ஸ்ரீங்காரமாகவந்தாள்
சுந்தரமாமலய த்துவஜபாண்டியமகாராஜன்
சுகிருதகொலுவுதனில் ஸகிதமாக்இருக்க வந்தாள்
மாடமயிலாம் சாயலென்ன அன்னப்பெடையிலாம்நடைஎன்ன
கோடதருயமென்ன கொஞ்சுப் சுகச்சொல்லென்ன
ஈடேநிலாரென்ன இவளெலெக்ஷ்மியென்ன வந்தாள்
முத்திலடப்பதக்கம்துலங்க நல்லநத்துமூக்கித்திப்பிலாக்குஇலங்க
சுந்தரத்தினப்பணி ஜோதியெனநிறைந்து
அத்தர்கதம்பம் திமிர்ந்தலங்கிருதம் சிறந்து வந்தாள்
சூரசேனன் அருள்குமாரி மகாதீரன்பாண்டியன்மகிழ்பாரி
சிருர்திருஉல்லாஸி தேவிவிஷயோபாஸி
தாராதருமம்பேசி ஸெளபாக்கியமகாராஜி
வந்தாள் காஞ்சனமாலை

விருத்தம்

ஆதவர்தன்வம்சமுதியனைக்த காஞ்சனமாலைஅலங்கிருதம்சேர்
சீதமதிவதனமென்ன தேகம் அபரஞ்சியென்ன தேஜஸென்ன
வேதமுதல்நிதித்தேத்துப்வேந்தர்சுந்தரேசாருள்விளங்குவாழும்
மாதவராம் மலயத்துவஜமகாராஜன் கொலுவில் வந்து மகிழ்ந்திரு
[ந்தான்

## கொலுத்தாழிசெய்

சிகரகோபுரவாசலுப்பரிதொண்டலாலுயர்மேடையும்
சிரந்தமாளிகைகோட்டை கொத்தளம் சேனை சூழ்பரியானையும்
அகர்வீதியும்அந்தனர் புவியாளும்வீரியக்ஷத்திரியர்
அரிவுசேர்தனவைசியசூத்திரர் அரிஜனர்வாழ்மதுராபுரி
நகர்மீதினில் ஓங்கும் நீதியைநடத்துமாமலையத்துவஜன்
நங்கைகாஞ்சனமாலைதன்னுடநளினமாய்வெகுவயணமாய்
மகாமீனக்கொடி ஆடவேபுவிமன்னமன்னவர்பணியவே
மகிமைசேர் ஹரிபாஸனத்தினில்மாலெனக்கொலுமேவினான்
தங்கவச்சிரநீலகோமேதகமிகப்புகழ்மாதகம்
தைத்தமாமணிமுகுடமுந்திசைஜரிகையோத்திருதுலதுக்கள்
கண்கள்மெச்சியபணிகள்சூடியெகணிசைவெத்திகள் ஆர்ந்தவந்
கனதயாநயமனதயாபரன் கமலசாமலர்வதநனும்
திங்கள்தன்குலமங்களநரதீரனும் மலையத்துவஜன்
தேவிகாஞ்சனமாலைதன்னுடதெளிவதாய் வெகுஒளிவதாய்
சங்கமேவியதுங்கர்மெச்சியசிங்கையாசனமீதிலே
ஸஜ்ஜனர்புகழ்உச்சிதத்துடன் ஸம்பிரமக்கொலுமேவினர்

### மல்லுகஜெட்டி விருத்தம்

சொல்லது தவறுநீதன் துஷ்டநிக்கிறகம் செய்வீரன்
வில்லதுபுடிகம்பீரன் விஜயமேவியஸ்ரீங்காரன்
நல்லவன்பாண்டியராஜன் நரேந்திரன் ஸமுகந்தன்னில்
மல்லர்கள் புலிகள்போலெவந்துமுன் தோணினரே

தரு. ருகம். தன்னியாசி. தாளம். ஆதி.

மல்லுகஜெட்டிகள் ஜோடுஜோடாகவெ
வந்துமுன் தோணினரெ
வல்லவராம் மலையத்துவஜபாண்டியர்
மகாராஜேந்திரன் ஸபைதனில் புலிபோல்மல்லுகஜெட்டிகள்
தங்கஸரப்பணிகண்டிகைகட்டி தகதகவெனஸர்ஜகடையமிட்டு
சுங்குவிட்டுருமால் கட்டிதுல்துட்டு
சுந்தரசந்திரசநதனசதுரபொட்டிட்டு மல்லுகஜெட்டி
கச்சைபைஇருக்கிகிருச்சிடக்கட்டி கண்சலைசுழட்டிநடந்தெட்டி
மெச்சசெவவீரியம் பேசியதட்டி
மீசையைமுருக்கிபுஜம் தட்டி மல்லுகஜெட்டி
பல்லதை நருநருநரு நரொண்டுபோர்த்தவர்கலங்கக்கடித்துகொண்டு
மல்லுக்கெதா நிண்டாரையும் வெண்டு
மகதிரியையும்வாரி அடிப்பேனென்டு மல்லுகஜெட்டி

## யுத்தவிருத்தம்

திங்கள் குலபாண்டியராஜேந்திரன்சோலுவசனித்தீரபல்லர்
முன்னைதன்னிலெவெள்ளைசத்தி மீசைதன்னை முறுக்கிபுஜமீதல்
[கட்டி
கண்குளதுபொரிசொரகண்டவர்கள் நடுநடுங்காபிடுங்குபாய்ந்து
சிங்கமோடுசிங்கம்எதிர்த்திடுவதுபோல் மல்லயுத்தஞ்செய்குவாரே

தரு. ராகம். நாதநாமக்கிரியை. தாளம். ஏகச்சி.

யுத்தங்கள்செய்தாரேமல்லுகமல்லர் யுத்தங்கள்செய்தாரே
யுத்தங்கள்செய்தாரே ரத்தங்கள் ஓடவே
மெத்தவும்பாண்டியராசித்தம்மகிழவெ யுத்தங்கள்
நல்லடி ஒட்டடி ஆரடி போட்டு நடந்துகலங்கை
கொண்டெடுத்து குதித்து
மேலேஅடிகளுமையமல் சண்டைகள்
விளப்பிவிளப்பி கிளப்பிக்கிளப்பி பரபரகள்
வச்சிரமுஷ்டிகையைதனில்மாட்டி பார்ப்பினில்
குத்துகள் குத்தி டார்த்தங்கள்
விருக்ஷிமலர்ச்சர போலே வெழிந்தோட
விரட்டி விரட்டி பிரட்டிபிரட்டி யுத்தங்கள்
எட்டிப்பிடித்தடித்து விழுக்காட்டி இடித்து கடித்து
இறஞ்சு அறஞ்சு சட்டையுரட்டிவிழுந்துபுரண்டு
மைகலானகயாபெய்பி பெய்யொவையம்பிடிபியுத்தங்கள

## நாடகசாலை விருத்தம்

சொடிவிருதனசயபேர்க்கர் கொண்டங்கள் அடாதிபெருகுமா
செடிபெருபாண்டியராஜன்சபாலவமுகர்தனில்
புடிஇடைநெளியஅன்னப்பேடெமயில்என நடந்து
வடிவுடன் நடனம்செய்யவஞ்சியர்வருகின்றாரே

தரு. ராகம். கமாசு. தாளம். ஆதி.

வஞ்சியர்கள் வந்தாரே
நடனம்செய்யவஞ்சியர்கள் வந்தாரே
அஞ்சுகம்போலகொஞ்சிபேசி ஒளஸயகதப்பரில்
ரஞ்சிதபாண்டியமகாராஜேந்திரன் ஸமுகத்தில் வஞ்சிமார்கள்
சுந்தரஜரிகைச்சிலை சுத்தகரைச்சேலை
சந்திரஹாரமுத்துமாலை தரித்தலங்கிருதமாலை வஞ்சி

கொங்கைத்தங்கக்கொடமென்ன கோவைகன்னி இதழென்ன
திங்களென்னமுகமென்ன தேகமடரஞ்சியென்ன வஞ்சி
குவளைவிழிபொருப்பமென்ன கோகிலமாம் குரலென்ன
அலங்காரச்சவள்ளொடென்ன ரம்பைஊர்வசியென்ன வஞ்சி

விருத்தம்

இடம்பொருளேவல்மூன்றும இலங்கிய மதுரையாளும்
திடமிகுபாண்டியராஜன் தீரன்றன்ஸமூகந்தன்னில்
நடஞ்செய்பவஞ்சியார்கள் நயஸ்வரமேளம்கூட்டி
அடவெடுத்தடுக்காசர மைய நாடிவாரே

அபிராயபதம். ராகம். இந்துஸ்தானிகாபி தாளம். ரூபகம்

முத்தந்தந்தணைக்கின்பம்தாஸாமி மோடிசெய்யாமல்
மோகரஞ்சிதமுரையே யென்ஸ்வாமி
சித்தமென்னுடன் மலையத்துவஜபாண்டிய
ராஜனேபோகவைபோகசிருங்காரனே முத்தந்தந்தணைந்தின்பம்
திங்கள்செங்கதிராகநாயுதித்த குயில்கூவிவைப
தொண்டைப்புள்ளிபோல் சிரிப்பாயுதே அங்கஜன்
கைகொண்டம் பேரித்தடித்து
அங்கம்வேசாருதவ னாலைப்படித்து
கொங்கைக்குடங்கள் நெரிக்கிபிடித்து
கொவ்வைஇதழைக்கடித்துதேன்குடித்து முத்தம்தந்தணைந்தின்பம்

கும்மிபாட்டு

பூரணசந்திரமுகம்துலங்க இருபூரண கும்பமுலைகுலுங்க
நாரணனாண்மலையத்துவஜபாண்டியர்முன் நாடிகும்மியடியுங்கடி
புகழ்பாடி கும்மியடியுங்கடி
இந்திரலோகனும் வைபோகனும் எத்திசையும்கீர்த்திபெத்தவனும்
சுந்தரனும் மலையத்துவஜபாண்டிய துரைமுன்கும்மியடியுங்கடி
ஸரஸல்லாபபிரதாபவீரன் நிப்பத்தாரணிமார்பன் தபாதிரன்
அரசன்மதுரைமலையத்துவஜன்முன் அமோக கும்மி
பாதநடனஸங்கீதத்துடன் லயப்பாங்குகந்திட ஸங்கீதத்துடன்
சுரதன்மகன்மலையத்துவஜபாண்டியர்முன் ஜொருளாய்
கும்மியடியுங்கடி வெகுஹுஸாய் கும்மியடியுங்கடி

பத்தியம்

பங்கயச்செல்விதன் பரிபூர்ணகடாக்ஷமும்
பாங்குசேர்மேன்மையும்பலருமேத்த
சங்கையுஞ்சௌரியமும் ஸகலசௌபாக்யமும்
ஸத்தியநீதமும்சார்ந்திலங்கும்

திங்கள்தன்குலம் வங்சஜெயகுலசேகர்
ஸ்ரீமன்னருளிடசெல்வனேநல்ல
மங்களகல்லியாணமதுரைமாநகராளும்
மகராஜனெசக்கிரவிருத்திபெசெல்
அங்கஜசுந்தரரொத்த அங்ஸலாப
அப்புவிக்கைகந்தரும்வாமகிபா
துங்கென துஷ்டநிக்கிருகசுக்கிரீவா
துரைமலையத்துவபாண்டியசுகுணரூபா

பத்தியம் [ம்பியேசி

வெய்யநீடாகவெவெண்மதிகாயவும்விந்தையாய்குயில்வசை விள
வையவும்தேண்டல்தான்வலுவதாய்புலிபோலெவந்துமுன்சீரவும
மாரன் அப்புஎய்பவும் இருகொங்கைஏகமாய்நோகவும
என்தாபம்ஸகியாத இன்பமோகமையலமேல் பேலாகி
மருவஉன்தனைநாடி வந்தஎன்மீதினில் வருமமோடி
செய்ய இதுமையமோசேஷப தீர சிந்தைதயவா
யெனைச்சேருமாரா துய்யலக்ஷிமிவாஸம் சூழ்குபேரா
துரைமலையத்துவஜபாண்டியசுகவசீரா

விருத்தம்

நடனஹிதவேடிக்கை நளினமிகுஸ்ரீங்காரநயங் ள்பார்த்து
கடவுள் சொக்கலிங்கேசர்கயர்கண்ணுள் அடிகுடியாய் கருத்தில்
[வைத்து
மடமயில்பொன்மாலையோடு யாதர்பதிணுயிரவர்மகிழ்ச்சிகூர்ந்து
திடமிகுமாமலையத்வஜன்தினச்செங்கோல்நீதிமுறை செலுத்திணு
[ரே

விருத்தம்

செலுத்திவாழ்மலயத்வஜன் திரணந்தரங்சம்
வீத்திருந்துசெல்வப்ஜவலித்துவாழ் உலகாள
சுதனில்லாக்கவலைநெஞ்சில் தோத்தசொண்டு
நலித்துவாழ்அன்பர்க்கருள்நயமீந்து
ரக்ஷிசொக்கநாதர்தன்மல சவித்துவாட்விட்டோங்கி
தயங்கிமிசமயங்கிகொந்துசாத்துவனெ

தரு. ஆகிரிட ராகம் ரூபகதாளம்

பொன்னகரிந்திரன் பூசுரர்போத்திய ஈஸ்வரா
நல்லபுனிதத்தவப்புரி முனிவர்தோழுதேத்திய ஈஸ்வரா
கன்னலென்னும் மொழிநங்கையைசிரமவைத்த ஈஸ்வரா
அந்தக்ஷணகமகாமேருவைதனுஸாசக்கரம்கொண்ட ஈஸ்வரா

மன்னர்புகழ்மதுராபுரியாளவே ஈஸ்வரா
ஒருமைந்தினில்லாமல் மனம்நொந்து தாழுவோ ஈஸ்வரா
என்னபாக்கியம் இட்டிருந்தாலும் நீர் ஈஸ்வரா
எனதிச்சையெல்லாம்பச்சைபாலன்வருந்துதே ஈஸ்வரா
நேயமதாய்உம்மைநிதம்நிதம் பூஜித்தும் ஈஸ்வரா
இந்தநிலமதைஆளஒருசுதன்தர இல்லையே ஈஸ்வரா
துய்யபரிமகம் தொண்ணூற்றொன்பதும் செய்தும் ஈஸ்வரா
ஒருசுதனவந்தென் துயர்தீர்ந்து சுகப்படஇல்லையே ஈஸ்வரா
பாரில்என்வயசுபதினாயிரம ஆச்சே ஈஸ்வரா
பச்சைபாலனொண்டேந்தினான்பாராமல்வீண்போச்சே ஈஸ்வரா
பெரியமேவியசந்திரகுலமெண்டும் ஈஸ்வரா
ஒருசிசுவிருந்துலகாள அருள்செய்யவில்லையே ஈஸ்வரா
கருங்கல்மலையைக்கூடகருக்கொண்டுவளரச்செய்தீர் ஈஸ்வரா
என்னைகடைதுணிதரித்திட்டசட்டையாய்வைத்திட்டீர் ஈஸ்வரா
ஒருபில்லதுக்குக்கூடஉயிர்கிளைதுரண்டிட்டீர் ஈஸ்வரா
என்னைஉவர்ந்தரைமீண்டதாய் உண்டாக்கிவைத்திட்டீர் ஈஸ்வரா
லைபத்துவஜன்வரையில்மதுரைசந்திரகுலமெண்டு ஈஸ்வரா
இந்தமாநிலம்வசைச்சொல்ல மலடாக்கிவைத்திட்டீர் ஈஸ்வரா
சிலைபோலென்னைப்படைத்துதிருவிழாநடத்திரீர் ஈஸ்வரா
இந்த திருவிழாவுக்கிசைந்த ஜரப்புயின்வைக்கலையே ஈஸ்வரா
ஜெனனமெடுத்தும் சிறந்துஸாபல்லியமாக ஈஸ்வரா
திருஉள்ளம் கிருபைசெய்துஒருசுதன்தரவேணும் ஈஸ்வரா
அன்னைபிதாகுருதெய்வம் அடங்கலும் எனக்குநீர் ஈஸ்வரா
இப்போதனுக்கிரகம்செய்தொருசுதன்தந்தருளும்சுந்தரேஸ்வரா

விருத்தம்

ஈசனைமிகவும்நொந்து இறக்கம்வைத்தாளுமெண்டு
பூஜனைமனதால்செய்துபுகழ்பெருபாண்டியராஜன்
யோஜனைபுரித்துச்சொல்லும்யூகிபாம்சுமதியோடே
சூஜனையாகநெஞ்சு துயரதைச் சொல்லுவானே

தரு. மணி ரெங்கு ரூகம். ரூபகம். தாளம்.

மனமொத்தகுணமொத்த சுமதிமந்திரி
துதிமறைமுறைதவறாத சுமதிமந்திரி
கனம்பெத்தராசாக்ஷிக்கேத்தமந்திரி எந்தன்
கருத்துக்கிசைவாய்வந்து வாய்த்தமந்திரிமதிகுலத்தில்வந்து
முடிசூடி இந்த மதுரைப்பதியை ஆண்டிபுகழ்தேடி
துதிபொருந்தொருசுதன்தனைநாடி வெகு
சுகிருதங்கள்செய்தேனொருகோடி
இதுவரையிலும் சுதன்வரயில்லையே மேலும்

இந்ததேகமும்ஒருஸ்தரமில்லையே
மதுரைப்பதிக்குள் என்றன் தரைவேணுமே — இந்த
மகிழ்ந்து தங்கதிக்கிசைந்தகரைகாணுமே — யாரும்
சொக்கேசர் திருவுள்ளப்பாங்குதானோ — சொல்லும்
குய்யமுனிவர்சாபத்திங்குதானோ
மெய்க்கும்பி நம்மவின் தீர்ப்பனேமுறையோ — நாளும்
மீண்டுசூழ்ந்திருக்கும் தீவினை துறையோ
அன்னியதமாயரசு ஆண்டேனோ
பொல்லா அக்கிரமம் உக்கிரமம்பூண்டேனோ
கன்னியர் குலைபாபம் சூழ்ந்தேனோ — இந்த
காசினியைக் கெடுத்து வாழ்ந்தேனோ
சிவபூஜைப நல்தறை செய்தேனோ — எங்கும்
சிறந்தயாகவர் [illegible] வைத்தேனோ
தவபோகிகளவரையும் பழித்தேனோ — அந்த
சாலைகந்தவனத்தை நபழித்தேனோ
அடுத்தகுடிஜனத்தைக்கெடுத்தேனோ — சத்தும்
அஞ்சாத்திருடருக்கிடப்பொடுத்தேனோ
கடுத்தவஞ்சனை நெஞ்சம்படைத்தேனோ — யாரும்
கந்தாலயங்கள்பூஜைதடைத்தேனோ
அன்னைபிதா திருமொழிகடந்தேனோ — புகழ்
அருமறைதப்பிநடந்தேனோ
விணபாபை வியிருக்கம் பெய்தேனோ — பொல்லா
விசுவாசபாதகம் செய்தேனோ
அந்த நவக்கிரகத்தின்சாரந்தானோ — இந்த
அப்புவிபோர்செய்யும்கோரந்தானோ
எந்தவிதபாபமோசூழ்ந்து — சுத்தி
என்குடிசுதனில்லாமல்தாழ்ந்து
சிந்தைநொந்துகமரிகரிக்கிடுதே — எந்தன்
தேகமும்பாகாசவுருகிடுதே
மைந்தனொண்டேங்கிகொஞ்சிபார்ப்பேனோ — நாளும்
மனமகிழ்ந்துபூரிப்புவர்ப்பேனோ
என்தனுயிருக்குயிரானமந்திரி — இதுக்
கேத்தயோஜனைசொல்லும்சுமதிமந்திரி — இந்த

விருத்தம்

மன்னவன்பாண்டியராஜன்மைந்தனால் மதிமயங்கி
சொன்னசொல்லெல்லாங்கேட்டு துயரமாய்சுமதிமந்திரி
என்னதான்சொல்வோமென்று ஈசனைத்தியானம் செய்து
நன்னயமுகந்தவார்த்தைநளினமாயுரைசெய்வானே

தரு:—சங்கராபரணம், ரூகம். ரத்தி தாளம்.

| | |
|---|---|
| தேசம்சிறந்தவனெ | திவ்வியதேஜெஸ்நிறைந்தவனெ |
| ராஜாதிராஜனனெ | எந்த |
| ராஜரும்போத்துந்துரந்தரனெ | இந்திரன்சீரொத்தவனெ—வெகு |
| யேற்கையும் வாழ்கையும் | பெத்தவனெ |
| சந்திரனென்குருவும் | வெகு |
| ஸர்வஜீவதயாபரதருவும் | இருமூன்றுசாஸ்திரமும் |
| விளம் | பீரீசெண்டாம்வேத சூஸ்திரமும் |
| அருளாகமத்தெளிவும் | நல்ல |
| அற்புதகர்மங்களின்னொளிவும் | ஒருருபமாய்ச்சிறந்து |
| புகழுயர்குலசேகரர்தவம்பிரந்து | திருமாலெழில்கூடி |
| இந்த | தேசாதிபதியாய்பொன்முடிசூடி |
| கனம்சேரும்சூரசேனன் | அருள் |
| காஞ்சனமாலையைமண்டல்செய்து | மனமோகனரஞ்சிதமிஞ்சும் |
| மாதர்பதினாயிரவர்வைத்து | மன்மதராசர்போலே |
| சுகமங்கள | போகங்களையுகந்து |
| தர்மதேவதைநேராய் | வெகு |
| சங்கைபொருந்தும்மகாமேராய் | இந்தமதுரையிலே |
| நாளும் | ஏகசக்கிரவர்த்தியாயிருந்து |
| சொந்தமதுவாக | அந்த |
| சொக்கேசர்பாதம்.முக்காலும்போத்தி | அம்புவிதன்னுடலாய் |
| அதில | மைந்தஜீவஜந்ததுவுடலாய் |
| புண்புகந்தாதரித்து | ஏதுமபரிபாலனமாகும்சீர்தரித்து |
| ஆரிலொருகடமை | சொந்த |
| அம்புவிகொண்டெங்கு | யெங்கும்கொண்டின்பமதாய் |
| மாருமுடிதரித்து | தேசமன்னர்திரைகொண்டுளமகிழ்ந்து |
| பிருமாலயம்பூசையும் | எங்கும் |
| விளங்கும்தேவாலயம்பூசைகளும் | மறையோதும்நேமங்களும் |
| உயர் | மாதவர்நித்தியாக்கினிஹோமங்களும் |
| என்றும்நடக்கும்படி | மன |
| மெண்ணிநடத்திஇயற்கைபண்ணி | தண்ணீர்தடங்கள்வெட்டி |
| வெகு | சத்திரங்கள்கட்டிமடங்கள்கட்டி |
| எந்தவேளையதிலும் | வந்தோ |
| ரெல்லவர்க்குநல்லஅன்னமிட்டு | நந்தவனங்கள்வைத்து |
| எந்த | நாளதிலும்தண்ணீர்பந்தல்வைத்து |
| நாடகசாலைவைத்து | இக |
| பரசுகந்தரும்பள்ளிக்கூடம்வைத்து | நாடெங்கும்சாலைவைத்து |
| நல்ல | நலமிகுதரும்சோலைவைத்து |
| தினமானம் பூசுரர்க்கு | வெகு |

திவ்யகோதானம்பூதானமும் தனதர்னம்வஸ்தரதானம்
அன்னதானம்மகாகன்னிகாதானம் பகரும்ாத தாளம்
துய்ய பரிதானம்கெஜதானம்சிபிதானம்
புகழும்தாம்பூலதானம் மறைபூரிபலதானமெல்லாய்செய்து
பசுபந்தமென்னும்யாகம் திவ்ய
பாக்கிய அக்கினிஷோமயாகம் வசவாஜபேயாகம்
யாரும் வந்தனைசெய்யதிருத்திரையாகம்
அப்தோரியாமயாகம் வெகு
ஆதானக்ஷேமபஞ்சயாகம் சுபபௌண்டரீகயாகம்
இன்னம் சொல்லும்பலயாகமெல்லாஞ்செய்து
அசுவமேதயாக மதில் அன்புடன்
தொண்ணூத்தொன்பதுவுஞ்செய்து விசுவாசமுள்ளம்வைத்து
இன்னம் வேண்டியதுசெய்யும் என்னுண்டவனே
ஒருமைந்தனில்லேபெண்டு மெத்த
உள்ளமுருகிசலித்திடுரீர் வருங்காலம்வந்திருக்கு
நல்ல மகோன்னதசெசையொவந்தொத்திருக்கு
சந்திரகுலமதற்கு குரு
சாமிசதாநந்தமூர்த்திதன்னை இந்தநகர்க்கழைத்து
அவருக்கிபம்பிய ஸ்தோத்திரம்
செய்தோமானல் சிந்தைமிகுதயவாய்
வெகு தீர்க்கமுகந்தசௌபாக்கியமதாய்
ஸந்ததிதந்தருள்வார் இது
சஹசும்தாம்நிச்சயந்தான மன்னுஇனிக்கவலைதள்ளி
மனதுபூரித்துமகிழுகந்து என்னாளும்போலிருந்து
இந்தமதுரையாளும் துரையே.

விருத்தம்

மந்திரிசுமதிநீசொல்வார்த்தையை உறுதிகொண்டோம்
தந்திரமுகந்தயோகசதாநந்தஸ்வாமி தானும்
வந்தருள்செய்யும்படிக்கு வரிசையாய் எழுந்து ஈந்து
சொந்தமாய்சுருசுருப்பாய் தூதரை அனுப்புவாயே.

விருத்தம்

தென்னவனும்தனதாசான் சீக்கிரத்தில்வரும்படிக்குச்செய்வா[யெண்டும்
சொன்ன அந்தக்ஷணந்தன்னில்சுமதிமந்திரி தூதனுப்பதுரிசதாக
என்னவிதகாரியமொவெண்டுசதாநந்தரெழுந்துஇன்பமாக
டன்னர்புகழ்தழைத்தோங்கும்மாமதுராபுரிநாடிவருகின்றூரெ

## தரு:—ஆரபி—ரூகம்; திருபுடை—தாளம்.

ரிஷியும்வந்தார் சதாநந்தரிஷியும் வந்தார்

அழிவில்லாதபரபிரும்மாநந்தம் நண்ணும்
அரியதபசுசெய்பெரியவரென்னும் ரிஷியும்
வேதசாஸ்திர சூத்திரம்விண்டு விளங்குதத்துவவிதங்களில்நீண்டு
நீதமேவியநேமங்கள் கொண்டு
நிதமும்யோகாதிநிட்டைகரைகண்டு ரிஷியும்
காதில்குண்டலங்களும் மிக்கவிளங்க
கருதும் திருவெண்ணீரது நுதலிலங்க
ஜாதிருத்திராக்ஷமணியவரி துலங்க
ஸகலதேவரும் ஸாஷ்டாங்கமெங்க ரிஷியும்
மதுரைபாண்டியராசராள்விட்டுவரவழைத்திடும்வகைக்குநேரிட்டு
ஏதுகருமமெண்டறிந்து சிரிட்டு
இயற்கைசெய்வோமெண்டெண்ணிபுறப்பட்டு ரிஷியும்

### விருத்தம்

ஆகமவேதசாஸ்திரம் அறிவுசேர்சதாநந்தர்
வேகமாய்நடந்துவந்து விளங்குமாமதுரைதன்னில்
போகதேவேந்திரன்பாண்டியன்புனிதமாயாசாரத்தில்
தேகம்நன்மகிழ்ச்சிகூர்ந்து சிறப்புடன் வீத்திருந்தார்

### விருத்தம்

ஞானசிவதவஞ்சிறந்த நம்முடையசிஷியர்களெளநவிலவைபோக
மான் பராதியோகமாமலையத்துவஜபாண்டியமகாராஜேந்திரன்
தானறியஅவர்ஸமுகந்தன்னில்செண்டுஅஞ்சிஒஞ்சி ஸமயம்பார்
ஆனஇதவதுவாய்நாமாசாரம் வந்திருப்பதறிவிப்பாயெ (த்து

### மந்திரிவிருத்தம்

இந்தமாமதுரைஆளும் இரைவனெ எந்தன்கோவே
ஸந்ததிஅனுக்கிறகச்செய்சதாநந்தசாமிதானும்
வந்தறண்மனை ஆசாரவாசலிலிருக்கிறார்கள்
சிந்தனை தீரக்கண்டு தெரிசனம்செய்யலாமே

### ராஜன் விருத்தம்

வந்தசதாநந்தமுனிமலரடியைத்தொழுது மன்னன் மதுரையாள
மைந்தன்வாக்கவலைதீரமகிழ்ச்சிபெற அருள்பெத்துவருவதற்கு
கந்தமலர்குழலிதன்முக்கனிநிகர்காஞ்சனைமாலை காதல்மாதெ
எந்தனுயிர்க்குயிர்மனைவிஎழிலுமெண்டுவருகையில்இபப்புவானே

### தரு:—புன்னாகவாளி ராகம், ரூபதாளம்.

குருஸாமியைப்பணிந் திருசேவடிதன்னில்
அருமாமலர்தூவி தரும்சீரதைமேவி குருஸாமி
மனதுகவலை நீங்க என்னாளும்
மகிழ்ச்சிகள்வளர்ந்தோங்க தனதாய்மனதொத்த
ஸஜ்ஜனர்துதிமெத்த ஸத்குருவாய்வந்த
ஸாமிசதாநந்த குருஸாமி
நீதிமுறைதுறந்து மகாயோக
நேமநிஷ்டைசிறந்த் ஆதிபராபரவஸ்து சிவாநந்த
மரிந்தமாவிதயோகி ஸாமிசதாநந்த குருஸாமி
மதுராபுரிதாங்க ஒரு மைந்தன்வரம்நாம்வாங்க
சதுரா இருவரும் துதியேபுரிந்து
சரணம் சரணம் சரணம்சரணமெண்டு குருஸாமி

### தரு. ஸௌராஷ்டரம் ஏகதாளம்.

வேதியமுனியெசரணம சரணம் விளங்கியமூர்த்திசரணம்
நீதிசொல் குருவெசரணம் சரணம் நிரைதபவஸ்துவெசரணம்
ஜோதிமெய்யொளியே சரணம் துலங்குநிஷ்களங்கசரணம்
ஜாதிவேதனெசரணம் சரணம் சதாநந்தரெசரணம்

### விருத்தம்

அய்யனேபோற்றிபோற்றி அறிந்தவமுனியேபோற்றி
பொய்யகந்திங்கடாதபுனிதநிஷ்களங்காபோற்றி
செய்யசிங்காரவேதம்சிறந்திடென்குருவேபோற்றி
துய்யனேபோற்றி போற்றி துரந்தரர்பேற்றிபேற்றி

### விருத்தம்

மூன்றுலோகங்கள்மெச்சும்முறைமையாய்மதுரைதன்னை
ஆண்டிடும்வீரசூரபராக்கிரமசிங்கமான
பாண்டியராஜனெ நீர்பாங்குயிர் அன்புகந்து
வேண்டி இங்கழைத்தகாரியவிதமதை விளம்புவீரே

### விருத்தம்

தன்மைதரும்யோகிசதாநந்தர்தமைஅழைத்தவகைநவிலு
ம்மன்று செம்மையுடன் அதிதயவாய்செப்பிடையில்மனமகிழ்ந்து
[தென்னவன்தான்
தன்மயதாய்அவரடியில்தாழ்ந்து மிகபணிந்தேத்திதனதுநெஞ்சில்
உண்மையுகந்தனுதினமும் உருத்துகின்றகவலைதனைஉரைசெய்வா
(னே

### தரு:— ரூகம்; கமாசு தாளம், ஆதி.

ஆதிபராபாவஸ்து நிறந்தரம்வாழும் தன்னிலே
அறிந்து உணர்ந்துமிகுந்ததவப்செய் தென்னாளும்
ஜோதிநிறைந்தமகிமையுயர் முத்திருமும் வெகு
சுந்தரமாச்சதானந்தரிஷிகளேசேளும் இந்திரனுலகிலுள்ள
இமையவர்முனிவர்களாரும் நல்ல
இன்பம்தாகவெ அன்புள்ளகிருபைகள் பாரும்
சந்திரகுல குலசேகரபாண்டியர்சிறந்து செய்த
தவந்தனிலிங்கிதத்துடனொரு பிள்ளை நான்பிறந்து
மன்னவர்முதல்பை எண்டெண்ணபணிமுடி பூண்டு இந்த
மாமதுராபுரிராஜியந்தன்னை நாளுண்டு
நன்னயதே கோ பிருமணபூஜனைசெய்து சொல்லும்
நலமிகுபரிமகப்தொண்ணூத்தொன்பதும் செய்து
ஆரும்புகழ்ந்திடும்கீர்த்தியும் ஆண்மையுப்ஏத்து
விளம்பைந்த இரெண்டாயிரம் ஆண்டெனக்கடுத்ததுமூத்து
பாருலகெனதுபின்னாண்டிட இளந்தைஇல்லாமல் நிதமும்
பலவிதயோசனைபண்ணினேனார்க்கும் சொல்லாமல்
வரவரஉடல்ஸகியாததுயர்மேலாடி இப்பொ
வரவழைத்தேன்தேவருக்கரிக்கைசெய்தேன்மெத்தநாடி
இருவினைப்பயனறிஸ்ரமி யென்குலகுருநீரெ
இதுக்கெவ்விதமாகிலுப்செய்தொருசுதன்தருவீரே
என்னமோவெனலெகுவாகஇருக்கப்போகாதெ
என்னஎத்தினமாகிலும்செய்திடவேணும் இப்போதெ
தென்னவனுபெந்தன்பேறெண்டும்விளங்கிட பூமி
அண்டப்சிறந்திடஅனுக்கிரகம் செய்யுமசதாநந்தஸ்வாமி

### விருத்தம்

ஆரார்ந்தசெஞ்சடைசூழ்ஐயர்சொக்கலிங்கேசர்அருளினாலெ
மாராதமுடி தரித்துவாழ்மலையத்த வஜபாண்டியமன்னனேநீர்
னாராவதச்வமகப் நூல்முறையாய் இப்போதுநோக்கிச்செய்தால்
பேராகும் சுதனுண்டாய் பெருமையுண்டாய்கீர்த்திமிசைப்பிலக்கு
[ந்தானே

### விருத்தம்

மைந்தனுண்டாகுமென்று மனமிகமகிழ்ச்சிகூர்ந்து
சுந்தரமாகச்சொல்லும ஸ்வாமியென்குருவேதேவர்
எந்தனால் அச்வமேதயெக்கியம்செய்வதற்கு
தோந்தநாள்லெக்கினப்பார்த்துசுபமதாய்சொல்லவேணும்

### விருத்தம்

ஜெகம்புகழ்பாண்டியருஜதிரனே அசுவமேத
மகமதுசெய்வதர்க்கு மங்களம்சிறந்தவாரம்
சுகம்புரிதிதிநல்லெக்கினம்துலக்குநக்ஷத்திரயோகம்
இகம்துதிசெய்யும்சாஸ்திரத்தெழிலெடுத்தியம்புவோமே

### தரு:-- கல்யாணி. ருகம். ரூபக. தாளம்.

யாகந்தான்செய்யலாமே　　அசுவமேத
யாகந்தான்செய்யலாமே　　லோகங்களெங்கும்புகழ்மலையத்துவஜ
உத்தமனெநல்லகொத்தவனே　　உந்தன்
யோகம்அமோகவைபோகமதாகவே　　ஒங்கும்
சுபதினம்பார்க்கயமர்ந்து　　யாகந்தான்நத்து
மிவ்வையாசிநாள்மூன்றுதேதியில்　　நண்ணும்சுக்கிரவாரநாளில்
த்விதிகையில்　　அஸ்தநக்ஷத்திரத்தில்
அமிருதயோகத்தில்　　அலங்கிருதகன்னிதுலங்க
நல்லெக்கினத்தில்　　யாகந்தான்
புத்திரகாரகன்　　உச்சம்பெத்திருக்குது
பூரணசந்திரன்　　லாபத்திலிருக்குது
சித்திதரும் க்ஷேமகாலம்　　ஒத்திருக்குது
தீர்க்கமசொன்னதெசைவந்திருக்குது　　யாகந்தான்
இந்தமதுரைக்கும்　　ஈசர்சொக்கேசர்க்கும்
எமக்குமுமக்கும்　　இஷ்டர்க்கும் சிஷ்டர்க்கும்
சுந்தமலரணி　　காஞ்சனமாலைக்கும்
கருதும்சுபவேளைபொருந்துந்தினம் நாளை　　யாகந்தான்

### விருத்தம்

மன்னவனெ ஒன்யோகமனமங்களமாக நாள்வாய்த்திருக்கு
முன்னமெசெய்வித்தமுறைபதுபோல்வேகிமைகள்முழுதும்செய்து
இன்னம்வெகுவேதியர்களின்னகர்வந்திடும்படிக்கெங்கும்சொல்லி
நன்னயம்சேர்பரியாகம்நாளைநல்லவேளைதன்னில்நடத்துவாயே

### விருத்தம்

சுந்தரம்சேர்சதாநந்தஸ்வாமி அனுக்கிரகப்படிசுருசுருப்பாய்
மந்திரிநீநாளைச்செய்யமகம்மதுக்குவேண்டியதெல்லாம்வரவழைத்
இந்தஉலகரியபரைஇப்பவேபோட்ச்சொல்லி எஜ்ஞசாலை　　(து
அந்தமதாசச்செய்விசசந்தணர் அனேகர்வரவழைப்பிப்பாயெ

### விருத்தம்

அந்தப்படிசெய்வேனெண்டமைச்சன் வேகிமைசெய்ய ஆரம்பிச்சு
சொந்தமிகுமன்னருச்கும்துய்யதவவேதியர்க்கும தூதனுப்பி
இந்தஉலகரியும்படி இது நிமிஷம்பறைபோடெண்டியம்பும்போது
சுந்திரமாமதுரைபதிதோட்டியாதியும்வந்ததோணினனெ

தரு:—நாதநாமக்கிரியை. ரூகம். தாளம். ஏகம்.

பாதிமதியணியுசொக்கேசர் பாதத்தடுமைக்கடுமையெண்டு
ஜோதிவெண்ணீரணிந்து மதுரை
தோட்டியாதியும் தோணினனே
மன்னன்மலையத்துவஜபாண்டிய மகாராஜன்நகரத்திலெல்லவர்க்கும்
சொன்னபடிநடக்கும் மதுரைதோட்டியாதியும்தோணினனே
தொல்லுகத்திலுள்ள பலைக்கெல்லாம்
துதிபெத்ததங்களாள் நாண்டு
சொல்லியெமனமகிழ்ந்து மதுரைதோட்டி
செய்யமலையத்துவஜபாண்டிய தீரனருள்செய்கட்டளைபோல்
துய்யபரைபோடும் மதுரைதோட்டி

விருத்தம்

போகதேவேந்திரனெனபுகழ்பெருபாண்டியராஜ
னாகமப்படியே சொல்றாருவதசுவமேத
யாகம்செய்திடுவதாலெயாவருமரியத்தக்க
தாகவேதோட்டியாதிதமுக்கதுபோடுவாயெ

தரு. ரூகம். துவஜாவந்தி. தாளம். ரூபகம்.

விளம்பரம் ஸகலருமரிந்திடுங்கோள்
விளம்பரம் ஸகலருமரிந்திடுங்கோள்
ஜெகம்புகழ்பாண்டியராஜ தீரனுமலைமேத
மகம்காளைசெய்யுகிறார்கள் மண்டலம்விண்டலமுள்ள
ஸகலருமரிந்திடுங்கோள் விளம்பரம்

விருத்தம் [செய்ய

அனவர்களுமரிந்திடச்செய்தாகும் வேகிமைமுழுதும் அமச்சன்
மனதுமகிழ்ந்துதயமதில்மலையத்துவஜன் . கேமமதாய்மனைவியோ
[டே
கனமுனிவர்சதாநந்தர்காசினிமன்னவ ரெல்லர்ம்கருதிச்சேர்த்து
இனதாமொத்தெழுந்து ரதமேரிமகசாலையதுக்கேகினனெ

தரு:—பைரவி. ரூகம். ஆதி தாளம்.

யாகம்செய்ய ஏகினனெ அசுவமேதயாகம்செய்ய
ஏகினனெ யாகம்
நாகம்பிரையணிசொக்கநாதர் தன்னருளால்வேத
ஆகமமுறைமைப்படி அமோகமாருமசுவமேத
யாகம்செய்ய ஏகினனெ அசுவமேதயாகம்செய்ய
தன்னுடையதலைவியுடனே தனதுகுரு

ஸவர்மிசதாரங்க்ருடனே மன்னவரிஷ்டருடன்
மாதவவேதியருடன் நன்னயமந்திரியுடன்
நாவலரனேகருடன் யாகம்
பேரிகைமுரசடிக்க விருதுசொல்லி
வீரியகட்டியம்படிக்க நாரியர்கடனமாட
நாவலர்ஸங்கீதம்பாட சீரியசிங்காரத்தோட
ஜெகம்புகழ்ச்சிதேட யாகம்
இந்தநூறுமசுவமேத யாகம்செய்தால்
அந்தசுந்தரேசரருளால் ஸந்ததிசித்தமாயுண்டு
தப்பினல்விண்ணரசுண்டு வந்ததுவரட்டுமெண்டு
மனதிலுறுதிகொண்டு யாகம்

விருத்தம்

மகாராஜன்மலையத்துவஜன்மகம்செய்யவரும்போதுமலர் சங்குப்பூ
சுக வாலே சுமங்கலிபால்துய்யவேதியரெதிராக தோகைபோத்து
வருர் நாரைவலமாகவளர் கெருடன்காடை இடமாகக்கண்டு
முகமீதில்மகிழ்நிறைந்துமுனிவருடன்மகசாலேமுன்வந்தானே

விருத்தம்

வையகம்போத்தியபாண்டியமகராஜன்மகம்செய்ய வந்தானெண்டு
செய்யதேவேந்திரர்க்குத்தெரிந்துதன்னரசுக்கிடர்சேரு தெண்டு
மையதுபோல் உளம்குழைந்துமன முரண்டில்லாதபடிமாத்தல்
[செய்ய
துய்யதமிழ்வளர்ந்தோர்க்கும்சுந்தரமாமதுரைவந்துதோணினுரெ

தரு—மோகனராகம். இருபுடை. தாளம்.

வந்தான்தேவேந்திரன் மக ராஜசிங்காரமாக
வந்தான்தேவேந்திரன் மகராஜ
செந்தாமரைவதனம் தேஜசுபிரகாசிக்க
ஸந்தோஷமாகபாண்டியர் தன்னைக்கண்டுப்பேசிக்க வந்தான்
முத்துமாலைபதக்கமின்ன தங்கத்தினல்ஜரிகை
துஸ்துககதகவென்ன மூதாரிமோதிரம்
சுத்தநவரத்தினம் துலங்கும்மகுடம்சூட்டி
அஸ்தகடயங்கள்பூட்டி அலங்கிருதமிகக்கூட்டி-வந்தான்
துந்துமிமேளவாத்தியம் முழங்கவிருதுசொல்லி
அந்தமதாய்கட்டியம் விளங்ககவரிவீச
சிந்துசந்தங்கள்பாட தெய்வரம்பையர்கள் ஆட
சுந்தரம்சேர்தேவர்கூட சூழ்ந்திடஎங்கும் கொண்டாட-வந்தான்
நூராம்பரியாகமதான் பண்ணிபோட்டானேயானல்
தூராகும்நம்மரசு எண்டெண்ணிமனமயங்கி
ஆராதபுத்திரவாஞ்சை ஆரும்படியாகநல்ல
பேராம்புத்திரயாகம் பேணிச்செய்யெண்டுசொல்ல—வந்தான்

## விருத்தம்

வந்ததேவேந்திரனை மலையத்துவஜபாண்டியனே திர்வந்துகண்டு
ஸந்தோஷமாய்த்தழுவிதன்விஜிபில்மலர்க்கரங்கள் தன்னைஒற்றி
என்தவமோ அல்லது முன்னென்பெரியோர்செய்தவமோ எழுந்து
தேவர், இந்தநர்வந்துவென்டெழிலதுவாய்அழைத்துவைத்துயம்
[புவானே

### தரு:— காம்போதி ராகம், ரூபக தாளம்.

| | |
|---|---|
| அந்தமிகுந்தோங்கும் | சுந்தரவிண்ணகர் |
| அரசாளும்துரையெவாஸவனே | இங்கே |
| வந்தவகைவிவரம் சிந்தைமிகமகிழ்ந்து | வகிர்ந்திடும் வாஸவனே |
| எந்தமன்னவரிலும் எசெசும் தேஜெசும் | படைத்திருக்கும் |
| மதிகுலமீனவனே | தேடி |
| உன்தன்மகிமைகாணவந்ததல்லாதுவேரை | உளவில்லைமீனவனே |
| வந்ததுமுன்தவம் | தந்தருள்பாக்கியந்தான் |
| வானவர்துதிக்கும் | வாஸவனே |
| தேவர்சிந்தைகருத்ததுவை | ஸந்தோஷமாசவுரை |
| செய்குவீர் | வாஸவனே |
| இந்த அசுவமேதயெக்கியம் | நூறுவதெத்தினம் |
| செய்யும் மீனவனே | இது |
| எந்தபலனைவேண்டி | இச்சித்தாரம்பம்செய்தீர் |
| இயப்புவீர் | மீனவனே |
| ஒருசுதனதுவேண்டி | அசுவமகம் நூறுவதுகந்த |
| தல்லாதுவாஸவனே | வேறே |
| ஒருசுகிருதமும்வேண்டி | உருதிசெய்யலைநிஜம் |
| உரைசெய்தேன் | வாஸவனே |
| கரும்பதுன் ரஸமுங்க | வேம்பதைபயிரிடும் |
| காரணம்போலெ | மீனவனே கையில் |
| வரும்பலனதைவிட்டு | வீணிலெதையொ |
| தொட்டுவளர்த்துரீர் | மீனவனே |
| கையதில்தரும் பலன்கண் | டேதும் செய்யாமல் |
| காலங்கழித்தேன் | வாஸவனே இப்போ |
| துய்யதயவுகந்து | சுதனொண்டுவரும்வழி |
| சொல்லுவீர் | வாஸவனே |
| செய்யபுத்திரகாமேஷ்டி | யாகத்துக்காரம்பம் |
| செய்துநடத்தினால் | மீனவனே அந்த |
| தையலம்பிகை | யருளுண்டாய் |
| சிசுவுண்டாகும் | ஸத்குணமீனவனே |
| புத்திரகாமேஷ்டியாகம் | புரிவதுக்காவதும் |

பொருந்தினலெக்கினம் வாஸவனே வெகு
சுத்தியதுவாய்சொல்லி நடக்கும்படிக்கிப்போது
சொல்லுவீர் வாஸவனே
ஸத்தியாய்பரியாகம் தனக்குவைத்திடுலெக்கினம்
ஸௌபாக்கியலெக்கினம் மீனவனே
இதில்வித்தியாம்செய்திடும் தெய்வநகர்சேருவோரும்
க்ஷேமமாசீர்வாதம் மீனவனே

### விருத்தம்

வாஸவன் தன்னரசுக்கிடர் வருமென்று மதுரைதன்னில்வந்துபேசி
தேசம்வைத்தசுவமகம் நிருத்திபுத்திரகாமேஷ்டி நேமம்செய்து
தேசம்எங்கும் புகழ்ந்தேத்தும்தெய்வநகர் சேர்ந்தபின்பு
தென்னவன்தான், ஆஸனமீதமர்ந்திருக்கும் ஆசாரியரடிபணிந்து
[அரிவிப்பானே

### விருத்தம்

குருமணிநாதா இப்பொகோரியமகம் நிருத்தி
கருவுயர்ந்தோங்கும் புத்திரகாமேஷ்டியாகம் பண்ண
துருவம்செய்திருப்பதாலெ சுகந்தரும் இம்முகூர்த்தம்
அருளுகந்தெழிலதாக ஆரம்பம்செய்குவீரே

### விருத்தம்

அப்படியெசெய்திடுகிறோம்அரசனே தலைவியுடனருகில்வைத்து
செப்பமதாயிருமென்று செப்ப ஸாதகரை எதிரசிறக்கவைத்து
ஒப்புறவாய்சதானந்தருள்ள பெரியோரைபெல்லாம்ஒக்கக்கூட்டி
மெய்ப்பதுவாய் புத்திரகாமேஷ்டிமகம்செய்வதர்க்குவேவினரே

தரு:—கல்யாணி ராகம், ரூபக தாளம்.

யாகம்புரிந்தனரே புத்திரகாமேஷ்டியாகம்புரிந்தனரே
நாகமுதலந்தலோகங்களும்புகழ யோகமீனவன்
மோகமதாகவே யாகம்
எஜுருக்குஸாமதர்வணமென்று சொல்வேதம்
எத்திசைமறையோரும் சுத்திலும் சூழ்ந்தோத
திசைஎங்கும் புகழ்ஹோமம் செய்புகைவிண்மோத
தேவிகாஞ்சனைமுன் செய்யும்தவப்பிரஸாத-பாகம்
சாஸ்திரிஞர்மாதவரில் பெரிய
வாளனைவர்க்கும்மன்னவர்க்கும் தெரிய
அந்தமந்திரதந்திரம் ஆசாரியர்புரிய
ஆவின்நெய்க்குடங்கள் கொண்டாகுதிசொரிய-பாகம்
பொன்னகரமார்கள் பூமலர்தூவ
புனிதசந்தணமாரிபொழிந்து தெண்டலுலாவ
ந. ச ஜய துந்துமி நகாரவாத்தியமேவ

நவக்கிரஹங்கள் முழுவதும் நன்னிலைகளில் தாவ—பாகம்
பலையத்து வஜபாண்டியன் மனத்துயர்பரந்திட
மாதுகாஞ்சனைகாப்பமாரக்கம் நிறைந்திட
பலமுத்தமதிகுலம் பேரென்றும் சிறந்திட
பெரியநாயகிதேவி பெண்ணாகபிறந்திட—யாசம்

## முடுகு விருத்தம்

குருமுனிமாதவர் மறைப்படிசுதமகம் குறைவர வளர்ந்தேத்தி
கொத்தவர்நத்தவர் மைத்தவர் எவர்களும் கூட்டமிட்டருகிருக்க
ஊருவங்கொண்டுலகெதும் உரைசெய்யும் பவிதையும் உகந்து
பெத்திடுமுமையாள்உத்தமிகாஞ்சனைமுத்தவபோதுகுளிந்தயவா
[யனனில்
கருவதுவாகி நல்லுருவதுவாகி செங்கதிரவனொளிக்கிணையாய்
சனதனமூண்டடுத்தாண்டுமூண்டாகிய கன்னிகைதானாகி
திருநிரையணிகலைசிறந்தலங்கிருதமிகுசிங்காரத்துடனெசிருநகை
புரிந்தெழில்சிலம்புகள்கொஞ்சிடசெல்விபெண்டெழுந்தனளே

## விருத்தம்

புரியாகமதுவளர்த்துப்பூர்ணாகுதிருடுக்க புகழ்சேர்தேவி
கருவாகிஉருவாகிசனதனமூண்டதுபடைத்துக்கலையுடுத்து
ஒருமூன்றுவயதாகி உயர்ந்தமரகதமேனி ஒளிவுண்டாகி
திருவாகிமலையத்துவஜர்செல்வதியாய் அவதாரம் செய்கின்றாளே

### தரு:—தோடி ராகம், ஆதி தாளம்.

தேவிஅவதாரஞ்செய்தாள் தெய்வீகமாக
யோகயாகமீதில் தேவிஅவதாரஞ்செய்தாள்
வாவிநளினம்போலே மேவியாகத்தின்மேலே
மாமலையத்துவஜ மன்னவன்யோக
க்ஷேமமிகக்கொள்ளசெல்வதியாக தேவி
இருகோடிசந்திரன்கூடி ஒருமுகமாகநாடி
ஹிதமிகுபூரணகலையதுநிறைந்து உதயம் செய் மா திரு
ஒளிவதுசிறந்து தேவி
அஞ்சியவரைரக்ஷித்து மிஞ்சியவரைசிக்ஷித்து
அஷ்டதிக்குப்சட்டி ஆண்டிடும்விரியாய்
சிஷ்டர்களுக்கருள்செய்கின்றநீரியாய் தேவி
மூண்டெமுலஸ்தனங்களுக தாண்டதுமூண்டுகந்து
புருகொடுபலபணிகலையது துலங்க வருமிளஞ்சிருநகை

அருள்மருங்கிலங்க தேவி
தொல்லுலகில் செல்வமோங்க எல்லவர்க்கும் கலி நீங்க
சுந்தரமிக புகழ்சூழ்ந்திடும் சிரியாய்
சந்திரகுலக்கொழுந்தானகுமாரியாய் ஸ்ரீதேவி

## விருத்தம்

சிவதாரபராசக்தி ஜகஜ்ஜனனிசகசுந்தரிதேவிமூண்டு
நவதாரன்குலத்தில்வந்தநரேந்திரனும்பலையததுவஜன்நடத்தும்
யாகம், அவதாரமகிளமுந்தணிசதங்கைசலகலென்ன அசையவந்து
தவறுதகற்புகந்த தையல்காஞ்சனைமடிமேல்சார்ந்திருந்தாள்

வந்துமடிமீதிருக்கும் மகவுஜிருஜிலையை பொன்மாலைபார்த்து
இந்துகுலம்விளங்கவந்தஎங்கிழையபெண்ணரசேயென்றெடுத்து
பந்துமுலைஇரண்டும் விம்மிபால்சொரியகனிந்தணைந்து
பாசம்மிஞ்சி, அந்தகர்நல்விழிகொண்டானந்தமகை ஒத்துக்கொ
[ண்டாடுவாளே

## தரு:-செஞ்சுருட்டி ராகம், ரூபக தாளம்.

சுந்தரப்பெண்ணே என் தனிருகண்ணே
சுந்தரப்பெண்ணே சந்திரகுலக்கொழுந்தாய்
மந்திரயாகமதிலே வந்துதித்தசெந்திருவே
வாழ்மகிலேகுகிலே சுந்தர
புள்ளைகலிதீர்த்தைமின்னே கொள்ளகிடைக்காதபொன்னே
தென்னமுதேதேனேபாலே தித்திக்கும் முக்கனியே-சுந்தர
ஆணிமுத்தேமாணிக்கமே அனந்தகோடி திரவியமே
காணிக்குவந்துதித்த என் கண்மணிமாதரசே-சுந்தர
தளர்ந்த என்குடி ஈடேற்றி ஸகலலோகமும்காப்பாற்றி
வளர்ந்தெண்டும் சிரஞ்சீவியாய் வாழ்ந்திடவந்துதித்தசுந்தர

## தரு:-நவரோசு, திருபுடை.

மாதரசே கண்மணியே மாதரசே
பூதலம்துதிசெய் புண்ணியவதியாய்
மாதவர்பாண்டியர்தன் மாதவமுகிதந-மாதரசே
வாலைப்பெண்கிளியே வளரும் மின்னொளியே
சோலைக்கருங்குயிலே சொல்மயிலே-மாதரசே
அருந்தவச்சேயாய் அனைவர்க்கும தாயாய்
வருந்தும் என்மேல்கிருபை வைத்துவந்துதித்த—மாதரசே
பங்கயதிருவே பகரும் ஐந்தருவே
அங்கயற்கண் . சிறந்தமலர்தபொன் உருவே—மாதரசே

## விருத்தம்

கொழுங்கையைதபொன்பாலைகோதாட்டிசீருட்டிகொஞ்சிகையில்
வளர்ந்தகிளிபோலேவைத்து மகிழ்ந்துமுத்தமிடும்போது
மன்னனேந்தி, தளர்ந்தகுடிஈடேத்திஸகலரையும்காப்பாத்தி
தரணியாளஇ,ஸ்வாசாயுதித்த என்கண்ணெயென்டு புகழ்ந்து
[இயம்புவானே

### தரு.—தோடி ரூபகம், தாளம்.

அருமைப்பெண்ணரசெ என்னுசைப்பொன்மயிலெடுசால்
அஞ்சுகமெ அன்னமே
பெருமைபிரதாபசெல்வம் பொங்கிலங்க
பிரபலமதுரைவாழ் இரைவராம் சொக்கேசர்
தர்மகிருபையால் வளர்பசமதி
லவதரித்தெழுந்தருளியென் வருத்தம்தவிழ்க்கவந்த—அருமை

தவமிகச்செய்யும் பகீரதருக்காய்
கங்கைதரணியுத்தது போலெ
இந்தபுவனமெல்லாப்சுத்தி அலையும்தரித்திரர்க்கு
புதையல்வந்தத்தது போல்
அவனிவிண்ணெங்கும் போத்த
தொண்ணூத்தொன்பதசுவமசம் செய்தேன் என்குடிஈடேத்த
நவமணியிலும் நல்லசிரேருமணியாய் லோக
லோகநாயகிநீயெ யென்சேயாகிவந்துதித்த அருமைப்பெண்

திருடர்கையில்கொள்ளைகுடுத்த பொருள் முழுதும்
திரும்பிவந்ததுபோலே பிரவி
குருடருக்கிறக்கங்கொண்டொரு செய்வம் இருகண்ணும்
கொடுத்துகந்ததுபோலே உருகுப்எனதுவரம் நீங்க முடிசூடி
உலகெங்குப்புகழ்கீர்த்தி ஓங்கும் செங்கோல்தாங்க
தருவிலும்தருவாய் செந்திருவெ ஒருருக்கொண்டு
ஸந்தானமாய்வந்த சகலசம்பத்தெழுத்தெ அருமைப்பெண்

தங்கமகாமேருங்கதிக கனம்பொருந்தும்
சௌபாக்கியவதியாய் நாளும்
எங்கள்திங்களம்குலம் ஈடேத்துப்படிக்கு
வந்தெழுந்தருளிணமதியாய் மங்களகாசெல்வியாய்
எவராலும் மதிக்கமுடியாதபாகதவல்லியாய்
ஸ்ரீங்காரமெபெட்டு திக்குவிஜயப்செய்யும்
சிங்ககுட்டியாய்சுத்தத்தங்கக்கட்டியாய்வந்த அருமைப்பெண்

## விருத்தம்

கொஞ்சிவெகு சீராட்டி சோதாட்டி இருவிழியும் குளிர ஒத்து
வஞ்சிதனைபார்க்கையிலே மார்பினில்முத்தனங்கண்டு மனங்கலங்கி
அஞ்சிமெலிந்துருகிதவித்தருணவகாஞ்சனை சகிமாகநின்றுமிஞ்சிய
சஞ்சலத்துடன்விளம்புவான் பாண்டியனம்மிசத்ரளுப்புலானே

## தரு:-முகாரி ராகம், ரூபகம் தாளம்.

மதிதன்குலசேகர    மகராஜருல்பிறந்து
மலையத்துவஜனெனபேர்க்கொண்டு    மகுடமுடிசிறந்து
துதிசேர்ந்திடும்கதிரோன்குல    முதிகாஞ்சனமாலை
தேர்வையாள்தன்னைநாகரீக    விவாகந்தான்செய்துமகிழ்ந்து
பதினாயிரம்மடவார்சுகம்    ரதிமாரன்போலுகந்து
பரித்தேர்கரி ஹரியாசனம்    பண்புடனேசிறந்து
விதிநூல்முறைசரியாகவே    மதுராபுரியாண்டு
விண்ணோராசனெனபுகழ்    வேணபடிபூண்டு
சுகமாகஇப்புவியாண்டிட    சுதன்வேணுமென்றெண்ணி
சுகிருதமிகுவிருதங்களை    துவக்கிதப்பண்ணி
ஜகமீதிலேபலதீர்த்தமும்    தினந்தோறுமாடி
தேவாலயம் பிருமாலயம்    தினபானங்கொண்டாடி
தொண்ணூத்தொன்பதகவமகம்    பண்ணிதுகைசெய்து
தய்யபலதானமெதும்    சுகிருதமதாய்ச்செய்து
எண்ணும்மனம்நண்ணுமொரு    இளந்தைதந்திடாமல்
என்செய்வோமென்றுநெஞ்செல்லாம்    புண்ணாய் மனம்மடிந்து
இத்தின்மதில்புத்திரகாம    எக்கியம்செய்தபாக்கியம்
இருகண்ணென ஒருபெண்    தந்தீர்ஈசனே கைலாசனே
உத்தபாதுக்கு முத்தனமது    ஒத்தபாவனைசித்தமாய்
உன்செயலல்லால என்செயலில்லை    ஓஹோ ஜெகதீசனே
மங்கைமார்பினில் கொங்கை மூன்றிருந்து மாநிலம்தனைஆள்வது
மார்க்கமோ ஆர்க்கும் ஏற்குமோ என்மகேசனே ஜெகதீசனே
திங்கள்தன்குலமங்களகர    சோரவந்தவதாரமாய்
சிறந்தபெண்ணுக்கடந்தான்மிகசெய்தீர்    ஜெகதீசனே
முகநான்கயன் விதிபாவினை    முறையோ தவகுறையோ
முந்திவினைபயனோ இதுமூண்டது    ஜெகதீசனே
ஜெகமாதர்களுகமானமசொல்    திருக்கா என்கண்கரிக்க
சிந்தித்தீரோரும்பவஞ்சித்தீர்    என்னசெய்வேன்ஜெகதீசனே
எலிசோறுமிட்டொரு    சாயுமிட்டிடுசகம்
செய்யுமடுக்காய் இளப்பொண்ணிட்டு    களங்கமிட்டீர்
என்செய்வேன்    ஜெகதீசனே
மலைபோல்வரும்சலக்கங்களை பனிபோலவே விலக்கிமகிழ்ந்திடும்
மதுராபுரிவாஸனே    சுந்தரேசனே.

### விருத்தம்

[தான்
விலையேறும் வைரம்பச்சைவிளங்குமுடி சிறம்பொருந்தமீனவன்
தலைமீதில் கையைவைத்துதையலை தன்மடியிலவைத்துதயங்கும்
[போது
கலைமானை கரம்வைத்தகடவுள்சொக்கலிங்கேசர்கருணையாலெ
உலகேத்தும்படியாக ஒயாவொரு அந்திரவாக்குதித்தன்றே

### விருத்தம்

[தமூன்று
கனப்பொருந்தும்மலையத்துவஜர்கன்னிகையொஉமையவளாம்கரு
தனமதிலொண்டவளுக்கிறைவன் தனைக்கண்டால்மறையும் தடாதகை
[கைபாமநாமம்
இனதறமூர்ருன்புன்னைபோல்ளச்சடங்கும்விற்பனமும்இவளுக்கே
மனமுகந்தராசாக்ஷிமகுடாபிஷேகம்செய்துமகிழுவாயெ [செப்பு

### விருத்தம்

[யோக
அந்திரவாக்கிப்பம்பமன்னன் அகம்குளிர்ந்து முகமலர்ந்தயோக
மந்திரயாகமுழுவதும்முறைப்படிபெநிறைவேற்றிமனம்பூரித்து
சுந்தரமாமுனிவர்மைந்த ஆங்கர்தங்களிடமேசசொல்லிகோடி
சந்திரன்போலுதயஞ்செய்ததைபலைத்தானைந்தி ரதந்தனைக்கொ
[ண்டானெ

தரு:—புன்னுகவராளி, ரூகம் ரத்திதாளம்.

மகாராஜர்வாரூர் மதுரைக்கு மகாராஜர்வாரூர்
இகபராசுகபுத்திர யெக்கியம்செய்ததில்
இமையவளுக்கிணையாய்ச்சொல்ல உமையவள்தன்னைத்தேடி
ஜெபம்புகழ்ந்திடும்படி மகள்தன்மகிழ்கொண்டாடி
சிகரகோபுரந்தேடி சிறந்தமாளிகைநாடி
மகாராஜர்வாரூர் மதுரைக்கு
தேவதுந்துமிவாத்தியம் ஜெபபேரிமுழங்கிட
தெய்வாம்பயர்நாட்டியம் சிறந்தயின்நடந்திட
பூவுலகராசர்கள் போத்திபின்தொடர்ந்திட
பொன்மழைசாங்கொண்டு பொழிந்தெங்கும்நிமிர்ந்திட— மகாராஜர்

இந்திரலோகத்து — இமயவர்மலர் தூத்த
இன்பசந்தனமாரி — எங்கெங்கும் துமிதூத்த
சந்திரகுலத்தடந்தன்னில் — தாமரைபோல் பூத்த
தையலைமடிவைத்து — சகலலோகமும்போத்த—மகருஜர்
மண்டலங்கொண்டாட — மகோன்னதெசைபெத்து
மகமேருவதிலும்வெகு — மகிமைகனதைபொத்து
அண்டபுவனங்களிலாரும் — பேருதாய்ப்பெத்து
அம்பிகைதனைமெத்த — இன்பமாய்மடிவைத்து—மகருஜர்

## விருத்தம்

மகருஜர்மலையத்துவஜர்ம்கருடனெரதமேரிமாளிகைக்கு
சுகமாகவந்திறங்கிசுகிருத ஆலாததியெல்லாம் சுத்திக்கொண்டு
வெகுமானகொலுக்கூடமீதமர்ந்துவிரைதானமேவும்போது
துகையோதிமுடியாத துய்யவேதியர்கள்வந்து தோணினாரே

தரு:— நாதநாமக்கிரியை, ரூகம் றத்தி தாளம்.

சந்தனகுருக்கிட்டு — அக்ஷதைபொட்டிட்டு
செல்லாசோமன் ஜோட்டை — தழைபகொய்துவிட்டு
சொந்தமுள்ளாரை — கூப்பிட்டுக்கூப்பிட்டு
துய்யவேதியர்கள் — தோணினார்
தர்க்கம்வியாகரணம் — தருமீமாம்சம்
சாசுவதவேதாந்தம் — ஜோதிஷம்பாரதம்
மெய்க்கும்படியாரும் — வீசிபிரசங்கம்செய்
வேதியாகள்வந்து — தோணினார்
ஸித்திரரும் எஜுர்வேதம் — ருக்குவேதம்
க்ஷேமஸாமவேதம் — செப்பதர்ணவேதம்
அத்தியாணம்செய்தெண்டும் — நித்தியரைபோத்திய
அந்தணர்கள்வந்து — தோணினார்
இன்னிக்கிநம்முடதாரித்திரியம் — தீருமென்று
என்றைக்குங்கிருதார்த்தனாகி — னேவாவெண்டு
பெண்ணைபிள்ளைகளை — பெண்டுகளைகூட்டி
பிருமணர்கள் வந்து — தோணினார்
பிள்ளைக்கு கல்லியாணம் — பெண்ணுக்குகிரக்ஷி
பிரத்திகடனெல்லாம் — நிவர்த்தியாச்சுதென்று
வெள்ளப்பட்டனாக — விளம்பிக்கிளம்பி
வேதிபர்கள்வந்து — தோணினார்
சங்குசக்கிரகடுக்கனைமாட்டி — தங்கபவித்திரமுதாம் பூட்டி
அங்கமெங்கும் — பட்டைநாமங்கள் சூட்டி
அய்யங்கார்கூட்டங்கள் — தோணினார்

திருவாய்மொழிப்பிரபந்தம் முழுதிலும்
தீர்க்கமதாய்ச்சொல்லும் சிலாக்கியனுமெண்டு
அருளாகமத்தின் அடுக்குகளை பேசி
அய்யங்கார் கூட்டங்கள் தோனினர்
ஜன்மானுஜன்மமும் க்ஷேமம்பெரும்படி
தினமொத்திருக்குதனம்வரும் வாவெண்டு
அம்மங்கார்பெண்பிள்ளை அடங்கலும்கூட்டி
கொண்டய்யங்கார் கூட்டங்கள் தோணினர்

விருத்தம்

வந்தமறையவர் மகிழ வளர்சென் னெல் விலைசெய்பொன்வாரி ஈந்து
அந்தமிகு ஆசார்களுக்கானை பரிரதமு தலாயளித்தனுப்பி [யன்
எந்தமறைபுள்ளோரும்எண்டமட்டும எடுத்துக்கொள்ளண்டியம்பிபாண்டி
சொந்தஅபன்மனை பொக்கிஷம் துறந்திட்டான்கீர்த்திமிகசிறந்திட்டானெ

இட்டஉடன்மலைபத்துவஜன் எழுந்து ஜெகதீசுவரியை ஏத்திக்கொண்டு
சட்டமோடுசொக்கேசர் ஸன்னிதானத்தில்வந்து சரணம்பணணி
மட்டளவில்லாப்பதத்தைமனமகிழ்ந்து துதித்தேத்திமாளிகைக்கு
திட்டமதாய்வந்திருந்துஜெசமங்களமாகும்படி செப்புவாரெ

தரு:—எதுகுலகாம்போதி ரூகம், திருபுடை தாளம்.

சுந்தரமிகுந்ததந்திர சுமதி மந்திரி வெகு
சுகிருதமானஸகலகுண சுமதிமந்திரி
இந்திரன்போலும் வாழுமெனக்கிளந்தையில்லாமல்
ரொம்பயேங்கித்தவித்தேன் இறங்கிஈசுவரிதானெ
ஸந்தியாய்வந்துதித்தாள் ஸந்தோஷமாக
இந்தஸந்தோஷம்ஸகலலோகம் ஸந்தோஷமாக
எந்தசிவாலாயம் விஷ்ணுவாலயத்துக்கும்
அபிஷேகம்நேவேதனம் ரட்டித்திதுமுதல் செய்து
அந்தமுள்ளபிருமாலயம் பூஜைநடத்தி
சொல்லும்ஆலயமெல்லாம்புதிக்கிஅலங்கிருதமெல்லாம்பண்ணி
திட்டபடிஉத்சவங்கள் செய்வதல்லாமல்
ஒருதேர் திருவிஷாமுதலானதும் செய்வித்துப்போடு
துஷ்டதேவதைகிராமதேவதைக் கொல்லாம்
ஒருசுகிருதபூஜை சீர்சிறப்புதுரிசதாய் செய்து
பட்டணம்நாடெங்குமுள்ளோர் ஆசரிக்கின்ற
தெய்வம்பலதுக்குமோர்பூஜை போடும்படிசெய்வித்திடு
இஷ்டஸத்திரம்சாவடிகளெல்லாம் புதுக்கி

அண்ணப்என்னோரும் வந்தபேருக்கிட்டுச்சொல்லு
சாலைநந்தவனப்போட்டு தண்ணீரூப்விட்டு
துந்ததடங்கள்வெட்டி சிணங்கள்சட்டிமடங்களு கட்டு
நாலாவிதபரதேசிபடங்கள் புகிக்கி
எந்தநாளும்பசேசுவரபூஜை நடத்திரிடச்செய்வாய்
அரசாக்ஷிசும்ஆள்மாகாணம் உனவர்களுக்கும்
இனும் ஆருமாதத்தச்சம்பளம் ஆடையளித்து
பராரஜர்திரைமாப்பெண்டெழுதி போக்கிட்டு
லொந்தப்பார்முழுதேமூண்டுக்குத் தள்ளி
விதித்த அபருதம்முன்னிலுவையெல்லாம் அடங்கலாய்தள்ளு
மானியப்பண்ணிவிட்டுடுஆயங்கட்டுகுத்தகைஎழாண்டுக்குதள்ளு
விதித்த அடருசப்முன்னிலுவையொல்லாம் அடஙகலாயதள்ளு
தீயசிறைதீர்ப்பெடுத்துமாப்பது செய்து
மைத்ததிருடர்குத்தவாளிகளை சேறவிட்டுந
விளம்பியவகையெல்லாம் வளப்படிசெய்து
வளம்பொருந்தரசின் முறைமகிமைஎரிட
நாளும்வரிசையாய்நடத்திவாரும் சுமதிமந்திரி

விருத்தம்

இந்தவிதம்கட்டளைதானிட்டபடிநிறைவேற்றிலெழிலமைச்சன்
அந்தமதாயடிடணிந்தான்தனைசவெகுமதியெல்லாம்அளைசகிர்று
லந்தநிலையசமேர்திசதாரர்தரிடம் வர்தசரணப்பன்ணி
எந்தனிடமாதரசிக்கின்பமதாய் ஒருநாமமிடுமெண்டாவெ

[யர்
மன்னருக்குமன்னரெனும்மகுடமுடிபொருந்திருக்கும் மதனைப்பாண்டி
தன்னைபெனும்மாதுபெயர்அசதாம்சொல்தடாதுறையெஆகுவண்டாய்
இன்னமொருசெல்வப்பெயர் இன்பமினுக்ஷியெண்டிட்டிருக்கு
நன்நயம்சேரின்றமுதல்நாமகரணமிரண்டுசூட்டுவோமெ

நாமகரணைப்ப வைத்த மன்மசதாசர்தரை நமஸ்கரித்து
சேமமதாய்என்முடிசூடிநிருத்திவைத்த மறைந்தானெண்டு
பூமல் பொன்மலர்தூவி போத்தி ஆச்ரமம்சேரபுஷ்தளாத்த
க்ஷேமம்தந்தசெல்வயுடன் ஸ்ரீமலையத்துவஜபாண்டியர்சிறந்திருந்தார்

இருந்தபின்புமகள்தன்னை எந்திலபூகாஞ்சனமாலை எந்திக்கொஞ்சி
அருந்தவத்தின்பாக்கியமெண்டான கொண்டுமார்புடனே உணைந்தாள
(கொங்கை
சுரந்தமுதமுதாணிபோல் ஜொலித்திடமாதுக்கையிலெ சுகமனந்தல்
பொருந்துமநவரத்தினதொட்டில்பூட்டினாள்அதில்வைத்துதாலாட்டினாலெ

## தாலாட்டு நீலாம்பொரி, ராகம்.

சீரேறுந்தம்மாமதுரை தென்னவராம்மன்னவர்க்கு
பேரேறுக்கவந்துதித்த பெண்ணரசெகண்வளரி
செல்வம்மிகவோங்க தேசமெல்லாம் தான்தாங்க
வல்லமையாய்வந்துதித்த மகாராஜிகண்வளரீ
தேனே அமுதே செங்கரும்பெநற்கனியெ
மானெ அதியோக மாதரசெகண்வளரீர்
தேசாதிதேசமெல்லாம் சீமெருத்தமீனவர்க்கு
பூஜாபலத்துதித்த பூங்கொடியெகண்வளரீ
மெய்க்கும்ஸ்வயசூரர்வேந்தரெல்லாம் போத்தளட்டு
திக்குவிஜயம்செய்யும் செல்வதியெகண்வளரீ
பொன்னெநவரஸமெ பூஷணமெமாணிக்கமெ
மின்னெவளர்மதியெ மெல்லியரெகண்வளரீ
ஆசைப்பெருங்கடலெ அருந்தவத்தின்பாக்கியமெ
பேசும்நபகிளியெ பெண்மயிலெகண்வளரீ
உள்ளம்மிகுதயவாய் உலகாளும் மீனவர்க்கு
பிள்ளைக்கலிதீர்த்த பெணணனங்கெகண்வளரீ
இந்திரன்முதல்பூவரசர் எல்லவரும் போத்திமகிழ்
சந்திரகுலத்துதித்த தடாதகைக்கண்ணெகண்வளரி
சித்தம்மகிழ்ந்துதுகி செய்பசனுகம்பிக்கு
மெத்த அருள்கொடுக்கும் மீனாக்ஷிகண்வளரி

## விருத்தம்

மாதுவன்தல்தெளிந்தான்மங்கை காஞ்சனமாலை மகிழ்ந்துதன்கை
மீதிலெடுத்தேதந்தி வெகு விசித்திரமாய் அலங்கரித்து விளங்கும்அந்தி
போதுகனிலுப்பரிமேல் பூரிப்புடன்துஇருந்துகொண்டு புனிதமாக
ஓதங்கொங்கைப்பாலூட்டுவாள் விளையாட்டுகாட்டுவாளெ

## தரு:—எதுகுலகாம்போதி ராகம், ஏக தாளம்.

கண்ணெ கண்ணெ பெண்ணெ பெண்ணெ விண்ணூரன்னமெ
அதெதாசாகமோடும் வேகமதைபாருமின்னமெ
உண்ணும் நவரஸமெ சொல்பெண்ணின்மயிலெ
கிட்டஓடிவந்து ஒருமுத்தம்தாடி குயிலே
கொள்ளகிடைக்காத நல்லகோமேதகமெ
அதொ கூவுங்குயிலோடெ அக்ககூவஞ்சுகமெ
புள்ளைகலிதீர்த்த ஆசைபேரின்பமின்னெ
கொஞ்சிப்பேசிஅன்னம்போல் நடந்துவாடிபெண்பெண்ணே

சக்கரைவாயைத்திறந்து
சத்தெதாங்கித்தாங்கி
பக்கவீட்டுத்தோழிமாரெ
கூட்டிபாங்குடனே
அந்தநிலைக்கண்ணாடிபார்
அகிலாரொநிற்குருளன்னைப்போல்
இந்தத்தங்கபாவைதன்னை
வெகுஇன்பமாய்விளையாடடி
உன்னிதமாய்
கிட்டஓடிவாவெண்டெகூப்பிடு
மின்னிலாபிரகாசமதில்
காட்டிவினோதமாய்நகை
விளையாடிதெகமெல்லாம்
இருவிளையாடலாம்
களையாரிகற்கண்டுன்னு
இந்தகனக்கும்பமுலையை

தையலெநீயே
சொல்லிகையைதட்டடிசேயெ
பாங்குடன்தானெ
நாலுஆலைபாயடித்தேனெ
அம்மாஇப்போதே
ஆருசொல்மாதெ
பேந்திநீ கொஞ்சி
இங்கிதவஞ்சி
வானமதிலாரம்பிலியை
ஓதுகிளியே
வேடிகளைசத்தெ
சுத்தடிவிசித்திரமுத்தெ
வேற்றுதெசும்மா
நாளைக்குவேண்டியதம்மா
அங்கயற்கண்ணே
உன்னுகண்ணுனபெண்ணெ

விருத்தம்

செந்தமலர்மருக்கொழுந்து கதம்பம் சூழும்
காரிழைகாஞ்சனமாலை கனிந்துள்ளன்பாய்
இந்தவிதம்இரவுபகல்இன்பச்சீர்க
ளிட்டடவும் வயதோரைந்துதெரிகல்ல
விந்தையுகந்திருந்துவெகு விநோதமாக
விளையாடிஅங்கயற்கண்விரகரித்து
சிந்தைமகிழ்ந்தோங்குமிளமதியைப்போலெ
தினமும்வளர்ந்தெழில்நிறைந்து சிறக்கின்றாளெ.

மாதுவபதைத்தெடுத்து வளர்த்திட்டாலி ரி வித்தைவருத்திவைக்க
ஏதுவிதுவமைபவெண்டு இங்கிதமாமலைபத்துவஜரெண்ணிக்கொண்டு
ஓதும்கலைஞானங்களுணர்ந்தவராய் யோக்கியராய் உரைத்தர்க்க
வாதுசொல்லவல்லவருப் மறைபவராய் வாத்தியார்வரச்செய்பென்றுரெ

வையகம்போத்தியமதுரைமலைப்பத்துவஜமகாராஜன் வரத்தில்வந்த
தையலெனுமங்கைபற்கணனக்கு வித்தைவருத்திவைக்கவமைத்தனுக
செய்யகலைஞானமெல்லாம்தெளிந்தறிந்து உணர்ந்தவருய் சிறந்தோருய்
துப்பமறைஓதுதலநாநதாருப் வாத்தியார்தோணிஞரெ

தரு:—தர்பார் ராகம், ரூபக தாளம்

வாத்தியார்வந்தார் ,, கலைஞானவாத்தியார் வந்தார்

கீர்த்தியரும் மதுருபுரியாளும் மூர்த்தியரும்
மலைபத்துவஜர்மைமுகத்தில் வாத்தி
இடக்கரை ரீஜாபன் அலங்க உடுத்திமேலே
யோகவேஷ்டியுமிலங்க அடுக்குமோதிரம்மாட்டி
அழகுமுண்டாசுசூட்டி கடுக்கன் கண்டி பூட்டி
கனஉல்ல சப்பாராட்டி வாத்தியார்
சந்தண சு நுக்குமிட்டு நெத்திதன்னிலே
ஜெவ்வாது திலகமிட்டு கந்தம்கமணவாஸி
கதம்பம்புனுகுபூசி விந்தைவினுதம்பேசி
வேடிக்கையாய்கைவீசி வாத்தியார்
முகத்தினில்களைகிறந்து அதிசுந்தரமோக இலகிதம்நிறைந்து
ஜெகத்தில் புகழ்ஆரோக்கிய ஸ்ரீமனமீனவன் கிலாக்கிய
மகத்திஒத்திதபாக்கிய மாதுவாசிக்கபோக்கிய வாத்தியார்

விருத்தம்

சங்கதமுந்தழைத்தோங்க தயாளுசொக்கலிங்கேசர் சரணம்போத்தி
எந்தமறைபுள்ளோரும்எவ்வுயிருந்தழைத்திருய் எண்ணிக்காத்து
இந்தமதுராபுரியாள் என்கோவெபாண்டியருஜேந்திரன்மாலே
ஸந்ததமிருந்திடுஸர்வாபீஷ்டசித்தியர்த்த ஆசீர்வாதந்தானே

சொன்னமொழிதவறுததுராந்தரசுந்தரவிஜயந்தலக்குமூதார்
மன்னமெனும்மலைபத்துவஜமகருஜன்கொலுவில்வந்த வாத்தியாருக்கு
தன்கயயம்சேருபசாரசட்புகாது இருமெண்டுநல்லெக்கினத்தில்
அன்னமெனும்அங்கயற்கண்ணம்பிகைகையசுமதிமாதிரிஅழையெண்டாரெ

மன்னர்துதிமலையத்துவஜாமாதை வாசிக்கவைக்கமகிழ்ந்தழைக்க
அன்னமெனும் பொன்மாலே அலங்கிருதபீதாம்பர சித்தாடைகட்டி
பொன்னின்ரத்தினபணிகள்பூட்டிவரச்சொல்ல வெகுபூரிப்பாக
வன்னமாதகமயில்போல் பாலமீனாக்ஷியம்பாள் வருகின்றாளே

ரா:—மோகன ராகம், ரூபக தாளம்.

செல்வமீனாக்ஷிவந்தாள் ஸ்ரீங்காரமாய்
செல்வமீனாக்ஷி வந்தாள்
வல்லமைமேன்மை மகிமைமிகச்சிறந்த
மலையத்துவஜபாண்டிய மகிபன்தவம்பிரந்த
செல்வமீனாக்ஷி வந்தாள்
ஸரிகங்கணரத்தினஒலே சரத்தொங்க
சந்திரமுருகோடு ஜெடாநாகமிலங்க
உருகுமணிமுக்கித்தி மிலாக்குமுத்துவடங்கள்

| | |
|---|---|
| உகந்துசாயக்கொண்டைபோடுகலை துலங்க | செல்வமீனாக்ஷி |
| தங்ககிள்ளட்டிலக | ஸரப்பளிமின்ன |
| சதங்கைப்பாடகம்தண்டை | காலில் கலிரென்ன |
| அங்கமாயிரங்கோடி | அநுக்கனுதயமென்ன |
| அஷ்டலெக்ஷ்மிகளுக்கதிகம்இவளென்ன | செல்வமீனாக்ஷி |
| பண்பானமுனிவோர்கள் | பாருள்ளோர் பூஜிக்க |
| பாண்டியனெபாக்கியவானென்று | பேசிக்க |
| இன்பதாம்புஜம் | எவர்களுமாசிக்க |
| இயம்பியகலைஞானமெல்லாம்தான்வாசிக்க | செல்வமீனாக்ஷி |

## விருத்தம்

சிந்துசக்கம்பாவினங்கள் செப்புநவிரணர்துபர்தீர
செம்பொன் தந்துகந்து அனு ன மு தயவாகஆகரிக்கும்
சம்பிரமும்சேர் இந்துகுலமாமந்தரஏந்திழை மீனாக்ஷி அம்பாள்
எழிலதாசவந்துபெத்தமலபத்துவஜமகருஜன்மடிமீதிலமகிழ்ந்தி
(ருந்தாள்
வையகம்புகழ்ம்போக்கிபெரும் வாத்தியாரேஉமதுமனமகிழ்ந்து
ஐபர்சொக்கலிங்கேசர் அனுக்ரகத்தால் அம்பிகைக்கு
செப்பகலைஞானமெல்லாம் சீக்கிரத்தில்வரும்படிசிருக்ஷித்து
துப்பவிக்கிவிநாயகரைத் தோத்திரம் செய்து அரிச்சுவடிதுவக்குவீரே

மதிகுலமீனவன்சொன்னவார்த்தைப்படி வாத்தியார்மனம்மகிழ்ந்து
அநேகவிதசெய்வரிசைபய் சித்திவிநாயகருக்கு
அதிவிதமாய்பூஜைசெய்து ஹரிஓம் என்றுமுதலைப்ர்சொல்ல
துதிபொருந்தமீனாக்ஷிதப்பவரிச்சுவடி துவக்கினளே

### தரு:—அஸாவேரி ராகம், ஆதி தாளம்.

| | |
|---|---|
| வித்யாப்யாஸம் செய்கிறாள் | மீனாக்ஷிதேவி |
| வித்யாப்யாஸம் | செய்கிறாள் |
| அத்திமுகவனை போற்றி | ஹரி நமோநாராயண |
| வித்தம்எனக்கருள் | சீர்தரும்மென்று |
| அஸ்தமதில்பலபுஸ்தகங்கள்கொண்டு | வித்தியாப்யாஸம் |
| இன்பமாய ஸமஸ்கிருதமும் | தெலுங்கு தமிழ் |
| இந்துவிபரி ஸங்கீதமும் | சப்பளம் கர்நாடபதமும் |
| தொட்டியம்சிங்களம் | கன்னடம் சொல்சீளவிதமும் |
| தென்புகழ்தெழுந்துபாஷை | தெளிந்தறிந்துணர் ஆசை |
| பண்புடனேவரும்படி | அதில்உருகி |
| அன்புடனேதெவனம்அதில் பெருகி | வித்யாப்யாஸம் |

வெத்திவில் ஆயுதம் எடுக்கும் வரிசைகளும்
மேலதிரை வெல்லுமொடுக்கும் சக்திசவுரியம் கொடுக்கும்
அநேகமந்திரதந்திர இந்திரஜாலபடுக்கும்
நத்துசர்சாஸிதாப்பாங்கும் நன்நடஸங்கீதம்
பொங்கும்சித்தியதாகவே தினம் தினமகிழ்ந்து
புத்தியதாய் மனப்படிப்பதிலுகந்து வித்யாப்யாஸம்
தரணிவாழ்மனிதரிலும் அமோகயோக
தவம்செய்யும்தபோதனரிலும் பேரணிதேவாதிகளிலும்
மதுரமாகபேசும்கவிவாணரிலும் ஆருப் இவள் தனககிடு
அல்லகலைவாணிஜோடு பாரெணவே ஆனயொருப்புகந்திட
சிருயர்மீனவள் சிர்ஸைதமகிழ்ந்திட
வித்தியாப்பியாஸம்செய்குருள் மீனாக்ஷி தேவி

விருத்தம்

போத்தி அனவோரும் துதிப்பூவை மீனாக்ஷி அம்பாள் புநிதமான
சாஸ்திரங்கள் வேவங்கள் ஸகலகலைஞானங்கள் சரசுஸ்திரங்கள்
பூர்த்தியாய்கற்றுணர்ந்து பூசுரர்கள் தபோதனர்கள் புகழ்பாவனர்
மெத்திரியெனப்படித்தறிந்து நிருபமயமை தேமும்நிறைசிருன்ளே

விருத்தம்

சிரர்தமததருபுரியாள் ஸ்ரீமனே உமதபெண் ஜெசம் விளங்க
பிறநசவர்கள் இன்மேலும் பிரப்பவர்கள் இதுச்ருமுன் பிரர்தனைசா
இறந்தவர்களெவர்களிலும் இணைஉக்கிணையில்லையென்றிடப்பபோத்த
நிறைந்தகலைஞானமெல்லாம் நிருமியாப்படித்துணர்ந்து நிலைகண்டாளே

ஸகலகலைஞானங்களும் தையல்தனக்கே திவைத்தசாஸ்திரியார்க்கு
அகம்புதுசுகி கல்நிலத்தில் ஆய்யாயிரம்வேலி ஆக்ஷிடண்ணோ
சுகமிகுபொன்சிவிகை ரதம் சுவர்ணபிஷேகம்கஜதுறக ரதங்கள்
தகதகன ஆபரணம் ஸகலமும் மீனாக்ஷியுகந்திரிசாத்துவாயே

இந்தவிதம்கலைகளெல்லாம் எந்திழை மீனாக்ஷி படித்தின்பமேவி
சிந்தைமகிழ்கூர்ந்து தினமும் வளர்ந்தோககு எழில்சிறந்தநாளில்
ஸொந்தம்பெந்து மாதர்பைத்ததோழியர்கள் தன்னுடனே சுசிரம்சேர்
விந்தையுசந்திடும் விசித்திரவிநோதமாய் விளையாடமேவினாளே

தரு:— உசானி ஏருபம்.

தேவி விளையாடுகிறாள் பாரீர்
ஸ்ரீவிஜயமீனாக்ஷி தேவி விளையாடுறாள் பாரீர்

தாவியானைதன்னை புடித்தாட்டி
தைரியசிங்கத்தை தள்ளிதளாந்தோட்டி
மேவியபுலியை மிதிச்சு திரட்டி
மேலானயாளியின்மீதேறி காலாட்டி தேவி
வில்லதில்அம்பு விஜயதாய்பூட்டி
ஆகாசமதில்விளக்கண்டரெண்ட மீதிலேறோட்டிவல்லமையதாய்
வளைஎரிசட்டிஎடுத்து பலேயில்மதகரியதின்பல்தகமட்டி
சொல்லும்பக்கெடுத்தோங்கி யடித்துசுறுக்கெனத்தானே
தொடர்ந்துபுடித்தாலுபலேகளை கடுகாயிமத்து
கரும்பாயிராப்புரம்பத்தையொடித்து தேவி
சுத்திவெசுராசூராளைவிட்டு நடுவில்நின்டப்பு
சொரிந்திடச்சொல்லி துணித்துக்குமித்திட்டு
வெத்திதரும்வாங்குவரிசையில் தொட்டு
சதுரங்க விட்டுவல்லியாய நல்லவிநோதங்களிட்டு
கத்தியெடுத்திருகைபிறம் வீசி
கதம்பர்தெவ்வா [illegible] லந்துபூசி ஸத்தியந்திதரங்களைப்பேசி
ஸகலபுவன [illegible] மகஜ்ஜி தேவி
இந்திரஜாலத்தடுக்கொடுத்தடியிட்டு நாலேணிவிட்டேரி
தேவாதிபீடத்தில் எதிர்த்துச்சமரிட்டு
தந்திபர்லேனைதகத்தைத்தாண்டிட்டு வெட்டிவெட்டிக்கீழே
தள்ளியெவர்களும்தயங்கருமிதிட்டுசுந்தரமாய்வந்துரூபதுதித்து
சூரரெவரையும் திருபபாய்மதித்து
அந்தவான்மீன்களை ஆபடெடுத்து அடித்து
அறங்கமீதில் பாய்ந்து அகிழ்தாண்டி குதித்து தேவி
பாரிசாரிசெய்துபந்தயங்கூரி அதில் நின்றபடி
பாய்ந்து பதயானை பணியத்தானேரி
தெருவெங்கும்சுற்றிதேரதிலேரி ஆகாசவீதி
செலுத்திதேசஸ்ரீயங்களாதிஅருளவைபர்களை அழைத்துத்தான் கூடி
அலங்கிருதமாக அம்மானையாடி தருபதல்வரஸங்கீதம்பாடி
தங்கஊஞ்சலதில்தானிருந்தாடி தேவி

விருத்தம்

அனமுதலமைத்திடும் கடமலங்கிருதம் குழங்கையர்க்கண்ணமோகமாக
தினம்தினம்கன்னியர்களுடன் சிங்காரவிளையாட்டு சிருசந்து
அனவரும் போத்தியகீத ஆசாகுதிசெலுத்துமுறை அடுக்கும் கண்டு
மனமகிழ்ந்துகொண்டிருநான்குவட்தயடுத்தினமதிபோல்வளர்கின்றுளே

இருநான்குவயதாகிவந்திளமீனுகிவளர்ந்தெழில்சென்றளில்
திருவாகும்மலயத்தவஜர்தன்மகள்தன்யோக்கியமும்சமத்தும்பார்த்து
திருமேவும்மகுடாபிஷேகம்செய்யமுகூர்த்தம்வைக்கசீக்கிரத்தில்
ஒருஜோசியர்அமைச்சாஉசிதமாய்வரவழையெண்டுரைசெய்தாரே

அங்கயர்கண்வயதிருநான்கடுத்தராசான்நிதம்தெரிந்தழகோர்நாளில்
திங்கள்குலமலையத்துவஜர்செல்வியர்க்குமகுடாபிஷேகஞ்செய்ய
மங்களமேதினம்பார்க்கமனமதிலெண்ணிவரவழைக்கமகிமைசூழ்ந்த
துங்கர்புகழ்பிருமாண்டஜோசியர்ஸ்ரீங்காரமதாய்த்தோன்றினாரே

தரு:—கல்யாணி ரத்தி.

ஜோசியர்வந்தாரே பிருமாண்ட ஜோசியர்வந்தாரே
தேசாதிதேசங்களெங்கும்செண்டு சீரும்புகழும்சிறந்தவனுமெண்டு
சாசுவதமாய்க்கிரக சாரங்களைகண்டு
ஸமஸ்தஜோதிஷசாஸ்திரம் கைகொண்டுஜோஸியர்
ஈரேழுலோகத்தில்நடக்கும் கிரமமும்
ஈசர்முதலாய் மும்மூர்த்திசுதர்மமும்
நேரிழையார்கள்தன் நினைப்பும்வர்மமும்
நேரிட்டுசோதித்து நிச்சித்துசொல்லிய ஜோஸியர்
தகட்டுமுண்டாசு சரிகைதுஸ்துட்டு
சாதருபசுமை சாலுவைமேலிட்டு
பகட்டுவைரகடுக்கன் காதிட்டு
பதக்கம்கண்டிகை பவித்திரமிட்டு ஜோஸியர்
வேண்டியபேருக்கு மூன்றுஜென்மங்கண்டு
விதித்தபலனை விஸ்தரித்துவிண்டு
பாண்டியராஜர்முன் பாங்காய்வந்துநிண்டு
பாக்கியனை அனேக ஆசீர்வாதமெண்டு—ஜோஸியர்

விருத்தம்.

வந்தஜோஸியரே எந்தன்மாதரசி அம்பிகைக்கு
இந்தமாமதுரைச்செங்கோலீந்தரசாளுதர்க்கு
அந்தமாமுடிதரிக்க ஆலோசித்திருப்பதாலே
தொந்தமேவாக்ஷிபெத்தசுபதினம்சொல்லுவீரே

செல்வியெனஅவதரித்ததேவியர்க்குமகுடாபிஷேகம்செய்ய
சொல்லும்நாளதுமகரதிங்கள்மீதில்ஷோடசசோமவாரம்
துல்லியமாய்வளர்பஞ்சமிஹஸ்தம்சேர்ந்தசுபமீனம்நிஷ்பஞ்சகம்
[சூழ்ந்திருக்கு
நல்லதினமிதுபோலவாய்த்திடாதுநன்னயம்சேர்தென்னவரேநட
[த்தலாமே

## விருத்தம்.

தினம்வைத்து மலையத்துவஜபாண்டியராஜன்
ஜெகப்பிரஸித்தம் செய்விச்சேதும் சேகரித்து
இனமொத்தமன்னவரைவரவழைத்து
இட்டீர்வதுநீங்கியபின் தாமெனமுந்திருந்து
தனதுத்தமனைவியுடன் நேமம்கொண்டு
ஸகலஆலயம் பூஜைதனை நடத்தி
ஏனம்பெத்தலெக்கினமதில் மகுடம்சூட
கயற்கண்ணம்பாள்வரும்படிக்குகருதினரே

மீனவன்தன் முடிசூடமேவியழைத்திடும்போது மிகமகிழ்ந்து
ஸ்நானஜெபதபம் செய்து ஸரிகைதுயிலாபரணம்தரித்தெழுந்து
கானநயஸ்வரம்பாட கன்னியர்முன்நடமாட கவரிவீச
வானவர்பொன்மலர்தூவ வஞ்சிமீனாக்ஷியம்பாள் வருகின்றாளே

## தரு:— தோடி ஆதி

தேவிதானெவந்தாள் ஸ்ரீங்கார
மீனாக்ஷியம்பாள் தேவிதானெவந்தாள்
சீதகுணவேணி ஸ்ரீகல்லியாணிதேவி
பூவுலகமார்கள் போத்தும்செம்பீரி புனிதன்மலையத்துவஜபோஜன்குமாரி
காவலர்களெவர்களும் துதிநீரி
காமியர்தருக்கிருபாகடாக்ஷி ஸ்ரீங்காரி தேவி
விதிஹரிமுதல்நிதம்துதிஹரர் நேசி விலையுயர்மரதகமேனிப்பிரகாசி
மதிகுலநிதியென மதுரையில்வாஸி
மதிக்கஒப்பில்லாயோகமகாமேரும் மகாராஜி தேவி
ஸகலநகைவகைகளுருகுந்து பளபளென்ன
ஜெகஜோதியெனவெ தவித லங்கி தகதகென்ன
தேஜஸ்ஸாயிரங்கோடி திகைகளுதயமென்ன தேவி
கதிரவனுலாவிய உலகம் சண்காக்ஷி
காண்கும்படியதாக கனம்பொருந்திய ஆக்ஷி
மதுரைமலையத்துவஜ மகாராஜராசாக்ஷி
மகுடாபிஷேகம் சூடமனமகிழ்ந்து மீனாக்ஷிதேவி

## விருத்தம்

மனமகிழ்ந்தங்கயற்கண்வரமங்கை கஞ்சனமாலை மகிழ்ந்தழைத்து (வேத
கனம்பொருந்தும் அலங்கிருதசிங்காஸனத்திலமைதது வைத்துகருதும்
ரனவரையும் கூட்டிவைத்தாகமம்போல் எச்சடங்குமாகப்பண்ணி
தினம்விளங்கும்மகுடாபிஷேகம் மீனவன்கைபால் செய்திட்டாரெ

## தரு:-மத்தியமாவதி ஆதி

மகுடாபிஷேகங்கொண்டாளே    மீனாக்ஷிதேவி
மகுடாபிஷேகம்    கொண்டாளே
மகுடாபிஷேகங்கொண்டாள்    ஸகலசரமுமீண்டாள்
ஜெகம்துதிமதுரையில்    செந்திருவாகி
அகமகிழ்ந்தன்பருக்கைகர்தருவாகி    மகுடாபிஷேகம்

துந்துமிவாத்தியமுழக்க    விருந்துபுகழ்
விந்தையதுவாகவிளங்க    செந்தாக்ஷதை அந்தணரள்ளிச் சொரிய
சததண மாரிபுரிய    சுந்தரவிண்ணவரசர்மலர்தூவ
சந்திரகுலம்வெகுஸம்பிரமமேவ    மகுடாபிஷேகம்
ஈசர்ஹிருதயம்மகிழ    ஸகலதேச
ராஜரும் பணிந்துபுகழ    வேதங்கள்சொல்லி
பூஸுரர்முனிவர்வாழ்த்த    ஆச்ரித கவிஞர் போத்த
கேசவமீனவர்கிலேசந்தணிந்திட    சாசுவதம்தருமகீர்த்தி
ஸம்பிரமமணிந்திட    மகுடாபிஷேகம்
க்ஷேமஸுதர்மம்தழைக்க    அனேகங்கோடி
காமசராசரம் பிழைக்க    மாஸங்கள்தோரும்
நேமமும்மாரிபெய்திட    ஓமம்வேதியர் செய்திட
க்ஷேமசுந்தரேசுவரர்    வரத்தாலே
மாமலேயத்துவஜர்மலர்கரத்தாலே    மகுடாபிஷேகம்

## விருத்தம்

பட்டங்கட்டிராஜியபரிபாலனும் பண்ணிபடிக்கானபண்புசொல்லி
இட்டகட்டளைக்கு எவரும்ஏவல்செய்ய விளம்பரமெழுதிவிட்டு
சட்டங்கள்செய்தங்கயற்கண்தன்காருபார்களும்சமர்த்தும்பார்த்து
வெட்டவிடகர்த்தரெனும் வென்மலேயத்துவஜபாண்டியர் வீத்திருந்தார்

இருந்தபின்புமகுடாபிஷேகங்கொண்ட மீனாக்ஷி இந்தமரர்க்கு
தெரிந்தமன்னரெவருமிந்தசெய்கை செய்ததில்லையெண்டு செப்புங்கீர்த்தி
பொருந்துமுறைபாய்பசுவும்புலியும் ஒருதுறையில் தண்ணீர்புஜித்துலாவ
திருந்துமாருக்ஷிகட்டிஜெகம்விளங்கும்படி செங்கோல்செலுத்தினளே

அங்கயற்கண்ணராசாக்ஷி ஆர்க்கும்கண்காக்ஷியென அளும்நாளில்
திங்கள்குலமலேயத்துவஜதீரன் ஸவர்க்கபதம்சேர சிந்தைவைத்து
மங்களகல்லியாணிக்கும் மனேவிமுதலெவர்க்கும் புத்திமதிகள் சொல்லி
சங்கார்தன்னடியில்மனம்சார்ந்திட்டார் ஸ்வர்க்கபதம்சேர்ந்திட்டரே

## தரு:—மோகனம், ஆதி

தெய்வலோகம்போய்ச்சேர்ந்தார்    சேர்ந்தெண்டும்
ஜெனனஸாபல்லியவாழ்வுகூர்ந்தார்    சைவஸமயத்தில்புனிதப்பிரகாசன்
ஸாமிமலேயத்துவஜபாண்டியராஜர்    தெய்வலோகம்

மங்களசபஇன்பமகிழ்ச்சியை          ஊடாடிமகிமைசிறந்திடும்
மெய்வரிசையை கொண்டாடி அங்கயற்கண்ணம்பிகைக்கசாட்சிமுடிசூடி
ஆதித்தியனுள்ளமட்டும் அழியாதகீர்த்திதேடி          தெய்வலோகம்

எல்லவர்க்குமெத்தசல்லவரிவரெண்டு ஈரையாயிரம்வயதிருபோருமெண்டு
வல்லவராமீசர்மலரடிதன்னைக்கண்டு          வணங்கித்தொண்டு
செய்திடமனதிலுறுதிகொண்டு          தெய்வலோகம்

சிதசந்தனமாரிதேசமெங்கெங்குமூத்த          திவ்வியசுகந்தமலரைதேவர்
மேன்மேலெதூத்த          வேதபாராயணம்விதிமறையுள்ளோர்சாத்த
விநோதபுஷ்பவிமானமேறிஎல்லோருமபோத்த          தெய்வலோகம்

விருத்தம்

சேர்ந்ததந்தைதனக்கானசிருடனே தகனப்பண்ணிசிந்தைதேரி
தீர்ந்தமறைமுறைபடியெ தினப்பத்தில்கர்மமெல்லாம் செய்துபோட்டு
சோர்ந்தமுகமாகிவெகுதக்கமுத்த தாயார்தன்துயரம்நீக்க
சார்ந்தவரைகார்த்தராக்ஷிதயாவிஜயமீனாக்ஷிதான்வந்தாளே

வந்து மகளுஜிபெத்தெடுத்தமாதாவைக்கண்டவுடன் மனம்துக்கித்து
எந்தனுடதாயெ நீ இக்கோலங்கொண்டிருக்க என்கண்பார்க்க
அந்தவிதியெழுதினனெ அம்மாவென்றழுதபெண்ணை அணைத்துக்கண்ணீர்
சிந்தைநொந்துதுயர்சொல்லிதேருவாள்மகள்முகம்பார்த்தாருவாளே

கண்ணி கனடா ராகம் ரூபகதாளம்.

அருந்தவம் தன்னில்அவதரித்த          என் அங்கயற்கண்ணே
நல்ல தங்கமெ          பெண்ணே
வருந்துமென்புள்ளை          கவியதை தீர்த்த
மாதகமின்னெ          யோகசருவெனுபொண்ணே
மன்னமன்னரென்பாண்டியதுரை          தான்
மடிந்திடலாச்செ          மனம்துணிந்திடலாச்செ
தென்னவர்போயும்          இன்னமென்தேசம்
ஸ்தரமாயிருக்குதெ          இருந்துறமாய்பெருக்குதே
சூரசேனன்          தவத்தினில் பிறந்து
சுகிரதமுண்டாச்சே          உண்டாய் விகிரிதியுமாச்சே
பாரஇடி என்          நேரேவிழுந்து
பதருதேயம்மா          பதரிஉதருதெசும்யா
என்னுயிருக்குயிரானதுரையு          மிழுந்துகமருதே
மனம்          குழைந்துகுமுருதே
தன்னிலேபத்திஎரியுதல்லாது          தணியுதில்லயே
தென்புஅணியு தில்லேயே          கண்கொள்ளாகாக்ஷிகண்ட
தேகம் கரிகிடலாச்சே          கண்ணீர்பெரிகிடலாச்சே

மங்கிலியவதியென்டும்   எங்கெக்குங்கொண்டாடும் மகிமையுபோச்சே
யார்க்குமுகனையுமாச்சே   கண்ணுமிமையுமாக இருந்து
கார்த்துகைவிட்டார்   மனம்பார்த்துச்செய்திட்டார்
புண்ணைதகீறி   நெருப்பைவைத்தார்போல்
பொருக்குதில்லையே   உடல்ஒறுக்குதில்லையே
பாண்டியரிருந்து   ஒன்மணக்கோலம்
பார்த்துமகிழாமல்   சங்கைவர்த்துபுகழாமல்
மாண்டிடும்குறை   இமைப்போது கூட
மறக்குதில்லையே   என்தேகமிருக்குதில்லையே
ஸ்ரீதேவிகோலம் சிறைகோலமாக   ஜென்மமெடுத்தேனே
இந்தகற்மமெடுத்தேனே   ஏதோ பஞ்சாய்பறந்து என்தேகம்
இலையாயாடுதே   மாயமலையாய்மூடுதே
அன்றேஎன்னுயிர்சருப்பொட்டியல்ல   ஆச்சென்டுபெண்ணுவேன்
உனக்கேச்சென்டெண்ணினேனே   பெண்ணே
உன்மனம் கோணுமெல்லோ   பொறுத்திருந்திட்டேன்
மனம்ஒருத்திருந்திட்டேனே   மிந்திச்செய்ததவம்
தந்தபாகயமினுக்ஷியாம்சேயே   என்கண்காக்ஷியாம்
தாயே காந்திகமரும்   துயரதைத்தீர்த்து
கார்ப்பதுப்நீயே   வைத்துபார்ப்பதுநீயே

## பாணிவிருத்தம்

ஆண்டாதரித்து மனம்பூரித்து அருகே நிதமும் வீற்றிருந்து
ஆண்டாவிளக்கேஎன்நெஞ்சில் சுகிரதாய்வைத்த பாண்டியதுரை
மாண்டாருடன்மாண்டிடஉன்னால்மறந்தால்மறக்கப்படுவதில்லையே
வேண்டாமெண்டுஉரையாமல்விடு என்னுயிரைவிடுவதற்க்கே

## தரு:- பாகருகம் றத்திதாளகண்ணி

கனம்பொரிந்தியபாண்டியதுரை என்னை   கைவிடலாச்சேமானே
தேனே கணிசநெஞ்சுக்கு   கவலைஉண்டாகிகலங்கிடலாச்சே
மனமும்துணிந்து   கருங்கல்லைபோலே
வகித்துமிருக்கிறேன்கண்ணே   பெண்ணே
மறந்துமாயம் சிறந்து   செக்குப்போலவலுத்து
பெருக்கிறேன் கல்லானகோட்டைக்கு   பொல்லாதகாலம்
தான்கடுகிவந்ததே   கண்ணே பெண்ணே
கனபாரம்கொண்ட   மணவாரிசப்பல்
கடல்கவிழ்ந்ததே   வல்லாளகண்டரைவாரிக்கொடுத்தேன்
மறந்திட்டேன்   மானே தேனே
வைய்யகத்தோரிவள்   கொடும்பாவியென
வசையுமணிந்திட்டேனே   எல்லோரையும்போலே
நல்லாயிருப்போமென்டெண்ணி   இருந்தேண்டிபெண்ணே கண்ணே

என்னெண்ணமெல்லாம் பொய்யாய்
இளதமேமெய்யா விருந்துதேன் செய்வேண்டி
பல்லார்க்குநிலைறந்த பாண்டியதுரையை
பாவிகொள்ளை குடுத்தேன் மானே தேனே
பாதகி கொடுமை சூதாகிமுடிந்து
படிந்துபடுத்திட்டேன் பூப்பட்டால்
கொப்பிளிக்கும் பொன்னின் திருமேனி தீப்பட்டு
வேகலாச்செ கண்ணே பெண்ணே
பூமணக்குங்கொண்டை புழுதியடைந்து
புலகாறிபோகலாச்சே சோப்பிட்டுமையிட்டு
செந்தூரபொட்டிட்டஸ்ரீங்காரமும்போச்சே மானே தேனே
என்திருமணகோலம் உருமாரியிந்த
சிறைக்கோலமாச்சே கைகொள்ளாமஞ்சள்
கடல்கொள்ளும்படி காலம்
ஒத்துதே பெண்ணே கண்ணே
கதையாய்முடிந்தது கைப்பெண்கோலம்
காணப்பெற்றதே பொய்வாறுல்
நின்றும்புலம்புதே இதைப்போக்கி
போடுறேன் மானேதேனே
போக்கிஉன் கை சீர் பாக்கியம்பெற
சாம்பலாக்கிப் போடுறேன்

## விருத்தம்

இருந்தஇருப்பும் எழிலும் குலைந்திருந்துமனம்சோர்ந்து இடியாமல்
இருந்த இருப்போடழிவது வோடுசேர்தால் போனுலெனசொல்லி
தெறிந்துமுதியோர் நமக்குரியோர் தினமும் புகழ்ந்திடச்செய்கிறேன்
வருந்தியுரிகிமயங்காமல் வாழ்வாய் எந்தன் மாதரசே

## தரு :— விராளி ஆதிதாளம்

மானேஸகிக்குதில்லை பெண்ணே
துணிந்தேன்மனம் தானெ வலிக்குதில்லைகண்ணே மானே
என்னங்கபற்கண் தேனெ உந்தனைப்பெத்த
மீனவரெனைப்பிரிந்து வானகர்ப்போய்ச்சேர்ந்தது
மானெ ஸகிச்குதில்லை கற்பகாலங்களுக்கு
மெய்ப்பண்டமங்கில்லியம் அற்பர்வாழ்வதுபோலெ
சொற்பனமாய்தீர்ந்தது மானெ
வெண்ணெய்ப்படையில்தாழி விரிந்தபண்பாதுபோலெ
கண்ணைப்பெற்றவருன்மணகாக்ஷி காணுமல்போனது மானே
குருவிதன்தலையிலே பணங்காய்வைத்ததுபோல்
அருவையெஉன்மேல்பாரம் அரசர்வைத்துப்போனது மானே

## பாணி விருத்தம்

கண்டுகுண்ணாடிகமுக்ருலுக்கி கள்ளிதுணிந்தால் கல்நெஞ்சு
நிண்டுசிணுங்குருளெண்டு ரோய்வாழ்வோர் நினையாமல்
இண்டுபாண்டியதுரைபோனஇடம்போய்நானும்சேர்ந்திடுகிறேன்
விண்டிரண்டுரையாமல்விடுஎன்னாசைமெல்லியரெ

## தரு :—எதுகுலகாம்போதி ரூபகம்

சிலரெனும்பாண்டியதீரர் இறந்தாரெ          அடிமானேதேனெ
காலகெதிஇந்தகோலம்கண்டுதெ          அடிபெண்ணேகண்ணே
கமரிஎன்மனம் கதரிவிண்டுதே          கண்மணி என் உன்னைபெத்திட்டா
பெத்தபாண்டியர்          கல்லியாணம்பாராமல் கைலாஸம்சேர்ந்திட்டார்
மனதிலிருந்துஉருச்சைவிட்டார்          அடிமானேதேனெ
மனமும்வர்திர்த          கதிதான்செய்திட்டார்
கண்ணிருக்கப்பாவைகலங்கபறித்துதே          ஐயையோதெய்வமென்
கனத்தவாழ்வுக்கு          அகர்த்தம்குறித்துதே
ஒண்ணிருக்கஒண்ணை          ஒடித்துமுறித்துதே
ஒகோதெய்வம்தான்          உடலைவிட்டாவி
ஒட்டப்பிரித்துதே          அதிர்ந்தொருநாளில்
அழைத்துமறியேனே          என்பாண்டியதுரை
அட சீ யென்று          சொல்லியறியேனே
எதைமறந்திடுவேன்          நானம்மா என்னம்மா தாயே
இனிமேல்ஸகிக்க          ஹிதத்தைசொல்லம்மா

## விருத்தம்

புவியுருகஇலையுதிரபுனல்சடையோராளிலங்க பூதலத்தோர்
செவிகரைய அழுதருகிசெருமிகாஞ்சனை மிகவும்தியங்கு நூக்கம்
அவியும்படி மலர்கரம்கொண்டம்பிகை வாயதைபொத்தி அமத்தி தாரேர்
தவிவிஸனமொழிந்திடெண்டு சாஸ்த்திரபததெளிவுகளால்சாத்திப்பாளே

## தரு சங்கருபரணம் ஆதி

என்னதுக்கப்படுகிறாயம்மா          இதெல்லாம்சும்மா
என்னைவேண்டிவிட்டுவிடம்மா          மன்னமன்னவரென்பிதா
உன்னைநம்பிவிட்டுபோனார்          சின்னஞ்சிருசெண்டாலோசித்தின்னதே
தெண்டும்சொல்லாமல்          என்ன
மனுஷியாளுடைய வாழ்க்கையெ          பொய் வாழ்கையெண்டும்
மயாப்பிரபஞ்சமிதெண்டும்          தாயேஉன்கண்ணால் கண்டும்
ஸகலவேதசாஸ்த்ரம்          விபரமாய்விண்டும்

துய்யமனதுருகி துத்தயாதைச்சொருகி
நீயேன்கண்ணீர்பெருகி நினைந்துநினைந்துருகிஎன்
மண்ணில்வைத்தஜீவர்கோடி காலமாகிலும்
மடிந்திடுமதிலெநீடி எண்ணியபேரெண்ணங்கள் தேடி
எதுகாரியமும் எவர்க்குவந்தொத்துதகூடி
இன்னிருந்தோர்காளைக்காணே தெங்கைபொபோகுதுவாணல்
குண்ணுருய் எண்சாண் ஒருசாணுப்கொடுந்துயரங்கொண்டுவீணுய்என்ன
சீர்சகுதவாமாயங்கள்சேரும் இகபூமியில்
ஜெனித்தஜீவஜெந்தனவோரும் நீர்குமிழிபோலவேயாரும
இறந்ததல்லால் நிலைபாய்நின்றபேர்யார்பாரும்
பார்க்கையிலெல்லாம்பழுது பார்த்திடாமலிப்பொழுது
ஏர்க்கும்பாத்தைத்தொழுது இன்பம்சாராமலழுது என்ன
ஒருகண்ணை தெய்வம்கெடுத்து மனம்தோகையில்
ஒருகண்ணில்விரல்கொடுத்து திருக்கம்பண்பனையடுத்து
என்னைரக்ஷிக்க சேதுசொல்லுராய்நீவிடுத்து
அறியபிதாவும்செண்டு அம்மாநீசதமெண்டு
உருகும்என்கெதிகண்டு உள்ளம் இரங்காமல் நிண்டு என்ன

## விருத்தம்

மாயானுஸாரக்கடல் மடுவில்விழுந்தழுந்திகொந்த மயக்கந்தீர
வாயார அருள்செய்யும் உன்வசனமதில்துயமொழிந்துமனம்குளிர்ந்தேன்
தீயாரைவிக்ஷித்து சிஷ்டர்களைரக்ஷித்து ஜெகத்தைக்காத்து
நியாயாதிபதியாய் என்நாயகர்போல் இருந்துசெங்கோல் நடத்துவாயெ

கன்னல்ரெஸமென்ன [illegible]ரைசெய்காஞ்சனமாலைபினுள்ள கவலைதீர்ந்து
அன்னமெனநடந்துவந்தமரர்முதல்துதிக்கும்ஹரியாஸனத்தில்
மன்னவர்க்குமகமேருய்மாநிலத்துக்கைந்தருவாய் மதுரைமீதில்
நன்யெம்சேரரசாட்சிநாள்தோரும் மீனாட்சி நடத்தினளெ

நங்கைஅரசாட்சிசெய்து நல்லாண்டுபனிரெண்டாய் நவிலுமூன்று
கொங்கைகளும்சிறந்த தங்கக்கொடங்களென்னபெருத்துவிம்மிக்கொழு
(மையாகி
செங்கையணிவோன்மகிழகாசினியெல்லாம்புகழகனம்பொருந்தும்
மங்கைமதுராபுரியாள் மகருஜி ருதுசோபனம் ஆகினளெ

அங்கயற்கண்மகருஜி அமோகருதுவாய்மங்களமணிந்தாளெண்டு
துங்கரெவர்களுமறிந்து சுகிருதமெய்வரிசையெல்லாம் சூழ்ந்து செய்ய
திங்களுதயம்போலே திவ்வியமுகவஞ்சியர்சேர்ந்து நிண்டு
பங்கயசெங்கரங்களை கொட்டிபாடுவார்சோபனம்கொண்டாடுவாரெ

## சோபனப்பாட்டு

தேசாதிதேசங்கள் போற்றியபோஜன் ஸ்ரீமலையத்துவஜபாண்டியராஜன்
பூஜாபலத்தினால் வந்தவதரித்தபூவை மீனாக்ஷிக்குசோபனமே
சகோரர்தன்சிந்தை மகிழவே ஸகலபுவனமும்புகழவே
மங்கள கல்யாணிமதுரை மீனாக்ஷி மகாராஜிசிறந்தாள் சோபனமே
சந்திரவம்சம்தழைக்கவே ஸகலஜீவஜெந்துப்புழைக்கவே
ஸௌந்தரி மதுரை துரையாள் மீனாக்ஷிசுபம்பொருந்திய சோபனமே
திங்களுமும்மாரிபெய்யவே ஜெபதபமோங்கும் செய்யவே
தங்கமுடியணிசௌந்தர மீனாக்ஷி ஸந்துஷ்டமேவிய சோபனமே
மாதவர்யோகர்கள்வாழ்த்தவே மண்டலம் விண்டலம் போற்றவே
சீதசந்திரகுலதேவிமீனாக்ஷி சிந்தைபூரித்திடும் சோபனம்
ஆதிபிரும்மமானமாகேசுவரி ஆனந்தஸ்வர்க்கந்தரும் பரமேஸ்வரி
நீதிநிரந்தரதுரந்தரி மீனாக்ஷி நித்தியஸுமங்களசோபனம்
சித்திக்கதெல்லாம்கைகூடவே தெய்வகன்னியர்களாடவே
வந்தித்தவர்க்கருள் மதுரைமீனாக்ஷிமகாராஜிசிறந்தாள் சோபனம்
காஞ்சனமாலைகண்காக்ஷிசூழ செங்காதரர்கைகூடிவாழ
வாஞ்சாலைஸத்குண மதுரைமீனாக்ஷி வரிசையுகந்தசோபனம்
விஜயமீனகொடியாடவே வீரியலெக்ஷ்மிகைகூடவே
திசையெங்கும்புகழும் விஜயமீனாக்ஷி தினம்மனோமங்களம்சோபனம
சிஷ்டர்கள்தன்துயர் நீங்கவே தேசமெங்குமசெல்வம் ஓங்கவே
அஷ்டதிசையும்போற்றும்பிகை மீனாக்ஷி அணிந்தாளிங்கிதசோபனம
ஆருக்கும் மங்களசோபனம் அமோகவைபோக சோபனம்
மேலுக்குமேலானசோபனம் மீனாக்ஷிதேவிதன்சோபனம்

## விருத்தம்

மங்கயர்ஸங்கீதம்பாட மன்னவர்மெய்வரிசையிட மாநிலத்தோர்
தங்கள்பெண்கள்மங்களம்போல் ஸகலவிதஸம்ப்ரமும் தான்கொண்டாட
சங்கமிருதங்கமுதல் ஸமஸ்தவாத்தியமுழங்க ஸநாநம்பண்ணி
திங்கள்குல அங்கயற்கண் திவ்வியசோபனச்சடங்குசிறந்திட்டாளே

ஒத்தருதுசோபனத்துள்ளசடங்கடங்கலும் எவ்வுலகும் போற்ற
பெத்தகாஞ்சனமாலைபிரபலமாய் நடத்திவைத்து பெருமைசேர்ந்து
நித்தம்வளர்த்தோங்கும்செங்கோல்நீதிமுறைசெய்வதற்குநேமங்கொண்டு
மெத்தஅலங்கிருதம் சிறந்து மீனாக்ஷிகொலுவிருக்கமேவினளே

## கட்டியகாரன் விருத்தம்

அஷ்டதிசை அகிலபுவிஅண்டபகிரண்ட புவனங்களெங்கும்
வெட்டவீடதிரியென்னும் விஜயமீனாக்ஷி கொலுவிளங்குகிண்ட
சட்டமிகுஸ்ரீங்காரஸம்பிரமம்வைபோகமகிழ்ஸமுகம் சீர்த்தி
துஷ்டநிக்கிரகவீரியம்துதிசெய்கட்டியகாரன் வருகின்றனெ

## தரு:—செஞ்சுருட்டி ரூபகம்

| | |
|---|---|
| கட்டியகாரன்வந்தானெ | கட்டியகாரன் |
| கெட்டித்தங்கத்தடிகொண்டு | செப்பீரவினேசம்விண்டு |
| மட்டிணையில்லாப்புகழ்சேர் | மதுரைமீனாட்சிவாசல் கட்டிய |
| ஜரிகைதுஸ்துகுலுங்க | தசட்டிமுண்டாசிலங்க |
| பரிமுத்து கொத்துஹாரம் | பளபளபளீரென்ன கட்டிய |
| கடுக்கனருணன்பூட்டி | கண்டிகைப்பதக்கமாட்டி |
| அடுக்குமுதிரம்சூட்டி | ஹௌலுல்லாஸம்பாராட்டி சட்டிய |
| துஷ்டநிக்கிருகம்செய்ராஜி | சுந்தரிஜெகப்பிரகாசி |
| அஷ்டலெக்ஷிமிவிலாஸி | அங்கயற்கண்மகராஜி கட்டியகாரன் |

## விருத்தம்

ஜெகராஜி திசைபோத்தும்ஜெயராஜி அமிருதகுணம் சிறந்தராஜி
சுகராஜி அனவர்க்கும்துரைராஜி அஷ்டதிக்குதலங்கும்வாஸ
முகராஜு அரசர்க்கெல்லாம்முதல்ராஜிமகிமையுயர்மூதாருளும்
மகராஜி மலைபத்துவஜர்மகள்ராஜி கொலுவிருந்து வளர்கின்றாளே

## தரு:— ஆரபி திருபுடை

| | |
|---|---|
| கொலுவிருந்தாள்மீனாட்சிதேவி | கொலுவிருந்தாள் |
| மெலுவில்லாமலேமதுரைஒங்கவே | மெல்லியர்கள் இடர்தாங்கவே |
| வலுவுயர் எதிரிகள் | பின்வாங்கவே |
| மனுக்கள்துயரங்கள் நீங்கவே | சொலுவிருந்தாள் |
| விஜயலக்ஷிமகிருபை பிறக்கவெ | மீனக்கொடிமேலாய்பறக்கவே |
| திசகளெங்கெங்கும் | கீர்த்திநிற்கவே |
| திவ்வியதேஜசுசிறக்கவே | கொலுவிருந்தாள் |
| பாவலர்கள் அடிபணிந்துபாடவே | பரதநாட்டியமாடவே |
| காவலர்களெவர்களும் | கொண்டாடவே |
| கனத்தசேர்கீர்த்திதேடவே | சொலுவிருந்தாள் |
| சந்திரகுலம்நாளும் | தழைத்துவளர்ந்திட |
| ஸகலகலைகளும் தெளிந்திட | நிந்தைசெய்பவர் நெஞ்சம்பிளந்திட |
| நிரந்தரம்படியளந்திட | கொலுவிருந்தாள் |

## ஸமுக விருத்தம்

அண்டமாயிரத்தெட்டும் மெய்க்குமீனக்கொடி ஆடியெழிலேருஸமுகம்
அலங்கிருதமாகவேமுப்பத்திமுக்கோடி அமரர்மலர்தூவுஸமுகம்
குண்டுநிகரான கரிபரி கொண்டுவீரர்கள் கும்பிட்டுவணங்குஸமுகம்
குவலயந்தனிலெவர்கள் கவலைகளும்தீரநயங்கொடுத்தாண்டரட்சிஸமுகம்
முண்டுசெய்தோர்தனைகண்டதண்டம்செய்யும் முனைவீரருள்ளஸமுகம்
முறைமுறையதாகவேநதிர்வைத்தனேசர்கள்முன்னின்டுபோத்தும்சமுக
மண்டலம்விண்டலம்கொண்டாடஆராட்சிமணிகட்டிவாழுஸமுகம்
மதுரைவளர் அரசாட்சிமதிவம்சமீனாட்சி மகராஜி உன்ஸமுகமெ

தங்கமகமேருவெனகனகதைக்கொண்டிடும்யோகலம்பிரமம்சிறந்தஸமுகம்
சங்கீத இங்கீதசாஸ்தரபிரஸங்கங்கள் ஸமஸ்தமும் நிறைந்தஸமுகம்
திசைஎழிலெனவதனசிறந்தவஞ்சியர்நடனம்செய்யும்ஸ்ரீங்காரஸமுகம்
செங்காலம்வருங்காலம்தெளிவாய்அறிந்தோங்கும்செங்கோல்செலுத்து
(ஸமுகம்

துங்கர்பெருபேர்வந்துதங்கள்மொழி கேட்டுபேதல்சொல்லெண்டுசேழ்க்கும்
(ஸமுகம்
துய்யதமிழதுபாடிசு நண்ணசனுத்தம்பிசொல்லியறங்கேத்துஸமுகம்
மங்களகல்விபாணியெனமாதவர்தபோதனர்கள்வந்துதினம்வாழ்த்து
(ஸமுகம்
மதுலரவளர் அரசாக்ஷிமதிவம்சமீனாட்சிமகாராஜிஉன்ஸமுகமே

## விருத்தம்

சந்திரகுலத்துக்கீர்த்திஸகலமும் அறிந்தபடிக்கு
சுந்தரமாகநிண்டு ஸ்தோத்திரம்செய்கட்டியக்காரா
தந்திராசநீதிதருதாரம்தெரிந்தயோக்கிய
மந்திரிசுமதிதன்னைவரவழைத்திடுகுவாயே

செங்கமலமலர்வதனிஜெகஜ்ஜெனனிமதுரையாள்ஜெயகம்பீரி
திங்கள்குலகௌமாரிஸ்ரீவிஜயமீனாட்சிதேவிசெங்கோல்
எங்கெங்கும்புகழ்ந்தோரஇரவுபகல்களவம்வைத்தெழில்கள்செய்து
துங்கர்மெய்க்கும்படிநடத்தும்சுமதிமந்திரிவருதுதோணினனே

## தரு:—காம்போதி ஆதி.

மந்திரிசுமதிவந்தான்    மாதவர்துதிசெய்வேத
நீதமுறைதவறாத    மந்திரிசுமதிவந்தான்
இந்திரசகரமென்ன    இலகுமதுரையாளும்
சுந்தரமீனாக்ஷிதேவிசுமுகசமுகந்தன்னில்    மந்திரிசுமதிவந்தான்
சுத்தஜரிகைதுஸ்திட்டு    பொற்றகட்டுமுண்டாசிட்டு
முத்துதராசொருக்கிட்டு    கொத்துஸரப்பளியிட்டு
நெத்தியில்திருநீருட்டு    மத்தியில்கெந்தப்பொட்டிட்டு
அஸ்தகடயங்களிட்டு    முத்திரைமோதிரமிட்டுமந்திரி
சுந்தரமிருகம்பீரன்    சந்திரமுகவசீரன்
தந்திரநயஸ்ரீங்காரன்    விந்தையுகந்தகெம்பீரன்
எந்தவகையிலும்தீரன்    இந்தலோகம்ததிவீரன்
ஐந்தருவிலுமுதாரன்    ஐந்தகையில்பரிபாலன்மந்திரி
இத்தலதேசாதிதேச    சொந்தவர்கார்க்கோனார்சூழ
மைத்தவருத்ததுசேச    சுத்தவெண்கவரிவீச
வித்தரென்னும்சுந்தரேசர்    கர்த்தர்பாதம்விசுவாஸர்
பக்தரென்னும்பாண்டியராஜர்    பெத்தவள்தாஸாதிதாஸமந்திரி

## விருத்தம்.

(சோலை

மந்தாரைபாடலம்புன்னைகம்செருக்குமலர்செந்தங்கு பூகுமென மணக்கும்
செந்தாமரைத்தடங்கள்சிறந்தமூதூர்திங்கள்குலதீரகுலசேகாருக்கு
வந்தாரும்புகழ்ந்தேத்தும்மாமலையத்துவஜபாண்டியன்வரமுதித்த
ஸந்தானஸௌபாக்கியமானதாயெ தயாபரியெசுமதிமந்திரிசாணமம்மா

மதிகுலத்திலென்னாளும்கீர்த்தியேற
மனவுருத்தாய்யோசனைசொல்மந்திரியெ நீ
சித்திரதியுத்தெழில்நிறைந்தனேகமன்னர்
சிறந்துவாழெண்ணேழுதேசந்தனில்
எதுபெரித எதுசிறுதபுவிவிஸ்தாரம்
இதில்விளையும்பயிர்வளமை இன்பசாரம்
நிதிபொருந்தும்வருமானம் இதுகளெல்லாம்
நிர்ணிப்பாய்காமரியவர்ணிப்பாயெ

(ந்துமந்திரி
மையணிஅங்கயற்கண்மன்னவர்வாழ்க்கைசொல்லெண்டியம்பினதெமாழ்
வையகத்தில்கூடுமட்டும்விளைத்துக்கட்டளையம்வந்துவாய்த்திருக்கு
ஐயர்செயல்நிறைவேரும் அதுக்கிசவாய்ச்சொல்வோமெண்டாலோசித்து
தையலேகேளுமெண்டுஹிதமதாகஸாதிப்பான்உரைசேரபோதிப்பானெ

தரு:—ஸௌராஷ்டிரம் ரத்திதாளம்.

| | |
|---|---|
| இந்தவையகமன்னர்கள்வாழ்வு | இயம்புவேன்கேளுமம்மா |
| அந்தமாமலையத்துவஜபாண்டியர் | அறிந்தவழுதித்தசேயெ |
| அனைவர்க்கும்தயாநிதிநீயெ | என்னைஆண்டாதரித்திடும்தாயெஇந்த |
| திருவளருத்திரபழணியூருக்கு | தெற்குகடலுக்குவடக்கு |
| மெத்தசீரானிறையும்கோழிக்கூட்டுக்குகிழக்குதென்காசியெல்லைக்குமேற்கு | |
| நல்லஅருளுத்தஎண்பதிங்காத | விஸ்தாரந்தான்அன்புவிசேரனூர்க்கு |
| அதிலாண்டுக்குமுப்போகம் | தப்பாமலெ |
| விளைந்தைசுவரியம்வரும் | ஒவ்வொருவூர்க்கு |
| வெகுஅதிசயமுண்டு | கண்டார்க்கு |
| அதைஆண்டாலுடபோருமெ | பேர்க்குஇந்த |
| தேசமெல்லாஞ்செல்லும் | தென்னவன்காட்டுக்கு |
| செல்லும்வெள்ளாத்துக்கு | வடக்கு |
| வெகுதென்புகள்மேவிய | எழைநாட்டைக்கார்க்கும் |
| சிறந்தபெண்ணையாத்துக்கு | தெற்கு |
| திருவாஸம்செய்கோட்டைக் | கரைக்குக்கிழக்கு |
| பூவாருதிகரைக்கு | மேற்கு |
| இந்தவண்மையுள்ள இருபத்துநாற்காதந்தான் | வாய்த்ததசோழனூர்க்கு |
| அதில்வளர்வதெல்லாம் | சென்னல்தாக்கு |
| வாரிவருவதெல்லாம் | தங்கரேக்குஇந்த |
| திட்டமாய்கன்னியாகுமாரிக்குவடக்கு | தெளிந்தவெள்ளாத்துக்குதெற்கு |
| இந்ததேசம்சிறந்தகடலுக்குமேற்கு | சீர்பெருவெளிக்குக்கிழக்கு |
| நீதான்பட்டயபொருந்திடும் | எழெட்டுக்காதத்தில்பயிரிடும் |
| பங்குமுண்டேர்க்கை | மைத்தப்பந்தகளனைர்திலும் |

காடும்மலையும் படர்ந்தெழிலார்ந்திடும்எற்கை
இந்தப்பாரில்வருமானதாழ்க்கை பரராஜர்க்கெல்லாம்பெருவாழ்க்கை இந்த
என்னசொல்வேனிந்த அப்புவியெங்கெங்கும் இருக்கும்மன்னர் அரசாக்ஷி
ஒவ்வொரெல்லையிலன்பதிகாதம் குறையாமல்இன்பம்நிறம்பியசாச்சீர்
ம்பத்துபொன்னகர்போலெதனேகங்கெடிஸ்தலர் பூபாலராளும்கண்காக்ஷி
இனிபூணமேவனு மூன்றுலாக்ஷி
யாரும்போத்தும்மதுரைமீனாட்சி இந்தவையகமன்னர்கள்வாழ்வும்

## விருத்தம்.

ர்தன்னில்
பெருத்தமதாய் அரசரெல்லாம்புவியையாளபேதமையால்நாமத்தபெரும்பா
செருக்கடையாய்க்காடுகளைகட்டியாளநிமித்தமேதிருக்குஇந்தநிமிஷம்
[மந்திரி
அருக்கனுலாவுப்புவிசுவ்மூழுதும்நாமெஆளும்படிசகாதாரஅஷ்டதிக்கும்
சுருக்கனவெஜெயம்செய்யதளங்கள்கூட்டிதுவஜம்நாட்டிமூரசடிக்கச்
(சொல்லுவாயெ

ஜலம்பிரக்கவருத்தப்பட்டுக்கிணறுவெட்டசிங்கப்பல்பூதம்பிறந்தஸ்ரீங்கார
(ம்போல்
உலகசயங்கேட்டதற்குபதில்சொல்லாமல்உசிதமாய்ச்சொல்லவெண்டிலூருதி
(யாசசு
நலமிகுத்ததிக்குகள்போய்வெம்போர்செய்யநண்ணுதெயெண்டுரைத்தால்
(நடக்காதெண்டு
நிலவரித்துசுமதி மந்திரிகாருபாருசெரித்திட்டான்ஸகலமுஞ்சேகரித்திட்
(டானெ

## தரு:—புன்னாகவராளி ரத்தி கண்ணிகள்.

சுந்தரிசொல்படிமந்திரி ஜெயமீனம்நாட்டினான்
சுவயசூரபராக்கிரமவீர ரேழுலட்சம்கூட்டினான்
மந்தரகிரிமுதல்இடரும் யானையிலெட்சம்வரவெண்டான்
எட்டுமலையைத்தாண்டும்பரியில்வகைக் கொருலெட்சம்
சேர்த்துமே வெண்டான்
கத்திக்கேடையக்காரர்பத்துலட்சம்பேர் வரச்சொல்லெண்டான்
கருக்குகடாரிசவளக்கைக்கார ரெண்டுலெட்சம்முன்னில்லெண்டான்
குத்திச்சரிக்கும்வாகுகுசட்டிக்காரரில் லெட்சம்சேரெண்டான்
பணக்குறிவைத்தடிக்கும்வில்லுக்காரரில் லாருலெட்சம்பேரெண்டான்
சரபோசிசெஞ்சாலிகாரரில் லஞ்சுலெட்சப்கூட்டெண்டான்
நல்ல சண்டை பீரங்கி லெக்ஷம் வண்டியிலேத்திக்கிடா பூட்டெண்டான்
உறைமிகுப்படைவாணம் குண்டுமருந்துபொட்டிஎடுவெண்டான்
கிட்டஒருவரும்செருங்காமல் இருபுறம்செட்டிப்பாருகோடுவெண்டான்
அந்தமிகுந்ததிருஆனை நூரம்பாரிஎத்தென்டான்
எதிரம்புகள்தைக்காமல்யானைக்கு சுருக்கங்கிபோத்தெண்டான்
ஸஉந்தரரதம்யானை துரகதம் அலங்கிருதம் செய்யெண்டான்
தேவிதுயிலாபரணப்பொட்டி தஸ்துமுஸ்திப்பெடுத்துவை.வெண்டான்
வளம்பொருந்தஸ்தரம்வில்வகைக்கு லக்ஷப்ஒட்டகைஎத்தெண்டான்

ஊருக்குவருமட்டும்தனத்துக்கு தஸ்துகட்டுக்கணக்குப்பார்த்தெண்டான்
ஊபாகச்வயப்பாகிராலாயிரம் பேர்சேர்த்துவிடுவெண்டான்
தினம்நடக்கும்சமயலுக்குஅடுக்காய் பாத்திரசாமான்கொடுவெண்டான்
லெக்ஷம்கூடாரமுஸ்திப்போடுத்தொட்டகை மேலேத்தொண்டான்
தண்டுக்கெறநூத்தன்பதுகோடி மோசருக்கட்டு
முத்திரைபார்த் தெண்டான்
பச்சைமகமல்டேரு பதிஞயிரம்யானைமேல்பேக்கெண்டான்
ஹௌதாபல்லாக்குநாற்காலி படுகைமுஸ்திப்புமுன்னெதூக்கெண்டான்
சட்டமேயெடுபுடிசலங்களும் வரிசைதிருத்தெண்டான்
மின்னெசகலவாத்தியங்களும் சடக்காய்திருத்திவகைபுரித்தெண்டான்
அஷ்டதிக்கிலும்போடஅழகாய்பார்த்தெடு மினக்கொடியெண்டான்
தளமனவர்க்கும்இருபதுதனத்தக்கு படிகையில்பிடியெண்டான்
தாதியிலாயிரம்சாரியில் கூடத்தயாரெண்டான்
துய்யசாமரைஈஓட்டி சகலமும்எடுத்தாஜிர்பாரெண்டான்
ஒதியதிக்கெட்டும்விஜயமென்டெ கட்டியமபடியெண்டான்
ஈனேயுதயம்சாரிக்கு தளம்ஹாஜிரெண்டபேரியடியெண்டான்

## விருத்தம்.

இந்தவிதமடுக்குகந்து சுமதிமந்திரி
 ஏகதினமதில்தளங்களெல்லாம்சேர்த்து
அந்தமதவாகதுஸ்துவெல்லாங்கட்டி
 அனுப்பிவைத்துமஜிலிமுதலாகப்பண்ணி
சிந்தைமிகமகிழ்ந்துவகதுசரணம்சொல்லி
 ஸ்ரீமலையத்துவஜனபாண்டியர்சேயெதாயே
ஏந்தனக்குசொன்னபடிதிட்டம்செய்து
 இருக்குதுஎவ்வளவும்தவக்கமில்லையென்றான்

சந்திரகுலத்துக்காகசதுர்முகன்படைத்துவைத்த
மந்திரிசுமதிநீதான்மாளிகைசேர்ந்திருந்து
சுந்தரஉதயந்தன்னில்சுருககெனஆஜிரூகும்
இந்திரன்திசையில்வெம்போர்க்கெழிலதாய்எகுவோமெ

மைக்குலந்தஅங்கயற்கண்மகருஜிஉதயமதில்மகிழ்ந்தெழுந்து
எக்கிரிகைகளுஞ்செய்வித்தின்பபோசனம்நடத்திஇயம்புமெட்டு
திக்குகளும்செயம்செய்யஸ்ரீங்காரபோற்கோலம்சிறந்துகொண்டு
மெய்க்கும்அன்னம்போல்நடந்துமெல்லிகாஞ்சனைமனைக்குமேவினளே

## தரு:—நாதநாமக்கிரியை ரூபகம்.

சிங்கமங்கயற்கண்தேவி ஸ்ரீங்காரமதாய்வருகிறாள்
மங்களமேவுமமதுரையாளும் மகாராசிசெகதீஸ்வரி
துங்கர்துதிக்குவிசயம்செய்ய சுகிருதமாயார்ச்ருசொல்லிக்கொள்ள சிங்க
தும்பமலர்நிம்பத்துன்ளிமலர்பூட்டி சொல்லும்வில்லதில்வாகைசூட்டி
அம்புகத்திகடாரிஈட்டி அடுக்கதாயெடுத்தலங்கிருதம்கூட்டி சிங்க

வீரியலெட்சுமிதைரியலெட்சுமி விசயலெட்சுமிவிளங்கிட
பேரிமுரசுமேளவாத்தியம் பேசும்மேகம்போல்முழங்கிட சிங்க
காரியர்வெண்கவரிவீச கவிலகான்குவிருதசூழ
காரியாகாரியம்மந்திரிபேச கனம்பொருந்தியமகாராசிராசசிங்கமயற்கண்

விருத்தம்.

தானம்
அன்னங்கொடுத்துப்பொருள்குடுத்தனவருக்கும்பயங்கொடுத்தனேக
தினங்கொடுத்துத்தவம்புரிந்துதிவியபுத்திரயாகம்செய்துஎன்னைப்பெத்து
ஸ்தனங்கொடுத்தசனங்கொடுத்து ஸகலவிதசந்தோஷந்தான்கொடுத்து
மனம்கொடுத்துவளர்த்தெடுத்தமகிமையுயரென்தாயெமகிழ்செய்வாயெ

சங்காசெங்கமலபதந்தனைப்போத்தும்சந்திரகுலந்தனிலுதித்த
துங்கரெங்கள்மாமலையத்துவசபாண்டியராசர்பேர்துலங்கவந்த
தங்கமெனதாசைசத்குணமெமரகதமெதைரியவீரிய
அங்கயற்கண்ணரசெ நீ அமர்க்கோலம்பூண்டுவர்த்தரிவிப்பாயெ

தாயெ
என்தன்மனமகிழ்ந்திடவின்பம்எவ்வளவொகொடுத்துவளர்த்தெடுத்த
அந்தமிகுலோகங்களடங்கலும்யான்ஏகசக்கிரமாகஆள
விந்தையுடனஷ்டதிக்கும்விசயம்செய்யதளமெடுத்துவிருதபூண்டு
உத்தனுடமங்களவாக்குத்தரவுபேரவந்தெனென்னுரைசெய்வாயெ

கவியரசர்புகழ்ந்தேத்தும்கயற்கண்ணாள்வந்தமனகருத்தைச்சொல்ல
செவியிரண்டும்பொத்திவிழிசிவந்துகாஞ்சனமாலைசினந்துஇந்த
புவியிரந்தபெண்ணிவிந்த புதுமைகண்டதில்லையென்றுபொங்கியோங்கி
குவிமுலைமூண்டுகந்தபெண்மேல்கோபிப்பாள்நிஷ்டூரம்ஸ்தாபிப்பாளெ

தரு:—துஜவந்தி ஆதி.

இன்னமொருதிரம் சொல்பெண்ணே
நீசொன்னசொல்லை இன்னமொருதிரம்சொல்பெண்ணே
இன்னமொருதிரம்சொல்லு தென்னவர்செய்பாக்கியமின்னெ
அன்னமேஆசைமகிலெ அலங்கிருதமாம்குயிலெஇன்னமொரு
திங்கள்குலம்பேர்இறந்து போய்விடாமல்
செல்விநீபெண்ணாகப்பிறந்து தங்கமுடிசிறம்சிறந்து
அஞ்சுகம்போலுன் சக்கரைவாய்தன்னைத்திறந்து
சிங்கவீரியம்குறித்து திக்கெட்டையும்போய்முரித்து
அங்கவர்சீமைபரித்து ஆள்வேனெண்டதைப்பரித்து இன்னமொரு
தவம்செய்தஎன்குறைதணிய மனக்குளிர
ஸகலஸம்பத்துமணிய எவர்களும்பயந்துபணிய
ஈடில்லையெண்டு என்தனெஞ்சமதுதுணிய
புவனமெங்கும்கெடிகூட போத்தியெவரும்கொண்டாட
கவனம்வைத்தாயேஅன்போட கணிலசைவைத்துகனந்தேட இன்னமொரு
பெண்களுக்கிதுதான்யோக்யம்பெத்தபாண்டியர்பேர்க்குபிரபலசிலாக்யம்
கண்களுக்குப்பார்க்கஆரோக்யம்அனைவருக்கும்காதிலெகேழ்கவும்பாக்யம்
இங்கிருந்துதனங்கொண்டு எட்டுதிக்கதிக்கதும்போய்வெண்டு
சிங்கம்போல்வருவெனெண்டு செப்பியவகையைவிண்டுஇன்னமொருதரம்

### விருத்தம்:

எத்தினையொவிசித்திரஸ்ரீங்காரம்பூட்டி
எழில்சிறந்தவிஷ்டோமெடுத்தடிக்கி
உத்தமிகாஞ்சனமாலையன்புபோலெ
உரைத்ததெல்லாம்புன்னகைசெய்துள்ளங்கொண்டு
சித்தமதாய்திக்குஜெயம்செய்யப்போர
சிலாக்கியஞ்சூழ்வருமானச்சீர்களெண்டு
சுத்தரணசூரியென்னுந்தைரியவீரிய
சுலட்சணமீனாட்சியம்பாள்சொல்லுவாளெ

### தரு:—முகாரி ஆதி.

| | |
|---|---|
| திக்குவிஜயம்சேமம் | என்னம்மாதாயெ |
| தெரியச்செல்லுகிறேன் கேளும் | க்ஷேமம் |
| துக்கிரமதுஷ்டர்கள் | நிக்கிரகமாக |
| ஷட்கர்மசிஷ்டர்கள் | தழைத்தெழிலாக திக்குவிஜயம் |
| தென்னவராட்டினதிகாரம் | எனக்குகீர்த்திசெலுத்த |
| போதாதஆரபாரம் | மேலும்லாபம் |
| என்னவருதுகொஞ்சஸாரம் | ஆதினவிக்த இரவிகிரணம் |
| சூழ்விஸ்தாரம் | லோகங்களெங்கும் |
| என்னுடவருதிக் | கெழிலிடும்படியாய் |
| மன்னவரெவர்களும் | வணங்கிடுங்கெதியாய் திக்குவிஜயம் |
| செங்கோல்பிடிக்கரத்தாலெ | பாராய்தேசம் |
| ஜெயித்துகட்டாமலிருந்தாலெ | ரணசூரர்க்கும் |
| துங்கர்க்கும்லெத ஒருக்காலெ | ஆனதினாலெ |
| துவக்கியெடுத்தமனம்போலெ | தளங்கொண்டீட்டி |
| சங்கரனூர்முதல் | சமர்செய்துகட்டி |
| இங்கெணவரும்படி | இளஞ்சிங்கரூட்டி திக்குவிஜயம் |
| பேருல்பெரியபாண்டியர்வாழ்வு | பிள்ளையில்லாமல் |
| பெண்தானிருப்பெண்டொருதாழ்வு | சொல்லுவோர்கள் முன் |
| ஆருலும்நடக்காதகாரியம் | நடப்பித்தா |
| ளெண்டாகபண்ணவேணும்மென்வீரியம் | அதையோசித்து |
| தேனுபரிகரி | ஸேனைகள் கூட்டி |
| சேருப்அலங்கிருத | ஜயஸ்தம்பம்நாட்டி |
| திக்குவிஜயம்செய்யும்சேமம் | என்னம்மாதாயெ |

### விருத்தம்

தோங்கி
இன்னமொருதிரம் சொல்வெண்டியம்பினத்துக்கங்கயற்கண் ரெட்டித்
சொன்னமொழியதில்கலங்கி தோகைகாஞ்சனமாலை துபரமேவி
என்னவிதகாரணத்துக்கிக்கோலம் கொண்டிருக்குதெண்டுசொல்லி
பின்னும்வெகுஆத்திரமாய் பெருங்கோபவிசித்திரமாய் பேசுவாளெ

தரு—நாதநாமக்கிரியை, ஆதி,

| | |
|---|---|
| கணாய் உரைத்தாயெ | யென்கண்ணெ |
| இந்தநான்கிரண்டுதிக்கும் | வெண்டுமான்வருவேனெண்டு இன்று |
| கண்ணாய் உரைத்தாயே | யென்கண்ணே |
| பெண்ணாகபிறந்த நீ | பின்வரும் நேரறியாமல் |
| அண்ணாந்துக்கொம்புத்தேன்மேல் | ஆசைகொண்ட மூடவன் போல் |
| கண்ணாய் உரைத்தாயெ | யென் கண்ணே |
| உண்ணும்சுவைவர்க்கவத்தில் செட்டா | விதம்விதமா |
| உடுக்கும் ஸரிகைதுயில் முட்டா | ஆபரணம் |
| பண்ணபசும்பொன்ரத்தினத்தட்டா | அரசாக்ஷிசெய் |
| பாருலகத்திலென்னமட்டா | இதுகளிலெ |
| என்னகுறைச்சல்கண்டு | இட்டுறுப்பவேணுமெண்டு |
| விண்ணுடாரூவேனெண்டு | வீரவிருதங்கள்கொண்டு |
| கண்ணாய் உரைத்தாயெ | யென்கண்ணே |
| மூன்றுமேத்திரமொத்தகர்த்தர் | முதலாய்அஞ்ச |
| மும்முலைபெண்ணானபேர்பெத்தாய் | பெத்தெடுத்த |
| பாண்டியராஜனுசெத்தார் | என்றுதானித்த |
| பாருலகத்தில் நான்குமொத்தாய் | நங்குகள் சொல்ல |
| காண்டிபம்கையிலெடுத்து | கண்டோர்மேல் தளமெடுத்து |
| ஏண்டிஇவ்வேஷத்தொடுத்து | என்சொல்லதையுந்தடுத்து |
| கண்ணாய் உரைத்தாயே | யென்கண்ணெ |
| வாலைவயசுபனிரெண்டு | ஆகியும் இன்னம் |
| வாக்கப்படாகுமரிக்குண்டு | காளையைப்போலெ |
| ஞாலம்புகழ்திக்கெங்கும்செண்டு | தேவாதியுடன் |
| நண்ணிச்சண்டைபிடித்தானெண்டு | மனம்நடுங்க |
| மாலையிடுவோர்பொல்லா | மாதுநீவியென்க நல்ல |
| கோலம்பண்ணாதெசெல்ல | கோகிலமெசொல்லச்சொல்ல |
| கண்ணாய் உரைத்தாயெ | யென்கண்ணெ |

விருத்தம்

போரெடுக்குங்கோலங்கொண்டு புகழ்திக்கு விஜயஞ்செய்ய போறாயெ ன்றாய்
ஆரெடுக்கும்வசனமிது அம்மா இம்மாநிலத்துக்கடுத்திடாது
பாரடுக்கும் கீர்த்தியுத்த பாண்டியராஜேந்திரன்போல்பாங்குகந்து
சீரெடுக்கும்படியாக சிறந்திருந்துவளர் செங்கோல்செலுத்துவாயெ

கொச்சகம்

என்னவிதம்சொன்னாலும் என்னுடையதாயெயான்
சொன்னபடிஎட்டுதிக்கும் த்வஜம்நாட்டிவாரதெண்டு
கன்னங்கரியாளைபரிகாலாள் தளங்கிளப்பி
மின்னெனவைத்தகாலை பின்னேமேவிவைக்கும் வீரியன்றெ

வீரியமும்வெம்போரும்வேந்தருக்குபாந்தமல்லால்
நாரியர்க்குவீரியச்சீர் நண்ணுவதுநானறியேன்
காரியமும்பின்வரவும் காணவொத்துப்பாராமல்
சீரியமேவியசமர்க்குசெல்வது நல்நியாயமன்றே

மன்னருண்பது உண்ணும்மாதுண்பதெல்லாம்வீணா
எனனவிதம்லேசாயி நீயியம்பவந்தாய் என்தாயெ
பொன்னகரோடெட்டுதிக்கும் போர்செய்து நான்வெத்திகொண்டு
மன்னவர்க்குமேலெண்பக்குமாதெனவருகுவேனே

பார்சிறந்தமன்னர்க்குமேல் பத்துப்பங்கு அதிகமிருந்தால்
போர்சிறந்துவெத்திகொள்ள பூதலத்திலெஸம்மதம்
பேர்சிறந்தஅஷ்டதிக்கில்பெண்புத்திக்கொண்டேகுவதில்
சீர்சிறந்தஸாரமில்லை செல்லாதெமாதரசெ

கல்துரை

பார்கொண்டமன்னரில்பதினாயிரம் ஜெயம்பண்ணுவதில்
சீர்கொண்டவீரியச்சிறப்பென்னபோ எட்டுதிக்கினில்போய்
போர்கொண்டவரிடம்புரிஜெயந்தானெண்டுபூண்டேனென்றால்
பேர்கொண்டகீர்த்தியும்யுகந்தோறும்பேசிடபெருமையுண்மே

பேரதுகொள்ள எலி ஓர்மலையை பிளப்பதற்கு
நேரதில்நிண்டடிலாய்விடுமொளந்தன் நேரிழையை
மேரதுவாம்திக்குபாலர்பொன்மேற்சமர்மேவுவது
சீரிதுவல்லபுவிமீதில் சுத்திதிரும்புவாயெ

எலியது நீதிக்குபாலர் பொன்மேரெண்டியம்பன்னையெ
புலியதுயான்எட்டுப்பூனையவானென போர்துவக்கி
கெலிபதுகூடிமிரண்டோடச்செய்து கெடிசிறந்து
வலியவளாகஒன்முன்வாருட்டில் என்பெருமாத்துவயெ

பேர்தனைமாத்தி அழையென்று வீரியம்பேசிய நீ
பார்தனில்மன்னர்முன்னோர் சமராவதுபார்த்திருந்தால்
போர்தனக்கே கெண்டுரைப்பேன் துணிந்துவெம்போர்நடந்த
ஊர்தனைக்கூட அறியாதுனக்கிது ஒழுங்கல்லவெ

சிங்கம்சிரோதயமாகையில் யானையைச்சிரம்பிளந்து
உங்கப்படித்தவர் ஆர்அதுபோலிந்த உலகத்திலெ
துங்கர்க்கமைவுகருவதிலெசமர்த்தொழிலெமக்கொ
தங்கிரியும் எதிரல்லவெநீயருள்தருகுவையெ

இத்தனைவீரியம்பேசியதாலிந்த எழுதிக்கும்
எத்தனைபோர்செய்தபோதிலும் தாழ்வதற்கேதுவில்லை
முத்தனைவேதமுதல்வனை நித்தியனைமூவுலகு
கர்த்தனைவெல்லாசான்னியம்செல்வதுகணமல்லவெ

விருத்தம் போலெ

கடுகுநுழையாதசமரிளக்கங்கொண்டு சால்நுழையும்படியான கதைகடைப் முடுகுடனெவெம்போர்க்கேசுக்கூடாதெண்டுமேதஉரைத்தாய் இந்தமுறை யில்வந்து
கொடும்விஷத்தைத்தரித்த ஜகதீசன் திக்கை குறித்துவெகு பயங்கரங்கள் கூரும்போது
தொகேருமப்நிறைவேத்தும் தைரியவீரியதுரந்தரிமீனாக்ஷியம்பாள் சொல் லுவாளெ

தரு—பெலகிரி ஆதி, தர்க்கக்கண்ணி.

ஈசுவரஈசுவரனெண்டு என்னமொமலையாய் நீதான்
வீசுரவயணமென்ன விளம்புவாயம்மா
வீசுரனெண்டீசுவரனே விந்தையாய்நிந்தனை மொழி
ஏசுராய் இதுலெபாபம் ஏர்குதெமானெ
நிந்தனைசெய்யாமல்போத்தி நேமமாய் மலர் அர்ச்சித்து
வந்தனைசெய்பவர்க்குத்த வாழ்வுசொல்லம்மா
வந்தனைசெய்ஹரிஅயன் வானரசாளுமிந்திரன்
அந்தமிகுவாழ்வுகொண்டார் அரிந்துபார்பெண்ணெ
அந்தவாழவக்கசையாமல் அதுந்து எதிர்த்தவர்க்கு
வந்ததுன்பக்கெடுதலெ வகையாய்ச்சொல்லம்மா
ஸொந்தமாரன்பத்துமாசுரன் துஷ்ட முப்புரதியர்கள்
வெந்ததிசர்நிந்தனையால் வேரில்லைமாதெ
இத்தனைவித்தையைக்கத்த சர்த்தனைஜெயம்செய்யாமல்
எத்தனைபேரைஜெயித்தும் இன்பம் ஏதம்மா
சர்த்தனை ஜெயம்செய்வது கனவிலும் இல்லை உன்னால்
சித்தமாய் ஈசான்ஙியமதில் செல்லாதெபெண்ணே

விருத்தம்

என்னவிதபயங்கரம் நீ இயம்பினாலும்
எனதுபுத்திக்குசர்திடந்த எட்டுதிக்கும்
சொன்னபடிக்கிருவாரந்தன்னில்வெண்டு
துவஜம்நாட்டிவருவளல்லால்சொல்லும் உன்னால்
மின்னெவைத்தகாலெ பின்னெவைப்பதில்லை
வீண்பொழுதுக்கேன்வாது விளம்பவேண்டாம்
அன்னையேஜெயம்செய்துவருவாயெண்டு
அமிருதகுணம் நிறைந்திடும் வாக்கருள்செய்வாயெ

புத்திபலகோடி விதமுரைசெய்தாலும்
புடித்தபுடி தவருமல்புகழ்சேர்வெம்போர்
சத்திருமாதாசெகண்ணெ பெண்ணெ
நமது சொக்கேசருள்நண்ணிநீயெ
வெத்தியுசர்தஷ்டதிக்கும் விஜயம்செய்து
விளம்பிஷ்டகாமிய வினோதங்கொண்டு
சக்திசிறந்திருவாரந்தன்னிலென்முன்
சவரணாய்வந்தின்பம்தருகுவாயெ

### விருத்தம்

அன்புபொருந்தனையினுத்தரவு தான்பெத்தனவருக்கும்
சொல்லிக்கொண்டாசாக்ஷிக்கு,
நம்புவதலாய்அமைச்சர்வைத்து சுமதிதன்னை
நம்முடையஸவாரியுடன் நடவுமென்று
தென்பநுவாய் தளங்கள்ரதகெஜங்கள்க்கெல்லாம்
சிறந்ததிருஷ்டியோடுதிவியதேகமீந்து
இன்பம்சிறந்தம்பிகை மீனாக்ஷிதேர்மேல்
எட்டுதிக்கும் ஜெயம் ஜெயமெண்டேரினாளே

### தரு—மோகனம் ஆதிதாளம்

வெத்திகள் பொருந்தும் திக்கு — விஜயம்செய்ய ரதத்தில்
சத்தியம்பிகைகௌரி — தானெ ஏரினாள்
வைரமுடியணிந்த — மதுரைமீனாக்ஷிதேரில்
தைரியசௌரியத்தோடெ — தாண்டிஏரினாள்
தங்கநவரத்தினபணி — தகதகதகனவெ
ஸ்ரீங்காரமீனாக்ஷிதேவி — தேரிலேரினாள்
திங்கள்சதகோடிபோலெ — தேகம்பளபளன்னவெ
மங்களமீனாக்ஷிதேரில் — மகிழ்ந்தேரினாள்

### விருத்தம்

தேரேரிமதுரையாள்தேவி மீனாக்ஷி எந்ததிக்கில் மின்னெ
போரேரிஜெயிப்பதென்று பொருத்தயோசனைபண்ணிபுகழும்தேவ
ருநேரிஇந்திரனைவெண்டுயர்மீனமேத்துவமெண் டுருதிசொய்து
சீரேரிவளர்விஜயசிறப்புடனெதளங்களுடன்திரும்பினாளே

### தரு—ஸௌராஷ்டிரம் ரத்தி

தேவி மீனாக்ஷி இந்திரன் திக்குக்கு — தேரைநடத்தினளே
தேவதுந்துமிமேளம்முழங்கிட — தெய்வரம்பையர்கள் முன்னாட
நல்லஜெயம்ஜெயமென்னவே — கட்டியங்கூரிட
ஸ்ரீங்காரஸங்கீதம்பாட — இந்தபூவுலகுள்ளவர்யாவரும் ஸேவித்து
பூஜித்துநின்றுகொண்டாட — வெத்திபோருடுதிக்கெங்கும்
போயாடுவெனென்று — பூர்ணமீனக்கொடியாட அந்த
தேவிமீனாக்ஷி இந்திரன் திக்குக்கு — தேரைநடத்தினளெ
சுத்திலும் ரதகெஜதுரகபதாதிகள் — சூழ்ந்து கமான்படி நடக்க
ஒருதுசும்பு ஜோருபரிசெய்வோரை — சுமதிஜோர்தாக்கீது பண்ணியடக்க
பார்சக்திசித்திரவதை — செய்வாளெண்டு
பயந்து ஸகலதுஷ்டரும் — கடல் கடக்க
வந்ததளங்களடங்கலுடன் — விளங்காளரய்மஜிலியுல் தங்கி
போஜனம்செய்துஷடக்சாய் — அந்ததேவி மீனாக்ஷி
சங்கைபொருந்திய — துங்கமெதிர்கண்டு
ஸாஷ்டாங்கம் — செய்தடி போத்த
நாளும்சாசுவதமேவியயோகீஸ்வராளெல்லாம் சம்பூர்ணமனமாகவாழ்த்த

வெகுபொங்கமதாகவே தேவாதிகளெல்லாம்
புஷ்பமாரிசொரிந்தேத்த நல்புண்ணியசந்தனமாரி
பன்னீர் வீசுவதுபோல் பொடிந்து துளியாய் துமிநூத்த
அந்த தேவிமீனாக்ஷி
அஷ்டலக்ஷமிகளும் இஷ்டம் பெத்திட
அடுத்தன்புவைத்தின்பமாய் காக்க
சாரிஅம்பிகைகம்பீரமாக வாருள் பாரெண்டசாரெல்லாம் கெலிதாக்க
பெருசிஷ்டர்களிஷ்டர்கள் தெண்டனிட்டேனெண்டு
ஸேவித்து தெரிசித்துப்பார்க்க
எட்டுதிக்குவிஜயம் செய்தெக்காலங்களுக்கும்
விதரமானகீர்த்திகளேற்க அந்ததேவிமீனாக்ஷி

விருத்தம்

பூரணகம்பீரசக்தி புனிதரதந்தனை நடத்தி பொன்னூர்வந்தாள், தோர ணம்வை யெண்டுசொல்லி சுத்திவந்த தளங்கள்கர்ஜித் தோக்கும்போது, காரணமேதோ வருவது கண்டறிவோமெண்டந்த க்ஷணத்தில் வெள்ளை, வாரணமீதிலேறி வல்லமையாய் தேவேந்திரன் வருகின்றானே.

தரு—தோடி, ஆதி.

ராஜன் வந்தானே தேவேந்திர
ராஜனும் வந்தானே ரௌத்திரகாரமாம்
பூசலுக்காய் கூசல் போட்டதாரடாவெண்டு ராஜன்
பச்சைசிகப்புவஜ்ஜிரம் பதித்தமகுடம்சூட்டி
பதக்கம் சந்திரஹாரம் பளபளனவேபூட்டி
இச்சையதுபோலவே எழிலலங்கிருதம்கூட்டி
இயம்பும் வெள்ளையானையில் ஏரிதுரிசாயோட்டி ராஜன்
கட்டியங்கூரிட கவரிஇருபார்போட
கனராககீதம்பாட கன்னியர்நடமாட
மட்டில்லாபுகழ்கீர்த்தி வானவர்கொண்டாட
மகிமைபிரபலயோக மகிழ்சூழ்ஸம்பிரமத்தோட ராஜன்
கெட்டிவஜ்ஜிராயுதம் கெதையைகையில்பிடித்து
கெம்பீரமேவிய கெருவவீரம்படித்து
கிட்டிவரும்சத்துருவை கெதிகலங்கஅடித்து
கீர்த்திகொள்ளுவேனெண்டு கிளம்பிதுடிதுடித்து ராஜன்

விருத்தம்

பொன்னசுரன்தேவேந்திரன் புஜபெலத்தோடெதித்துவந்து புனித மேவும், வன்னரதமீதிருக்கும் மங்களகல்யாணியெனும் மாதைப்பார்த்து, சின்னஞ்சிறுபெண்ணெ நீ சிறந்தபேர் ஊருதவம்செய்துபெத்த, மன்ன மன்பேர்இங்குவந்தவகை இதெல்லாம்மாதரசெநாமறியவுரெண்டானெ

ஆரெவர் நீ யெனவிபரம் அறியவந்த இந்திரனெஅறிவிப்போம்கேள்
பார்புகழும்மாமதுரைபாண்டியர்தவமவதரித்தபாக்கியசாலி
பேர்விஜயமீனாக்ஷிபேணிவந்தகாரியமொபெலமிகுத்த
போர்செய்துவிண்ணகரம்புடித்திடநாம்வந்தவகைபுரிந்திட்டோமெ

விருத்தம்

வாசிகொண்டுகோர்ந்தமலேஉடைக்கவந்த யோசனைபோல் ஒக்குகந்து
துசிநிகரானமனுவும்தூரகதமும் கூட்டிவந்தசூரவீரம், பேசியதை
பெண்ணெனை சரம்பொருததிட்டோம் எதிர்த்தையொ பிழைப்பதில்லே
காசினியிாசேரும்படிகருத்துணர்ந்து நீயோடிக்கலைசெருவாயெ

உளிவலுமையறியாமல் ஒக்கும்மலே ஆண்மைசொல்லும் உறத்தைப்போலெ, தெளிவதைப்பார்த்தியடபாமல், சேமுகமாய்வீரியம்சொல் நீயெ இந்திரா, தெளிவுகந்தசேவகமும்திரம்படைத்தவலக்காமும் சிறந்திருந்தால், ஒளிவுயர்ந்ததனுசை எடுத்தொருகைபார் அல்லதெண்டால் ஒடுவாயெ.

அக்கக்காவெனஉரைத்தால் அஞ்சுகம்போல்நெஞ்சமது அஞ்சாமல்தான்
ஒக்கமொழிந்திடவந்தாய் ஒபெண்ணெ இதுநிமிஷம் ஒந்தனுக்கு
தக்கபடிசெய்வேனெண்டுதனுசையெடுத்தாக்கிரமித்துச்சரத்தைபூட்டி
மெய்க்குங்கெடிசூழிந்திரன்மீட்டினன் தேவிபதில்நீட்டினளெ

தரு—கேதார கௌளம், ஆதி.

பலசரம்விடுகுறேன் பாண்டியன்பெண்ணை
நிலேயைவிட்டகலாதெ நின்றெதிர்பாராய்
பாராயெண்டென்முன்முன்னெ பராககிரமும் சொல்லுமுன்னெ
வாராயருக்கக்கனே விட்டேனிந்திரா
வரவிட்டகணையெல்லாம் அறவெட்டிஉன்னிரு
காம்வெட்டும்படிநாககணைவிட்டேன் பெண்ணெ
காம்வெட்டவரும் நாககணை வெட்டிஉன்னுட
சிரம்வெட்டகருடாஸ்தரம் சிறப்பித்தேனிந்திரா
சீரும்கெருடாஸ்தரம் சின்னபின்னங்களாக
நூறுகணைகள் விட்டேன் சோகாதெபெண்ணே
நூறுகணையும்வெந்து நீறுயுதிரும்படி
ஆறுஅக்கினியஸ்தரம் அனுப்பினேனிந்திரா
அனுப்புமக்கினிஅஸ்தரத்தாணுவம் பரந்தேகட
வினைப்புயல்வருணாஸ்தரம் விட்டேன்பார்பெண்ணே
விடும்கணைகளைக்கட்டித் தடுக்குமிந்திரன்கையில்
பொடிப்பொடியாய்விட பொழிந்தாளஸ்தரங்கள்
அஸ்தரமொண்ணு நூறுயிரமாயிந்திரன்
சித்திரவில்வில்பாய்ந்து தெரித்துதெரிண்டாய்
தெரித்தவில்விடுத்துவேரெ எடுக்காமலிந்திரன்மேல்
மரிதரொருகோடியம்பு மாட்டினள்தேவி
தேவிஅம்பிந்திரனை சினந்துசினந்துபாய
ஆவிபதைத்துக்களையாகியே சாய்ந்தான்
களையானஇந்திரனைகண்டு மீனாக்ஷியம்பாள்
மழைமாரிபொழியாமல் மனதயவானள்

### விருத்தம்

சிலையொடிந்துஅகம்படிந்துசினமடங்கிமுனையொடுங்கிதேவருஜன்
நிலைகலங்கிகளையாகிநிமிஷமதில்தெளிவுகந்துநிமிர்ந்தெழுந்து
கலைபொருந்தும்கயற்கண்ணைகனமேவும்தேவிபெண்டுகருத்தில்கண்டு
தலைவணங்கிஅடிபணிந்துசாத்துவான்துதிசெய்துபோததுவானெ

### தரு—பூரிகல்யாணி, ரூபகம்.

| | |
|---|---|
| சரணம்சரணம்என்தாயெஈஸ்வரி | தயவுசெய்வாய்மகேஸ்வரி |
| சுவர்ணமுடிசூடிமதுரையாண்டிடும் | துரந்தரியோகசௌந்தரிசரணம் |
| வேதபூரணிஜானஊரணி | விளங்கும்நித்தியபேரணி |
| சீதமதிகுலமுதித்தகாரணி | திருபுரமெரிகாரணிசரணம் |
| சிறந்துதவம்புரிந்துனதுமகிமையை | தெரிந்தரிந்திடும்நான்பாவி |
| மறந்துமதியழிந்தெதிர்த்து | போர்செய்தேன் |
| மனமிரங்கிடுவாய் | தேவிசரணம |
| மலைபத்துவஜன்மகருஜன்தவமதில் | வந்தபெண்ணேஅரசாக்ஷியெ |
| நிலையாமுண்ணுட | அடிமையாமென்னை |
| கெடிதும்ரக்ஷிப்பாய் | மீனாக்ஷியெசரணம் |

### விருத்தம்

முனைகொண்டுநேர்வந்துமுடுகுடன்வெம்போர்செய்தமூர்க்கம்நீங்கி
அனையெண்டுபதம்பணியும்அமரர்கள்போத்திந்திரனைஅழதவிண்ணூர்
தனைஇன்றுநமதுகொடிதனைஎத்திஇருக்குதுநீதானென்னாளும்
வினையொண்டும்செய்யாமல்மித்துருவாயிருந்தாண்டுவிளங்குவாயெ

நீதசுபசோபனங்கள்நிரைந்தமதுராபுரிஆள்நீயெதாயெ
ஹிதமிகுந்ததயவதுவாய்இட்டகட்டளைப்படியெயெழிலுகந்து
சதமெனபொன்னதரத்திலுன்தருமக்குடியாய்நீதிதனைசெலுத்தி
பதம்நினைந்துபூஜைசெய்வேன்பாலனெனைக்கார்ப்பதுஉன்பாரந்தானெ

நான்குலெபிகளுமறிந்தநயசுமதிமந்திரிவிண்ணாட்டில்வாழும்
தெங்குராவராஸகாமதேனுவை நம்மதுரைநகர்சேரச்செய்து
பாங்குபொருந்தேழுதிக்கும்பத்துதினமதில்ஜெயித்துபகரும்கீர்த்தி
ஒங்குபுகழுடன்நாங்களுநக்குவருகிறோமெண்டெழுதலைதானெ

பன்னகரத்தினமுடிபொபாண்டியர்தவமவதரித்தபாக்கியசாலி
பொன்னகரமதைவெண்டுபுகழேரும்மீனக்கொடிபோட்டுக்கொண்டு
இன்னகரந்தனைநீபெஇருந்தாளெண்டுஇந்திரனிக்கியம்பிவைத்து
நன்னயம்சேர்அக்கினிதிக்கைகாடிபொதந்தனிலேரிட்டதிருவெள

### தரு—ஸௌராஷ்டிரராகம், ரத்திதாளம்.

தேவிமீனாக்ஷி அக்கினிதிக்குக்குத்    தேரைநடத்தினளே
தேவதுந்துமிமேளமுழங்கிட    தெய்வரம்பையர்கள்முன்னாட
நல்லஜெயம்ஜெயமென்னமெகட்டியம்கூறிட    ஸ்ரீங்காரஸங்கீதம்பாட
இந்தப்பூவுலதுள்ளவர்யாவரும்சேவித்து    பூஜித்துநின்றுகொண்டாட
வெத்திபோருமெம்திக்கெங்கும்    போயாடுவேனெண்டு
பூர்ணமீனக்கொடிஆட    அந்ததேவிமீனாக்ஷி

### விருத்தம்

தென்கிழக்குதிசைநோக்கிதேவிரதந்தனைநடத்திச்செல்லும்போது
முன்வழக்கம்போலெதளங்கள் முரசடித்துகெர்ச்சித் துமுனைசெய்ஓசை
இம்முழக்கமதுதனைகேட்டெதிர்பெண்டநிந்துவிடாவேரிக்கொண்டு
தன்முழக்கமதைக்காட்டிதாண்டிக்குதித்தெழுந்தக்கினிதான்வந்தானெ

### தரு:—கேதாரகௌளம், ஆதி.

அக்கினிபகவானாட்டுக்கிடாவேரி    ஆண்மையாய்வந்தானெ
திக்கினிலெநமதுத்தரவில்லாமல்    சேனைகளுடன்
வாரதாரடாவென்று    அக்கினிபகவான்
யுத்தத்துக்கெதிரிலையென்றென்வாடிஉருதியாய்தவம்செய்தேனொருகோடி
சத்தம்போட்ட    எதிரிதளம்கூடி
தெயவுசெய்துஎன்முன்    வாடாவெண்டுதேடிஅக்கினி
ஸப்தஸாகரம்    அண்டமுதல்கொண்டு
சாம்பலாகச்செய்தாக்ஷீநம்    நமக்குண்டு
சுத்தவீரியம்    உள்ளவனானெண்டு
சூரதத்துவம்சத்தே    காட்டவாடாவெண்டுஅக்கினி
கனம்பொருந்திய    வீரியம்படித்து
கையினில்    தனுசும்பிடித்து
சினமிகுந்தெதிரி    சேனையையடித்து
ஜெயம்செய்வேனெண்டு    மனப்பால்குடித்துஅக்கினி

### விருத்தம்

எண்ணெபிட்டுதீவட்டிபோலிருகண்களும்பொரிஎழும்பவுன்னிஎதிருயிவ
ந்து, விண்ணை வெண்டுமீனமிட்ட மீனாக்ஷிதனைப்பார்த்து, மெல்லியநீமண்
ணைவிட்டுதளமெடுத்துவந்தவகை.ஆருபேர் வளர்த்தவன்பேர்,;ஒண்ணைச்
சொல்லிஒண்ணைத்தள்ளிஒளருமல்ஒளியாமல்உரையெண்டானெ

உச்சம்வரும்சூரியன்முன் ஒரு வெண்ணெய்ப்பாவை துள்ளும் உரத்தைப்
போலெ, மிச்ச அகம் படைத்துவந்து மிறட்டக்கினி பகவானெ மேன்
மைசூழும், ஸஜ்ஜனர்கள் புகழ்மதுரை சந்திரகுலமதில்வந்தவதரித்ததீரி,
நிச்சயம்செய்திவடம்வந்த நேமமுன்னைவிரட்டும்படி நிஜம்சொன்னானெ

### விருத்தம்

நரிகூடிக்கடலைத்தத்து நத்தம்பண்ணயோசித்த நல்கடப்புப்போலெ
எரிதீயின்முன்பஞ்சதிலும் இனமுள்ள மனுத்தளங்கள் எடுத்துவந்து
தெரியாமல் சொன்னதெல்லாம் சிந்தைதன்னில் ஸகித்திட்டோம்சினந்து
நிண்டால்
அரியாமல்விடுவதில்லை அரிவையெநீ நிஜமிதுபார்தக லுவாயெ

எலியடிக்கத்தவிலடியொஎகபெருங்காத்தினடிக்கெதிரொபஞ்சு
நலியஉன்னை அடிப்பதற்கு என்ரத்தளங்கள் தன்னாலெ நடநதிடாதொ
வலிமிகுத்துவீரியம்சொல் வந்திடுமக்கினியெ நீமதுரையாளும் [வாயெ
புலிஎதிர்த்து நிற்குறேன் நீ புருஷனென்றால் வில்லெடுத்துப்போர் செய்

இடித்தபின்புகுனிர்திடுவதெவர்களுக்கும்வழக்கமதாயிருப்பதாலெ [ணே
படித்தவம்புகளைக்காட்டிபராக்கிரமம்சொல்லவந்தாய்பாணடியன்பெண்
அடித்தலரிஒலமிடஆரம்பிக்கிறேன் நில்லு நில்லெண்டக்கினிதானெ
புடித்தவில்லிலஸ்தரத்தை பூட்டினான்தேவிஎதிர்நீட்டினானெ

### தரு.- சங்கராபரணம், ரூபகம்.

எய்யும்கணையெல்லாம் பொடியொய்யதாகவெ
இதொ எதிரம்புதொடுத்திட்டேன் தடுத்திடுபெண்ணெ
எதிரம்பைபஹுதமாக்கியிந்த கொடியில்பாணம்
ஏவிவிட்டேனக்கினி உன்னாவி வாங்க இதொ
எரிபாணம்சொரிந்திட்டேன் எதிர்நில்லுபெண்ணே
எரிபாணம்தனைசோளபெரியதாக்கி உன்னை
எட்டுதுண்டம்பண்ண ஹஸ்தரம்விட்டுட்டேனக்கினி
துண்டம்செய்யும்ஹஸ்தரத்தை கண்டங்கள் பண்ணிஉன்னை
தூக்கிமுழுங்கஹஸ்தரம் தாக்கினேன்பெண்ணே
தூக்கிமுழுங்கஸ்தரத்தை ஆக்கிரணம்செய்து இதொ
சொரிந்தேன் னேகாஸ்தரம்அரிந்திடுஅக்கினி
ஏகசரமாரிகளும் தேகம் சூழ்ந்திட தபித்து
எட்டப்புக்கோரம்புஅக்கினிவிட்டானெண்டெ தேவி
ஏகசரமாரிகளைஏவியெவிட்டாள் ஏவிவிட்டபாணங்கள்
பட்டாவிபதைத்து அக்கினி
இளைத்துகைசளைத்துப்போய் நிலத்திலெசாய்ந்தான்
சாய்ந்தஅக்கினிதைரியமாய்சண்டைசெய்திடக்கிளப்பி தானெ
வரட்டுமெண்டம்பாள் தயவுடன்நிண்டாள்

### விருத்தம்

மரம்யாவும்வாள்விட்டுவெந்தபின்பறிந்தலரும் மார்க்கம்போலெ
சரமாரியடிகள்பட்டுதாங்காமலேங்கி நிலம்சாய்ந்திடக்கினி
உறமேவுமெதிரியந்த உமயவளெண்டறிவதினால் உணர்ந்துகண்டு
பரமேசுவரியெ உன்பதம்கதிகாப்பாத்தெண்டுபகருவானெ

திரு.- புன்னாகவராளி, ஏகதாளம்.

சரணமம்மா சரணமம்மா சரணமம்மா சரணம்
சரணமம்மாசதகோடி ஸாஷ்டாங்கம்சரணம்
ஸவர்ணமுடிசூடி மதுராபுரிஆள்நீயெ
சுந்தரியே ஸௌந்தரியெ துரந்தரியெ தாயெ சரணம்
மன்னன்மலயத்துவஜராஜேந்திரன் குமாரி
மங்களகல்யாணி சிவகாமி மகாவீரி
பன்னகம்பூண்டிடும் அழகுபரமசிவன்பாரி
பணிந்தவரைரக்ஷிபரமேசுவரி கௌமாரிசரணம்
ஆய்ந்துபாராதவன்காரியம் சாய்ந்திடுமெண்டாரும்
அருளியசொல்லடியனுக்கெ அமைந்ததின்னேரம்
பாய்ந்துகுதித்துமக்கெதிராய் பாரித்ததபசாரம்
பண்ணினத்தைபொருத்தாளும் பாக்கியமுந்தன்பாரம் சரணம்
அன்றைக்கிந்த அக்கினிசெய் ஆண்மையராசாக்ஷி
அன்புகந்துதந்தாயந்த அம்பிகைமீனாக்ஷி
என்றைக்குந்தன்பதம்காண்பேனென குண்ணினேன்பூக்ஷி
இவ்விதம்போர்க்காகிலும் வந்திரங்கிதந்தாய்காக்ஷி சரணம்

விருத்தம்

காங்குவித்தேத்திபோத்தும் கனதசேர்வன்னியெநீ
உறமதைவிட்டோளும் உள்ளன்புவைத்து நம்மால்
வரவிடும்கிருபத்திர்க்குவணக்கமாய் நடந்து கொண்டு
தரமுகந்திந்ததிக்கில் தானராசாளுவாயெ

சொன்னபடிஉன்பேரைசென்னிதன்மேல் சுமந்துபயபக்திவைத்து சுகிருதமாக, இன்நகரந்தனைஆண்டுஎற்கைதான் செய்தெண்டு மதடுமையாயிருப்பேனம்மா, மன்னர்துதிமகருஜி மதுரைவாசிமாதங்கி திருசூலி மனமிரங்கி, தன்மையாயனுதினமும்கிருபைகூர்ந்து தயவுடனேஆண்டிடுவாய் சரணந்தானெ.

அக்கினிதேஜோபதியில் அமைச்சனெமீனக்கொடிஆடவைத்து
சீக்கிரம்தாய்தனக்கெழுதிஸஹஸ்தரபீரங்கிவெடி ஜெலுதாய்த்தீர்ந்து
உக்கிரமமேவியதருமனுலகமதை ஒருதினத்துக்குள்ளெவெல்லும்
முழக்கரமாய்ரணபேரி முழக்கச்சொல்லி முந்திரிதளங்கிளப்பிமொழிகுவாயே

மைக்கினியஅங்கயற்கண் மகருஜிஸ்வயவீரியவலுமையாக
அக்கினிதிக்கதுகளைவெண்டலங்கிருதமீனக்கொடியாடச்செய்து
மெய்க்கஅவன்தனைத்தானெமுன்போலெயிருக்கும்படிவிளம்பிவைத்து
தெற்றிசைவிஜயம்செய்யதேரேரிதளத்துடனேதிரும்பினளெ

தரு.- ஸௌராஷ்டரராகம், ரத்திதாளம்

தேவிமீனாக்ஷி எமதர்மன்திக்குக்குத்தேரை நடத்தினளெ
தேவதுந்துமிமேளம்முழங்கிட தெய்வரம்பயர்கள் முன்னாட

நல்லஜெயம் ஜெயமென்னவெ — கட்டியக்கூறிட
ஸ்ரீங்காரஸங்கீதப்பாட — இந்தப்பூவுலகுள்ளவர்யாவரும்
ஸேவித்தபூஜித்து — நின்றுகொண்டாட
வெத்திப்போருமே — திக்கெங்கும்
போயாடுவேனெண்டு — பூர்ணமீனக்கொடியாட
அந்ததேவி மீனாக்ஷி — எமதர்மன் திக்குக்குத்தேரைநடத்தினளெ

விருத்தம்

தேவிரதந்தனைநடத்திதென்திசையில்வரும்போது ஸேனையெல்லாம்
கூவிமெய்க்ககர்ஜித்து கூக்குறல்போட்டெதிரியெண்டு குறிசெய்தேமன்
தாவி எருமைகடாதனிலேறி ஆக்கிரமித்து சத்ருருக்கள்
ஆவியெல்லாம்பரித்தெந்தனுவிக்கிளை இடுவேனெண்டெடுத்திட்டானெ

தரு:- நாதநாமக்கிரியை, ஆதி.

வந்தான் வந்தானெ — உறசாய் எமதர்மன்
வந்தான் வந்தான் — வந்தானுறசாய் வாகெருமைக்கிடாவேரி
அந்தமதாகியவிந்தை — விந்தையைக்கூடி
ஆரடா எதிரிங்கெவாவெண்டெதேடி — வந்தான்
மெய்க்கினிப்பான — வஸ்தரம்தரித்து
ஒருகைக்கினிப்பான — அஸ்திரம்பிடித்துகொண்டு
அக்கினிபொரியிருகண்ணில்பிறக்க — அசடுசெய்பாவிகள் அஞ்சியெபறக்க
திக்கினில்வரும்படை — குடல்களை துறக்க
க்ஷணத்திலெவெட்டுவெனெண்டுறம்சிறக்க — வந்தான்
வீசும்பாசமும்துலங்க — கொடியவினை
கூசும்அகங்கள்கலங்க — உக்கிரமமாய்
பூசுரமுனிவர்கள்புகழ்ந்திடும்சீலன் — புண்ணியநீதங்கள்வளர்பரிபாலன்
பேசும்வெஞ்சமர்க்கதி — பிரியம்வைகோலன்
பிரபலமிகுத்திடுதுரந்தரகாலன் — வந்தான்
வஞ்சமிகவும்தொடுத்து — வெவ் போர்கள்செய்து
நெஞ்சமுறங்கள்கொடுத்து — வரும்சத்துருவை
தஞ்சமெனதமதடிதாழவெகட்டி — தலைவிரிகோலமாயோடவேவெட்டி
கெஞ்சவிட்டடிக்கிறேன் — சினமிகுமீட்டி
கெதையெடுத்தெமதர்மருஜனுமெட்டி — வந்தான்
சீரியமேவியதர்மன் சினந்தெதிரி — யெங்கனவேதேடிவந்து
சூரியன்போல் ரதமீதில் — தலங்குமுமைதனைக்கண்டு சொல்லும் பூமி
நாரியெஉன்னுருபேர் — நல்லதபம்செய்துபெத்த
சரன்தன்நாமம — வீரியமாங்கமதுரகர்
விரும்பிவந்தகாரியமிதெல்லாம் — விளம்பெண்டானெ

விருத்தம்

அதிவீரியசௌரியமாய்ஆரெவரெண்டறியவந்த அந்தகாகேள்
மதிகுலபாண்டியராஜன் மகமீதிலவதரித்து மதுரையாண்டு
துதிபொருந்தும்ஜெயவீரசூரமீனாக்ஷியாம் துலங்கவந்துன்
பதிதனிலெகொடிபோடபாங்குசந்துவந்திட்டோம்பகர்ந்திட்டோமெ

துள்ளத்தள்ளிஇடித்தடித்துதடிக்கப்பிடிஎமனெண்டேஸ்வரூபங்கண்டும்,
வெள்ளரிக்காய்கரிதனைமொட்டுகின்ற வீரியம்போல்விளம்புமாதெ
புள்ளயிருதண்ணீரும் மூன்றுபொழைபொருக்குமெண்டபண்புபத்தி
உள்ளமொருபிழைபொருத்துன்உயிர்வைத்தேனெதிர் கில்லாதோடுவாயெ

பூனைகண்ணை மூடுகிறதும் புவனமெல்லாமிருளடைந்துபோரதென்றும்
ஞானஅறிவதில்தோன்றிதமக்குப்பிழைபொருத்தமெண்டு நவிலெமாநீ
மானமுள்ளசேவகனுய்வைத்தது மெய்வீசையெண்டால் பதில்பேசாமல்
மீனவன்பெண்தனக்குமுன்னெவில்லெடுத்துப் பேர்செய்துவெல்லுவாயே

தாழ்ந்துபதிலுரையாமல்சபதம் சொல்லிபோர்செய்யெண்ட தையல்மின்னெ, பாய்ந்துகுதித்தேமதர்மன்பராக்கிரமித்து தனுஸெடுத்துபாண்டியன் பெண்ணெ, ஆய்ந்துசதைசதையாய் உன்னுக்கைஅறப்பேனெண்டழகு சானெ, தேய்ந்தகொடுக்குரூரமாய்சொறிந்திட்டான்தேவிஎதிர்புரிந்திட்டானே.

தரு.—சங்கராபரணம், ரத்தி

| | |
|---|---|
| எய்யும்கணைகளெல்லாம் | சொடியிலெ |
| இத்துத்தூளாகும்படி | அந்தவையந்தனையாளும் |
| லோகாம்பிகை | வலுத்து எதிர்விடுத்தாள் |
| விடுத்தசரங்களெல்லாம் | வருமுன்னெ |
| வீரியஎமதர்மன் | தடுத்துசரக்கோட்டை |
| யாகவேதான் | . சாடியேமூடினனெ |
| மூடியசரக்கோட்டை | யதைக்கண்டு |
| மொம்மரம்செய்தம்பிகை | நொடிதனில் |
| ஆடிக்காத்தில்பஞ்சாய் | பறந்திட அஸ்திரத்தானெரித்தாள் |
| எரித்தசரத்தையெல்லாம் | எமதர்மன் |
| நேருகவந்துநிண்டு | துண்டுதுண்டாய் |
| அறுத்துஅக்கினியாஸ்தரம்தனை | எடுத்தாக்கிரமமாக விட்டான் |
| விட்டதோரக்கினியாஸ்தரம் | நிலைகெட்டு |
| வேசாரிமாயும்படிவெகு | திட்டமதாகவெதான் |
| வருணாஸ்தரம் | தேவியெடுத்தடித்தாள் |
| அடித்தவருணாஸ்தரம் | எதிர்தேடி |
| ஆண்மிக்கைசெய்யயிலெ | அதையெமன் |
| முடித்துவிடும்படியாய் | பிருமாஸ்தரம் |
| மூருடனெதொடுத்தான் | தொடுத்தபிருமாஸ்தரம் அதுதனை |
| தூளாக்கிப்போடும்படி | உமையவள் |
| எடுத்தெழில் நாராயண | அஸ்தரமதை |
| எமதர்மன்மேலேவினாள் | ஏவியநாராயண |
| பாணமதை | எடுத்த விழுங்கும்படி |
| எமதர்மன் | மேவியருத்திர பாணம் |
| எடுத்தெதிர் | மீட்டியெதானடித்தான் |
| அடித்தருத்திரபாணம் | வரும்வேகம் |
| அடக்கிமழுங்கும்படி | மீனாக்ஷி |

புடித்தசக்திபாணம் தனையெதிர்
பூரித்ததையும்வென்றான் பூரித்ததெல்லாம்வென்று
மீனவன்பெண் புஜபலம்சொல்லுகிறான்
என்று எமன் பாரித்தகாலபாசம்
எடுத்துநேர் பார்த்துவிடப்பிடித்தான்

விருத்தம்

முன்புஜகதீசாருள்தன் முன்னிர்க்குமெதிரிகளை முடிநீயெண்டு
பண்புடன்ஈந்திடும்காலபாசமதை எடுத்தேமன் பறாக்கிரமித்து
அம்பிகைமேல்விடப்பிடித்தான் அர்தனைப்பதுவும்வலுவும் அவளறிந்து
வம்புவருமெண்டெண்ணி மாய்கையாய் நின்றபடிமறைந்திட்டாளே

தீயகொடும்சமர்செய்யும் தென்னவன்பெண்பாசவலுதெரிந்துசிட்டு
மாயமதாய்மறைந்திருக்கும்மார்க்கமென்னவெண்டேமன்மயங்கும்போது
தூயமனபாசமது துலங்கெதிரிதேவியெண்டு தோத்தம்கொண்டு
பாயஞ்செய்துகைகழுவப்பார்த்தொரு வினாடிதனில்பறந்துதன்றே

அடைகாத்துநிதமும் அறைவளைத்து
நாகமதுதானெனகருவையுக்குமழுகுபோலே
படைபார்த்துநம்புதலாயிருந்த பாசம்
பரந்தோடிப்போய் விடவேபத்றியேமன்
உடைசோர்ந்துவிலவிலத்துதைரியம் நீங்கி
உடல்மெலிந்துமனந்தளர்ந்து உருகும்போது
விளையாத்திக்கொண்டவள்போல் மறைந்துநிண்ட
மீனாக்ஷியெதிர்வந்து அம்புமீட்டுவாளே

தரு.-- சங்கராபரணம், ரத்தி

போச்சுதோடாபாசம் இன்னமென்ன
புஜிபலமிருக்குதோடா அடேயெமா
வாச்சுதெதிர்நில்லடா எண்டம்பிகை
எண்டம்பிகைபாணங்களைச்சொறிந்தான் சொரிந்தம்பு நேர்வரவெ
யமதர்மன் தூக்கிமுழித்தவன் போல்
அலுத்தெதிர்புரிந்து வரும்அம்புக்கு
பத்துக்கொன்றுபூரித்தெடுத்து விட்டான்
விட்டஎமன் அம்பெல்லாம் லோகாம்பிகை
வெட்டிபொருநொடியில் அடேஉன்னை
கொட்டமடக்குறேன்பாரடா வென்று
கோடியம்புமீட்டினாள் மீட்டினசரங்களெல்லாம்
வந்துகூடி மேலாடிச்சாடையிலே
எமன்நிண்டு காட்டிலசப்பட்டாப்போல்
மனங்கலங்கி எதிர்விடுத்தான்
கலக்கம்பிடித்துதோடா அடேஎமா
கைசலிப்பாகுதோடா எண்டம்பிகை
விலக்கப்படாதசரமாரிகளை மேவினாளுக்கிரமமாய்
உக்கிரமசாமாரி ஒண்ணுநூறாய்

உடம்பெங்கும்பாயயிலெ          எமதர்மன்
கைக்களையெல்லாமற்று          மனவலுகளைத்துப்பின்வாங்கினானெ
பின்வாங்குருண்டாஎமன்          என்றுசொல்லி
பேருலகாளுமையாள்          தளத்துடன் பின்னோக்கி
ஆக்கிரமித்தஹஸ்தரங்கள்          மீட்டினாளெ
அனந்தம் அனந்தமஸ்திரங்களும்          ஒண்ணக்ஷயமாய்வந்துசாடையிலெ
மனம்நொந்து          சினந்தவீரியம் விட்டு
களைபோட்டு          திகைத்தானெ எமதர்மன்
திகைத்திடும்எமதர்மன்          தாகசோகம்
தெளிந்தபின்னவன்தானெ          வெஞ்சமர்க்கு
பகைத்துவரட்டுமெண்டுஎதிர்நின்று          பார்த்திருந்தாளெதேவி

விருத்தம்

அதிவீரியஎமதர்மனுக்கடுத்திருந்தகளைசோகமது தெளிந்து
மதிசேரும்திருஞானமனக்குறிப்பால் தளத்துடனேவந்து நிற்கும்
எதிராளிதென்னவன்பெண்ணீஸ்வரியெண்டுஅறிந்து மகிழ்ந்தெழுந்து
நிண்டுபதினாயிரம்சரணம்பதம் தனிலேசெய்துதுதிபகருவானெ

தரு.—சகானா, ரூபகம்.

தேவிமீனாக்ஷிரக்ஷி சிந்தைதயவாய்          தேவிமீனாக்ஷிரக்ஷி
பாவிநான் ஒன்முன் யுத்தம்          மேவினேன்குத்தம்குத்தம் தேவி
மெய்க்கும்எமதர்மனெண்டும்          திக்கினிலொருவனெண்டும்
ஸத்கிருபைசெய்ததும்நீ          இக்கிருபைவைத்ததும்நீ தேவி
கொடுக்கும்சனிகொடூரம்          விடுக்கும்வேளை இந்நேரம்
இடக்காய்ச்செய்ததபசாரம்          எதும்பொறுப்பாய்பாரம் தேவி
அன்னைகுழந்தையைவிட்டு          மின்னேவிளையாட்டுக்காட்டும்
தன்மையாய்என்னைவிட்டு          என்னமோவெம்போரிட்டாய் தேவி

விருத்தம்.

மெத்தவும்வணக்கமாக வேண்டெமதர்மமன்னா
இத்தலமீதில்உம்மீனம் எத்திவைத்திருப்பதாலே
குத்தங்களைதுஞ்செய்யாமல் குறிப்புடன்நீயேஆண்டு
உத்தகாரியங்கள்நித்தம் உறுதியாயறிவிப்பாயே

இஷ்டபரா பரியான ஈசுவரிநீ தயவுசெய் திரங்கியிட்ட
கட்டளைப்போலனுதினமும் கருத்தில்வெகு பயபக்தி கனிவுவைத்து
சட்டமுகம் தாசாக்ஷி தனைநடத்தி உன்னாமம் தலைமேல்கொண்டு
திட்டமதா யிருந்திடுவேன் ஸ்தரமாக காப்பதுன் சித்தந்தானே

பார்சிறந்தபாண்டியன்மாதரசி வீரபராக்கிரமமாய்தென்திசையில்பரிந்து வந்து, பேர்சிறந்தஎமனைவெண்டந்ததிக்கில் டெருமையுயர்மீனக்கொடி யிலக்கவைத்தி, கார்சிறந்தவேகமூத்தபரிகள்சூழ்ந்த கனகரதந்தனிலேரிகரு தும்வெத்தி, சீர்சிறந்தஜெயபேரிமுழக்கச்சொல்லி தென்மேற்குத்திசை நோக்கிததிரும்பினாளே.

### தரு.—ஸௌராஷ்டிரம், ரத்தி.

தேவிமீனாக்ஷிநிருதிதிக்குத் தேரைநடத்தினளே
தேவதுந்துமிமேளம்முழங்கிட தெய்வரம்பையர்கள்முன்னாட
நல்லஜெயஜெயமென்னவேகட்டியங்கூறிட ஸ்ரீங்காரசங்கீதம்பாட
இந்தப்பூவுலகுள்ளவர்யாவரும்சேவித்து பூஜித்துநின்றுகொண்டாட
வெத்திப்போரும்திக்கெங்கும் போயாடுவேனென்று
பூர்ணமீனக்கொடியாட அந்த தேவிமீனாக்ஷி

### விருத்தம்

பருதியெனரதம்நடத்திமனம்பூரித்து பாண்டியன்பெண்தென்மேற்குபாருக்குவந்து, வருதிசொல்விரணமுரசுகெடிசிறக்க வான்பிளக்கமுழக்கோசைவலுமைதன்னை, நிருதி அறிந்தெழுந்ததெண்டிகையிலேறி நேரில்சத்துருவைநிமிஷந்தன்னில், பொருதிஇந்ததிக்குக்கேஜரிதியாக பெலிகொடுப்பேனெனபுலிபோல்புறப்பட்டானே.

### தரு.—சுருட்டி, ஆதி.

வந்தான் வந்தானே நிருதி வல்லமையாகவேதான்
செந்தாமரைமலர் போலவேவதனம்
சிறந்துதேஜஸொளிவு நிறைந்துபளபளென்ன வந்தான்
ஸரிகைதுஸ்திட்டு சாதராமேல்கட்டி ஸகலாபரணமும்பூட்டி
நெரிசிகப்போடுபச்சை நீலகோமேதகம் நிறைந்தமகுடம்சென்னில்சூட்டி
ஹரிபிரம்மாதிகள்வந்தெதிர்த்தாலும் சரம்மீட்டி
ஹதம்பண்ணிப்போர்டுறேன் பாரெண்டு கரங்களை
பரிகாரத்துடன் பாங்காய் தளங்கூட்டி
பார்த்தபேர்நடுங்கும்படிக் காக்கிரமங்காட்டி வந்தான்
நெருப்புப்பறந்திடஉருட்டிமுழித்து நெடியதனுஸைகையில்பிடித்து
உற்புகந்தஸ்திரசஸ்திரமெடுத்து உத்தண்டவீரியம்படித்து
நரப்பூண்டுகாத்தெதோ அடிபடுத்தைதக்கண்டு
நகைத்துச்சதைத்துதுண்டாய் நறுக்கிக்குவித்துநிண்டு
அறப்புப்போல்நொடியிலே அரைக்குறேன்பாரெண்டு
ஆக்கிரமமேவிய உக்கிரமந்தனைக்கொண்டு வந்தான்
இதுகாலங்களிலும் இல்லாதபுதுமையாய் எவரோதுர்புத்திபண்ணி
எதிராறதுநீந்தும்கெருவம்போலகங்கொண் டிந்ததிக்கில்வீன்றூள்நண்ணி
அதிராய்வருகிற தசுரனோதேவனோ
ஆடாமேஏறுடே வாரிடவாடாளட்டி
உதிரந்துரக்கவெட்டி உன்னுவிதன்னைவாங்க
உறுதிசெய்திதோவந்தோம் நிருதிநாமெண்டதட்டி வந்தான்

### விருத்தம்.

படபடப்பாயாக்கிரமித்துநிருதிவந்து பாண்டியன்மாதரசுதனைப்பார்த்து நீதான், கடகடென்றதேர்நடத்திபயமில்லாமல் காசினிவிட்டிவடம்வந்தகாரியம்வீரியம், உடல்வளர்த்துபிழைக்குகின்ற ஊரும்பேரும் உத்ததந்தைதாய்பேரும்உந்தன்பேரும், தடதடென்று உளராமல் ஒளித்திடாமல் ஸாதுவாய்நிஜச்சொல்லாய் சாத்தெண்டானே

வீரட்டிலாகைகொண்டுகுதித்தெதிர்த்தி மேவிவந்த ஆரெவர்நீ விளம்புமென்று, நேரிட்டுகேழ்க்கவந்தாய்சொல்லுறேன்நாம் நிருதியே ஓடாதே நின்றுகேளு, சீரிட்டுவளர்மதுரைபாண்டியன்பெத்த ஜெயசிம்மமீனாக்ஷி சிறப்புகந்த, போரிட்டுவிஜயம்செய்திக்கதிக்கைப் புடித்தாளவந்தவகைபுரிக்திட்டோமே

பசுமதத்துப்புலிவேடிப்பாயதந்த பகுத்தறிவுபோல்உன்பாரைவிட்டு கொசுவதுக்குச்சரியானமனுவைக்கூட்டி கொடிப்போடவந்தோமெண்டு கூறும்மர்தே, இசிவெடுத்துமாய்ந்திடவேஹஸ்திரமாரி எடுத்துசொரிநிருரிதியென்றிபம்புஞ்சிங்கம், ருசுவெடுத்துப்பாராமல்வழியைக்கூட்டி ஒடுவாய்தாயின்முகம்கூடுவாயே

காகம்கத்திகொளரிக்கொட்டி கருவாயிதனை அட்டுகின்றகருத்துப்போலே, ஆகபுத்திபடைத்துகுதித்தோடிவந்த நிருதி ஓடாதே நின்றுகேளு, தேகரத்த புஷ்டிவிருந் தெடதுகையில் தனுஸை பிடித்திருந்தையானால் ஆகமத்தினபிக்குப்படிஅமர்செய்து உத்தணுவத்லதயறிவிப்பாயே

கரியரியாமுயலதுபோல்துள்ளிப்பாய்ந்து கமதுஸ்வயசூரவலுசயந்தோணமல், பெரியவலுச்சபதஞ்சொல்லவந்தபெண்ணே பெருங்காற்றுப்பஞ்சாயொன்பிறுணஞேடே, அரியுரேன்பாரெனநிருதிதனுசைவணி அரைக்ஷணத்தில்காணேற்றி அஸ்திரம்பூட்டி, சொரியு மழை விசித்திரம்போல் கொடிக்குககோடி செரிந்திட்டான் தேவியெதிர்புரிந்திட்டானே

தரு.---தோடி, ஆதி.

தாவியேநிருதிஉன் ஞவிதான்கொடியிலே
கூவிபறக்கஅடி கொடுக்கிறேன்பாராய்
கொடுக்கிறேனெனத்துள்ளி துடுக்குபேசாதேபெண்ணே
முடுக்குகிறேன்சாமுன்னே முடிக்கும்படியே
முடிக்குமுன் கையுமெய்யும் முடியும்பொடியதாக
கொடிக்குள்ளேயடிக்குறேன் கோகாதே நிருதி
கோக்கமரியாமலே மூர்க்கஞ்செய்யுறாய்பெண்ணே
எக்கம்பிடித்தோடம்பு எய்யுறேன்பாராய்
எய்யுமுன்சரத்தையும் சிரத்தையும் க்ஷணத்திலே
கொய்யுறேன்சௌரியம் கூறுதேநிருதி
கூறுதேயெண்டகம் குரித்தச்சொல்லுறாய் பெண்ணே
நீறுச்செய்யஸ்திரம் நெரிக்குறேன்பெண்ணெ
நெரிக்கவலுவுள்ளநீ நெரித்தாண்மைசெலுத்தாதே
பொரிக்குறாய் வீண்பேச்சு போடாபோநிருதி
போடாவாடாவென்று புலம்பியபேய்பெண்ணே
தேடாததுன்பத்தை தேடிக்கொள்ளாதே
தேடிக்கும்துன்பத்தை தெரியப்படுத்தாமலே
வேடிக்கைவிஸ்தாரம் வீசாதேநிருதி
வீசாதேயெண்டகம் விளம்புமுன்கையும்வில்லும்
கூசாமல்வெட்டஅஸ்திரம் குரித்திட்டேன் பெண்ணே

குரித்த உன்னஸ்தரத்தை    முரித்துகிருதி உன்னை
தரித்துப்போடும்படிக்கு    சாடினேனஸ்தரம்
சாடியஉன்னஸ்தரம்    மூடிமறையும்படி
சூடியர்யெறிபாணம்    தொடுத்திட்டேன்பெண்ணே
தொடுத்தஉன்னெரிபாணம்    மடிந்துமறையஇதோ
எடுத்துவருணபாணம்    எவினேன்கிருதி
எவியவருணஸ்தரம்    கூவிபறந்தோட
மேவியஇடிபாணம்    மீட்டிட்டேன்பெண்ணே
மீட்டுமுன்னிடிபாணம்    பூட்டிக்குலையஇதோ
ஜோட்டுருத்திரபாணம்    சொறிந்திட்டேன்கிருதி
சொரிந்தருத்திரபாணம்    ஜ்வலித்துப்பாய்ந்தடிக்கவே
தெரிந்தமட்டேக்கும்பார்த்து    சளைத்தானெகிருதி
சளைகண்டதெ ஹஸ்தரம்    முனைகொண்டு தேவிவிட
களைகொண்டுகிருதிதான்    எலக்கியேசாய்ந்தான்
சாய்ந்தகிருதிபேரில்    சரப்பின்தொடுக்காமலே
தீர்ந்ததயவுசெய்து    தேவிதான்நின்டாள்

### விருத்தம்

தயவாகிஅங்கயற்கண் தாண்நின்டாள் நிருதிநிலஞ்சாய்ந்தபின்பு
சுவயமாகதைரியவலுசூழ்ந்தகளைமுதலான சோகந்தீர்ந்து
நயஞானஅறிவதினுல் நண்ணிவந்தஎதிரிவனை நாடிப்பார்க்கில்
ஜெயமேவும்தேவியெண்டு தெரிந்துபதம்பணிந்து திதி செய்வானே

### தரு:—புன்னாகவராளி ரூபகம்.

எனையாண்டருள்செய்    ஈஸ்வரிமகேசுவரி
எனையாண்டருள்செய்    ஈஸ்வரி
தனதாய்உனைப்போத்தும்    அடிமைக்குடிநிருதி சரணம்
சரணம் சரணம் சரணமம்மா    எனையாண்டருள்செய் ஈஸ்வரி
மதியாரரஞர்க்    கொருபாரிருசக்தி
துதிசூழடியார்க்கு    உதவிசெய் உன்வெத்தி
மதியாலரியாமல்    எதிராயிகல்கொண்டு
அதிகருதிசெய்தேன்    விதிமோசமிட்டம்மா எனையாண்ட
மலைபாத்தவஜருஜேந்திரன்    குமாரி
பலசாஸ்த்ரம்போத்தும்    அம்பிகை கௌமாரி
சிலைதானெடுத்துந்தன்    நிலையாதானறியாமல்
கலைபோல்மிகத்துள்ளி    வலுமேவினேன்குத்தம் எனையாண்டருள்
ஆலிலைத்துயில்செய்    ஹரிக்குலசோதரி
வெலிபயிரழித்தால்    வளையுமொ ஆதரி
சீவிஜெயத்திருசூலி    ஜெயபரிபாலி
அதியோகசாலி புவனேஸ்வரி    மீனாக்ஷி எனையாண்ட

விருத்தம்

அடிபணிந்துஸ்தோத்திரம் செய்கன்புடன்போத்தியகிருதி அறிவிப்போம் கேள், வடிவுபருணதுதிக்கில்வரிசைபெரும் நமது ஜெயமகரமீனக்கொடியது, போட்டிருக்குது நீ குணமேவும் தொண்டனென சூரித்திருந்து, துடிபொருந்தும்தர்மநயம் சூழ்ந்தோங்கும்படியாண்டு நலகுவாயெ.

தாருகந்தமக்களகல்வியாளியென்று ஐம்ஸர்வதயாபரியானதாயேயிப்போ நீருகந்தனுக்கிரகித்தசட்டம்போலே சேராக அனுதினமும் சேமம்வைத்து சிருகந்துஇருந்துஇந்தத்திக்கில்தர்மம் செழித்தோங்கும் அரசாக்ஷிசெய்து உந்தன், பேருகந்துநமஸ்கரித்துபூஜைசெய்வேன் பிரியம்வைத்தாள்வது ந்தன் பெருமைதானே.

விருத்தம்

வசரேரி வளர்தனத்தாள் மதுரை மீனாக்ஷிபெரு வலுவாய்வந்து
போரேரிகிருதிதிக்கைபுடித்தெழில்சேர் மீனக்கொடி போட்டுக்கொண்டு
சீரேரி முரசடித்து சேனைகளை சேகரித்து சிறப்புகந்த
தேரேரி வருணன்திக்கை தேடிவெகு ஜலுதாக திரும்பினளே

தரு.—ஸௌராஷ்டிரம், ரத்தி.

தேவிமீனாக்ஷி வருணன்திக்குக் குத் — தேரைநடத்தினளே
தேவதுந்துமிமேளம்முழங்கிட — தெய்வரம்பைபர்கள் முன்னாட
நல்ல ஜெயம்ஜெயமென்னவே — கட்டியங்கூரிட
ஸ்ரீங்காரசங்கீதம்பாட — இந்தப்பூவுலதுள்ளவர்
யாவரும்ஸேவித்து — பூஜித்துநின்றுகொண்டாட
வெத்திப்போருடும்திக்கெங்கும் — போயாடுவேனென்று
பூர்ணமீனக்கொடியாட — அந்த தேவிமீனாக்ஷி

விருத்தம்

மதிகுலமாதரசிரதந்தனைநடத்தி மனமகிழ்ந்துமேல்திசையில்வருகும்போது,குதிகொண்டதளங்களெல்லாம் ஆராபாரங்கொள்ளோஸைசபதுகேட்டுக் கோபமுண்டாய், பதிதனிலார் வருவதெண்டு ஜெகம்நடுங்க பருக்கிரமித்துகெர்ஜித்து படபடத்து, துதிசிறந்த முதலை அதிலேரிக்கொண்டு ஸ்வயசூரவருணன்வந்துதோணினனே

தரு.—சுருட்டி, ஆதி.

வந்தானே வருணன் — முதலையேறி வந்தானேவருணன்
வந்தானே வருணந்தான் — வலுவலங்கிருதங்கூடி
எந்தன்பாரதில்வரும் — எதிரியாரெண்டேதேடி வந்தானே
முத்துப்பச்சை வஜ்ஜிரம் — வைத்திழைத்தமகுடம்
வைத்துபளபளன்ன — துஸ்துதககதகன்ன வந்தானே

வெத்திசொல்லியென் திக்கில் நத்தியசத்துருவை
கொத்திக்கொல்லுவேனெண்டுசெத்திகேடயங்கொண்டுவந்தானேவருணன்
வருதிக்செதிரடியாய்க் கருதிவரும்பலரை
பொருதிஒருநொடியில் அருதிசெய்வேனெண்டு வந்தானே

விருத்தம்

வீரியமேசிறந்திந்தவருணன்வந்து விளங்குமதுராபுரியாள்மின்னைப்பார்த்து, சூரியனைமூடவந்தபனியைப்போலே சொன்னநகரப்படையெடுத்து துவசங்கள்வந்த, காரியமும்உன்பேரும்தந்தைபேரும் கனஞ்சேருநகர்பேரும்சலங்கிடாமல், சீரியமேபொருந்தும்வகைவிபரமாக செப்பெண்டான் உயிரோடேதப்பெண்டானே

அண்டமதை யெடுத்தெறிந்து அம்மானை விளையாடும் அருணவைமுன்னே
சுண்டையதின் காயதுக்கு நிறமதுபோல் வந்தநிண்டு சொல்லும்வருணா
மண்டலம்போத்திய மதுரை மகராஜன் தவத்தில்வந்த மாதாம்நாமே
சண்டைசெய்து கொடிபோட தளமெடுத்து வந்தவகை சாத்தினோமே

தேரையது திமிரெடுத்து சேனைவத்தேடி எதிர்செய்யவந்த
நேரையொத்து மனுக்கூட்டி நேரிழையே வந்தெதிர்த்து நிற்குறாய்நீ
போரையொற்று திண்டையென்றால் பொடிப்பொடியாய் தரித்துவெட்டி போடுவேனென்றான்
ஊரைசத்தி வழியோடே ஒடுவாய் உயிர்க்கு பயந்தேவோயே

ஆருரண சிங்கத்தைக்கண் டானமட்டும் பார்ப்போமென் டமட்டிபேசி
ஓடும்வழி பார்த்துநிற்கும் உண்மையைப்போ லுரைவருணா உன்முகத்தில்
ஈடுபெரும் மீசையிருந் திடதுகையி லுயர்தனுசு மிருந்துதானால்
வேடுபரி பேய்ப்பேச்சு விளம்பாமல் போர்செய்து வெல்லுவாயே

வெல்லுமெனச் சபதம்மிக விளம்பினதே வருணன்மெத்தவீப்புகொண்டு
பல்லுகளைச்கடித்துருட்டிபார்த்துமுகங்கடுகடுத்து பாண்டியன்பெண்ணே
நில்லு நில்லெனஉருக்கி கொடியசிலை தனைவளைத்து நிமிஷந்தன்னில்
சொல்லும் சரமாரிகளாய் தொடுத்திட்டான்தேவியெதிர்விடுத்திட்டாளே

தரு — தன்னியாவசி, ஆதி.

விடுத்த சரமாரியை விலக்கிமுடித்த இதே
தொடுத்தேனஸ்திரமாரி தள்ளாதேபெண்ணே
துள்ளாதேடெண்டுள்ளானுவம் சொள்ளாதேவருணாஉன்னால்
தள்ளாதபடிக்கஸ்திரம சாடினேன்வருணா
சாடியஅஸ்திரமதை தவுடாய்ச்செய்துஉன்னை
நாடியொருநூறம்பெய்தேன் நலியாதேபெண்ணே
ஒருநூறம்பதெஇப்போ திருநீராக்கிஉன்மேல்
இருநூறுகணைவிட்டேன் ஏங்காதே வருணா
வருமிருநூறம்பயும் மாயஅடித்துஉன்மேல்
வலுவுயர்நாகாஸ்திரம் வாவிட்டேன்பெண்ணே

வாரிவிட்டகாகாஸ்திரம் மாய்த்துமடியஇதோ
வளைமூக்குசெருடாஸ்திரம் வாவிட்டேன்வருணு
வளைமூக்குசெருடாஸ்திரம் வந்துசாடவேவருணன்
வதங்கி மனக்கலங்கி சினங்கள்கொண்டானே
சினங்கொண்டான்வருணனெண்டே தேவிமீனாக்ஷிகொடியில்
சிரியொருகோடியஸ்திரம் மீரியடித்தாள்
அடித்தவொருகோடி ஹஸ்திரம் அக்ஷப்பாயவேவருணன்
ஆக்கிரமம்விட்டுக்கிரமம்விட் டசதிகொண்டானே
அலைசந்தோய்ந்தவருணனம்பு வருவதைக்கண்டம்பாள்
ஆக்கிரமித்துபிர்மாஸ்திரம் தாக்கியேவிட்டாள்
தாக்கிவிட்ட பிருமாஸ்திரம் சோக்கிப்பாயவேவருணன்
தன்னிலைவயர்ந்து நிலந்தனிலேசாய்ந்தான்
சாய்ந்தவருணன்பேரில் சளைத்தானெண்டேதேவி
தயவாய்வில்லதையூணி தணிந்தவள்நின்றாள்

விருத்தம்

தணிந்தங்கயற்கண் நின்றாள் சமர்பொருதிநிலந்தனில் சாய்ந்த வருணன்
அணிந்தகளை ஸ்ரமங்கள் அடங்கலுமோர் நிமிஷந்தெளிந்தறிவுண்டாகி
துணிந்தெழுந் தெதிரிதனை ஸ்வயஞான மதியினாலே சுகிருதமாக
பணிந்தவரைரக்ஷி பாரபரியெண்டு தெரிந்து துதி பகருவானே

தரு.—செஞ்சுருட்டி, ரூபகம்.

தயவாயெனையாள் சகலபுவனேஸ்வரி
சரணம்சரணம்சரணமம்மா தயவாயெனையாள்
ஜெயமேவிய சீர்சிறந்தஸர்வேஸ்வரி
அயன்மால்முதலா அரியாஜெகதீஸ்வரி தயவா
கொடுந்தீவினையால் குறிப்பறியாமல்பாவி
செடுந்தீம்பெனும்போர் செருவம்நான்செய்தேன்தேவி தயவா
கனிகாய்மரந்தான் கருதும்கல்லெறிபடும் தயவா
அனையேஉனையான் அறியாமலெதிர்யுத்தம்
முனையாய்புரிந்தேன் முழுதும்தப்பிதங்குத்தம் தயவா

விருத்தம்

செஞ்சினிலகமிருத்து நிண்டமர்செய்தும்பின்னும்
செஞ்சியேசெய்யம்பாடும் செப்பீரவருணாஉன்பார்
மிஞ்சியபுகழ்சேர்மீனம் யேத்திவைத்திருப்பதாலே
வஞ்சனையில் லாத்தொண்டர் வரிசைசெய்தாளுவாயே

வாளதுகரந்தரித்தமதுரைமீனாக்ஷியம்பாள்
கோளதின்குறையான்செய்தகுற்றமெல்லாம் பொருத்து
ஆளதுகொண்டுசெய்யும் அனுக்கிரகம்போலெவந்த
நாளதும்ஞூலியபாரம் நடத்திநான்பணிகுவேனெ

மதிகோர்டிஉதயமெனும் மங்களகல்லியாணியெனும் மதுரைரூஜி
எதிருடிவருணனைவேண்டெழில் மீனக்கொடியவன் பாரேத்திக்கொண்டு
ஆதிகூடிமனமகிழ்ந்துசொல்லும் வடமேற்குதிக்கில் தலக்குவாயுவின்
சித்திதேடிமுரசடித்துஸேனையுடன் ரதமேரித்திரும்பினளே.

தரு.— ஸௌருஷ்டிரம், ரத்தி.

தேவிமீனாக்ஷிவாயுதிக்குக்குத் தேரைாடத்தினளே
தேவதுந்துமிமேளம்முழக்கிட தெய்வாம்பயர்கள மூன்னாட
செல்வஜெயம் ஜெயமென்னவெ கட்டியக்கூரிட
ஸ்ரீக்காரஸங்கீதப்பாட இந்தப்பூவுலகுள்ளவர்யாவரும்ஸேவித்து
பூஜித்துகின்றகொண்டாட வெத்திப்போருமேம் திக்கொக்கும்
போயாடுமேனென்ற பூர்ணமீனக்கொடியாடதேவி மீனாக்ஷி

விருத்தம்.

சிலைநுதலாள்மீனம்பாள் சிறந்தவடமேர்க்குதிசைசேரச்சேனை
நிலைபேர்ந்துகுதித்தெம்பி நிமிர்ந்தாரபாரமிகநெரிக்கக்கேட்டு
கலைமானில்பாய்ச்தேரிகடுஞ்சினமாய் எதிரிதனைகண்டால் கொல்லி
இலைபோலெஉதிர்ப்பேனெண்டு எதிர்த்திட்டான்வாய்வுவந்து குதித்திட்
[டானெ

தரு.—கல்லியாணி, ரூபகம்.

வாயுபகவான்வந்தானே கலைமானேறி
வாயுபகவான்வந்தானெ வாயுபகவான்வந்தான்
வாய்வுகொண்டதிவேகமாய் காய்வுகொண்டெரிகொரே
தேய்வுக்குத்தோழனான வாயுபகவான்
கொடிமுடியிலொன்றைறதட்டி கொடிதனிலெகடல்கூட்டி
வடிவுலெக்கைசெய்தகெட்டி கெடிசிறந்தசிங்க குட்டி வாயுவு
அண்டர்துதிப்ரமர்க்கிஷ்ட தொண்டனெண்டுறம் மேலிட்ட
வண்டனிலங்கையைச்சுட்ட சண்டனனுமானைப்பெத்த வாயு
இந்தநகரத்தைத்தேடி வந்திடெதிரிலையோடி
கந்தகந்தஅடிகுடி பிந்தச்செய்வேன்பாரெண்டோடி வாயு

விருத்தம்

மூண்டுநிறைமூர்க்கமதாய்வாய்வுவந்து மூதூர்அம்பிகை சுந்தரமுகத்தைப் பார்த்து, கண்டுகொழுத்ததின்கலையை விட்டுப்போட்டு நகர்சுத்திப்பார்க்கவந்ததடப்புப்போல் நீ, உண்டுசிறந்திருக்காமலூரை விட்டெட்டுோர்வந்த காரியம் உன்னூரும் பேரும், துண்டுதுண்டாயுளருமல் சோர்வையாக தோகையெ புயம்வைத்துச்சொல்லெண்டானெ,

## விருத்தம்.

எரிவிளக்கையுங்கவர்தவண்டுபோலெ எம்பிக்குதித்தோடி எங்கெதிர்கில் வாயுவெ, திருகிரையும்மதுரைமதிகுலத்துப்பாண்டியர் செல்வியெனுமங் கயற்கண் தேவிரமெ, பரிபூர்ணசௌரிமதாலுன்னைவெண்டு பாக்குயரம் மீனமுந்தன்பாரிலேத்த, சர்பரிதேர்தளங்களுடன் ஈாடிவந்தோம் காரிய மிதவீரியம்பின்காணலாமெ.

பொரியரிசிகொண்டுமடையடைக்கவந்த புத்திலையப்போலெனக்கெதிருய் புசமுவதுக்குச், சரியெனச்சொல்மனுதளத்தைக்கூட்டிவந்து தையலெ நீ சொன்னசௌரியசதன்னை, பெரியதயவாய்ப்பொருத்தோம் எனெண் டால் கேள் பெண்பிளையைபேய்கூடபொருக்குமெண்டு, தெரிவதினுலொ ருகுத்தம்ஸகித்தோமிப்போதிருப்பிசடர்தூர்க்கோடிசேருவாயெ.

அணிசிலுத்துக்சலித்தமரமதிலிருந்து பூனையைப்பார்த்ததட்டும்பண்பாய் துணிவுரைத்துகலேயெரிதள்ளிகுதித்ததிவீரியச்சொல்லும் வாயுவே மணிபதித்தமுடிதரித்துமானமுள்ள மீனசவத்தவன்தன்னுல் கணிசமுத்ததனுவெடுத்து கணைதொடுத்துக்தனுவத்தைகாட்டுவாயெ

அமரர்முதலெவரும் நமக்கஞ்சிபயந்தனுஸரிக்க அருகவெ நீ சமர்பொருதிவெல்லெண்டுசபதஞ்சொல்லுமுந்தன் சடலமெல்லாம் தமர்செய்துபோடும்படிசரமாரிதொடுப்பேனெண்டு தாண்டிவாயுவு திமிரியம்புசிலையெடுத்துசினந்திட்டான் தேவிபதில் புனைந்திட்டாளெ

தரு.--- சங்கராபாணம், ஆதி.

வெத்திசௌரியவீரியம் விளம்பியவாயுவெ நீ
சத்திககதரியோட கணைவிட்டேன்பராய்
விட்டகணையைவெட்டி வீரியமாய்நாறம்பு
சட்டமதாய்விட்டேன் தடுத்துப்பார்பெண்ணே
தடுத்துநாறம்பையும் தவுடுபொடியதாக்கி
விடுத்தேனிருநாறம்புவிலகாதெ வாயுவெ
விலகாதெயெனச்செல்வி விட்டப்பதைநொருக்கி
பலமாய்ஹஸ்தரம்விட்டேன் பிசகாதெபெண்ணெ
பிசகாமல்பிருமாஸ்தரம் பிரயோகஞ்செய்திட்டோம்
மசகம்போலோடாமல் மல்லாவேவாயுவெ
எதிர்த்துபிருமாஸ்தரம் இடிபோல்வந்துசாடவே
குதித்ததிமிரடங்கி குன்னிஞன்வாயுவு
குன்னிஞன்வாயுவெண்டு சன்னிஞல் கண்டு தேவி
எண்ணிறந்தசரத்தை எடுத்தடித்திட்டாள்
அடித்தசரத்தில்தேகம் துடித்துப்பதைத்துவாய்வு
புடித்தவில்லுடனேதான் பூமியில்சாய்ந்தான்
சாய்ந்தவாயுவெழுந்து சமர்க்குவரட்டுமெண்டு
பாந்தம் சேர்மீனுக்ஷி பார்த்தெதிர் நின்ருள்

சாய்ந்திடும்வாயுவு தேகம் தைரியமுகங்தெழுந்து
ஆய்ந்திடும்ஞானக்கண்கொண்டம்பிகையெண்டறிந்து
பாய்ந்தவங்தெதிர்த்தகுத்தம்பதம் பொருந்தாளுமெண்டு
வாய்ந்திடுமுபசாரம் சேர்வரிசையாய் துதி செய்வானே

தரு— தன்னியாசி, ர்த்தி.

தாயெநீதயவுசெய்து ஆசரிஶ்ரீதரி
வாயுவுன்னடிமைராக்ஷி வளர்மதுரைமீனாக்ஷி தாயெநீதயவுசெய்து
அடுக்குந்தரமென்னுது கொடுக்குங்கறமுன்னுது
இடுக்கம்நீர்நிணைந்திடில் தடுக்கஆனல் முடியும் தாயெநீதயவு
ஈய்யஞானக்கடலை மாயப்பாசிதான்மூடி ஞாயந்தோணுமல்வந்து
தீயபோர்செய்தேன்மிஞ்சு தாயெநீதயவு
துறவாழன்தெரியாமல் உறமாய்குதித்ததுபோல்
கராராரொவெண்டுசொல்லி மாம்போல்
வந்தெதிர்த்திட்டேன் தாயெ நீ தயவு

விருத்தம்

துதிபொருந்தடிபணிந்து ஸ்தோத்திரம்செய்யும்வாயுவே
பதிதனில்மீனமேத்தி பாங்குகந்திருப்பதாலே
மதிதனிலுறுதிவைத்து வரவடும்திருபத்துக்கு
எதிராதுகண்டென்ஞளும் இருந்தாசாளுவாரே!

ஜெரியுகத்ததவயோகமரர்போத்தும் நீலவர்ணமகருஜிநீதானிப்போ
அறிவித்தகட்டளையின்படியேயான்தான் அன்புகநதுஉந்தனரவிந்பாதம்
குரிவைத்துபூஜைசெய்துவணங்கிாளும் கும்பிட்டோமமதைக்கோறிபோ
த்தி
முரிபெத்தஅடிமையதாயிருந்துதிக்கில்முதன்மைபெருமரசாக்ஷிமுறைசெய்
வேனே

சக்தியம்பிகைகௌரி தைரியவீரியசாம்பவி ஶ்ரீங்காரதடாதகைபாந்தேவி
வெத்திபெறவாய்வுதிசைமேவிவந்து வெம்போர்செய்தேவிஜயங்கெண்டு
அத்திபரிமுதலானதளங்கிளப்பி ஐசுவரியகுபேரன்வாழ்வடுத்ததிக்கை
நத்திஇதோஜெயிப்பேனெண்டுவிருதெடுத்து நாட்டினார்தந்திருப்பியோ
ட்டினளே

தரு.—ஸௌராஷ்டிரம், ரத்தி.

தேவிமீனாக்ஷி குபேரன்திக்குக்குத தேரைநடத்தினளே
தேவதுந்துமிமேளம்முழங்கிட தெய்வரம்பையர்கள்முன்னாட
நல்ல ஜெயம்ஜெயமென்னவேகட்டியக்கூறிட ஶ்ரீங்காரசங்கீதம்பாட
இந்தப்பூவுலகுள்ளவர்யாவரும்சேவித்து பூஜித்துநின்றுகொண்டாட
வெத்தி போருடும்திக்கெங்கும் போயாடுவேனெண்டு
பூர்ணமீனக்கொடியாட அந்ததேவிமீனாக்ஷி

விருத்தம்

தேர்சிறப்பாய் நடத்திவந்த ஸ்ரீமீனாக்ஷி
  தேவிவட திசையில்வந்து சேருமபோது
போர்சிறப்பாய் செய்தளங்க ளாரபாரம்
  பொங்குகட லொலிபோலே புரியக்கேட்டு
ஆர்சிறப்பா யெதிர்த்தாலும் கொல்வேன்பாரெ ண்
  டாக்கிரம வியாக்கிரம்போ லசுவமேரி
பேர்சிறப்பாய் வாழ்ந்திடும் குபேரராஜன்
  பிரபலஞ்சே ராணுவமாய்ப் புறப்பட்டானே

தரு.—சுருட்டி, ரத்தி.

குபேரன்வந்தானே குதிரையேரி குபேரன்வந்தானே
குபேரன் வந்தானே கொடூரமேவிய
கோபமிகவாய் வீரகோரசௌரியத்துடனே குபேரன்
அருக்கனொளியைப்போலே இருக்கும்ரெத்தினத்தாலே
சிறக்கச்செய்திடுமுடி நிறக்கச்சிறந்தரித்து
பெருக்கதளத்துடனே எதிர்க்கவருவாரெண்
டுருக்கிகாங்கள் தன்னை முருக்கி மீசைமுருக்கி குபேரன்
அண்டபுவனமெல்லாம் கண்டுகெடுகெடுங்க
ஆரபாரமாய்மெத்த வீரஉத்தண்டங்கொண்டு
வண்டெத்தினமாயெதிர் நிண்டசத்துருக்களை
கண்டங்கண்டமாய்வெட்டி துண்டம்செய்குவேனெண்டு குபேரன்
கத்திக்கேடயமம்பு குத்திச்சரிக்கும்வாங்கு
சுத்திதளங்கள்கொண்டு வெத்திவிளம்பியிவர்
எத்திசம்முடதிக்கில் சத்துருவருவோரை
கொத்திக்கொத்திகசுக்கி அத்திசெய்வேனெண்டு குபேரன்

விருத்தம்

கொக்கிரைச்சல் கேட்டெழுந்த கூனிபோலே குதித்தெழும்பி பரியேரி குபேரன்தான்வந், தக்கினியாய் பொரிசிதற விழித்துருட்டி ஆக்கிரமத் தோடெதிர்நில்லம்பிகையைப்பார்த்து, மைக்கினியவிழிசிறந்த மாதே நீ தான் வாழ்ந்திடும் ஊர்பேர் வலுவாயெந்தன், திக்கினில்வந்தவகையிதுக ளெல்லாம் க்ஷணத்தினில் நாமறியச் செப்பெண்டானெ

விருத்தம்

திட்டமிகவீரியத்தோடார் நீயெண்டு சினந்துகேள் குபேரனெ செப்புறேம் கேள், துஷ்டனிக்கிரகவீரியம்மிகவுஞ்சூழ்ந்த சுந்தரம்சேர்சௌரிய நயம் துலங்குநாளும், சட்டமதாய்மதுரையாள்பாண்டியன் பெத்ததைரியமீனாக்ஷியாம்நாமெ யுந்தன், கொட்டமதையடக்கியிந்ததிக்கில் மீனக்கொடிபோடவந்தவகைகூறினோமெ.

### விருத்தம்

கரையான்கள்கூட்டமிட்டு இருப்புத்தூணை கருதிஅரித்திடவந்தகருத்துப் போலே, நறையாத தவம்புரிந்துவர்ழுக்கைபெத்த குபேரனெண்டறிந் தும் சொக்குக்கூட்ட, நிகரயான மனுக்கூட்டிவந்து பெண்ணே நீசொ ல்லும்வீரியச்சொல்நிலைத்திடாது நுரைபார்த்துக்கரைசேற உணர்ந்து நெஞ்சம் துணிகுவாய் உயிர்க்கு பயமணிகுவாயே

### விருத்தம்

எலிகுதித்துக்கசத்நூரத்தககிணைத்சஞ்சி பூனைபயக்தேகருமோநீ
புலிமுகத்திலாடூஞ்சல்போட்டு விளையாடுவதுபோலெவென்று
தலைகொழுத்தப்பேய்பேச்சு சாத்தூரதில்பலனென்ன சமர்த்திருந்தால்
சிலைபெடுத்துப்போரெடுத்து சீக்கிரமுன்னூறுவத்தை செலுத்துவாயே

சிலையெடுத்தெதிர்நில்லெண்டங்கயர்க்கண் சினாறு வெகுசபதங்கள் செப் பும்போது, சலேநதித்துப்பாய்ந்ததுபோல்குபேரன் துள்ளி கணமொன் றில்தனுவெடுதது கணையைப்பூட்டி, மலைவெடித்திடும்படிக்குகெர்ஜித்தோ ங்கி மனுத்தளத்தோடெதிர்த்து நிற்கும்மாசெயுன்னே, தலைநணித்து வி டுவேனெண்டஸ்தாமாரி தனைப்பட்டான்தேவிபுனைநதிட்டாளே

### தரு.- ஆனந்த பைரவி, ரூபி

| | |
|---|---|
| லஞ்சிஉனதுயிரை | இதோ |
| வாங்ககணைவரவிட்டேன் | தாங்கிப்பார்பெண்ணெ |
| ரஞ்சிதஅம்பிகைதான் | மெள்ள ஒரு |
| லாகைமொண்டுவந்த | அம்பைசாக அடித்தாள் |
| அடித்திடும்கன்னியுன்னை | இருதுண்டாய் |
| ஆக்குறேன்பாரெண்டு | கணைதாக்கியெவிட்டான் |
| கொடித்தொருகொடிதனிலெவருங்கணைநீருநீறுப்பழுதுப்புநாறுவிட்டாள் | |
| விட்டகணைநூரையுந்தான் | சரிவர |
| வெட்டிவெட்டி துண்டம்பண்ணி | எட்டியெறிந்தான் |
| திட்டமிகுஅம்பிகையாள் | அதைப்பார்தது |
| சீக்கிரமக்கினியஸ்தரம் | தாக்கியெவிட்டாள் |
| அக்கினியாஸ்தரந்தன்னை | கொடியிலெ |
| ஆத்திடவெவருணாஸ்தரம | தாக்கியெவிட்டான |
| உக்கிரமம்கொண்டம்பிகை | வீரியமா |
| யோங்கிநாகபாசம் விட்டேங்க | அடித்தாள் |
| வந்தநாகஸ்தரமமாய | கெருடாஸ்தரம் |
| வாங்கியெ குபேரராஜன் | ஒங்கிதொடுத்தான் |
| அந்தமிகுகெருடாஸ்தரம் | தனைமாத்தி |
| அம்பிகைபிருமமாஸ்தரம் | தெய்புடன் விட்டாள் |
| விட்டபிருமமாஸ்தரத்தை | பொடியதாய் |
| வெட்டிநாராயணாஸ்தரம் | வீரியமாய்விட்டான் |

சுருக்கென அங்கயர்க்கண் அதைமாத்த
சூரமதாய்ருத்திரபாணம் சேரிட்டுவிட்டாள்
சேரிட்டுருத்திரபாணம் குபேறன்மேல்
செரிங்கிச்சாடவே மனங்கலங்கிநின்ருன்
போரிட்டஎதிரிசத்தெ கலங்கவெ
பூரித்தொருகோடிசரம் பொழிந்துவிட்டாள்
பொழிந்தசரமாரியிலே குபேராஜன
பொரிகலங்கியெ மனவறிவயர்ந்தான்
தெளிந்தமனமீனுக்ஷி குபோன்சற்றெ
தேரிபோர்க்குவரட்டுமென்டாரி நின்ருன்

விருத்தம்

போரதுசெய் குபேரன் பொரியதுகலங்கித்தேரி
நேரதில்நிற்கும்மாதை நீண்டொத்தஞானத்தாலெ
ஆரதுவெண்டுபார்க்கில் அம்பிகையெண்டுகண்டு
சீரதுஉகந்துஸ்தோத்திரம் சிறப்புடன்செய்குவானெ

தரு.—கியால் மெட்டு சுருட்டி, ரூபகம்.

தயவாயெனையாள் ஸர்வேசுவரி நீ தயவாயெனையாள்
அயன்மாலரியா ஹரநார்க்கொருபார்
அணிமாதரி நீ ஹரிஸோதரி நீ தயவா
அறவாபரணிஅகிலாள்முகில் நீ ஹரியாஸனமெ அனேகாரணி நீ தயவா
மதுராபுரியாள் மலேபத்துவஜன்மால்
மகிழ்சேயெனும் நீ மகாராஜியும் நீ தயவா
அதிகதுதிகொண்டடியேன் வெறிபோல்
அரியாப்பிழைசெய்ததைபொரு நீ தயவா

விருத்தம்

வந்தனைசெய்துபோற்றிவணங்கிய குபேரமன்னு
இந்தமாநகரில் மீனம் வத்திவைத்திருப்பதாலெ
எந்தநால்விடும்கிள்ளாக்குக்கெதிரதுகண்டோரும்
அந்தமாய்நடந்து நீரெ அரசதுஆளுவாயெ

மதிகுலத்திலவதரித்த மகாராஜி அமிருதகுணமானசக்தி.
அதிகதயவுகந்துஎனக்கருள்செய்த கட்டளைபோலன்பு செய்து ண்டு
துதிபொருந்தியனுதினமும்தொண்டனெனஉன்பேரைச்சொல்லிக்கொ
பதிதனிலெயிருந்துபரிபாரமதுசெய்தேத்திபணிகுவேனெ

அங்கயர்க்கண்சிங்கமெனும் அதியோகமீனுக்ஷியம்பாள்வந்து ண்டு
பொங்குமிகு குபேரன்திக்கில்போர்செய்துமீனக்கொடிபோட்டுக்சொ
சங்கமகாசங்கமெனும் தளங்கள்தனைக்கிளப்பி பெருதைரியமாக
திங்களணிசங்கரர்வாழ்திசைநோக்கி ரதமேரித்திரும்பினளெ

தரு.— ஸௌராஷ்டிரம், ரத்தி.

தேவி மீனாக்ஷி ஈசான்னியதிக்குத்தேரைநடத்தினாளே
தேவதுந்துமிமேளம்முழங்கிட தெய்வரம்பயர்கள் முன்னாட
நல்லஜெயம் ஜெயமெனவெ கட்டியக்கூரிட
ஸ்ரீகாரஸங்கீதப்பாட இந்தப்பூவுலகுள்ளவர்யாவரும்
ஸேவித்து பூஜித்த நின்றுகொண்டாட
வெத்திபோருமெம்திச்செங்கும் போயாடுவேனெண்டு
பூர்ணமீனக்கொடியாட அந்த தேவி மீனாக்ஷி
ஈசான்னியதிக்குத்தேரை நடத்தினனெ

விருத்தம்

சினதுரகக்கொண்டுவெப்போர்செய்த ருபேரனைவெண்டுஜெயமீனாக்ஷி
இனதுரகசெஜங்களுடன் எழுந்து ரதந்தனிலேரிஈசான்னியத்தில்
மனதுமிகமகிழ்கூர்ந்துவருகிறாள் ஈசர்கொலுவரிஸைசயெல்லாம்
எனதஸ்வயபுத்தியறிந்திருப்பதையானினிப்புகழ்ந்தியப்புவேனெ

மதியணியும்சடையாளர் மகேசர் வெள்ளிமலைநாதர் வளருடிவிண்ணோர்
பதிமால் அயனும் பணிந்தடி போற்றும் மகாராஜ ராஜர்க்கு நல்ல
செதிதந்தருள்ஜெகதீசர் கனம்பொருந்துப்சௌரியவலகணிசமெல்லாம்
ததிபுரிந்துவிருதகந்து சொல்லுங்கட்டியக்காரன்வந்து தோணினனெ

தரு.—தோடி, ஆதி.

கைலாஸவாஸக்கட்டியக்காரன் ஸ்ரீங்காரமதாகவந்தான்
கைலாஸவாஸக்கட்டியக்காரன் ஜெயமேவிய மகேசர்
திருநேத்திரஜெகதீசர் கைலாஸ
தகசத்தடிபிடித்து ஸரஸமாய்பல்கடித்து
ஸ்ரீங்காரச்சொல்வடித்துதீர்த்தவினோதம்படித்து கைலாஸ
அந்தப்பணிதரித்து ஆடைகளலங்கரித்து வித்தைவினோதம்படித்து
விண்ணோரை உபசரித்து கைலாஸ
பூவிலிருக்கும்வண்டுபோலெ ஸபைசுத்திக்கொண்டு
ஸ்வாமிவாரார்பாரெண்டு ஸகலோரும் எச்சரிக்கையெண்டுகைலாஸ

விருத்தம்

நேத்திரமூண்டதூகந்தநித்தியதத்துவக்கடவுள் நிதம்விளங்கும்
க்ஷேத்திரமாம்கைலைதனில்சிறந்தகொலுஇருப்பதற்குதேவர்களெல்லாம்
மேஸ்தரியாய் எவர்களும் மேலானபதம்பொருந்துமுன்னிருந்து
ஸ்தோத்திரஞ்செய்திடும் நந்தீஸ்வரர்முன்னுதாகவந்து தோணினரெ

தரு— ஆனந்தபைரவி ஆதி.

நந்தீஸ்வரர்வருகின்றாரெ ஸ்ரீங்காரமாக
நந்தீஸ்வரர் வருகின்றாரெ

நந்திபுகவனேடைந்தர்மகிழ் சுந்தரஸாமிகயத்தந்தருள்
சந்திரசேகரசுந்தரேஸ்வர மந்திரியெண்டேத்த
மாதவருப்பு ழ நந்தீஸ்வரர்

வேதசிலர் ஸனந்குமார விளங்கப்பேவேதவர்ணனசெம்பீரர்
சிதகுண திருசேத்திர் நீதமிகுசதலைத்டாத்திரர்
மாதவர்தரும் உபமாலதரித்து ஸாதகர்தரும் பஞ்சாக்ஷரதலை
உச்சரித்து நந்தீஸ்வரர்

நெத்திதனில்திருநீருட்டு அதின்மேல் நடு
மத்தியலக்ஷதைபொட்டிட்டு சுத்தஜரிகைகதுஸ்திட்டு
முத்தகொத்துஸரமிட்டு அஸ்தமதில் சடயம் தசதசதகனவைத்து
ரத்னமகுடம் பளபள நந்தீஸ்வரர்

ஸத்தியசீததராப்படித்து பொன்பிரப்பு
கத்திருலமகரம்பிடித்து சித்திரவஸ்தரமுக்கட்டு
முத்திரைமோதிரமிட்டு எத்திசைமுனிவரும எதிர்நின்றுவாழ்த்த
சுத்திலும்பூதகணகள் சூழ்ந்தடிபோத்த நந்தீஸ்வரர்வருகின்றாரே

விருத்தம்

பக்கையர்க்கும் பாபவர்க்கும் பதம் சிரம் தோணமல் நின்றபரசுஞ்சாஸ்ர
அங்கயனைக்காய்ந்தெரித்த ஆங்காரருத்திராகிலாண்டம்போற்றும்
சங்கரருர்மதிரணிபுஞ்சடையாளர்திருசேத்திரர்ஸகலலோக
துங்கர்கைலாஸகிரிநரைசர்சொலுவிருந்தார் சுதினந்தானே

தரு.—காம்போதி, ஆதி.

சந்திரசேகரர் சுந்தரே சுரர்ஸாப்பரிவல் சொலுவிருந்தாரெ
அந்தமேவிய கைலாஸகிரியதில்
அலங்கிருதமிருந்திடும் ஹரியாஸனந்தன்னில்
சந்திரசேகரர் அந்தணமுனிவர்கள்
அமரரெல்லோரும்வேத ஆகமம்தவறுமல்
அன்புடன்மகிழ்ந்தோத விந்தையதாய்கெணங்கள்
விளங்கும் வெண்சங்கமுத விண்மணணண்டமெங்கெங்கும்
விளங்கவே ஒப்பில்லாத சந்திரசேகரர்
பூவுலகமார்கள் பூரித்தன்போடுதூத்த
புனிதனசனத்தம்பி புகழ்ந்துகிதமும் போத்த
பாவலமொழிலாக பாவினைஸ்துதிசாத்த
பதினாலுலகிலுள்ளபலரும் பணிந்துவாழ்த்த சந்திரசேகரர்
நந்தீஸ்வரகெணங்கள் நான்குவாசலும்காக்க
நம்பும் அன்பருக்கெல்லாம் நாளுமிங்கபங்கவேர்க்க
துந்துமிமேளவாத்தியம் ஐவலித்து எங்கெங்கும் சேழ்க்க
சுந்தரஹரிஅயன்சுரர்முனிவர்கள்பார்க்க சந்திரசேகரர்

## விருத்தம்.

ஞானமுயர்தலயோகர் சலகோடிசித்தசுத்தர்ஞானமுள்ள
மானபருசக்கிரவர்த்திமண்டலேஸ்வரரெவரும் மகிழ்ந்தபோத்தும்
தீனதயாதரர்தராய்திருநேத்திரஸௌந்தரராய் ஜெகம் விளங்க
தானவராய்எழுந்தருளும் தர்பாரெதாலன்னந்திசரணம் ஸ்வாமி

கொடிமுடிசூழ்கைலைதனில் கொத்தவரும்ஜெகசீர்கொலுவதாகி (சேர்
அடியவர்கள்சேனைகளுடன் உமோகமாதாயிருக்கையிலெஉலக்கிருதம்
கெடிசிறந்தமீனவன்பெண் கெம்பீரசனக்கள் பரிகெஜங்களோடெ
அடிவுகந்தரெதமேரிவளமிருந்த படசெடித்துவருகின்றளே

### தரு—நாதநாமக்கிரியை ஆதி.

தேரேரிவருகிறாள்பாரீர் ஸ்ரீவிஜயமீனாக்ஷியம்பாள்
தேரேரிவருகிறாள்பாரீர் தேரேரிவருகிறாள்பார்
சிரேரிவளர்மதுரா தேவிசிங்காஸனமிருந்தராசாக்ஷி
யாவரும்துதிசெய்யும் மதுரைமீனாக்ஷி தேரேரி
இன்பமத்தளதாளங்கூட லயத்துடனெ
பண்பாய்ஸங்கீதஸ்வரம்பாட அரம்பயர்கள்
முன்பாய்பரத்நாட்டியமாட மலர்மாரிகள்
அன்பாய்தேவர்கள் சூழ்ந்துபோட ரணபூரசு
இடியதுபோல்முழங்க கொடிசுருட்டிவிளங்க
முடிமன்னர்களுளங்க கொடியாய் நடுநடுங்க
ஈட்டிகளெரிசக்கிரசவளங்கள் நாட்டிதேசத்திலும் நடந்திட
தளங்கள்சூட்டியவிருதுகள் பார்த்தெதிர்கலங்க
பூட்டியபதக்கம்பொன்முடிபளபளங்க தேரேரி
தேசம்புகழும் இந்திரன் அக்கினி பவநாசம்
செய்எமதர்மவீரன் நிருதி மேகருநாகிய வருணமாரன்
சௌரியவாயுவு ரோஸமிகுதனகுபேரன்
இச்சஎழுதிக்கினில்போய்எதிரேரி நிற்கையிலவர்கள்சீரி
மெய்க்கவர்கள்கண்டுமீரி உக்கிரமசௌரியங்கூரி
திடுதிடுவென அம்பெடுத்தெதிர்மீட்டி
அடித்தடித்தடிக்கையி லவர்கள்கைகூட்டி
விடுத்திடும்கரத்தில் மீனத்தைநாட்டி
படித்திடும்ஜெயவெத்தி பூண்டசீமாட்டி தேரேரி
ஸ்ரீங்காரகைலையெண்ரும் இன்னமுமொரு
மங்காததங்கமகாமேரும் ஆதிக்குருஜன்
செங்காசராசநாளும் அவருரெண்டு
தங்காமல்நடந்திசேரு ரெதம்திருப்பி
தேடியெழுராசடித்து கூடியதனையெடுத்து
நாடியவாளையொடித்து சூடியசிலைபிடித்து
சினவலுவத்திருவீரியரேஜி கனமிகுஈஸ்வரரெளிதென்றுபேசி
அலவரும்துதிமதுராபுரிவாஸி மனமகிழ்பாண்டியமகள்மகராஜிதேரேரி

### விருத்தம்

ஆர்க்கும்தயாநிதியானஅம்பிகைமீனாக்ஷிவெகுஆண்மையாக
சீர்க்குகந்தகைலைதனில் சேனையுடன்வந்திறங்கிசிறந்திருந்து
நீர்குதிதசடையாளர்பிறந்தாஈஸ்வரரை இந்தநிமிஷந்தன்னில்
போர்க்குவரும்படி தூதா இப்போஅவருக்குச்சொல்லெண்டுபுரிகுவாளே

### தரு.— பியாகடை, ஆதி

சொன்னாள்மகாராஜியெண்டு ஈஸ்வரர்முன் போய்நிண்டு
சொல்லடாஅடெகட்டியக்காரா மன்னமன்னவர்போத்தும்
மதுரைஅரசாக்ஷிசெய் மாதுமீனாக்ஷி
வந்திப்போதுதானாக்ஷியாக சொன்னாள்மகராஜி
வீரஇந்திரனதிகோணக்கினிபவ காரன் சண்டன் தரு
உத்தாரன் நிருதிபரி பாரவருணன் ஸ்வயசூரவாயுவு
தனகுபேரன் வரையிலேழுதிக்கும்
ஸாரமாகவெ ஒருவாரந்தன்னிலவர்கள்
ஆரபாரசௌரியம் சோரஅடித்துமீனம்
ஏரவைத்துஸ்திரமாய் சீரதானகைலை
ஊரதிலேயும்வந்துன்னேரவெம்போர்கருவர சொன்னாள் மகராஜி
ஆரும்தேவாதிதேவரூரும் புகழும்மகா
மேரும்கொடிமுடிகள் ஏரும்எழில்கள்மெத்த
காரும்கைலைமலைஊருஇதுரெண்டையும் தாரும்தருதவீராருனல்
நீரும்தொல்முகப்புள்ளையாரும் வன்ஸேனாதரரும
கணங்களனவோரும் ஒருத்திவைசந்து
சாரும்ஸர்வத்திராளுடன் வாரும் வந்தெதிர்சண்டைநேரும்
உம்மாலானத்தைபாருமெண்டுருதியாய் சொன்னாள்மகராஜி
எங்கும்பிரகாசமுள்ள திங்களணியும் இரு
கொங்கைசிறந்திடெழில் கெங்கைநீரேத்தரும்
செங்கண்சுடர்சதுர்புஜங்கள் வலுவும் கஞ்சை
உண்கும்நெஞ்சத்தினுடைஉறமும் பொங்_ப்சீர்மிகதலங்கும் மதுராபுரி
திங்கள்குலத்துதித்த மங்கைசமர்க்குரண
சிங்கமானவீரிய அங்கயர்க்கண்ணாள் நாளும
தங்கவில்பிடிக்கும் சரங்கள்திரமும் பார்க்க சொன்னாள்மகராஜி

### விருத்தம்

தவ.யோகரமரர் துதினரிய மீனாக்ஷி சொல்லைதலைமேல்கொண்டு
சிவனாருமெவரெவரைசெப்பனகட்டியக்காரன்தேடிக்கொண்டு
எவராகிலும்மதிக்கஒண்ணாதெழில் கைலங்கிரிஅதுக்குள்ளேகும்போது
அவனாறடா ஙராவெண்டு ஆக்கிரமித்து நந்திமறைத்ததட்டுவாரெ

### தரு.— கமாசு, ஆதி.

ஆரடாநில்லடா வந்தத்தைகாம் அரிபாத்தான்சொல்லடா
ஆரடாநந்தீ யென்
பேறடாதிரும்பி பாரடாநீயெந்த
ஊரடா அடெகரா ஆரட

தேடிபுதைத்தபொன் நாடியெடுத்திட
ஓடிவந்தார்போல்கால் கூடிவந்தாய்நீ ஆரடா
தொண்டிக்காளைக்கண்போல் ஒண்டியாய் குதிபோட்டு
முண்டிக்கொண்டோடுருய் சண்டிமானிடா அடெ ஆரடா
சிலாக்கியகைலையில் அயோக்கியமானிடன்
பெருயோக்கியவான்போலெ ரோக்கிவந்தாய்நீ ஆரடா

விருத்தம்

நானாரடாகில்லடா நாடிவந்தகாரியத்தைவிலடாவெண்
டுறமாகஆக்கிரமித்து ஒங்கிசந்தீகேஸ்வரன்தானுரைக்கும் போது
திரமாகமதுரையாள் தேவிகட்டியக்காரந்தான் சினந்தோ இங்கே
வரம்வாங்கவரவில்லை வந்தவகைசேளுமென பதில் சொல்லுவானெ

தரு.—மோகனம், ரத்தி.

மகாருஜிகட்டியக்காரன்நான் வந்த
வகைகேட்டுபதில்சொல்லு நந்திகாண்
ஜெகமெல்லாந்துதிசெய்யும் மதுரை அரசாக்ஷி
சிறந்தெண்டும் நடத்தியதேவி மீனாக்ஷி மகாருஜி
தேரொறிபெருகளங்கூடி எழுதிக்கிலும்போய் மேலாடி
போரேரிஆக்கிரமம்நாடி வில்லுபுடித்தடித்தமரரைச்சாடி
சீரேரிவளர்மீனகொடி யேத்திதிசைபெத்த
போரேரிவிஜயபெருமை உறம்மிருந்தமகாருஜி
இந்தக்கைலாலகெடியிலெ தளம்
இறங்கிமன்வாசப்படியிலெ வந்திருந்துகொண்டுமுடியிலெபெண்ணை
வைத்துச்சுமக்கிசீர் கொடியிலெ
எந்தவிதமும்வெம்போர்க்குகெழுந்து வந்திடும்படி
அந்தமதாகச்சொல்லி அழைக்கவந்ததூதன்நான் மகாருஜி
சொன்னசொல்தவருமல் நானெ வந்து
சொன்னேன் கேட்டீர்தானெ
வர்ணப்புள்ளிசூழ்ந்தமானெகையில் வைத்தகைலைபகவானெ
என்னமொவென லேசாயிருக்காமலம்பும் வில்லும்
எடுத்துமகாருஜிமுன் இக்ஷணம் வரச்சொல்லும் மகாருஜி

விருத்தம்

பார்க்குள்ளிருராஜன்மபாண்டியன்பெண் ஆண்டவரைப்படையெடுத்து
போர்க்குவரச்சொன்னுளெண்டு புரியுமுன்நாக்கை அறுத்துப்போடவே
ணும், ஆர்க்கும்பொதுதூதரெண்டால் அதினுலெ மனம் பொருத்தோம்
அடெநரானீ, நீர்க்குமிழிபோலெமரையுகினைந்திடுவோம் ஒடிப்பிழை நிமி
ஷந்தானெ

### விருத்தம்

விதுவானசௌரியங்கள் விளம்பையில் கட்டியக்காரன் விலதும்போது
வெகுவீரியதைரியமுள்ள மீனாக்ஷி எழுதிக்கும் விஜயங்கொண்டு
தருமானபெலத்துடனே தெளமெடுத்துக்கைலைசதசரித்திரத்தன்னை
லெதுவாகஎண்ணப்படாதெண்டுசந்திவந்துபணிந்தியம்புவானே

### தரு.—சாவேரி ஆதி.

கேளும்என்னாண்டவரே ஒருவிண்ணப்பம்
கேளும் என்னாண்டவரே
நீளுலோகங்கள் போத்தும் நித்தியகர்த்தரே மூதார்
ஆளும்மீனவன்பெண்மின்னாளி இங்கேவந்தவகை கேளும்
இந்திரன்னக்கினி எமன்நிருதி வருணா அந்தவாயு குபேரன்
இந்தஎழுபேர்திக்கை சேர்தவள்வளைந்து கொண்டு
எதிர்த்தவர்கள் பிரதவெம்போர்கள்வென்று
விஜயங்கொண்டு சுந்தரமீனக்கொடி
அந்ததிக்கெங்கும்சூடி இந்ததிக்கதும்தேடி
வந்தாளின்னாளில் நாடி கேளும்
வீரமுரசடித்தது சூரவலுப்படைத்து
ஆரபாரமாய்கட்டியக்காரனை அனுப்பினாள்
சேருகஓடிவந்தான்ஆரடாவென்றேன் தாருளாரகவண்டான்
அதேதெண்டால் பாருளும் மங்கை
வெல்லும்போருடாஈஸ்வரரை சீருகவாரச்சொன்னார் வாரம்
இதுதானென்டான் கேளும்
விண்ணிலுள்ளவர்களும் மண்ணிலுள்ளவர்களும்
எண்ணித்துதிக்கும் நீதபுண்ணிய முதல்வரே
கண்ணில்தீ உள்ளவரே எத்தனை ஆளும் அண்ணலே
ஆண்டவரே உள்ளதுசொன்னேனை
கன்னிகைபெண்டுலேசாய் எண்ணியிருக்கவேண்டாம்
தண்ணீர்வருமுன்னணை பண்ணிஜெயிக்கவேணும் கேளும

### விருத்தம்

புடிஇடையாளக்கயற்கண்போர்க்குவந்திருக்கிறாள் பேய்நீபெண்டு
வடிவுசுந்தமானம்விட்டுசதுரைக்குசேதீபுந்தனவலுவைப்பென்ன,
கொடிதனிலெநீசென்று நோக்கிவருததனைகள்தன் நொருக்கிப்போய்ப,
பொடிபொடியாய்ச்செப்தந்தபூவவையும் விரட்டிவிட்டுபுவலுவாயெ,

### விருத்தம்

வையகமீனவன்பெத்த மாதுதனைவிரட்டிவிட்டுவாருவாபெண்டு
அப்பர்சொல்லநல்லதெண்டுஅந்த நந்திகேஸ்வரன் தான் அக்ஷணத்தில்
செப்பவெம்போர்க்கேகுதற்குசீக்கிரம் அனைவோருமவந்துசேருமென்
றார், துய்பலவபசூராமுள்ள சிவகணங்கள்வந்து தோணினரெ

தரு:—ஸௌராஷ்டிரம் ரத்தி.

கெணங்கள்வந்தாரெ சிவசெணங்களும் வந்துதோணினுரெ
கெணங்கள் வந்தாரே பணங்களெழிலணியும்
ஈகாபரணத்தரி சிவனடிபணியும் செணங்கள்
காவித்துயிலணிந்து நல்ல
கவசகுண்டலந்தானணிந்து மேவியநீரணிந்து
எழில்முக பெரியருத்திராக்ஷமணியணிந்து கெணங்கள்
சிங்கப்பல்லுகளுடனெ துய்ய
செந்தூரம்போல் விழிசிகப்புடனெ அங்கம்வெறப்புடனே
நல்லஅழகுள்ள குஞ்சுச்சடையுடனெ கெணங்கள்
உதிர்செங்கதிர்போலெ முதும்பாலூட்டியவளர்காளைக்கன்போலே
அதிமதயானைபோலெ திரட்டி
அடிநுனிதரித்திட்டபுனிபோலெ கெணங்கள்

விருத்தம்

வேதநூல் கலைகள்சாஸ்தரம் விளங்கிய கைலைவாழும்
நாதனுர்க்கன்பரான நந்திகேசுவரரெ போத்தி
சீதமாய்மனம்மகிழ்ந்து சீக்கிரம்எங்கள்தன்னை
போதவே அழைத்தகாரியம் புனிதமாய் புகலுவீரே

அந்தமிகுசிவகெணங்கா எம்மதுரைமீனவன்பெண்ணுன நீலி
இந்தவெள்ளிமலையாள இன்னுளில்தவத்துடன் வந்திரங்கிக்கொண்டு
கிந்தமுறைத்தொருதூதன் நிகரில்லையெண்டனுப்பிவைத்தாள் கிமிஷம்
நாம்போய், வந்தமனுவடங்கலையும்மடியஅடித்தோட்டிவிட்டுவருவோமெ

நராரோதளமெடுத்து நாதனுடைகலங்கிரி நாடிவந்து
உறமாகஇருக்கின்ற உளவறிந்து மனதுதனிலொருப்பாருண்டொ
விரலானதூலானல் விளம்புமொரலெப்படியாம் வீரநந்தீஸ்வரரெ
நாமடங்கலும்போய்துஷ்டமனுவடங்கலையும் துரத்துவோமெ

வல்லமையாய் சிவகெணங்கள் வந்திந்தவிதமுரைக்கமகிழ்ந்துநந்தி
எல்லவரும் வாருமெண்டெழுந்திருந்துவெம்போர்க்கேகும் போது
நல்லவலுஅங்கயற்கண் நாயகிநேரிட்டவுடன் நடத்துதற்கு
சொல்லழகுசௌரியமிகுசூரதத்துவமவரவர்கள் சொல்லுவாரெ

தரு.-- புன்னுகவராளி, திருபுடை

எழுந்துமட்டும் வாருங்களண்ணெ என்பின்னெ
எழுந்துமட்டும் வாருங்களண்ணெ உளுந்து போலெமானிடரை
ஒருநெரியாய்நெரித்து அழுந்தமண்ணில்புதைத்து
அப்புரம் நாம்வருகுவோம் எழுந்துமட்டும்வாருங்களண்ணெ
எட்டிமட்டும்வாருங்களண்ணெ என்பின்னெ
எட்டிமட்டும்வாருங்களண்ணெ வெட்டிக்கட்டிமானிடரை

| | |
|---|---|
| வீரிட்டலரப்பிடித்து | கட்டிவெட்டித் துண்டப்பண்ணி |
| கசக்கின இப்போடவேடம் | எட்டிமட்டுர் வாருங்களண்ணே |
| எருக்கிவிடும் கச்சையை தண்ணே | இழுத்தழித்தி |
| எருக்கிவிடும் கச்சையை அண்ணே | சுருக்கில்குருக்கையோடி |
| துஷ்டமனுவை வளைத்து | கொருக்குறேன் தேங்காய் மூடிபோல் |
| கொடிக்குள்ளெ தடிக்கம்பால் | இருக்கிவிடும்கச்சையை அண்ணே |
| முருக்கிவிடும்மீசையை அண்ணே | செரிக்கும்கொட்டைசெத்தப்போலே |
| சேரிடும் | மானிடர் தலைதெரிக்க |
| ஓங்கியடிக்கிறேன் | திமிர்வாங்க அமீனுக |
| முருக்கிவிடும் மீசையை | அண்ணே |
| ஆயுதங்கள் வேணுமே | அண்ணே |
| கைலபேர்க்கும் ஆயுதங்கள் | வேணுமே அண்ணே |
| பாயும் மான்போல் லாகைகொண்டு | பார்வளர்ந்த மானிடரை |
| மாய அடித்துடல்களை | வதைத்திடகருச்சுள்ள |
| ஆயுதங்கள் வேணுமே | அண்ணே |
| என்னத்துக்கு ஆயுதமண்ணே | மானிடப்போர்க்கு |
| என்னத்துக்கு | ஆயுதமண்ணே |
| கன்னத்திலறைஞ்சிறலைகலக்க | கைகாலிருக்க |
| மென்னியைப் பிடித்தறந்து | விடச்சிக்கப்பல்லிருக்க |
| என்னத்துக்கு | ஆயுதமண்ணே |
| குஞ்சுச்சடை போருமண்ணே | மானிடப்போர்க்கு |
| குஞ்சுச்சடை | போருமண்ணே |
| கொஞ்சமானிடரைக்கோழி | குஞ்சுபோல் புடித்தமுக்க |
| நெஞ்சதிர்சத்திருக்க | நிமிஷத்தில் கொல்லுதற்கு |
| குஞ்சச்சடை | போருமண்ணே |
| பெண்பாவம் வருமடா அண்ணே | பதறிடாதே |
| பெண்பாவம் வருமடா | அண்ணே |
| பெண்பாடில்லாமல் | வீட்டுப்பூனைபோல் |
| விரட்டிடாமல் | வம்பாய் படபடத்து |
| வலுத்தோங்கி | கைமிஞ்சினல் |
| பெண்பாவம் வருமடா | அண்ணே |
| எதிர்த்தவர்க்குப்பாவ | மேதண்ணே |
| வலுவிலே வந்தெதிர்த் | தவர்க்குப்பாவமேதண்ணே |
| எதிர்த்துவந்த பசுவையும் | எடுத்துக்கிழிக்கச்சொல்லி |
| பொதுத்தரமிருக்கையில் | புண்ணியம் பார்க்குறீர் போம் போம் |
| எதிர்த்தவர்க்குப் | பாவமேதண்ணே |
| மின்வலுமை பேசாதே | அண்ணே |
| தன்வலுமை எதிர்மாத்தான் | தன்வலுவும் தன்னைச்சேர்ந்த |
| பின்வலுவும் பார்த்தானுவம் | பேசவேணும் |
| அதற்குமுன் பின்வலுமைபேசாதே | அண்ணே |
| பேசாமல் வாருங்காணும் | கெணங்களா |
| பேசாமல் வாருங்காணும் | பேசாமல் வாரும் |
| பாண்டியன் பெண்ணும் | மைத்த மானிடரும் |
| கூசாமல் | ஓடிப்போவார் |
| கூக்குரல் போடாமல் சத்தே | பேசாமல் வாருங்கணும் |
| நாலு திக்கும் வாரும் | கெணங்காள் வால்முறுக்கி |

| | |
|---|---|
| பாய்ச்செழுந்துவரும் | புலிதன்னைவலை |
| கோலிவளைத்தால்போல் | மனுக்கூட்டங்களை நாம்வளைக்க |
| நாலுதிக்கும்வாரும் | சேனைக்காரர் |

## விருத்தம்.

மடக்கட்டும் ஆண்டிகள்போல் மனமிசைந்தபடி புலம்பி வலுமை காட்டி நடமிருந்த சிவசேனமும் நீரகந்திகேசவரனும் சினமாய் வந்து படபடத்த அக்கயற்கண்ணைப்பார்த்ததட்டி பெண்ணே நீயுன்பார்க்கேகாமல், உடலைப்புடலம்பழம்போல் ஒருசொடியில் ஸரப்பேனெண்டுமை செய்வானே.

## தரு - இந்துஸ்தானி காபி, ஆதி.

| | |
|---|---|
| ஈசர்வாழும் கைலாச | வாசலதில் |
| பெண்ணே | ஓ ஹோ பெண்ணே |
| நீதான் இந்தரூணவுமுடன் | வந்த காரியமென் |
| என்னகாரணம் சொல் பெண்ணே | ஓ ஹோ பெண்ணே |
| ராஜர்வாழ் மதுரை | ராஜியம் போலே ஆள |
| நந்தி ஓ ஹோ | நந்தி |
| இந்தராஜசகிரிபதிலே | உசிதமினமிட |
| ரூணவுடனே வந்தோம் | நந்தி ஓ ஹோ நந்தி |
| மணமேத்தவந்த | ரூணபொஸ்துவெல்லாம |
| பெண்ணே | ஓ ஹோ பெண்ணே |
| ஒருமின்னிட்டிலடிர்தலரி | வீசிட்டோலமிட |
| விசட்டிவிடுகிறேன்பார் பெண்ணே | ஓ ஹோ பெண்ணே |
| மானமுள்ள மீசை | வைத்திருந்தையானால் |
| நந்தி ஓ ஹோ | நந்திவீணில் |
| மாரிப்புலம்பிடாமல் | போருக்காரம்பஞ்செய் |
| மாடதானால்ஓடு | நந்தி ஓ ஹோ நந்தி |
| மாடுகிடெண்டொரு | மதிப்பில்லாமல்பேசும் பெண்ணே |
| ஓ ஹோ பெண்ணே தன்னும் | மாடுசுமக்கும்பழி |
| வந்தலபித்துவிடும் | மனதில்பயம்வைத்து |
| சொல்பொண்ணே | ஓ ஹோபெண்ணே |
| ஆடெடுத்தவன்போல் | ஒடப்பார்த்துக்கொண்டு |
| நந்தி | ஓ ஹோ நந்தி |
| ரொம்ப அசட்டிகாட்டிப்பேசி | உருட்டிவீசுறயுன் |
| ஞண்டிச்சென்னகாலம் | நந்தி ஓ ஹோ நந்தி |
| என்னகாலம் எங்கள் | ஆண்டவர்க்குவரா |
| பெண்ணே | ஓ ஹோபெண்ணே |
| இனி எந்தஹோதுகரம் | செய்யப்போராயதை |
| இயம்புமின்னம் சத்தே | பெண்ணே ஓ ஹோ பெண்ணே |
| முன்னெ ஆலமுண்டு | ஓடெடுத்ததுபோல் |
| நந்தி | ஓ ஹோ நந்தி |
| இப்பொழுதும் நடக்கும்படி | முடித்துப்போடுகிறோம் |
| முருக்கித்துள்ளாதே நீ | நந்தி ஓ ஹோ நந்தி |

அந்தஆண்டவரந்த ஆலமுண்டதினுல்
பெண்ணெ ஒ ஹோ பெண்ணே
இந்தஅகிலபுவனமெல்லாம் சுகிருதமாகஇரு
அடிகள்தொழுகுதுபார் பெண்ணெ ஒ ஹொ பெண்ணெ
எந்தலோகம் தொழுதேத்திபோத்தினுலும்
நந்தி ஒ ஹொ நந்தி
ஆண்டிஎறக்கும் கிழவனல்லால் ஜெறக்கும்துரையல்லபோ
என்னஹெம்பபேசுருய் நந்தி ஒ ஹொ நந்தி
கொஞ்சகிளிவாய்கர்த்தர் பஞ்சைகிழவனென்ருய்
பெண்ணெ ஒ ஹொபெண்ணே
எங்கும்கொள்ளாப்பொண்முழுதும் சொன்னும்கொழுணர் அவர்
குளிரஒத்துப்பார் பெண்ணெ ஒ ஹொபெண்ணே
நஞ்சைதிண்ணுமாண்டி நமக்குக்கொழுணனெண்டாய்
நந்தி ஒ ஹொநந்தி
சொன்னசாக்கையருத்து கருங்காக்கைக்கிரையதாக
தூக்கியெரியுரேன்பார் நந்தி ஒ ஹொநந்தி
நாக்கையருக்கும்உன்கை பார்க்கவேணுமசத்தே
பெண்ணே ஒ ஹொபெண்ணே
வில்லில்காணியேத்திச்செல்லு வாளிபூட்டிவெல்லு
திருணிகாட்டிகில்லு பெண்ணே ஒ ஹொபெண்ணே
பார்க்குக்கண்ணிருந்து மூக்குமுனையிருந்தால்
நந்தி ஒ ஹொநந்தி
நின்றுபாருபாரொருகை போரிலாரம்பம்செய்
நேராநேராயடெ நந்தீ ஒ ஹொநந்தி

விருத்தம்

இந்தவிதம்வினைவம்பாய் இருவருந்தானெதிர்த்து வாதியப்பும்போது
அந்தநந்திகேஸ்வரனும் ஆக்கிரமித்தார் அம்பிகையும் ஆக்கிரமித்தாள்
வந்தகெணங்களும்முனைநதார் மனிதர்களுமெதிர்முனைந்தார்வலுமையாக
யித்தமுரைத்தவரவர்கள் நேரிட்டார் சினமிகுவெம்போரிட்டாரெ

தரு.—தோடி, ஆதி

கெணங்களும் நந்தியுந்தான் வந்தெதிர்த்து
கரந்திட்டி உறமாககைகலந்தார் மனமகிழ்மீனுக்ஷி
தளத்துடன் வல்லமையாய் வில்லெடுத்துவாளிபூட்டினுள்
எதிர்வரும்சரமாரியை நந்தீசுவரன்
ஏகநொடிதனிலெதூளாகவெசெய்தாள் மதிகுல மீனுக்ஷி
நல்லசண்டை வாச்சுதொண்டு
மூச்சுறமாய்பாணம் தொடுத்தாள்
தொடுத்தாளுறபாணமெண்டு நந்தீஸ்சுவரன்
துள்ளிவரும்பாணத்தை தள்ளிமுரித்தான்
எடுத்துஅக்கினியாஸ்தரம் அங்கயற்கண்
ஏவிவிட்டாள் நந்திகெணத்தாவிவாங்கவெ

அக்கினியாஸ்தரந்தன்னை நந்தி
வருணாஸ்தரத்தால் சித்திரமாய் அவித்துவிட்டான்
மைக்கினி அங்கயற்கண்ணாள்
அதிவேகமாக நாகபாசமதை ஏகியேவிட்டாள்
விட்ட நாகபாசமதை நந்திசூரான்
வீரகெருடாஸ்திரம் விட்டு வாரிப்போய்விட்டான்
திட்டமிகு மீனாக்ஷி
பல்கடித்து சீரி நாராயணாஸ்திரம் மீறியடித்தாள்
அடித்த நாராயணபாணம் நீறாய் நந்தி
ஆக்ரமித்து ருத்திரபாணம் தாக்கியடித்தான்
பிடித்தவில்லோடங்கயற்கண் நந்திசெணம்பொடிய
இடிபாணம் துடியாய் விட்டாள்
இடிபாணம் வந்து சாடவே நந்தி பனம் இளைத்து
கைசளைத்தசெவளைத்துக்கொண்டு புடிஇடை அங்கயற்கண்
பின்னுங்களை சொறிந்தனள்
நந்திவில்லை அறிந்தனளே வில்லத்துப் போச்சுதென்று
நந்திப்படை வெட்டுக்கேத்த துட்டுத்தடி எட்டி எடுத்தார்
நல்லசத்திக்கேடயத்தை அங்கயற்கண்
மன்னயமாய்கைப்பிடித்து முன்னமே நின்டாள்
என்னநந்தி தன்னாறுயடே என்று தேவி
எட்டிப்பாய்ந்து துட்டுத்தடி வெட்டி யெறிந்தாள்
எரிந்த உடன் நந்திசூரன் மானிடரை எதிர்த்து
லகருத்து குத்தி சதைத்தெரிந்தான்
மூரிந்துமனுப்படையோட தேவிகண்டு
முன்மறித்துநந்தி கைகான் பின்தரித்திட்டாள்
தரித்த உடன் வேதனையால் நந்திசுரன் சளைத்து
மனமிளைத்து களைத்துச் சாய்ந்தான்
வெரித்தது செணங்களெல்லாம் வழிகூட்டி விரட்டி விரட்டி
தேவி வெட்டி யெறிந்தாள்
கொத்தியேறி குறிப்பரிந்தார் செணமெல்லாம்
கூட்டம் கூட்டமாய் தன்பாட்டில் ஒட்டம் பிடித்தார்
வெத்திகண்ட மீனாக்ஷி
தளத்துடன் மிரண்டோடும்
செணங்களை வளைத்துகொண்டு
வளைந்தந்த செணங்கள்தன்னை துட்டுத்தடிவாங்கியெ
மனங்கலங்க ஒங்கியடித்தாள்
தளர்ந்தொரு பிரம்பினைத்தர்ள் உயிர்போக
சச்சடியும் நச்சடியும் தானேயடித்தாள்
சடைகளைத் தானறுத்தாள்
சிங்கப்பல்லுதனை உடைத்தாள் எருகமென்னைப்பிடித்தாள்
இடைகளைத் தாறுடித்தாள் கொஞ்சம்போலே
ஹ்ருதயத்தில் செணங்கள் மேலிறக்கம் வைத்தாள்
நந்தியைத் தேடிப்பிடித்தாள் தடிகொண்டு காலு கையும்
காலும் மேலும் யைய அடித்தாள்
தொந்தியைக்குத்திச்சரித்தாள் கொம்பொடித்து
தொண்டைதனையும் செரித்தாள் மண்டை கிழித்தாள்

இந்தவிதம் அடிக்கையிலே — சிவன்படை எல்லவரும்
வல்லமை விட்டுள்ளங்கலங்கி — உந்தனுக்கடிமையென்பார்
தாயே நான் ஒன்றுமரியாத — பேயன் கண்டுகொள்ளென்பார்
வண்டரந்திகேசுவரனால் — எங்களுக்கு
வந்ததிடி சாபமுன் தன் — ஸர்ததயென்பார்
தொண்டனென்று — காலில் விழுவார்
ஆடெடுத்த திருடன் போலே — முழிப்பார் குருடரென்பார்
இன்றிந்த கைலேவிட்டு — பார்க்குவந்து
இஷ்ட ஊழியஞ்செய்யுமுன் — சிஷ்டனென்பார்
தொண்டுசெய்வே — னேழையென்பார்
நாங்கள் என்ன — ஞானிபார் சோத்துக்கூட்டக்காரனென்பார்
சிவன் படை நானல்லவென்பார் — வெம்போர் நீங்கள்
செய்யாத்தைப் பார்க்கவந்த — பையனானென்பார்
தவஞ்செய்யும் — யோகியென்பார்
கெதியற்ற தாயில்லா — புள்ளேநானென்பார்
நோயேனென்பார் — பதிதீர்ந்துநதானுக்கென்பார்
இரக்துங்கும் பரதேசி — என்னை ரக்ஷி
பரமேயென்பார் — வழிப்பாட்டைக்காரனென்பார்
தலைவிதிவசத்தாலே குறுக்கிட்டேன் — நிஜம்கொள்ளென்பார்
நத்துப்பித்தென முழிப்பார் — குரங்குபோலே
ஞ் ஞ் யென்று பல்லேக்காட்டி — அன்னையெயென்பார்
பித்துக்கொண்டாப்போலே பேசுவார் — எந்தன்வேளே
பிசகென்பார் புத்திகெட்ட — மசகனென்பார்
மண்டகத்துவெளவாலேப்போலே — கைலேயில்
வந்தடைந்திருந்தோங்கள் — மந்தை மாடென்பார்
கெண்டமிது — பெரிதென்பார்
எங்களை நீ சேவிசெய்ய — கூடாதனுகூலியென்பார்
அடிக்குமுன்கையை அழுத்த — இங்கே ஆரு அம்மா தாயே
சும்மா இருண்டுணமையாய்ச் — சொல்வார்
தடிகண்ட பாம்பைப்போலே — சென்மெல்லாந் தத்தளித்து
கண்கலங்கி — செத்த தவித்து
மன்னர் துதி மகருஜி — மீனாக்ஷி
மானம் வைத்துக் — காப்பாத்தென்று
ஞாயங்களாக இன்னம் — தயவில்லேயோ என்று
பதம்பணிந்து மீனாக்ஷி தேவியை — போத்தி செய்வாரே

விருத்தம்

வெற்றிகொள்ள போர்க்கு வந்த வீரசத்திசேனைகளுக்கு மீனவன்பெண் சத்திவெட்டும் தடியடியும் கனமாசப்பட்டவுடன் கலக்கம் கொண்டு சக்தியென்றும் உமையென்றும் தாயென்றும் சேயென்றும் சரணமென்றும், சுத்திவந்து பதம்பணிந்து தொண்டனம்மா என போற்றி துதிசெய்வார்களே.

தரு.—தன்யாசி.- ஆதி

சரணம் அம்மா தாயே — சொரணையத்த நந்தி
துர்க்காய் — வந்தெதிர்த்திட்டேன்

கருணைபுரிந்து நீ காப்பாற்று
கும்பிட்டேன் சரணம் இந்தவெம்போருக்கு
வந்தெதிர்த்தேன் என் கிரகசாரம்
எந்தனைக் காக்க உன்னிருதாளிலும் பாரம் சரணம்
சாம்பலைப் பூசியே சாம்பலைத் தின்னும் யான்
வீம்பகம் கொண்டெந்தன் வெம்போர்க்கு நண்ணினேன் சரணம்
ஏழைதன் தலையிலே இடிவிழுந்தது போலே
வேளை பிசக வந்து வெடிந்ததெந்தன்மேலே சரணம்
ஊரார் பிள்ளையைக்கொண்டு ஆருழம் பார்ப்பது போல்
போராடசிவன் என்னைப்போவென்றார்
எத்தர்போல் சரணம்
துரவாழும்தெரியாமல் தணிந்துவந்துகாவிட்டேன்
உறமாயுன்னடியிலெ உடல்நொருக்கப்பட்டேன் சரணம்
படித்தவர் கேட்டவர் பார்த்து நகைக்கவாச்சே
அடித்த அடியில் எந்தன் அங்கம்வீங்கிப்போச்சே சரணம்
பிச்சையெடுத்துந்தன்பேர் சொல்லி பிழைக்கிறேன்
லெச்சை கெடாமல் என்னை
ரக்ஷித்தாண்டிடும் தாயே சரணம்
ஸ்வற்கத்திலேவைத்து வெக்கமதுகெட்டிட்டேன்
கக்கிஷம்செய்யாமல் காப்பாற்று
கும்பிட்டேன் சரணம்
பஞ்சமூறுக்கிலேவைத்து சடையறுக்ககொடுத்தேன்
விடைகொடுத்துஎந்தனை விரட்டிவிடும் கும்பிட்டேன் சரணம்
மல்லுயுத்தத்தல்வந்து பல்லுஉடைக்ககொடுத்தேன்
நல்லதயவுசெய்து காளும
கார்கும்பிட்டேன் சரணம்
கெட்டநாய்களுக்குதை பட்டதே பிரியமென்டு
விட்டோட்டி எங்களை விடவேணும் கிருபைகொண்டு சரணம்

## சந்து விருத்தம்

கனசிலையடிபட்டு உளமிகக்கலங்கி கருத்தினில் அறிவுண்டாய்
இனதரம்பரிகது பணிந்திடும் நந்தி எழிலணி சிவகணங்கா
மனவுரம்மிகுந்துலாகைகொண்டமர்க்குவந்திடும் மகிழ்போலே
அனைவரும்சென்டு உங்கள் ஆண்டவரைபோருக்கு அனுப்பிவைத்திடுவீரே

தளபதி அங்கயற்கண் அம்பாள் தயவுசெய்து எருமெண்டாள் தைரியமாகி
எனமதுவாய் நந்திசேனையெல்லவரும் கைலைங்கிரிசகி எகும்போது, மன
சலங்கிப்போர்தனிலே வளைத்தக்கோணடடித்த அடிவருத்ததாலே, புன
ல்சடையோர்க்கபயமெண்டுபுறம் திரும்பிபார்த்துகொண்டேபுலம்புவாரே.

## தரு.—தோடி, ரூபகம்

அபயம் அபயமையா ஆதிபரமேஸ்வரா
அபயம் அபயமையா அடியவர் காரும்
அஞ்சல்தாகும் அபயம் அபயமையா
ஐயா ஆதிபரமேஸ்வரா

தவயோகஅமரர்கள் சரணமென்னவேபோற்றும்
சங்கரா கெங்காதரா
தயவுசெய்து காப்பாற்றும் அபயம்
கிளியைவளர்த்து பூனைக்கெதிரேவிட்டால்போல்
நேரேபழிகாரி வெஞ்சமர்க்குபார்த்தெங்களை
அனுப்பினீரே அபயம்
வெண்ணைபாலைகூட்டத்தை வேகக்கினிபந்தலில்
என்னைதள்ளிதான்விட்டு இருந்தீரோ ஜெபந்தன்னில் அபயம்
விஷத்தைபக்ஷணமெண்டு வேண்டிதாய்கொடுத்தாப்போல்
அடத்தைச்செய்நீசியெண்டு அறிந்திருந்தும் அனுப்பிணீரொஅபயம்

## விருத்தம்

வெட்டியெல்லாம்முளைகள்விழ வீரகந்திகெணங்கள் கண்ணீர்விட்டுச்செந்தேன், கொட்டியழுவார்போலே கூ-கூ-அபயமென்று கூச்சல்போட்டு கட்டிவெள்ளிமலையானகைலைவந்துஈஸ்பரரைகண்டுகோவில், முட்டிவிழுந்த லறிமெத்தமுறைப்பட்டு திறப்பட்டு மொழிகுவாரே.

## தரு.-மோகனம் ஆதி

பட்டபாடுகளை சேளும் ஸாமி அடியோர்பட்டபாடுகளை கேளும்
சிஷ்டர் அனுகூலஈசர் துஷ்டநிக்கிறகமகேசர்
திட்டமதாய் மதுருபுரிமின்னுள்
இட்டவெம்போர் தனக்கேகிய இன்னுள்பட்டபாடுகளைகேளும்.
அத்தனே தேவரீர் உத்திர
அருள்வாங்கி அடியவரெல்லாம்கூடி
மனமொத்தசௌரியத்தோடே ஓங்காரமாய்
அங்காரித்தொருமுகமாகோடி சத்தும் சித்தம்பேதியாமல்
நெரும்பசினந்துகிளம்பி நடந்தேதிரளிதன்னை தேடி
பொல்லாமூத்தன தடாதகையைகண்டு
நிண்டாண்மையாய் முன்னிண்டு
வாதாடிமெத்தவும் வீரியமதாக
மேவிஅனைவோருமாக சத்தப்பொட்டேழிலாக
தாண்டிப்பாய்ந்து முன்பாக
யுத்தத்திக்காரமபம் கொண்டேதிர்நிண்டு
உக்கிரமம்செய்திடுமுழக்காங்கண்டு இத்தனைமதமிந்த
படைக்குண்டோவென்று இருந்தவள்
நணசிங்கருபத்தைக்கொண்டு எம்பிமதத்தும்பிபோலே
கெம்பிவந்துவம்பிபடுத்தினத்தில் பட்டபாடுகளை கேளும்
வெட்டிச்சிலைவடுத்தவமன்போலேமூதூர்காளி கிளம் பிறதத்தை ஒட்டி
கிட்டஎட்டி நடத்திவந்தெங்கள் மேலே
மழைமாரிக்கிணையாககணைமீட்டி சிங்கக்குட்டிபோலே
கெற்ஜித்துரெத்தனைவிட்டு குதித்துகோரரூபமாய்
காம்திட்டிபாய்ந்து வெட்டிசகுத்திச்சரித்து
ரெத்தவெள்ளுருஒட விட்டுசளைத்து வாட்டி

கட்டிகட்டியடித்து கணுகணுவாய்ப்பொடித்து
கொட்டிக்கட்டியிடித்து கொண்ணும்பின்னும்யிடித்து
பொட்டிபாம்பதுபோலே சுருக்கிபொடிபொடியாய்
சடைமுடிகளை நறுக்கி நட்டெத்தடியதகொண்டு நொறுக்கி
துணிகளைகழுத்தினில் போட்டுமுறுக்கி
சுத்திமுதருமத்திதன்னில் குத்திகாலாலெத்தி
படுத்தினத்தில் பட்டபாடுகள் இந்தவிதம்நீலி என்னளவும்
உள்ளம்சத்துமிரக்கமில்லாமல்சாத்த சிவனே
அநதடிபட்டு எங்களுக்கும் நொறுங்கி ரத்தமருவிபோல்
பெருகிவந்த மணம்கந்த கண்ணீர்சிதற கதறி
உடல்பதறி அங்கயற்கண்ணே காப்பாற்றவேணும்
ஸந்ததம் அடிமையென்று நாங்கள் அனைவோரும் கெஞ்சி
சரணம்பணிந்துபோற்ற சிந்தை தயவுகொண்டு
சீஓடிபோங்கவென்று தந்தாளுத்திரவென்று
சௌபாக்யமதேஎண்டு பந்துபோலே
எழுந்துபுரண்டு பாதையில் ரொம்பவும் வேதையாய்த்துவண்டு
நொந்துபுலர்ந்து உலர்ந்து சுருண்டு
நோகிஉடமக்கபயம்மெண்டு கொடியில்லைகளைக்கொடியில்
திருவடியில் எங்கள் குடியில் வந்தோம் பட்டபாடுகளை

## விருத்தம்

சீரணியும் ஜடையாளர் அன்பருள்ளம்நிறைந்திருக்கும் பரஞ்சோதி நீலகண்டர், தாரணியிலிருந்து தளமெடுத்துவந்த தடாதகைசெய்சமர்தனிலே தமியோர்பட்ட, சோரணிக்குயிரிந்த காயந்தனில் கட்டிவாதியாயமில்லே கோசேயானால், சீரணியுமமதபதம் பூஜைசெய்த தெப்பதினுல் பின்னு வந்துசேர்ந்துட்டோமே

அந்தமிகு ஸ்ரீயகுரவீரநந்திகேஸ்வரா ஆண்டைபயா சிவகணங்கா அதிகாரசோரமுடன் அனைவரும்வெஞ்சமர்க்கு ஆக்கிரமித்து எழுந்து தான், பேசுய் இந்தவித மனிதரிலும் பெண்ஜென்மம் அதிலுமோர் இளங் கண்ணி அங்கயற்கண், எதிர்த்தபோர்தன்னில்நின்றுஜெயித்து வரமாட் டாமல்இளைத்தஞ்சிஓடியிங்கே, வந்ததவுமல்லாமல் அடிபட்டகுதூகலவரி யதை விஸ்தரித்த, வசையாய் புலம்புவதில் உங்கள் சேவகதிருணி வண் மைகள் தெரியலாஞே, எந்தமுனிவர்கள் அமரர்கள் கேட்டாலும் நகை செய்வார் இப்பேச்சுவெளிவிடாமல்,இருப்பிடந்துக்கேகிசடலம்நொந்தது தேறுமியற்கைபூண்டிருக்கட்டீரே.

## விருத்தம்

சடக்கெத்திகொள்ளுமெண்டு தபவாய்ச்சொல்லும் சங்கரரேஆண்டவரே
தமியோர்தன்னை, அடஞ்செய்து விரட்டிவிட்ட அடியின் பின்னே
ஆங்காரிரதமேறிஆக்கிரமித்த, திடப்புரிசதயல்லங்கிரிவாசல்தாண்டி
சிவன் எங்கேஎங்கேயென்று தேடிவாரான், விடஞ்சிறந்தசெஞ்சமெங்கள்
காவேறிகதிவெளிவாதவளசம்அடக்கிவிடுருவீரே.

## விருத்தம்

வெளிவந்தவன் அகம்அடக்கவேணுமென்ற வேண்டுமோர்திகெணங்கள்
மன விஸனந்தீர, தெளிவுகந்தமன்மதனில்கோடியென திவ்யவடிவதசிற
ந்து ஜெகநீசன்தான் ஒளிவுபர்ந்ததிருநேத்திரமிலங்க கெல்லையோங்கும்
மீனமதிருடி ஒப்பில்லாததுளிர்பொருந்தும், களினமலர்வதனமானசுந்தர
மீனாக்ஷி முன்தோனினாரே.

## தரு:—அடாண. ஆதி.

சங்கரனார்வருகின்றாரே ஸ்ரீங்காரமதாய்
சங்கரனார் வருகின்றாரே
அங்கஜனையிரங்கோடி திகவடிவுகூடி
பங்கஜவின்பதலங்கிருதமாக அங்கயற்கண்ணிருகண்கள் முன்பாக
சங்கரனார் வருகின்றாரே
வேதகீதஸங்கீத விநோதமாகவேயோத
பூதங்கள்கர்த்தனம் பூரித்துபுரிய
சீதமாமலர்மழை தேவர்கள்சொரிய
சங்கரனார்சிஷ்டகந்தி கெணமெல்லாம் பட்டபாட்டைசொல்ல
கல்லசட்டம் பின்வாருங்கள்
ஸகலருமெண்டு திட்டமதாய்விண்டு
சிறுநகைகொண்டு சங்கரனார்
அந்தவெணகுடைபிடிக்க விர்தையாய்கட்டியம்படிக்க
சுந்தரமானவெண்சாமரம் வீச சந்திரசேகரான ஸர்வேசர்சங்கரனார்

## விருத்தம்

எதிர்வந்தஈசரைகண்டுஎந்திழைதன்தனமெல்லாம் ஹ்ருதயத்தில்
துதிசெய்துவணங்கையிலெசுந்தரமீனாக்ஷிதனைஸ்வாமிபார்த்து
மதிகுலத்திளமயிலேமதுரைநகரானரசெமாதெ நீயென்
பதிதனக்குவந்தவகைபாங்குடனேசொல்லுமெண்டுபகருவாரெ

## தரு.— தோடி ஆதி

வந்தவகையென்னசொல்லடி அடிமானேதேனே
நீதானெ இங்கனெ வந்தவகையென்னசொல்லடி
அந்தமதுரைவிட்டு சிந்தையிலகம்மேலிட்டு
விந்தைகள்மேவிய வீரியங்கூடி
சொந்தமதாகவேஎந்தனைதேடி வந்தவகை
தந்திதளங்களேடுத்து மனதுதன்னில்
தைரியசௌரியக்கொடுத்து வந்துலைகலைஅடுத்து
வெம்போர்க்குநம்மை வாச்சொல்லிதூதைவிடுத்து
முந்திநாமனுப்பின நந்திகெணங்கள்தன்னை
சந்துகட்டிப்பிடித்து கொந்திடவே யடித்து
மிண்டுகள்செய்யுமுன் சண்டையின்வல்லமை

கண்டிடுவோம் நாம் ஒண்டிலே
அடி நீ வந்தவகை நஞ்சித இங்கிதமானே
சந்திரகுலராஜகன்னிகையே தேனே
வஞ்சியே இருவிழிநீனே
சிறச்சிறந்தமாதரசே நீதானே
மிஞ்சியவல்லாளத்துடன் கொஞ்சியே
மனமகிழ்ந்து அஞ்சியே
ஆண்மைசெய்யாமல் நெஞ்சினில்பயம்வையாமல்
வீரியமேவியகாரியமாய் கடும்சாரியதாகவே
தேரினிலேறி வந்தவகை
சத்திகேடயங்கள்சூட்டி ஹஸ்திரம்தன்னை
கைக்கேத்தவில்வில்பூட்டி சத்திதளகலை கூட்டி
ரதத்தில் ஏறி ச்வயசூரவீரியப்பாராட்டி
எத்திசைகளுஞ்சென்று வெற்றிசெய்தோம்
நாமென்றுபுத்தியில் எண்ணிக்கொண்டு
நத்திநம்மையுங்கண்டு எண்டிவந்தெதிர்நிண்டு
காண்டபமெடுக்குறாய் ஆண்டிநாலல்லவோ
பாண்டியன்மகளே வந்தவகைஎன்னசொல்லடி

விருத்தம்

நம்மையும் வந்தடுத்ததல்லால் அந்தநப்பி நம்முடைய மனிதரைச் சொன்னார் பாரெங்கும், வண்மையிதுக்கொப்பாக ஈசர்சொன்ன வார்த்தையெல்லாம் நேத்தியென்று மனதில்கொண்டு, செம்மையிது வெண்டுசொல்லி தலை அசைத்து சிரித்து மதுரைபுரியாள் மீனாக்ஷி, அம்மை பதிலுயிரத்துக்கொரு சொல்லாக அறிவிப்பாள் வந்தவகை தெரிவிப்பாளே.

தரு.—ஏசல் மெட்டு.

வந்தகாரியம் கேளும் ஈசனே மெய்
வரிசையதாய் என்னுளு மிந்த கைலையிலே
சொந்தகொடியைப் போட்டு ஏகமாயாளவந்தேன்
ஏகவைபோகமா யாளவந்தேன்

இந்த கைலையிலே கொடிபோட எளிதெண்டு நினையாதே
வந்தவழியைத்தேடி சொந்த தளத்தைக்கூடி
வாய்பேசாதே ஓடடி பெண்ணே
எதிராக பேசாதே ஓடடி

ஓடபயந்தவளா ஈசனேநான் ஒதுங்கவும் தாழ்ந்தவளா
கூடசேனையெடுத்து ஓட ஓடவிரட்டி
சாடதிறுணியுள்ளாள் ஜெயித்துகொடி
போடத்திறுணி யுள்ளாள்

சாடத்திறுணியுண்டாய் கைலையைத் தானேபிடித்துக்கொண்டால்
தேடக்கிடையாதெங்கும் மாடமயிலேநம்மை
சேர்த்துதான் கட்டிக்கோடி பெண்ணே
கைகோர்த்துதான் கட்டிக்கோடி

சேர்த்துதான் கட்டிக்கோடி எண்டீசனே சின்னசொல் என்னோடி
பார்த்து சொல்லுதீர் யார்க்கும் ஏத்துக்கொள்ளாத வார்த்தை
பாங்கல்ல சொல்லிவைத்தேன் சித்தம் சத்தும
தாங்கலே சொல்லி வைத்தேன்

ஏத்துக்கொள்ளாதசொல்லோ பெண்ணேகண்ணே இயம்பினு
மெண்டல்லோ
பார்த்துமெனக்கோபம் பாருட்டி பேசாய்
பழக்கமில்லாதவள்போல் ஒருநாளும
பழக்கமில்லாதவன் போல்

பழக்கமெண்டுசொல்லி என்... பயிரிட்டு வாழ்ந்தோமோதான்
பிழைக்கத்தெரியாவாட்பு பேச்சுசிங்காரமாக
பேசுதீர் ஈஸ்வரனே சடபமெய்க்க
வீசுதீர் ஈஸ்வரனே

தழைக்கவும்பயிரிட்டு சராசரம் பிழைக்கவும் பயிரிட்டு
முழுக்க எதுக்கும் கூடி முறைமையதாக நடத்தி
முறுக்கி பேசாய் பெண்ணே ஆமடி ரொம்ப
உறுக்கி வீசுறாய் பெண்ணே

கூடிநடந்தோமெண்டு எவ்வளவும் கூசாமல் சொல்லுதீர்
ஓடிதிரியும் பேயை கூடி சுடுகாட்டினில்
ஆடியமயசகமோதான் ஒருரிஷிக்காய்
ஓடிய தியக்கமோதான

ஆடியமயச்சமில்லே பெண்ணே கண்ணே ஆசையாய்நீதானே
தேடிவந்தெதிர்கிண்டு மோடிசெய்யு மூய்யாரம்
நாடியே மயக்குதடி உன்மேல் மோகம்
கூடியே தியங்குதடி

மெத்தப்படிக்காதீர் யாரும் கண்டால் சித்தபிருமையென்பார்
கத்தவித்தையையென்முன் மெத்தவளர்த்துவீசி
காட்டாதீர் ஈஸ்வரனே வம்புக்கிடம்
பூட்டாதீர் ஈஸ்வரனே

கத்த வித்தைகளெல்லாம் உனக்குநான் காட்டினுலல்லவோடி
சித்தமிகமகிழ்ந்து உத்த சிவனே யெண்டு
சேருவாய் மாதரசே ஒருபாகம் சாருவாய் மாதரசே

எட்டுகுடி எசல் மெட்டு.—

சேருவாயெண்டு நீர் தாரமாராகவே
செப்புநீர் சரியல்ல போம் போம்
சொல் தப்புநீர் சரியல்ல போம் போம்

சரியல்லவெண்டு நீ அருவுரியாய்ச் சொன்னால்
தாங்குவமோ அடி பெண்ணே
பின்வாங்குவமோ அடி கண்ணே

பின்வாங்குறோமோவெண்டு பலத்துடனனுவம் பேசுரீர்
வந்தெதிர்த்துப்பாரும் ரொம்ப வீசுரீர் வந்தெதிர்த்துப்பாரும்

வீசுர வீச்சதும் வீரியமும் கொடியிலேவெளியாகுமே அடிபெண்ணே
ஒரு வழியாகுமே அடி கண்ணே

ஒருவழியாய்ச்சாலே ஒழுக்கியபோது
நீர் ஒடித்திரியலாங்காணும் நடமாடித்திரியலாங்காணும்

நடமாடி ஒருவிதம் நடந்தாலதைத் தப்பி
நடக்கிற விதமுண்டோ பெண்ணே
உடன்படுகிற விதமுண்டோ கண்ணே

அடக்குறோமெண்டு சடைமிரட்டுகள் மிரட்டாதீர்
அமர்க்கு வந்து எதிர் நில்லுங்காணும்
வெஞ்சமர்க்கு வந்து எதிர் நில்லுங்காணும்

வெஞ்சமர் செய்யவும் நெஞ்சம் வருகுதோடி
வேண்டிநெஞ்சாண்டிமேலே துரை பாண்டியன் பெண்ணே

ஆண்டிமேலே ஆண்டிக்கு வெள்ளிமலை பொன்மலை எதுக்கு
அடியோடே விட்டுவிடுங்காணும் கொடிமுடியோடேவிட்டுவிடுங்காணும்

கொடுமுடிசூழ் மலை முடிய உன் கையிலே
கொடுக்கிறேன் முழுதும் காப்பாத்து
உன்னை அடுக்கிறேன் செடிதுங்காப்பாத்து

அடுக்கிறேன் காப்பாற்றென்று இடக்குகள்பேசுரீர்
ஆள் மோசம் வந்துவிடுங்காணும்

என்கைவாள் மோசம் செய்தெனக்கு ஆள்மோசம் வந்திடில்
வாழ்மோசம் வருமேடி பெண்ணே

எட்டெண்டும் ஏழெண்டு கிட்ட வந்தாளென்டும்
எட்டுகிரீர் தோரணிதானே ரொம்ப தொடுக்கிறீர் கோரணிதானே

தொடுக்கும் கோரணிக்கிடம் பின்னே யிருக்குது
துடுக்காய்ப் பேசாதே அடி மானே
மெத்த முறுக்காய் வீசாதே அடி தேனே
என்னமோ பயம் காட்டி பசப்பிப் பாம்பாட்டுறீர்
இளைத்தோமே உன்னை யல்லகாணும்

17048

சொன்ன சொல் போல் முள்ளச்சளையாமல்
சண்டைசருக்குடன் செய்பலாம் பெண்ணெ
அப்பு முடுகெகுடனேய்வலாம் கண்ணே

சண்டை செய்யாமலே கண்டும்மை ஸேவிக்க
ஸ்தலம் தேடி வரயில்லைகாணும் தவப்பலன் தேடவரயில்லைகாணும்

கெண்டை விழியாளே உன் சண்டையின் வல்லமை
கௌரவம் பார்ப்போம் நில் பெண்ணே
உன் சௌரியம் பார்ப்போம் நில் கண்ணே

அரட்டுக்கும் பிரட்டுக்கும் ஆள் மிரட்டுக்கும்
பயந்தஞ்சல்லை சேர்கில்லுங்காணும்
உம்மைக் கெஞ்சலை போர் வெல்லுங்காணும்

பிரட்டல்ல உன்னுடைய அவயம் ஆஜீ பார்த்து மிஞ்சியே
ஆழ்மை செய பெண்ணே
கொஞ்சம் அஞ்சியே ஆழ்மை செய் கண்ணே

விருத்தம்

கின்றிடும் மீனுக்ஷி கேமமுகமும் மனக்கருத்தும் நீலகண்டார், கண்டேல காள் இளமையிலே கனஉரசாய்முரசடித்து கைலைதன்னை, அண்டி வந்து சேர்கிண்டு வாதாடின நீ பயந்தவள்போல் அஞ்சி வில்லில், ஒண்டிநிற்கும் பயில்விசித்திரம் உள்ளபடிசொல்லெண்டு தானுரை செய்வாரே.

தரு-ஆனந்த பைரவி,ரூபகம்.

வஞ்சிநம்மைபார்த்து பேசடி தலைநிமர்ந்து
வஞ்சிநம்மைபார்த்துப்பேசடி வஞ்சி
ரஞ்சிதம்சுதனெவாலைஅபரஞ்சிமானே மிஞ்சிவெம்போர்செய்யத்தானெ
மேவிவந்துஅஞ்சுவானே வஞ்சி
மன்னமலையத்துவஜன்தன் மாதவயாகத்துதித்த
அன்னமெஎன்னுசைமகிலே நூலிலும்மெத்த
சின்னஇடையானகுகிலெ அஞ்சுகநிகரென்ன
மொழிகொஞ்சுந்தையலெ தளமெடுத்து
பொன்னகர்முதலாயோது புரமெல்லாம்ஜெயித்திப்போது
இன்னகரிலென்முன்வந்து இயம்பினநீகுனிந்ததேது வஞ்சி
நாரிசீரந்திகெணத்தை நடுங்கிடவதைத்தடித்த
வீரியபருக்கிரமமெங்கெ செடிசிறந்த சிரியசௌரியமெங்க
லோகங்கள்மெச்சும் பேரிகைமுரசுகளெங்கே
எல்லாமிருக்க கேரினில்கள்ளங்கள் கூடி
கிண்டையானுல் உள்ளன காடிகாரியம்
கேளாமல்போடி கன்னியென்வோமோடி வஞ்சி
பாண்டியன்பெண்ணே உனக்குபார்மன்னர்போலே

தோணுமலே ஆண்டியென்டோமெத்த
ஏய்க்குருய் பாசாங்குகாறிவெண்டி
சும்மா கீழேனைக்குருய்
கைலேதன்னே தோண்டி
தூக்கவோதான்பார்க்குருய் நிமிஷமின்னேதாண்டிதாண்டி
ஒருக்காலேசௌரியம்பேசி மின்னலே
எண்டிவஷைஸாதுபோலே இருக்குருய்
முத்துவாயாலே வஞ்சி
மண்ணினில்மகிமைபெத்த மாமதுராபுரியாளும்
புண்ணியபாக்கியவதியே அழகுகயற்கண்ணெனும்
சுந்தரமதியே லோகங்கள் எங்கும்
ஒண்ணிலும்ஒப்பில்லா நீதியே தலைகுனிந்து
எண்ணிஎண்ணிகவனமிட்டு ஈசனைஏமாத்திவிட்டு
ஊணியோடபார்பிரட்டு உடக்காதுநிமிர்ந்தேருட்டு வஞ்சி

விருத்தம்

இப்படிஸரஸவார்த்தைஈஸ்வரியம்புப்போது
மைப்படிகண்ணாள்மூதூர்மகருஜிதலைநிமிர்ந்து
எப்படிச்சொன்னபோதும் எதிரினிசொல்வதாரெண்
டேள்படிந்தடிகள்போத்தி உளமகிழ்ந்துரைசெய்வானே

பத்தியம்

ஆதியும்அந்தமும் அளவில்லாஜெகஜ்ஜோதிஅத்புதசித்பராநந்தவாழ்வே பாதிவெண்திங்களும்பண்புயர்கெங்கையும்பாங்காய்ச்சூடியபரமனைநன் நீதியாயுலகெல்லாம்நிறந்தரமாய் நின்றநித்தியதத்துவஞ்செய்நீலகண்டா நீதருதரியாதசெரியாள்வந்தெதிர்நின்றேன் எதுவுமென்செயலில்லை தேவதேவா வாதுநான்செய்ததுபெலத்தகுத்தம்மனப்பொருந்தாள்வது தர்மயுக்தம் ஒதியெ துதிசெய்வேனும்மைநித்தம்உலகேகஅருள்செய்வது மதுசித்தம்.

சந்துவிருத்தம்

உடப்புவேண்டாம்கைகயவிடும்மெண்டோடிப்பிழைத்து போரேருமெண்
டிடும்புதணிந்தங்கயற்கண்ஏத்திபபணியும்போதீசன்
விடும்பாண்டியராடென்றாலும்விட்டேட்டோடும்வேளையிதெண்
டிடும்பாக்கிலேமாத்தெனவேதான்ஆலோசனைசெய்தருளுவளே

பத்தியம்

பூமயிலன்னமெ புகழ்வோத்தினமெ
பூதலத்தரசெனும் புனிதமானெ
ஸோமவாரந்தன்னில் சுந்தரி உனைமணம்
சுகமதாய்ச்செய்யவெசுகிருதமேவும்
வாமனன் அயனுடன்வருகுரோபிக்ஷணம்
வளமிகுதளத்துடன்வரிசையாக
க்ஷேமமாய்மாளிகைசேர்ந்து சொல்கல்லியாண

ஸ்ரீங்காரமுன்னதும்செய்துகொண்டு
நேமமாயிருக்குறேனெண்டுகிண்ணெ
நிச்சயதாம்பூலமதுமாத்தகண்ணே
ஸ்ரீமலேயத்துவஜபாண்டியருஜன்பெண்ணே
நீர்க்கஸௌபாக்கியம்மதுரைக்குகண்ணெ

## சந்து விருத்தம்

காத்துபார்த்து தூக்கிக்கொள்ளும் கருத்துபோலே காரியங்கள்
வாய்த்திருக்குதெண்டு ஈஸ்வரர்தானே வகைசேர்நிச்சியதாம்பூலம்
மாத்துமெண்டுரைத்தால் நம்மைபெத்தமாதா மலேபோல் மதுரையிலே
வீத்திருக்கையிலே நாம்செய்வதெந்தவிதம் எண்டம்பாள் விளம்புவளே

## சரு. - ஆனந்தபைரவி, ரூபகம்

மணஞ்செய்ய நிச்சயதாம்பூலந்தான் இங்கனெ நானெ
மாத்துவதும்சரியோ மகராஜஈசனெ

சரியிதல்லவெண்டுரொம்ப நடங்கள்சொல்லுருய் பெண்ணே
ஸம்பிரமமாய்தருவதெங்கெ சாத்துவாய்மின்னெ

ஸம்பிரமமாய்மதுராபுரி தன்னிலெவந்து
அங்கெதரச்சொல்வேன் தாம்பூலம்ஸ்வாமி தாயார்கையாலெ

தரச்சொல்லுவதங்கையும் நீதானே மானே
இங்கே நடங்கல்சொல்லி தாயார் தன்னைசாக்கிடுவானெ

சாக்கிடுவதில்லே ராஜ ஜாதிவரிசை சொன்னேன்
சரியெண்டொத்துபார்த்துத்தாரம் தரவேணும் ஸ்வாமி

உத்தரவுநிச்சயதாம்பூலம்மாத்தாமல் உனக்கொருபொழுதும்
கொடுப்பதில்லே ஒஹொ அன்னமெ

கொடுக்கஅவனம்பிகையாய் கணத்துஜலத்தை
வெள்ளம்கொண்டுபோமொ அண்டர்துதிகொண்டவஸ்துவெ

போமொஇருக்குமொவெண்டு புடித்தத்தைவிட்டு
துரட்டுபோட்டிழுத்துநிற்பமொநாம் புனிதமயிலே

இழுப்புண்டெண்டு நினைத்திடுப்புடவையைப்பாமல்
சொன்னுலெப்படிபதில்சொல்லுவேன் எந்தன்வேந்தனெ

சொல்வதென்ன நிச்சயதாம்பூலமாத்தாமல்
உறைசுத்தினதால் விடுவமொநாம்
சுந்திரமாதே விடுவமோநாம்

என்றன்மீதில்வீம்பது செய்யவேண்டாம்
விளம்பியபடிசெய்குறேன் வேதநாதனே
செய்வதென்னவெகு காரியம்
நீதாமெமக்குஇப்போதே வைநிச்சயதாம்பூலம் சீக்கிரம்தாருய்

தாருமெயண்டு லோகஸப்பிறதாயத்தைதள்ளி சொன்னல்
தாதடங்கவேதிருக்குதருகுறேன் ஸ்வாமி
தருவேனெண்டுதெந்தெனவீண்சமர்த்துபோசாமல் கையில்
தந்திடுமீனுட்சிநீயெ தாம்பூலந்தானெ

விருத்தம்

நான்பிடித்தமுயலுக்கு நடந்திடும்கால் மூன்றென்று நவிலுவார் போல்
மான்பிடித்த ஜகதீசர்மணம் செய்திடத் தாம்பூலமாத்துமெண்டு
தான்புடித்த பிடிசத்தும் தவருமல் சொல்வதற்காய் சரியெண்டெடுத்து
தேன்புடித்த மலரணியும் தேவி பாக்கிலே யெடுத்தியம்புவாளே

பத்தியம்

பொன்னகரிந்திரனும் புனிதமாம் யோகரும்
பூதலத்தரசரும் புகழ்களேத்த
புஞ்ஜனகசயனனும் பாரதி பிரும்மனும்
பதஞ்சலி வியாக்ரரும் பணியும் பாதா
மன்னரே திருநேத்திர மகருஜ ஈசரே
மகிமைசேர் கைல்ாஸ வாஸரேநீர்
சொன்னசொல் போலவே ஸலக்ஷணகல்யாணம்
சுகமதாய்ச் செய்யவே ஸோமவாரம்
நன்னயமாகவே வாரும் ஸ்வாமி
நிச்சியதாம்பூல மிந்தாரும் ஸ்வாமி
என்னை என்னகற்கேக அருளும் ஸ்வாமி
இன்பமிகு ஸாஷ்டாங்க சரணம் ஸ்வாமி

சந்து விருத்தம்

ஆடியே;டி முனையெசடுக்கி அசர்ந்து குடம் வந்தடங்கறவாய்
கோடிவிளம்பி பார்த்துமையாள் கொடு நிச்சியதாம்பூலமதை
தேடியெடுத்ததைப்போலே செங்கையேந்தி சிவன் வாங்கி
நாம் பதில் ஈந்திட எடுத்து நயஞ்சேர் ஹிதமாய் நவிலுவரே.

பத்தியம்

சூரியன் சதகோடி உதயமே நிகரான
சுந்தர ஒளிவது சூழ்ந்த ரூப
காரியே நமதாஸ்ச கங்கையே மங்கையே
கன்னய ஸத்குண கனிமானே
சீரிய மதிகுல திலத சௌபாக்கியமே

தேவி மீனாக்ஷியுன் ...சிந்தை போலே
வீரிய சசிவாரம் விளங்குதயாநிதியில்
விதி-ஹரி-ஸகிதமாய் விவாகம் செய்ய
ஊரில் வந்து சேருரும் பாரும் பெண்ணே
உத்தம தாம்பூல மிந்தாரும் பெண்ணே
சாரியாய் மதுரை நகர்க் கேளும் பெண்ணே
ஸகலஸம்பத்தாசிர்வாதம் பெண்ணே

விருத்தம்

மங்களம்சூழ்கையல் கன்னி மனோகரி மனமகிழ்ந்து
அங்கம் புளகிதமாகி பிரும்மானந்தமாகி நின்று
செங்கமலக் கரங்குவித்து தேவ வைபோகம் செழிக்கவளர்
துங்கவர் போற்றும் தயாநிதி பூசித்துப் புகழுவளே,

தரு.—சாமா ரூபகம்

எவ்வளவு பாக்கியம் பெத்தேன் பெத்தேன் பெத்தேன்
அவ்வளவும் சிலாக்கியம்
பவள நித்தியபொற்பாதம் தெரிசித்தது எவ்வளவு
மதிகுலத்தலைவன் செய்த புண்ணியம
மகத்துவமே மகத்துவம்
நிதிபதிபுகழ் நீலகண்டர் கொடுத்தவரம் எவ்வளவு
திருவுள்ளமகிழ்ந்து ஜகதீசர் திருமணஞ்செய்ய
வருவேனெண்டனுக்கிர வாக்குதவி இப்போ எவ்வளவு

சந்துவிருத்தம்

அந்தகனைருகோலத்துக்கெழுந்தேஷகயி லாண்டவன் விழி அருள்செய்
அத்புதமதுபோல அஷ்டதிக்கிலும் போர்க்காச, வந்திடும்பாக்கியம்
இந்தவிதம் கல்யாணம் நிச்சியம்செய்தீஸ்வரர்தாம்பூலம்,சந்தனரெண்டிரு
கரந்தனில் வாங்கிக்கொண்டேந்திழை மீனாக்ஷி, சிந்தை மகிழ்ந்து பணிந்து
ரதந்தனில்சீக்கிறமெழுந்தருளி ஷேனையும், மந்திரிசுமதியும்வாய்பொத்தி
சிரப்புடன் சூழ்ந்துவர,தந்துமி பேரிமுழங்கிடமலர்மழை சார்சொறிந்திட
திட நகர்க்கு ஸுந்தரமேவு ஸ்ரீங்காரஸுமங்களத்துடன்நடந்தேகினளே

தரு —புன்னாகவாாளி, ரத்தி.

மகாராஜி வாரான் மதுரைக்கு மகாராஜி வாரான்
ஜகராஜர் துதியுத்த மகமேரு நிகருத்த
செங்கோலுக்குகந்த நீரி தங்கமுடிசூழ் வீரி
தீர்க்க பாக்கியவதி யோக்கிய ஆரோக்கிய நிதி
சிஷ்டானுக்கிரகரூவி துஷ்ட நிக்கிருக நீலி
திங்கள்தன் குலம் வந்த சிங்கம் அங்கயற்கண் மகாராஜி
சத்திக்கேடயமோடு சூத்திச்சரிக்குமடு

கருக்குக்கடாரி பாலம்     உருக்கு கிமிச்சர் சூலம்
கண்டமிடு முக்கிரம்     துண்டமிடு சக்கிரம்
கனம்பொருந்தஸ்திரம்     சினமெத்த உயர் சஸ்திரம்
கணமூண்டிலெதிர் வெல்லும்     குணமுள்ள ரணவில்லும்
காங்கொண்ட தளங்கள்     மலைபோலே
உறங்கொண்ட செஜங்கள்     தூரகதங்கள்
சுத்திப்படர்ந்துவர     ஒத்துமேளமுசர
ஜ்வலித்துமே பரிமுழங்க     த்வனித்து கட்டியம் விளங்க
தோரணையரெதிருட     மோகஸங்கீதம் பாட
சொல்மன வேகமுத்த     நல்கும் பரிகள் சுத்த
ஸுந்தர ரதமேரி     தந்தரசாரி மீரி
துரிசதாய் நடந்து     முரசடித்து
விருதகந்துடர்ந்து     சௌரியமதாய்
சத்தி இந்திரனக்கினி     உத்தி யெமன் நிருதி
நயம்செய் வருணதீரன்     ஜெயச்செய் வாயு குபேரன்
நகர்தன்னை போய்வளைத்து     மிகவினை போர் தொடுத்து
நண்ணிக்கலந்து சண்டை     பண்ணி உடலொட்டுண்டை
நழுக அடித்து ரத்தம்     விழவே இடித்து சித்தம்
நடுங்கிட வதைத்து     எதிர்த்து மூர்க்க
மொடுங்கவே சதைத்து     நகைத்து வெம்போர்
வெத்திச்சதம் நிறந்து     சத்தி ஹிதம் சிறந்து
ஜெயமீனத்தை வாழ்த்தி     திசைகளெழிலும் எத்தி
விருது கொடிகள் சூழ்ந்து     பொருதும் கொடிகள் கூர்ந்து
விளங்கும் புகழைப் பெத்து     உளங்கள் மகிழ் மிகுத்து
வீரவெற்றப்புடனே     ஆரபாரத்துடனே மகராஜி
செங்கையில் மான் சூழும்     சங்கரர்தான் வாழும்
திரு ஈசான்னியும் நாடி     வரும்போதுரம் மேலாடி
சினந்து நந்தி கெணங்கள்     முனைந்து வந்து காங்கள்
நீட்டி எதிர்த்தவரை     வாட்டி வீரியவுரை
தெரிக்கஒடி மறைத்து     முரிக்கக்கண்டு வெரித்து
சிவசிவாவெண்டு     புறப்பட்டோடி
அபயமேயெண்டு     கூக்குரலிட
செங்கையெழிலிலங்க     திங்களொலி துலங்க
கனமகுடமின்ன     அனேகம் பணிகள் துன்ன
கடவுள் விடையில் வீத்து     அடவுடன் வந்துபார்த்து
கடுமையாதுமில்லாமல்     கொடுமையேதும் சொல்லாமல்
கரினபின்னஸ்திரமாக     விரும்பும் மதுரமாக
வருதியவாது     வெகுவிதம்
பொருதியபோது     வாரணியெழில்
கொஙகை மூண்டிலொண்டு     அங்கம் அழுந்தக்கண்டு
கூச்ச மிக முனிந்து     சாச்சுத் தலை குனிந்து
கோதை நின்றிடக்கண்டு     எதுவாச்சுதேயெண்டு
குரித்து நிண்டாலோசனை     புரித்ததிகாலனை
கூடி மனமகிழ்ந்து     நாடிமிகப் புகழ்ந்து
கோகிலமானே     பாண்டியன் பெத்த

மோகனத்தேனே உந்தனை நானே
திங்கள்கிழமையினில் உங்கள் மதுரைதன்னில்
திருக்கல்லியாணம் செய்ய வருகிறேனென மெய்யாய்
செப்பிப் போவெனச் சொல்ல ஒப்பிப புகழ்ந்த நல்ல
ஸ்திர நிச்சியதாம்பூலம் தரவாங்கி அனுகூலம்
சிறந்தலங்கிருதங்கூடி நிறைந்த மங்களம் தேடி மகாறுஜி
அண்டர்கள் மலர்தூத்த கண்ட முனிவர் வாழ்த்த
அகிலபுவனம் போத்த மகிமமறைகள் சாத்த
ஆண்மை வீரியமீர வாய்மை கட்டியங்கூற
அடுத்து நகாறுசசத்தம் திடுதிடெனவே மெத்த
அதிர பீரங்கிகள் சுட குதிரை திரள்களுடன்
அம்பாரியானை சிறந்தவர கம்பீர சேனை சுத்திலும வர
மண்டலத்தனில் வளம் சொண்டிடும் சிங்களம்
வங்கங்கலிங்கமெட்டியம் கொங்குவங்காளம்
தொட்டியம் மறுடம் கன்னடம் சீனம்
கர்னுடம் சொல்ச்சோனம் மலையாளம் சொழுங்கொச்சி
நிலையிளம் செழும் மச்சி மகிழும் குருக்ஷேத்திரம்
புகழும் தெலுங்குத்தரம் வாழும் விலாசம்
எண்ணேமுலக்கம் சூழும் பூதேசம்
அரசாள் மன்னர் தெண்டனிட்டுப்பணிந்து
தொண்டர் பண்மையணிந்து செப்புமனத சட்டம்
ஒப்பியென்னுளும் திட்டம் செய்யும் அடிமையென்று
கையைக் குவித்துக்கொண்டு தேர்முன்னை நடந்தோ[illegible]
சீர் மீனக்கொடியாட சிஷ்டர்கள் மகிழ்கூட
இஷ்டர்கள் புகழ்தேட . ஸ்ரீங்காரமாக .
கீர்த்தி அமோக பொங்கமதாக
வரையில் கண்ட வண்டர் நடுநடுங்க
முண்டர் கிடு கிடுக்க வரைகள் நிலைகலங்க
திரைகள் அலைவிலங்க மண் வெண்ரேளியிட
விண்மண்டலமே தோட வலுவாய் தேரை நடத்தி
ஜெலுதாய் மதுரை நத்தி வாகுள்ள துரை சக்தி
யோக சக்கிரவர்த்தி மகாறுஜி வாராள்
மதுரைக்கு மகாறுஜி வாராள்

சந்து விருத்தம்

தேர்தனை உன்னிதமாக் நடத்தி ஜெயபேரிகை முழக்கி
ஜெகம்புகழ் பீரங்கிவெடி பதினுயிரம் சிறந்திட வளர் மதுரை
ஊர்தனில் மேவி விசித்திர மாளிகைக்குள் புகுந்தே வரையில்
உருமையதாய் பெத்த காஞ்சனமாலை சொல் உத்தமி மனமகிழ்ந்து
சீருபரிஷ்டர்கள் சிஷ்டர்கள் சூழ்ந்திடும் சிறப்புடனெதிர் வந்து
செல்வதியே நீ வாவென அழைத்த திருமங்கள மஞ்சள்
நீர் நவரத்தினம் பொற்சரிகைத்துயில் செய்விளக்கமுது முதல்
சேமமதாகவே எடுத்திடும் திருஷ்டிகள் நீங்கிடச் சுத்தவனே

### திருஷ்டி லாலி.

துஷ்டருட கொடுங்கண்ணும்    துர்ஜனர் கடுங்கண்ணும்
சொல்லும் பொல்லா நீலிக்கண்ணும்    துடகாலிக்கண்ணும்
கொட்டமிடு சுடுகண்ணும்    குறைபடு கண்ணும்
குத்துய்ய வெள்ளிக்கண்ணும்    கொடுங்கொள்ளி கண்ணும்
நஷ்டமிடு பெருங்கண்ணும்    புட்டவியலாயவிய
புருவம் கெரிந்து குவிய    புளியம்பூ போல் காய்ந்து
பொடிந்துவர்ந்துதிய    பட்டமரம் பால் சொரிய
பலதர்மம் புரிய    பார்வளர் கலி தளர
பலரும் மனங்குளிர    இட்டபயிர் மிகத்தழைக்க
எவ்வுயிரும் புழைக்க    இன்ப திருவருள் பொங்க
எங்கும் சுபமிலங்க    சுட்டழகி மீனுக்ஷி அரசாக்ஷி
சிறந்து கல்யாண மணமுகந்து    கனம் பொருந்தியே வாழ்க வாழி

### சந்து விருத்தம்

திருஷ்டிகள் சுத்தி ஆரத்திகளெடுத்து சீர் பெரும்படி வாழ்த்தி
தெள்ளுயர் வெண்ணீரள்ளியெடுத்து திருநுதலதிலிட்டு
கட்டிஅணைத்து மகிழ்ந்து புகழ்ந்து கரங்களை விழியிலொத்தி
கண்மணியே என் பெண்மயிலே வெகுகனம் பொருந்திய சிங்க
குட்டியெண்டாரும் மதித்திடும் நிதியே கோகிலமே மதிலே
கொஞ்சிய ரஞ்சித பிஞ்சு மஞ்சுகமே குணமிகு மரகதமே
அட்டிகை ஆபரணம் மகுடந்தரி அங்கயற்கண்ணரசே
அருந்தவ சேயே வாவென கைகொடுத் தன்னையும் அழைத்தனளே

### தரு.—காபி, ரூபகம்.

வாடியம்மா என்கண்மணியே    யார்க்கும்
வாஞ்சாலேகுண சிரோமணியே    வாடியம்மா
தேடியென் செல்வதிமே    வெகு
ஸ்ரீங்காரமிகு வளர்மதியே    இட்ட வாடி
கண்ணிழந்த பசுபோல் கதரி    ரொம்ப
கண்ணினேன் நான் உன்னை யெண்ணியெண்ணி    இட்ட வாடி
தங்கமயிலென்னும் பெண்மயிலே    எந்தன்
ஸௌபாக்கியமென்னும் பூங்குயிலே    இட்ட வாடி
பாண்டியர் தவம்வந்த அஞ்சுகமே    லோகம்
பதினுலும்புகழ் மரகதமே    இட்ட வாடி

### விருத்தம்

தவமிருந்து ஜபம்புரிந்து தானதர்மம் தீர்த்தமெதும் தான்கொண்டாடி எவரும்துதித் தேத்தும்புத்திர யெக்கியம் செய்தேந்திழையா யென்னைப் பெத்து, மௌலிபுனைந் தனேகமா மகிழ்கொடுத்து வளர்த்தெடுத்தமாதாவே உன் மனதிலுள்ள, கவலையொழிந் தெழிலணியும் கனகைகொண்டு வந்தேனுன் கருணையாலே.

### சந்து விருத்தம்.

திட்டமதாகிய காஞ்சனமாலைதன் செல்வதியாம் மகளை
சிறந்தமெய் வரிசைசெய் திக்கிதமாயழைத் திருகையினாலணைத்து
கிட்டஇருத்திவைத்துத் துத்துபார்த்துள்ள கிலேசமெல்லாந்தவிர்த்து
கெஜாததுரகபதாதிகளுட னிக்கிருந்தெழுந் தமர்சகேகி
அஷ்டதிக்கிலும் சென்டிஷ்ட வெம்போரிட்ட அலங்கிருத ஸம்பிரமும்
அதின்விஜயங்கள் பொருந்திய ஈயங்களும் அதிசயம்கண்டதுவும்
வட்டமுத்தனமதி லொண்டு மரைந்திட வந்த வைபோகங்களும்
வகைவிபரத்துடன் யாமறியும்படி வகிர்ந்திடம்மா வென்றாள்.

### சந்து விருத்தம்.

மங்கை அங்கயற்கண் பங்கயவதனம் பொன்மாலை வெம்போர்விபரம்
வகிர்ந்திடென்றுரைத்திட உமையும் புன்னகையிட மந்திரி எதிர் வந்து
யெங்கையும் அவரவர் தங்கள்தன் சௌரியம் இயம்புவரோ அம்மா
எங்கள்துரந்தரி உங்களுத்தரவு பெத்திவடம்விட்டெழுந்தேகி
சிங்கம் சிறந்திடும் திக்குகளெட்டிலும் சமர் செய்த ஸம்பிரமங்கள்
ஸகலமும் உரைசெய்ய ஒரு சதுர்யுகமசெல்லும் ஜாடையாயிபம் புகிறேன்
பொங்கமதாக கேளுங்களெண்டிங்கிதம் பொருந்தலங்கிருதமதவாழ்
பூரித்துசர்க்கலைரப் பந்திலில்தேன்மழை பொழிவதுபோல் பொழி வான்

### தரு.—உசானி, ரூபகம்.

இந்த தேவி ஜயம் செய்த ஸ்ரீங்காரம்   இங்கிதம் கேளுமம்மா
என்னம்மா   இங்கிதம் கேளுமம்மா
உந்தன் மங்கள   உத்திரவடைந்து
ஒருவரும் நிகரில்லா   உள்ளாண்மைபடைந்து
தங்காதகதனி   லேரிநடந்து
தைரிய மேவிய   சௌரியம் தொடர்ந்து இந்ததேவி
இந்திராக்கினி எமனிருதிவருணன் இன்பவாயு   குபேரன்
இயம்பும் ஒரேழுதிக்குகளை வளைந்தேரி நிண்டு வீர   ஆண்மையாய்
தந்திர முரசடிக்கையிலவர்கள் தானே ஸ்வயசூர   வலுவாய்
சண்டைக்குவந்தெத்துண்டம் செய்கையில் தனுசைஎடுத்தகோர மாகவே
மந்திரஹஸ்திர   மாரியை மீட்டி
மாட்டி இழுத்து   மடிக்கையில் கைகூட்டி
ஸௌந்தரி நீ ரக்ஷி   யெண்டு பாருட்டி
சுத்திச்சுத்திப்போத்த   வெத்தி துவஜம் நாட்டி இந்த தேவி
ஈசான்ய திக்குனில்   ஏகநதிகெணம்
ஏகக்கூட்டம் சிறந்து   பெண்ணே
எங்கே வந்தாயெண்டு   இடக்குச் சடக்காயி
இயம்பவே சினம்பிறந்து   அம்பாள் கூசாமல்

தட்டுத்தடி கையில் பிடித்துக்கொண்டு வாசையத்திறந்து
வீரிட்டு குதித்துச்சதைத்து வரைத்த தொறுக்கையில்
கூ கூ வென்றே பறந்து செல்சி
தேசாதி தேசம் துதி செய்தாயே
உங்கள் திருவடி போத்தடி யோரடியோரெங்க
பேசாதே பேசாதே எண்டடிக் கையிலங்க
பிஞ்சகன் படையெல்லாம் ஞ் ஞ் ஞெய
பிஞ்ஞெயெங்க இந்த தேவி
கெங்கையும் திங்களும் கொன்றையும் தும்பையும்
கலைமானதவும் சூடி அந்தசர்த்தர் தானே
வந்தெதிர்த்த மெங்கள் தேவி சர்தாபல் வாதாடி
பேசையில் கொங்கையிலொன்று மறைந்தது மெய்தனில்
கூச்சமிகக்கூடி கிர்கையில் குறிப்பரிர்தையர் லாச வார்த்தைகள்
சோடி விதம் கொண்டாடி பெருசங்கையெல்லாம் செய்து
ஜகதீசனிந்து தன்குலமாதே
மதுரைக்குத் தாம் வந்து திங்கட்கிழமையில்
விவாக முகந்து செய்குபோபெண்டு
உரச்சொன்னார் மகிழ்ந்து இந்த தேவி
முப்பத்தி முக்கோடி தேவர்கள் மூவர்கள்
முனிவரனைவரிலும் எங்கும்
மூன்னிரு ராஜர்கள் பின்வரும் ராஜர்கள்
மூன்றுலோகங்களிலும் ஆரிலும் ஒப்பத்தசௌபாக்கிய
[illegible]ப்பிகை பெண்ணெண்டுமெக்கு வந்தவதரித்து
மகிமை உயர்ந்த திக்குகளெட்டிலும்
போர் வென்ட உன்னித லம்பிரமங்கள் தன்னை
செப்பச் செட்பக் கேழ்க்கும் செவிகளுக்கெல்லாம்
தேனென மதுரம் பொழியும் விஜயச்சொல்
கற்புத்த உத்தமி காஞ்சனமாலை
நான் கண்டத்திலும் கதை கொண்டத்திலுங்காணேன்
இந்த தேவி ஜெயம்

விருத்தம்

மகருஜி மீனாக்ஷி வீரியம் மந்திரி வந்துரைக்க பொன்மாலை மகிழ்ந்துகந்து மகருஜர்தன் வயத்தில் யான்பிறந்து வளர்ந்து மகா யோகமுள்ளமதுரை பாண்டியர், மகராஜர் தனக்கிலசந்து மாலையிட்டு வாழ்ந்திருந்து மகாமேராய் மகளைப்பெத்த, மகராஜ ஈசர்க்கு மாமியாகி மகிலம பெத்தேனெனப் புகழ்ந்து மகிழ்கின்றுளே.

சந்து விருத்தம்.

வடிவுசக்திடும் மதுராபுரியாண்டிடும் மாமயிலே குயிலே
வானவர்போத்திய யோகசிகாமணி மாதரசெனும் கண்ணே
விடியசல்லியாணம் புடிபாக்கிலையெண்டு விளம்பிய சொல்மெய்யாய்
விவாகமுனக்கு வந்தொத்திருக்கலங்கிருத வேகிமையுள்ளதெல்லாம்

பிடிபிடியெண்டு நடத்திட வேண்டிய பிரயாசமிருக்கு
பெண்பிள்ளை வல்லமை தானேயெண்டெதிலும் பேர்வரலாகாது
மூடிபொருந்தாசரில் பதிளுயிரம்பேர் மொம்மரித்திருந்து செய்யும
முறைமைக்கும் திரம் எண்டெவர்களும் புகழ்ந்திட முயல்செய்து
நடத்துவயே

விருத்தம்

மங்களவேகிமை செய்வாய் மகளேயெண்டன்பாய் பொன் மாலைசொல்ல
தங்கவரத்தின சிங்காஸனபதி அமோகநிதி தயாநிதி யோக
அங்கயற்கண் மகளுஜி அமிருதகுண ஸுமதிதன்னை ஆலோசித்து
துங்கர்புகழ் கல்வியாண ஸுகிருத வேகிமைசெய்ய துவக்கினளே.

தரு.-செஞ்சுருட்டி, ரூபகம், கண்ணிகள்.

மங்களகல்வியாண வேகிமை செய்ய மனம்வைத்தாள் உள்ள
மாமறையோர் பெரியோரை அழைத்து தினம்வைத்தாள்
பொங்கமிகுந்தலங்கிருதமுகூர்த்தகால் நாட்டினுள் மனம்
பூரிததெல்லோருக்கும்சந்தனம்பர்க்கிலை நீட்டினுள்
ஆழி தொட னவரத்தினல் பந்தல்கால் நாட்டெண்டாள் நல்ல
ஆசடைவிட்டம் மரகதத்தாலெடுத் தோட்டெண்டாள்
சூழும் கமான்பந்தல் ஸ்வர்ணதகட்டினல் மீட்டெண்டாள் அதில்
சுத்தநவரெத்தினம் பத்திபத்தியாய்வைத்து சூட்டெண்டாள்
முத்துச்சரகுச்சில்,கொத்திடுபோலிகை மேலெண்டாள் சுத்தி
முசலாப்பசைஞ்சாடுமாலை விடுஸரிகையா லெண்டாள்
சுத்தடப்பு புஷ்பருகமணிக்கு யடையெண்டாள் கோலி
துலங்கும் கொடுஙகை கோமேதகத்தாலே படையெண்டாள்
விளங்கும் கண்ணுடி படங்களை பத்தியாய் அடுக்கெண்டாள் நல்ல
விசித்திர ஸ்ரீகார பிரதமைகள் கட்டி முடுக்கெண்டாள்
பளிங்கு குளோட்பர்லாந்தாபூங்கொடிவிளக்குகள்கட்டெண்டாள் துய்ய
பனிமதிபோல் ரஙக்தடுக்கைகள் கட்டியி டெண்டாள்
இருபுரம் ஒலிமுகம்இந்திரவிமானம்பொ லேத்தெண்டாள் முகத்துக்
கெட்டுநெட்டிக்குதிரை கட்டுபட்டுசெயத்தில் தொடுத்தெண்டாள்
திருமணஞ்செய்வாசல் நவரத்தினமஙமாய்ச் செய்யெண்டாள் அதில்
தீர்க்கமெவரும் பார்க்கபல்கணிகூட வையெண்டாள்
மாடமாளிகை கூடகோபுரம் சக்குவெள்ளை யடியெண்டாள் அதில்
மகா உன்னிதவினேத சித்திரமெழுதிவன்னம் புடியெண்டாள்
ஜோடுஜோடாகவே தாருள்ள வாழைகள் கட்டெண்டாள் தேவ
துந்துமிதாம்பையர் முழுதம்வரச்செய்கிள்ளாக்கிடெண்டாள்
வரும்தேவருஜர்க்கு வகையாய் விடுதிசெய்விச்சிடுவெண்டாள்
மருமுல்லை சுகந்தாதி சதப்பம் புனுகுசட்டம் சேரெண்டாள் ஜெப
மணக்கும் பன்னீர்செம்பில் வார்த்து துவத்திச்செடி கோரெண்டாள
ஆடைஆபரணங்களதிகமாய் சேகரித் தெண்ணெண்டாள் பார்க்க
அன்பதுலக்ஷம்பொன் இன்பவாணவகைகள் பண்ணெண்டாள்

கோணடயானதால் குளம் குட்டை
ஊற்றெங்கும் பந்தல் போடெண்டாள் சீக்கிரம்
குண்டரிவ்வொதுக்கி இன்றே ஜலம்கொணர்ந்து விடுவெண்டாள்
ஆதிக்கமாம்பாக்கில் லக்ஷம் அவணம் எண்ணிக்கொட்டெண்டாள் இதுக்
கானவெள்ளவெத்திலைக் கால்விட்டலைமுப்பித்தெண்ணி கட்டெண்டாள்
ஜாதிக்காய் கிராம்பேலம் ஜாதிபத்திரிகொண்டு வாவெண்டாள் வந்தோர்
ஸகலோர்க்கும் குடுத்திட தட்டுப்படாமல் பார்த்துச் சீவெண்டாள்
தேவமயக்காலால் லெக்ஷம்கலச் சப்பா செல் குத்தெண்டாள் இதுக்கு
செல்லும் முப்பருப்பு நெய் சேகரம்செய் ஒருமித்தெண்டாள்
பூவுலகத்திலுள்ள கனிகாய்க்கிலைக்கால்விட்டு முடுக்கெண்டாள் நல்ல
புனிதமாய் பால்தயிர் பூர்த்தியாய்க் குடத்தில்வைத்தடுக்கெண்டாள்
கடுகுமிளகு புளி பலசம்பாரம் லவணம் சேரெண்டாள் ஆரும்
கருதும் களபாகத்துக் கெதிவும் ஆஜீர்செய்து பாரெண்டாள்
அடுமேடைப்புளிகட்டி ஆஜீருய் பந்தலிட்டிடு வெண்டாள் அதுக்
கானஸ்வயம்பாகர்வைத்தேனம்முழுதும்கொடுத் திடுவெண்டாள்
குப்பல் குப்பலாகவே எரிதுரும்பைவெட்டி அடுக்கெண்டாள் ஸாமான்
குறையெண்டிடாமல் எதும் நிறையாய்
சேகரித்து அறையொடுக்கெண்டாள்
இப்படி ஒருசுமார் போதுமோ ஸாமான்சொல் நிஜமெண்டாள் மேலும்
எதுக்கும்காமதேனுவை அழைப்பித்துவை கைவசமெண்டாள்
முகூர்த்த வாசலுக்சேத்த முறைபோல்
ஸ[illegible]யும் நிறையெண்டாள் இன்னே
முழுக்கவைரம்சிகப்பிகுமுத்துவைத்திட்டமண வறையெண்டாள்
ஸாகிருதசாலும்கரகம் தய்யமாகதத்தால் செய்யெண்டாள் அதில்
துலங்கும் சங்கெழுத்தாணி சுமங்களகரமாக வையெண்டாள்
சிறந்திடும் ஊர்கோலம் ஸ்ரீங்காரமுள்ளதும் செய்யெண்டாள் தேவ
சிங்காதனம் ஒளதா செய்தேகாந்த சேர்வைக்கு வையெண்டாள்
நிறைந்திடும்தீவட்டி வகைக்கு லெக்ஷம்கருக்குச் சுத்தெண்டான் வெகு
கோர்த்தியாய் தேங்காயெண்ணெய் பூர்த்தியாய்
சேரொருமித் தெண்டாள்
பொன்னுலகத்திலுள்ள புஷ்பப்பல்லாக்குக்காள் எவெண்டாள் சொல்லும்
பூரிக் கன்பதுகோடி புதுமோகருப்பை கட்டிடுவெண்டாள்
இன்னம்என்னஎன்ன ஆகவேணும் ஸுமதி மந்திரியெண்டாள் நன்றாய்
எண்ணிபொருப்பாய்எதும் பண்ணி அடிக்கடி எச்சரியெண்டாள்

விருத்தம்

என்றன்பன மகிழ்மந்திரி இனியாகவேண்டியதெல்லாம்எழிலாய்ச்செய்து
அந்தமிகு சிஷ்டர்இஷ்டர் அனைவருக்கும் பாக்குகொடுத்தாளனுபபி
ஸொந்த உரமுறையாருக்கு ஸுகிருத ஓலைஎழுத தரிசதாக
செந்தமிழ் ருபஸஹேட்டு ஸ்ரேஷ்டனை நம்ஸமுகம்வரச்செய்குவாயே.

மாயவன் துணைவியான மஹேசுவரி மதுரையம்பாள்
நியாயமதாகநீதி நடத்திய ஸபுகர்தன்னில்
சாடல்கண் டெழுதயாரும் ஸபாஷென மெச்சும்ஹேட்டு
ருபஸக் காரனென்னும் ரஞ்சிதன் தோணினனே.

### தரு.—செஞ்சுருட்டி, ஆதி.

| | |
|---|---|
| ருயஸக்காரனும் வந்தானே | மதுராபுரியாண்டிடும் |
| மகாருஜி வாசல் | ஹேட்டு ருயஸக்காரனும் வந்தானே |
| நியாயாதிபதியென்னும் | பாண்டியரருள்செய் |
| நங்கையென்னும் அங்கயற்கண் | நாயகி ஸமுகந்தன்னில்-ருயஸ |
| மூலைமுண்டாக தாட்டி சூட்டி | பெரு |
| முத்துரத்தின கடுக்கனை | மெத்தவுந்தானுட்டி |
| மாலைசால்வை பதக்கம் பூட்டி | தேசம் |
| மன்னவர்கள் தன்னேசிப்பு | மார்களைப்பின்கூட்டி-ருயஸ |
| அஷ்டாவதானம் செய்வான்கெட்டி | யென்றே |
| ஆருமெச்சி பேசவொகு | அங்கசிங்கக்குட்டி |
| துஷ்டர்கள் ஆரையும் கண்ணுருட்டி | உன்னை |
| தும்சம் செய்து போடுரேமெண்டு | கொர்ஜித்ததட்டி-ருயஸ |
| அம்புவிஅரசர்க்கோலை கோடி | யெழுதி |
| அஞ்சலதிலே கட்டிக்கொண் | டாளையும்வாதாடி |
| தெனப்புகந்துல்லாசமதைக்கூடி | யெட்டு |
| திக்குஜெயம் செய்மீனாக்ஷிதேவி | தன்கொலுவை நாடி-ருயஸ |

### விருத்தம்

பொங்கமிகுந்திடும் செல்வப்புனிதம்பெருந்தியபாக்கியப்புகழ்கல் யோகம்
துங்கர்துதிசெய்மங்கிலமைசுகிருதமங்களமிதுகள் · சூழ்ந்திலங்கும்
திங்கள்குலமவதரித்துதிசைபோத்தம் கீர்த்தியொத்துஜெயங்கள் பெத்து
தங்கமகுடம்பொத்ததயாஅங்கயற்கண்தாயேசரணமம்மா

இஷ்டமெனநினைப்பறிந்தெழுதும் ருயஸக்காரு இப்மூதுரில்
சிஷ்டர்தொழுப்ஜநீசர்திங்கள்வாரத்தில்வந்து திருகல்லியாணம்
சட்டமொடுசெய்வதினல்தாரணிவாழ்பந்துமன்னர்ஸகலருக்கும்
திட்டமிகுசுபஒலைசிறப்புடன்எழுதியனுப்பு இந்ததினத்தில்தானெ

தென்னவர்தன்தவம்வந்தசெல்வமீனாக்ஷியென்னும்தேவியெநீர்
சொன்னதிருக்கல்லியாணசுபஒலையெழுதுதர்க்கு சுந்தரம்சேர்
மன்னவருக்கெழுதுகின்றவாசகவக்கணை திட்டம் வரிசைசட்டம்
இன்னபடிக்கெண்டடுமைக்கெழிலதுவாஅனுக்கிரகம் செய்திடுகுவீரே

முடிசூடும்அம்சர்க்குமுகூர்த்தஒலைகளெழுதும்மூறைமைசட்டம்
வடிவாகஇயம்புமெண்டுவந்துருயஸக்காரன்வணங்கிக்கேழ்க்க
கெடிமேவும்மதுரையாள்செப்பிரமீனம்பாள்சௌனம்வைத்து
புடியேடுவரியெண்டுபுனிதவாசக வக்கணைபுரிகுவானே

## கல்லியாணஓலை.—கழில்-நெடில்-விருத்தம்.

அஷ்டஐசுவரியம் கனம் அமிருதகுணம் திக்கெஜஸ்ஸ லங்கிருதப்பிறை
ஸ்ரீங்காரி, ஆக்ஷியதுவாச இருநான்கு திக்கும் ஜெயம்செய்த அதிவீரதந்து
வசூரி, அண்டபகிரெண்ட புவனங்களெங்கும் ஒருகுடையில் ஆளும் வை
போகதீரி, அன்புவைத்தேதேவிஎன்பவர்தமக்கைசுந்தரியிலும் உதாரி, சிஷ்
டபரிபாலி, நிதுஷ்டநிக்கிருகசௌரி, செல்வாச்சுயர்கெம்பீரி, திங்கள்குல
ஸ்ரேஷ்டரெனும்ஸ்ரீமலையத்துவஜபாண்டியதீரருள்வரகுமாரி, செங்கமல
மலர்வதனிமங்களகல்லியாணிஜெகஜெனனிமீனாக்ஷிநாமெ, தேசமெண்
ணெழூரும் மன்னரெதிர்காண்கவேஜெயம்பொருந்தனுப்புகிரூபம், திட்
டமிருஜெககர்த்தர் சுகிர்த்தர்பரிசுத்தர் திருநேத்திரருஜபாத்திரர், திங்க
ளொடுகெங்கையதுசென்னியணிமகருஜர் ஜெகதீசர் கைலைவாஸர், செல்
வமுள்ளாளது சித்திரைமாதங்கள்வரும்தேதி ஈரெட்டிலோங்கு, திங்கள்வா
ரம்திருதிகை திருவோணநக்ஷத்திரம் திவ்வியபதஅமிருதயோகம், இஷ்ட
உதயாதிபதினேழரைநாழிகைக்குமேல் இருவத்திரெண்டரைக்குள், இல
க்குசிங்கலெக்கினமதில்துலங்குஹரி அயன்முனிவர்இமையோர்கள்ஸகித
மாக, இம்மதுரைநகர்வந்துகல்லியாணம்செய்வதால் இப்பூர்வஸம் ஸாரமு
டன், எல்லவருநான்குதினம்முன்வந்திருந்துசுபமுகூர்த்தப்பிறைவேத்து
வீரே.

### விருத்தம்

இந்ம் கல்லியாண ஓலையெல்லாம் இசைவு பிசகில்லாமல் எழுதிச்
சேர்த்து, என்தன் ஸயனராவங்கிமேல் லாஸமிட்டு மஞ்சளிட்டுச் சுரு
ளிட்டு கோர்த்து, விந்தைசிறந்தடு வாய்வு நிகரெண்டாரும் விளம்பி
மெச்சும் அதிவேக வேகுக்காரர், கந்தமிகு ஜோர் தாக்கீதடுக்காய் செய்
விச்சவர்கள் கையிலிது நிமிஷமனுப்புவாயே.

பார்புகழ் மதுரைமீனாக்ஷி பகர்ந்த வாசகப்படிக்கு
சீர்சிறந்தோலை யெல்லாம் சீக்கிர மெழுதும்போது
பேர்பெரும் தேசமெல்லாம் பெருமைசேர் மன்னர்க்கிய
கார்மிகரோடு வேகுக்காரர்கள் தோணினரே.

### தரு,—பந்தடி மெட்டு.

நாகலோகம் கைலைமுதலாய் நாளொண்டில் செண்டு திரும்புவோமெண்டு
மேகம்போலே பறக்கும் வீர வேகுக்காரர்கள் தோணினர்
நினைத்த தேசமெங்கும் நாங்கள் நிமிஷம் செண்டுவருவோமெண்டு
கனைத்து குதித்து அர்ட்டி வேகுக்காரர்கள் வந்து தோணினர்
செஞ்சி கொழும்பு திருநெல்வேலி செம்மைசூழயோத்தி வரையில்
அஞ்சல்புடிக்கும் வேகுக்காரர்கள் அடங்கலும் வந்து தோணினர்
அஷ்டதிக்கெங்கும் விஜயங்கொண்ட அம்பிகை மீனாக்ஷி ஸமுக
கட்டளைப்படி நடக்கும் வேகுக்காரர்கள் வந்து தோணினர்
திசைகளெங்கும் புகழும் மதுரை திங்கள் குலத்திலுதித்துதிக்கு
விஜயம் செய்த மீனாக்ஷிவாசல் வேகுக்காரர்கள் தோணினர்

### விருத்தம்.

பொன்னகர் வேந்தன் தேவர் பூஸுரர் தவஞ்செய் யோகர்
மன்னவர்முதல் யெல்லோரும் மனமகிழ்ந் தேத்திப்போற்றும்
பன்னகசயனனென்னும் பாண்டியர் தவத்தில்வந்த
அன்னைபே வேருக்கார ரடங்கலும் சரணமம்மா.
மோகநிகரென வேகமிகு வேருக்காரர்களே மேவிநீங்கள்
லோகம்புகழ் கல்யாண ஓலைதனை வாங்கிக்கொண்டோடிச்சென்று
யோகம்பொருந் தரசர்களி லொருவரும் தப்பாமலிந்தருதிசொல்லி
தேகஸ்ரமந்தீர்ந்து தினமிரண்டில் இவடம்வந்து சேருவீரே.
துஷ்டராசுக்களை யடக்கி ஸுந்தரவீரியம் சூழ்ந்த நமைமீனுக்ஷி
இஷ்டபெந்து அரசர்களுக் கெழில்சிறந்த சுபஓலை யெழுதிவிட்டு
பட்டணமெங்கனும் சுத்திபாங்குசேர்ந்த ஸ்ரீங்காரம் பண்ணச்சொல்லி
திட்டமிகு அரிக்காரர் சேவகர்க்குத் தாக்கீது செய்குவாளே.
பருத்தமுத்து வைரம்பச்சை பதித்தமகுடம் தரித்த பாக்கியசாலி
கருத்ததுகந் தரிக்கையிட்ட கட்டளைமே லரிக்காரர் காரியக்காரர்
தெருத்தெருவாய்சுத்தி ஜனங்களுக்கு வகைவிபரம்தெரியச்சொல்லி
திருத்தமிகு ஸ்ரீங்காரம் செய்யும்படி தாக்கீது செய்குவாரே,

### தரு.-தஜாவந்தி, ரூபகம்.

பட்டணம் ஜோடனை செய்யுங்கோள்    மதுராபுரி
பட்டணம் ஜோடனை    செய்யுங்கோள்
பட்டணம் ஜோடனை வெகு    திட்டமதாகச் செய்யுங்கள்
அஷ்டதிக்கும் விஜயம்செய்    அம்பிகைக்கு கல்யாணம் பட்டண[illegible]
ஓங்கும் கமுகுகால்கள் கட்டு    வளைகள் பூட்டி
உன்னிதமாய்    பந்தலிட்டு
கொக்கப்பூப்போல் பட்டுகளிட்டு    ஸ்ரீங்காரம் செய்து
குஞ்சங்கட்டி    தொங்கவிட்டு
காங்குவெள்ளைக்கால்கள்சுத்தி    கதலிகட்டி நிறுத்தி
பாங்குசேர் செவர்திருத்தி    பணிக்காய் சித்திரங்குத்தி பட்டணம்
பந்தல்கால்மேல்கால்கள்காட்டி    தோரணங்கட்டி
பாங்குசந்தகயர்    சூட்டி
சுந்தரகுளோப்பர்கள்மாட்டி    கயத்தின்மேலே
சூஸ்திரபாவைவிட்டுக்கூத்தாட்டி    சந்தணம்ஜெவ்வாதுதொட்டு
தரையெங்கும்மொழுக்கிட்டு    விந்தையாய்சோலம்மொக்கிட்டு
விசித்திரதிட்டாணியிட்டு    பட்டணம்
மாப்புள்ளைசிவன்வருகிறார்    லக்ஷுமியுடன்
மகாவிஷ்ணுதான்வருகிறார்    ஸ்ரீபரபிரும்மதேவர்வருகிறார்
இந்திராணியுடன்    தேவேந்திரராஜன்வருகிறார்
வாய்பன் ஆனைமுகன்வாறார்    வள்ளிமணவாளர்வாறார்
மூப்புள்ள்முனிவர்வாறார்    முப்பத்திமுக்கோடிதேவர்வாறார்பட்டணம்
வந்தபேரைவாருமென்றுங்கோள்    எவர்வந்தாலும்
வலுமகாமேருவெண்ணுங்கோள்    ஸொந்தபெந்தவாகஎண்ணுங்கோள்
அவரவர்க்கு    சுகிருதஉபசாரம்பண்ணுங்கோள்
சிந்தைமகிழ்ச்சிகூறுங்கள்    திங்கள்கிழமைவாருங்கள்
அந்தகண்காக்ஷிபேருங்கள்    அம்பிகைகல்யாணம்பாருங்கள் பட்டணம்

## விருத்தம்

வெத்திபெரும்மீனாக்ஷிவிளம்பியகட்டளைப்படிக்கு வீதியெங்கும்
சுத்திவெகுசீக்கிரத்தில் சுந்தரஸ்ரீங்காரமெல்லாம்துலங்கச்செய்து
எத்திசையும்கீர்த்திபெத்துஎவ்வுயிரும்தம்முயிருயெண்ணிரக்ஷி
சக்திதயாபரியெஉன்சட்டப்படிநடந்ததென்றுசரணம் சொன்னார்.

## சந்துவிருத்தம்

மங்களவேகிமைமுழுநம்நடத்திமகிழ்ந்துமையாளிருக்க
மன்னவரிமையவர் மாதவர் யோகர்கள்வந்துநிறைந்திருக்க
திங்கள்தன்வாரம்பிறந்தொருஜாமம் திகழ்ரவி உயர்ந்தோர
திருமணம்செய்திடகைலேயிலிருந்து ஸ்ரீ சிவன்எழுந்தருளி
அகையன்கோடிக்கொப்பெனவடிவுகொண்டலங்கிருதவிடையேறி
ஹரிமுகன்முருகையன்பதஞ்சலிவியாக்கிரமானேவரும் சூழ்ந்துவர
துக்கர்களடிதொழவிருதுகள்விளங்கிட துந்துமிமுழங்கிடவெ
சுரர்மலர்சொரிந்திடபரமனும்மதுரையில்துரைவெனதோன்றினரெ

## தரு.-ஆகிரி, திருபுடை

சுந்தரேசுவர்கர்த்தர்வந்தார் மதுரைசுந்தரேசுவரிதன்னே
சுபமணம்செய்ய சுந்தரேசுவரர்கர்த்தர்வந்தார்
சுந்தரசுந்தாமாதவருடனெ அந்ததந்திமுகன்கந்தஸாமியுடனே
இந்திரனிமையவருடனெ வெகுஇன்பபதஞ்சலி
வியாக்கிரமருடனெ சுந்தரேசுவர்
குண்டோதரன்குடைதாங்க மெத்தகுதித்துபூதங்கள்
வெண்சாமரைஒங்க கண்டோர்கள்கலிதுயர் நீங்க
வெகுகணமேவியகன்னிகாதாணம்வாங்க சுந்தரேசுவரர்

## விருத்தம்

கல்லியாணம்செய்வதர்க்குகணிசமிகுகைலேங்கிரிகடவுள் தானெ
வலுமேவும்மீனவன்பெண்வாழ்மதுருபுரிநாடிவருநும்போது
பலி பர்ல் தேன் பலதமுக்குபகர்தாளமேளமெல்லாம்பணிக்காய்கொண்டு
ஜெலுதாய்வந்தெதிர்கண்டுசரணம்சொல்லிசுமதிதுதிதான்செய்வானெ

## தரு.-காம்போதி, ஆதி.

சரணம்ஸாமி சரணம்ஸாமி அடியேன்
ஸாஷ்டாங்கம்சரணம் ஸ்வாமி
ஸ்வர்ணமகாமேரை வில்லாக்கிப்பிடித்த
சூரதத்துவதிருநேத்திரேஸ்வாமி சரணம்ஸ்வாமி
அங்கயற்கண்ணம்பிகையோகம் நல்ல
அன்புகந்துதேவரீர்விவாகம் இங்கனெவந்துகண்டு
செய்தீர்விவேகம் நாளும்
எல்லவர்க்கும்நிறைவைபோகம் ஸ்வாமிசரணம்

இந்தககருத்த சிலாக்கியமோ முன்னு
ளிருபெரியோர் செய்தவாக்கியமோ
யெகதவித புண்ணிய யோககியமோ தேவ
ரெழுந்தருளி வந்த டாக்கியமோ சரணம்
என்னவிதம் செய்வேனுபசாரம் மேலும்
எதரிவேன் பஞ்சை கனபாரம்
தென்னவனாரண்மனை சேர வெகு
திவ்யலெக்கினக்கூடுது இன்னேரம் சரணம்

விருத்தம்

இந்தவிதம் ஸுமதிமந்திரி எதிர்வந்து உபசாரமியப்பிப் போத்த
வந்தஜனமெல்லவர்க்கும் வரிசைபொருந்திய ஆசீர்வாதம் செய்து
சிந்தைமகிழ் கூர்ந்தவந்து சேர்ந்திடாருசதி சத்தி சிர்சள்செய்ய
விந்தைமிகு ஜெகதீசர் மீனவன்பெண் மாளிகையில் வீத்திருந்தார்.

வீத்தஜெகதீசருக்கும் வீரியமீனும்பிகைக்கும் விவாக காரியம்
பார்த்த சுபலெக்கினத்தில் பணிக்காக நடத்திவைக்கும்படியதாக
சாஸ்திரமறை நான்கும்துதி சதுர்முகவன் கலைவாணி ஸகிதமாக
வாய்த்தஅன்னம் மீதேரி ஏளர்மதுருபுரிநாடி வருகின்றாரே

தரு.—தோடி, ஆதி.

பிரும்மதேவரும் வந்தாரே ஸ்ரீங்காரமதாய் பிரும்மதேவரும்வந்தாரே
தர்மமிகு செல்வமோங்கி தழைக்கும் மதுராபுரி
தாங்கியஸ்ரீமீனும்பிகை பாங்குசேர் கல்யாணத்துக்கு பிரும்ம
பங்கயவதனமென்ன பணிகள தகதகன்ன
தங்கமென மதியன்னம் தன்னில் பளபளன்ன பிரும்ம
பூமலர் ஸுரர்சொரிய பூசுரர்துதி புரிய
நாமகளன்பு புரிய நான்கிலும் மாபெரிய பிரும்ம
வேதமுதலெதுகளும் ஓதனேகம் ஜெனிப்பதும்
பேதம் வைத்து ஸ்ருஸ்டித்திடும் ஸாதகஸெளரியமுள்ள பிரும்ம

விருத்தம்

வரும்பிரும்ம தேவர்தன்னை வரிசையுடன் ஸுமதிஎதிர் வந்துகண்டு
அருள்பொருந்து முபசாரம் அனேகவித மியம்பிபணிந் தழைக்கும்போது
திருநிறையும் மதுரைவந்து தென்னவன்தன் அரண்மனையில் சிவனைக்
காண்கில்
இருமெனவே கிருபைசெய்ய ரத்தினசிங்காதனத்தி விருந்திட்டாரே.

விதிவந்து வீத்தவுடன் வீரியமீனும்பிகைதன் விவாகத்துக்கு (செய்ப
மதிகுலபாண்டியர்போலே மகிமைபெரும் வரிசையெல்லாம் மகிழ்ந்து
ததியிதெண்டு ஸ்ரீவிஷ்ணு தலைவிலக்ஷ்மிதேவி சமேதராக (தோணினுரே
துதிபொருந்தும்கெருடன்மேலேரிக்கொண்டு சுந்தரமாகமதுரைதன்னில்

தரு.—நாதநாமக்கிரியை ஆதி.

ஸ்ரீ மகாவிஷ்ணுவும் வந்தாரே      ஜெகத்ரக்ஷக
ஸ்ரீ மகாவிஷ்ணுவும்      வந்தாரே
பார்புகழ்ந்தேத்திய      பாண்டியன் தன் செல்வி
பணைபுயர் மங்கள      பாங்நகள் செய்ய ஸ்ரீ மகாவிஷ்ணு
வஞ்சிதரெஞ்சித      மிஞ்சி உல்லாஸ
மாகவே தூய்யவெண்      சாமரை வீச
கொஞ்சிய திருமகள்      அருகினில் பேச
குளிர்ச்சிபொருந்திய      வைகுந்த வாசர் ஸ்ரீ மகாவிஷ்ணு
நிருதர்கள்தன்மன      னங்கரிலங்க
நிறை சங்கு சக்கிர      மிருபுரம் விளங்க
விருதோடு துந்துமி      மேளங்கள் முழங்க
விசித்திரப் பணியணி      பளபளபளங்க ஸ்ரீ மகாவிஷ்ணு
பொன்னகமமரர்கள்      பூமலர் தூத்த
புனித தபோதனர்      யாவரும் வாழ்த்த
மன்னவர் மறையவர்      மூறவர்கள் போத்த
மாநிலந்தனில் கெடு      அடியிட்டுப் பார்த்த ஸ்ரீ மகாவிஷ்ணு

விருத்தம்

ந்ரஹரிதனைவேதன் வானவர்கோன்சுமதிமந்திரிவாரணத்தோன்
கந்தர்முதலாகஎதிர்கண்டழைக்கமனம்மகிழ்ந்துகருணைகூர்ந்து
அந்தமிருமலயத்துவஜன் அரண்மனைவந்தீசரைக்கண்டருள்சிறந்து
விந்தைநவரத்தினத்தால்விளங்கும் சிங்காதனமீதில் வீத்திட்டாரெ

விருத்தம்.

வீத்தயாலயன் விக்கினேசுவரரைப்போத்திவிளங்குமரசாணிநட்டு வேத மோதி, வாய்த்தமனவரைமீதில் சிவனைவைத்துவரிசையுயர்ச்சடங்செல் லாம்வகையாய்ச்செய்து, பார்த்தசுபசிங்கலெக்கினப் திருக்கல்லியாணம் பண்புடனெநடத்திக்கொள்ளும்படியதாக, மாதவர்கள்வணங்கும் மீனாக்ஷி தேவிவரவேணுமெண்டியம்பவருகின்றனெ

தரு.- பூரிகல்யாணி, ரூபகம்.

தேவிஜயமீனாம்பிகை      ஸ்ரீங்காரமதாய் வாருள்
தேவிஜயமீனாம்பிகை      ஸ்ரீங்காரமதாய்வாருள்
பூவிலன்னம்போல்நடந்து      மேவிமணவாசலதில் தேவி
மதிகோடிதன்னுதயமென்ன      மலர்வதனமென்ன
ரதிகோடிக்குமேலான      மகாராஜிதேஜெஸ்ஸென்னதேவி
பவளமுத்துச்சரிகைதுயில்      பதக்கம்பளபளங்க
நவரெத்தினம்குடம்      டலாகைவகைகள்விளங்க தேவி
பூசக்கிரகுடைமேல்குடை      பொன்மேற்கட்டிபிடிக்க
ரூஜக்கிரமப்புகழ்கட்டியம்      ரஞ்சிதமாய்ப்படிக்க தேவி

அந்தணர்கள்வேதமோத அமரர்மலர்தூவ
விளைதஊதா உருமால்வெள்ளை வெண்சாமரை மேவ
தேவிஜய மீனும்பிகை
தவயோகர்கள் அமரர்சுரர் சகலோரும்கொண்டாட
சுபமங்கிலியள் நீதமங்கள
சோபனங்கள்பாட தேவிஜய
மனம்பூரித்து அனைகாஞ்சல மாலைகண்ணால்பார்க்க
அனைவோரும்கண்காக்ஷியிதெண்டானந்தங்களேற்க தேவிஜய
ஹரிதேவியும் சரஸ்வதியும் அங்கையேந்திபுகழ
பரமேஸ்வரன்கண்குளிர பார்த்துமனம்மகிழ தேவிஜய

## விருத்தம்

அங்கயற்கண்ணம்பிகையை அலங்கிருதலக்ஷிமிதேவி அழைத்துவந்து
சங்காரவீத்திருக்கின்றதங்கமணைமீதில் தானமூத்தி
பொங்கமிகுசடங்கெல்லாம்புனிதமாய்நடத்திவைக்கபூரிப்பாக
செங்கமலரான்முகவன்சிறப்புடன் முன்னிருந்தோமம் செய்குவாரெ

ஓமவகைச்சடங்கெல்லாம்டேந்துதினி உலகப்பாங்காய்
ங்கமகன்னிகாதானம் நிறைவேறவேண்டியதற்கு நித்தியரெசொல்
காம்மனைபிதாகோத்திரம் நகர்தொழில் சங்கற்பத்தில் காட்டியோத
க்ஷேமமிகுதெயவுசர்துதெரியும்படியாகஅருள்செய்யலாமெ

சாஸ்திரமுறைதவறுதசதுர்முகனெ அன்பருள்ளூர்தழைச்குமாதி
கோத்திரம்அனைமெய்ஞானம் உலவுபிதாஜகஜ்ஜோதி கோரும் மூண்டு
கேத்திரசுந்தரலிங்கம்நித்தியதத்துவம்மன்னடப்பு செய்துமாகும்
பாத்திரகன்னிகாதானம் பண்ணும்ஸங்கற்பமதில் பகருவீரே

வன்னிமணிஜகதீசர்வரிசையதாயனுக்கிரகித்த வசனம் போலே
கன்னிகாதானம்செய்யகாரணம்யாரெண்டம்பாள்கருத்திலெண்ண
அன்னியனுமல்லசொந்த அண்ணனிதோவந்தேன்பாரம்மாவெண்டு
பன்னகமீதினில்துயலும்பகவான் சங்கற்பமதுபகருவாரெ

ஆன அன்பர்தனதுள்ளூர் ஆதிகோத்திரம் சாதியதில் அருள்சிறந்த
ஞானஜகஜ்ஜோதிசுதன்நித்தியதத்துவம்டேத்தும்சுந்தரலிங்கநாதருக்கு
வானதுதிம்திவம்சபாண்டியர் வரபுத்திரி அங்கயற்கண்மாது தன்னை
தானமதுபூவீன்வன்னி சந்திராதித்தியாள் ஸாக்ஷியாய் ஆக்ஷியாய்தான்
செய்தோமெ.

## சந்து விருத்தம்

சிந்தைமகிழ்ந்தரி கன்னிகாதானம் செய்திடமனதொட்பி
ஸ்திரமதவாகவே கரந்தணில்வாங்கி ஜெகப்புகழ்ந்திடுமெழிலாய்
துந்துமிவாத்தியம்பேரிமுழங்கிடசுரர்மலர்மழை சொரிய
சுத்திலும் அந்தணர்வேதங்களோதிட சுகிருதமங்களம்பாட

இந்திரனும்முகசந்திர சூரியரினியதபோதனர்கள்
...ரமுல்குள்ளமன்னர்கள் சிஷ்டர்கள் இஷ்டர்கள் கொண்டாட
தந்திரசௌந்திரசுந்தரலிங்கர் தடாதகை அம்பிகைக்கு
சுப்பிரமஇங்கிதமங்கில்லியந்தன்னை தான் தரிக்கின்றரே

கல்லியாணத்-தரு.

கல்லியாணமே வைபோகமே சனம்பொருந்துசுபயோகமே
சொல்லுஞ்சுந்தரேஸ்வரர்க்கும் சுந்தரிமீனாட்சிக்கும்
எல்லவரும் சூழ்ந்திருந்து
ஏற்கைசெய்யும் சௌபாக்கிய கல்லியாணமே
க்ஷேமசித்திரை திங்கள் தேதிபதினாறில்வரும்
ஸோமவாரம் திருவோணஞ்சூழ்ந்த
ஸிம்மலெக்கினத்தில் கல்லியாணமே
அயனிருந்துஓமஞ்செய்ய ஹரிகன்னிகாதானஞ்செய்ய
ஜெயம்பெரும் மீனாட்சிக்கு
திருமங்கில்லியம் சிவனணிந்த கல்லியாணமே
மங்கில்லியம் தரித்தீசர் தேவியுடனெழுந்தருளி
பொரிபெடுத்துகைமாத்தி பூர்ணாஹுதிகொடுத்த கல்லியாணமே
பூர்ணாஹுதிகொடுத்து பூரித்தாசாணிசுத்தி
நாரணிதன்வலப்பத்தை நீதவெடுத்தம்மிவைத்த கல்லியாணமே
அம்மியில்காலதைவைத்து அருந்ததியைபாருமென்க
செம்மையுடன்தங்கையற்கண் தேவி
கண்டேனென்றுசொல்ல கல்லியாணமே
கண்டவுடன்பரபிரும்மத்தை கருத்தில்கண்டுதெண்டனிட்டு
அண்டர்முதலனைவர்க்கும் அரியதரிசனங்கொடுத்த கல்லியாணமே
அண்டபகிரண்டருக்கும் அயங்கிருத மீனாட்சிக்கும்
தொண்டர்துதிசைலங்கிரி துரைஸுந்தரேசருக்கும் கல்லியாணமே

விருத்தம்

திருந்துஞ்சுபமங்கில்லியம்தேவிமீனாட்சிக்குசிவன்தரித்து
பொருந்தும்அரசாணிசுத்திபூவைபதம்அம்மிதன்னில்பொருந்தவைத்து
அருந்ததியைக்காண்பித்து அனைவருக்குந்தெரிசனமீந்தாண்பின்பு
தெரிந்தஸரஸ்வதிதேவிசீர்வாழிசொல்லித்துதிசெய்வாளே

வாழி—லாலிமெட்டு

திக்களணிதிருசேத்திர சங்கரரேவாழி
திக்குவிஜயஞ்செய்த ஸ்ரீதேவிவாழி
தங்கமலையை தனுஸாய்தரியாளேவாழி
ஸகலபுவனமும்போத்த சத்திநித்தியவாழி
தெங்கைமதிசடையிலங்கும் கர்த்தரெனீர்வாழி
காஞ்சனைதன்தவம்வந்த கண்மணியேவாழும்
பங்கயத்-மால்செட்டாத- பரபிரும்மமேவாழி

| | |
|---|---|
| பரமதுரையென்னும் | பரமேஸ்வரிநீவாழி |
| அங்கயனைகாய்ந்த | சுபதனந்தரேவாழி |
| அநேகசரங்களைரக்ஷி | மீனாக்ஷியம்பாள்வாழி |
| பொங்கரவாபரணரென்னும் | புண்ணியரேவாழி |
| பூசக்கிரவர்த்தியென்னும் | புண்ணியவதிவாழி |
| வாழிஜெகவாழிசுப | வாழிமகாவாழி |
| வாழிஜெகவாழிசுப | வாழிமகாவாழி |
| செங்கமலபொற்பாத | சிவசங்கரருடனே |
| தேவிமீனாம்பிகை | நீ தினம்தினமும்வாழி |
| மங்களசுந்தரலிங்க | மகேசரேநீர்வாழி |
| மலையத்துவஜஸௌபாக்கிய | மகாராஜிவாழி |

## விருத்தம்

வாழ்த்திபழம்பால்கொடுத்து வானவர்போத்தியலெக்ஷிமிமாதா
ரூத்திவகைகளெடுத்து அலங்கிருதமாக சுத்தியானபின்பு
க்ஷேத்திரமூண்டதுசிறிந்தநித்தியசுந்தரலிங்கநிமலனாரும்
வந்துதெரிசிக்கும்படி எழுந்தருளி சந்நிதியில்வந்திருக்கின்றாரே

## சந்து விருத்தம்

இந்தவிதத்தில் முகூர்த்தம்நிறைந்தபின்னீசுவரிமந்திரிதான்
ஏழிலுயர்மாயவர் அயன் சுரர் மன்னர் இன்னம்வந்தஸகலருக்கும்
சந்தம்கஸ்தூரிஜெவ்வாதுசொல்பன்னீர்கதம்பங்கலந்தணிந்து
சருதியமருமலர்செண்டோடுபாக்கிலைகனிசமுதாயீந்து
வந்தவர்ஸகலரும்போஜனம்செய்திடவாருமெண்டுபசரிக்க
வானவர்யோகிகள்மத்தவர் மன்னர்கள் மனமகிழ்ந்தெழுந்தருள
அந்தமிகுந்தபதஞ்சலி வியாக்கிரமாரியாதெனவிருக்க
அதுவகைதனையறிந்ததுகொம்க்கோபமெண்டடிபணிந்தியம்புவனே

## முடுகுவிருத்தம்

ஓதும்சாஸ்திரம்சொல்பலகலைநூல்களுணர்ந்த தின் முறையில்தெளிந்து
மாதவம்சிறந்தபதஞ்சலிவியாக்கிரமமாமுனியோரே இப்போது
எதுகாரணம்சூழ்ந்தினியபோஜனத்துக்கெழுந்தருளாதிருகருமம்
நீதருதணுகாதயவுக்கடியேன்தெரிந்திட அருள்செய்குவீரே

## விருத்தம்

ஸ்வர்ணமாமகுடம்சூழுமங்கயற்கண்துரந்தரிமனமகிழ்சுமதி
மன்னவர்போத்தம்தில்லைநடேசமகேசலரதெரிசித்தென்னாளும்
அன்னமுண்பதுகாமதர்க்குமுன்னில்லை ஆனதினாலெ இப்போது
பொன்னகரமரர் முனிவர்மன்னவர்க்குபோஜனம்நடத்திவைப்பீரே

நீதிசொல்பதஞ்சலிவியாக்கிரபாதரெ நீங்களமுதுக்கெழிலாமல்
பாதிக்காய்கரிக்கும்பாதிக்காய்விரைக்கும்பகர்ந்தொருகாலயவைபாங்காய்
சேதிசொன்னத்தினால் முனிவர்விண்ணவரில்ஜெலபூதல்புஜிப்பதாரையா
ங்கடவுள்ஸமுகத்திலடியேன்அரிவிக்கும்படி அருள்வீரே

தெள்ளமுதாகியதேவிமீனும்பிகைதிருவுளமிகமகிழ்சுமதி
கள்ளரெஉள்வைத்துகதவதைமூடியகாரணம்செய்குரேமொ
வெள்ளக்கொள்சடைசூழ்வள்ளல்ஸன்னதியில் விளம்புவதாலெங்கள்க்
கெள்ளளவும்குறையில்லைகண்டீர்நீரிக்ஷணமியம்புவீரெ

கர்த்தர்கல்லியாணமதில்கனம்பொருந்தும் விருந்துங்கசருதியாரும்
பத்தியதாஎழுந்தருளபதஞ்சலிவியாக்கிரமர்கள் மனம்பதிந்திடாமல்
சுத்தவிலெமொழிவதினுல் சுரர் முனிவரசர் பந்திசூழவில்லை
சித்தமதுதயவுகந்து திருமுனிவர்புஜிதிருபை செய்வதாமெ

இந்திரசகரமெனமொழிந்திடவாழ்விலங்கியமாமதுரை
சந்திரகுலமீனும்பிகைகீர்த்திதழைத்திடச்செய் சுமதி
மந்திர தந்தர ஜபதபசேமம் மகிமைகள்சிறந்திருக்கும்
சுந்தரபதஞ்சலிவியாக்கிரமபாதரை சுருக்கினிலழைப்பிப்பாயெ

புவங்களெங்கும்புகழ்ந்திடும்படியாய்புடியதுமிகஉகந்து
தவமுயர்மந்திரதந்திரயோகம்ஸகலமும்தான்சிறந்து
பவமதைநீங்கியபதஞ்சலிவியாக்கிரம பாதரிஷீஸ்வரரெ
அவனிவிண்போத்தியஆண்டவருக்களை அழைத்திடுச்சட்டளையெ

சட்டளையிட்டருள்செய்திடும்கர்த்தரைகண்டுபதம்பணிந்து
இஷ்டமனப்படி இயம்புவோகமெண்டிருவருமெழுந்தருளி
வட்டருகந்திடுபொட்டடேநீறதுவடிவதுவாயிலங்க
சட்டமதாகியபதஞ்சலிவியாக்கிரமஸ்வாமிகள்வர்தனரெ

தரு — ஆனந்தபைரவி, திருபுடை.

| | |
|---|---|
| பதஞ்சலிவியாக்கிரமர் | வந்தார் |
| ஜெகதீசன்முன் | பதஞ்சலிவியாக்கிரமர்வந்தார் |
| சிதம்பரஸபைமேவும் | ஸ்ரீங்காரநடராஜர் |
| பதந்தனைநிதம்நிதம் | பணிந்தேத்தி-மதியோக-பதஞ்சலி |
| ஸப்தரிஷீஸ்வரரும்மெய்க்க | தேவாதிமுதல் |
| சித்தரெல்லாம்அதிசயிக்க | நல்தவமதிலெநாடி |
| உத்தஅருளதைத்தேடி | கர்த்தர்பாதத்தைக்கூடி |
| மெத்தஸவபோகம் | கொண்டாடி-பதஞ்சலி |
| துய்யவெண்ணீரதிட்டு | நுதலிலெ |
| துலங்குஞ்சந்தணபொட்டிட்டு | கையதில்ஜெபமாலை |
| சுருதம்பவித்திரமிட்டு | செய்யகௌரீசங்கம் |
| சிறந்தவுக்கட்டுமிட்டு | பதஞ்சலி |
| காதில்குண்டலமிலங்க | அணிசிறந்த |
| ஜாதி ருத்திருக்ஷம்துலங்க | பாதிமதிசூழரிய |
| ஆதித்தனருள்புரிய | ஜோதியழகுசொரிய |
| வேதியர்துதிபெரிய | பதஞ்சலி |

### விருத்தம்

சம்புவெசரணஞ்சங்கரர்சரணம் சந்திர டார்ரு சரணம்
பொங்கரவனிசுபுண்ணியாசரணம் புகழ்த்திருமேத்திராசரணம்
பங்கயனதிபாப்பாதமெசரண பசர்திருபுரதகாசரணம்
எங்களையாளும்இறைவாசரணர் ஈஸ்வரு சரணம் சரணம்.

பக்ந்துதித்தேத்திபபதஞ்சலிவியாக்கிரமபாதரிஷீஸ்வரெ
ஹிதமிகுபோஜனம்செய்துக்கழைத்ததுக்கெழுந்தருளாதவகை
இதமதின்காரணம்விபரமதாகவெவிளம்புங்கருத்ததுபோல்
சதம்பொருந்துண்மையதாகவெவேண்டியஸப்பிரம்தருகுவோமெ

பக்தர்குடிகிறைவேத்தும்பரமனெ அம்பலத்தையாளும்பாதத்தைநாங்கள்
நித்தம்தெரிசனம்பண்ணிநின்செபலால்புஜிப்பெடுததுசெடிதும்வாரோம்
சுத்தமிகுவையதிக்குசொன்னமல்லால்சுத்தல்மொழிசொல்லவில்லை
சித்தம்மகிழ்ந்தனுக்கிரகிக்கும்சீரதுபோல்டியோர்கள்செய்தவோமெ

பதஞ்சலிவியாக்கிரமபாதரெசீக்கள்பசர்புடிதவருமல்
சிதம்பரந்தன்னில்முன்செய்தநர்த்தனம்போல்சிருகந்தங்களுக்காய்
விதம்பொருந்துன்னதமாகவெசெய்குரேர்வேண்டியதெரிசனம்செய்
ஹிதம்பொருந்திருவிரும்புஜித்திடலாம்மன்திருப்பதைஇயம்புவதெ

### சந்து விருத்தம்

ஓதியதிருவெண்ணீரதில்விழுந்திடும்உன்னிதகழக்கொடிக்காய்க்
கொப்பதுவாம் படிகொண்டுமெட்டாமலுருதியைகிறைவேற்றும்
சேதிசொல்பதஞ்சலி,வியாக்கிரமரேமுன்சிதம்பரத்தினில் நர்த்தனம்
செய்திடும்பண்பாய்உங்களுக்கிங்கெ செய்யுரேரம்புஜியுமெண்டு
ஆதிபராபராருளிய தில்லைபொன்னம்பலமிம்மதுரை
அழகுயர்வெள்ளி அம்பலமிதுவாமெண்டலங்கிருத அடவெடுத்து
தாம்திமி-த்திங்கெணதிரிகிட-திரிகிட-தா தையெடன-கடனம்
சதுர்முகனரி சுரர் ஸகலோரும் துதித்திடதான் செய்கின்றனரெ

### தரு—பந்துவராளி ரூபகம்.

| | |
|---|---|
| பரமசிவன் நடனம் செய்தார் | இந்த |
| பார்புகழ்மாமதுரைபுரிமீதில் | பரமசிவன்நடனம் செய்தார் |
| உறமிகுபத்திரகாளிமுன்னே | உன்னதநர்த்தனம்செய்தபண்பாக |
| பாதபதம்கிருபை | பரிந்தெழிலாக |
| பதஞ்சலிவியாக்கிரமபாதருக்காக | பரமசிவன் |
| சுத்தமத்தளமடைவாய் | ஜவலிக்கலய |
| முத்தவிசித்திரதாளம் | தவனிக்க |
| துத்திபில்லாங்குழல் | ஒத்துடனெஸ்ரீசுருதிகூட |
| பாடகர் பத்தியதாகவெ | சுத்திலுங்கீதங்கள்பாட |
| தத் திமி-தாகிட-தித்திமி | தி-தையென |

மெத்தவுமிக்கீத அலங்கிருதத்துடனே
மேவியபாத விஸ்தாரத்தினுடனெ
வித்தகர்மெய்த்திடு சுத்தங்களுடனெ
வீணைஹ்ரீங்காரமதாயட வுடனெ பரமசிவன்
முகம பளீர் பளீர் பளீ ரென்ன
கால்சிலம்பு நக நக நகெவெ காலில் கலீ ரென்ன
அகம்மகிழ்ந்தரி அயன்முனிவர்கள் அரசர்கள் போத்த
நல்லசுகமிகுந்தமரர்கள் சுந்தரமலர்மாரிதூத்த
தகு-திகு-த்திங்கெண திகு-திகு-திமியென
ஜகரர் வெகு சதுர் யுகங்களும் கொண்டாட
திரிகிட திரிகிட தித்திமி யெண்டாட
ககனமுமண்டமும் காசினியுமாட
கயல்கண்மீனாட்பிகை கனம்புகழ்மிககூட
பரமசிவன்நடனம் செய்தார்
கெங்கையுட்குடமுமிலங்க அதிசீதனதிங்களினொளிமிகத்துலங்க
சங்கைபொருந்திய மீனவன்பெயரெங்குமெய்க்க
பங்கயமுகபதஞ்சலி வியாக்கிரமர் தெரிசிக்க
தங்கு-தா-த்திமி திங்குதீ-யெண்டு
சங்கஞ்சிறந்திடு ஸதிர் தனில்-நின்று
ஸகலரும்துதியிரு சரணமுங்கொண்டு
பொங்குபொன்னம்பலம் தில்லையம்பதியெண்டு
புனிதம்துரையூர்வெள்ளியம்பலமெண்டும் ப்ரமசிவ

### விருத்தம்

மங்களகிரங்கள் சூழும்மதுராமாநகரமிதில்
அங்கயற்கண்மணாளர் அலங்கிருதநர்த்தனஞ்செய்ய
பங்கயமுகவசீரபதஞ்சலிவியாக்கிரபாதர்
சங்கராரக்ஷியென்று சரணம் செய்தேத்துவாரெ

### தேவாரம்

முகரோன்கயனும் நெடுமாயவனும் முனையெபுரிந்து அரிய
முடியாதிருந்த முதலே மதியை முடிமேலணிந்தபரனெ
மகமேருதனைதனுஸாய்வளைத்து மழுமான்தரித்து எழிலாய்
மகிழ்போல்நகைத்துபுரமூண்டெரித்தவலுவெ சிறந்தஹரனெ
ஜெகமேதுதிக்கும் புலியூரதில் முன்னொளிவாய்புரிந்தநடனம்
சிரியோர்தமக்குமதுராபுரியில் செடலாய்கொடுத்தபரனெ
அகமெமிகுத்தபுலிமேல்பிறந்து அலையாதிருக்கும்முறையாய்
அடியோர்தமக்குநிதமசீர்சரணம்அருளீதந்தருளும் சிவனெ

## தேவாரம்

சீதமாமதியணிஎழில்சிரனே
செழுமழுமானணிகரனே
வேதான்கும்துதிசெய்யும்ஹரனே
விரும்பன்பர்க்குதவியவரனே
நீதமாமதுராபுரிதன்னில்
சர்த்தம்கண்டுளம்கல்கி
தாவிலும்தெய்வவாய்ஜெகம்புகழ்மதுரை
தனில்நடனஞ்செய்தபரனே
நேயமாம்துதிகள்செய்யவுமறியோம்
நின்னிட்பெருமையும்தெரியோம்
மாயவன்தேடும்மலரடிஇறங்கி
மகிழ்ந்தெங்கள்தம்மைஆளுவதே

கரியதைஉரித்தாய்போற்றி
காமனைஎரித்தாய்போர்றி
திருபுரமெரித்தாய்போற்றி
செழுந்திங்கள்தரித்தாய்போற்றி
வரிவிழிஅங்கயற்கண்வஞ்சிஸமேதாபோற்றி
அரிதிருவிறைமூதாருடப்பனேபோற்றி போற்றி

## முடுகு விருத்தம்.

பாசம்வைத்தோதிபதஞ்சலிவியாக்கிரமபாதரிஷீஸ்வாரே
கேசவனான்முகன்வாஸவனிமையவர்கெந்தர்வாள்முதலாய்
ராஜர்களுடனேபக்தியிலமர்ந்தாஞ்சிதமிகுமதா
போஜனம்செய்தெழுந்தொருகோடியதில்பூரிப்போடேவருவீர்

## சந்து விருத்தம்.

ஈசருத்திரவாய்பதஞ்சலிவியாக்கிரமரிருவரும்வந்திடவே
இமயவரரியயன்ராஜர்கள்முனிவர்கள்எல்லவரும்வரவே
சேமதாகவெஸம்பந்தியிருத்திநிறைபொன்னிலையிட்டே
சேத்தியதாய்ச்சமைஅமுதொடவேறுசுவைநிமிஷம்படைத்திடவே
போஜனம்செய்தாசமனமும்வாங்கிபுனிதமதாயெழுந்து
புனுகொடுசந்தணமருமலர்பாக்கிலைபொருந்தனைவரும்தரித்து
வாஸவனரியயன்வானவர்முதல்வெள்ளிமலையென்னும்கைலாஸ
வாஸமகேசரடேசர்தன்ஸன்னதிவந்துவீற்றிருந்தனரே

## விருத்தம்.

விருந்தவுண்டவரவர்கள்வீத்தவுடன்ரெஸவர்க்கம்வேணதெல்லாம்
இருக்கதிலோர்பங்காகிஇரம்பொன்பதுபக்குயிருக்கே-ஈஸ்வரிக்கு
தெரிந்ததுவோதெரியாதொசித்தமரிந்திடவிண்ணப்பம்செய்வோமெண்டு
ஜாந்தரமீனாக்ஷிமுன்புல்வயம்பாகமேஸ்தர்வந்துதோணினரே

### தரு—ஆனந்தபைரவி, ஆதி.

ஸ்வயம்பாகமேஸ்தர் வந்தார்
பாகசத்திமுன் ஸ்வயம்பாகமேஸ்தர்வந்தார்
ஜெயமேவியமீனாக்ஷி தேவிதிருகல்லியாணத்தில்
சயமாகவிருந்திட களபாகமாய்ச்சமைத்த-ஸ்வயம்பாக
லக்ஷ்மிலேபோலன்னமும் இன்பமிகுகரிபஞ்ச
பக்ஷிவர்க்கவகையெல்லாம் பணிக்காகச்செய்துவைத்த-ஸ்வயம்பாக
காமதேனுக்கிணையெண்டு கண்டபேர்கதிசயிக்க
சேமமாயுண்பவர்க்கெல்லாம் நினைப்பறிந்துசமைத்த-ஸ்வயம்பாக
அமைக்குந்தொழிலுக்கயன் அல்லாதில்லையென்பதுபோல
சமைக்குந்தொழிலுக்கிவன் தனக்கிணையில்லையெண்டு-ஸ்வயம்பாக

### விருத்தம்.

மன்னமன்னவர்போத்தும்மனோன்மணிஉன்கல்லியாணமங்களத்தில்
பொன்னகரோர்பூவுலகோர்பூதகணம்யாவர்களும்பூரித்தண்டும்
அன்னம்லெக்ஷ்மிலேயினிலுமதிகமாய்மீந்திருக்குதம்மாதாயெ
என்னவிதம்செய்விப்பதோஇருக்கும்வகைஅடியோர்களியம்பினோமெ

மெய்க்கும்படிவிருந்துசெய்தும் வேணபடிமீந்திருக்கும் விபரங்கேட்டு
திக்குவிஜயஞ்செய்ததேவிசிர்லைதமிகமகிழ்ந்து சிறந்தெழுந்து
வொக்குச்சிக்கல்வருமென்பதை குறியாமல்குதூஹலங்கொண்டுவேந்து
மூக்கண்ஜெகதீசுவரர் தன்முன்னிண்டு பரியாஸமொழிசொல்லுவாளே

மன்னவர்கல்லியாணம் மருங்கணையாய்நடக்குமெண்டுமனதிலெண்ணி
பொன்னதுலைச்சிலவழித்துபுகழன்னம்லெக்ஷ்மிலேபோல்சமைத்தோம்
என்னவாரார்களுமுண்டுஇருபதிலொண்டாச்சமைத்ததிருப்பதாலெ
இன்னம்வெகுபெயர்கள்வர இயம்பியதைஉண்கவிட்டாலெசலமதானெ

அவ்வயற்கண்மக்ராஜி அனேகம்போமுதங்கஅனுப்புமென்க
சக்காருமிவள்செருவம்தனை யடக்க வேணுமென்றுதானினைந்தார்
எக்கன்பாராபரனெ எண்டிருபுஜங்களும் பூரித்தெழுந்துபாய்ந்து
தக்கஉருவதுபோலெலெனைந்தாஸ்ரீக்காரகுண்டோதரன்வந்தானெ

### தரு.—கல்லியாணி, ஆதி.

குண்டோதரன்வந்து தோணினான்
மெத்தக்குதித்துகர்ச்சிறத்லை பிடித்துரைத்து கிழ்சிங்கம்போல்
குண்டோதரன்வந்து தோணினான்
அண்டர்கள்புகழ் மதுராபுரிதன்னிலெ
கண்டம்கருத்தசங்காருடகொலுவிலெ குண்டோதரன்
காவிச்சல்லடமும் கையுருமாலும்தொட்டு
கருப்புக்கச்சைசபுக்கட்டி கணகபணிகளிட்டு
மேவியதிருநிருவிளக்கவெ குழச்சிட்டு

விந்தட்குசுந்தரசந்தனைதில்தமிட்டு குண்டோதரன்
வட்டதிட்டமாய்தேசவடிவோ மிகஉன்ன
வதனஞ்சந்திரோதயமதுபோலவெ மின்ன
சட்டிவட்டங்கள்பார்த்து ஸகலோருஞ் ஸபாசென்ன
சரப்பளிபதக்கம்முத்தாரம் பளபளன்ன குண்டோதரன்வந்து
அங்கயற்கண்தேவி அனேகம்போருண்டிட
அனுப்புமென்றுசிதமாய் அறிக்கைதான்செய்திட
உங்காமல் மீந்ததெல்லாம் ஒருவனுக்கொப்பிட
உயர்சிவன்தயவதாயுகந்துசட்டளையிட குண்டோதரன்

விருத்தம்

சம்புவேசரணம் சங்கராசரணம் சந்திரஜடாதராசரணம்
பொன்புலியோர்பணிபுண்ணியசரணம் புனிதகங்காதரசரணம்
பண்புபர்துரந்தரபருபரசரணம்பதஞ்சலிபூஜிதாசரணம்
இன்பக்தர்தாளும் ஈசனெசரணம் என்னாண்டவாசரணம் சரணம்

வந்தகுண்டோதரன்வயித்தில்வடவாக்கினிதனை ஈசன்வைத்துப்பெண்ணை
அந்தமன்னர்பெய்வரின்கூக்காண்டிபரிஸ்வர்பமாம் அப்பாலுந்தான்
உந்தனமுதுஉண்பதற்கு ஒருவரையும் காணுமிந்த ஒருவனுக்கும்
வெந்தழலும்பசியைத்தீர்வேண்டியபேர் அனுப்புகுறேமென்றிட்டாரெ

ஆனைவந்துசேட்டதற்சோர்ஆட்டுகுட்டிகொடுத்தனுப்புமழகுபோலெ
மானையணிஈசரன்னம்மலைலெக்ஷமதுஉண்கமனறுவைத்து (பே
பூனையிலொண்டனுப்பினதெபோதுமென்றழைத்துக்கொண்டு பூரிப்போ
வானைவென்றமகேஸ்வரிதான்மடப்பளியில்வந்துநின்றுபெருவாளே

தங்கவுருவதுபோலெதலைமூத்தொர்சிறந்தகுண்டோதரனென் இந்தா
எங்களன்னம்லெக்ஷமலைக்கெதிரதுவாய்மிந்திருக்குதிப்போதன்னால்
உங்கபட்டு உண்டுபின்னும்உத்தவர்க்கும்வாரியிட்டுஉனைவளர்க்கும்
இங்களணிசங்கார்க்கும்தேவையானதுகொண்டுபோய்செலுத்துவாயே

தேவியருள்செய்தவுடன்சினந்துகுண்டோதரனெழுந்து
விம்மம்போலெ தாவிடமண்டிகொண்டிருந்துசமைந்தஅன்னமலைகளை
முன்தள்ளச்சொல்லிமேவும்பஞ்சப்பொத்தையைதீமீண்டுண்ணும்
தகமைப்போல்மீசிவிண்டுகூவியெவர்களும்கடுக்கொண்டிட்டானே
கொடியபசிக்குண்டுட்டானே

தரு—புன்னாகவராளி, ரூபகம்.

வாரிவாரிஉண்குருனெ குண்டோதரன்தான்
வடவாக்கினிபசிமிகுத்த குண்டோதரன்தான்
பாரில்பிரபலமதுராபுரியதிலெ வாழும்
பாண்டியராஜன்பெண்கல்யாண அமுதுதனிலெவாரி
லக்ஷமலையொத்தஅன்னம் நெய்தயிர்செய்யோடவே
அதுக்கேத்தகறிகாய் கனிகளெல்லாங்கூடவே
கச்சைகட்டிலெக்ஷம் பேர்கள்கைபெய்வோடவே
நீண்டுகவளம்கவளமாயுருட்டி கையில்போடவேவாரி

மீந்தசோருகரிமுழுதும் விருந்திடவே
ஒருவிளுடிதன்னில்உண்டு போட்டுவீரிட்டிடவே
காந்தல்கஞ்சிகழிநீரெல்லாம் வாரியிடவே
சேரேகாணக்காண உருஞ்சு கண்டோர்சலக்கப்படவே வாரி
உச்சந்தலைவீராப்பசி ஓங்கிப்படைத்து
ஜ்வலிக்குமுத்தண்டம் கண்டமதகளில் முழுதும்படைத்து
சுத்திரிண்டுகொட்ட கொட்ட குலுக்கிஆடைத்தவாரிவாரி
பட்டணம்சாடெங்கெங்கும் ஆள்விட்டுஓட்டிட்டு
உள்ளப்பலவிதசோறெல்லாம் வாரிவந்து மூட்டிட்டு
கொட்டகொட்டபோடு போடெண்டுசெம்மிட்டு
பசி தருமருதென்னசெய்வேனெண்டு கூக்குரலிட்டுவாரி
அரிசி-நெல்-சோய் தவுசளை அள்ளிநிறைக்க
கொட்டதுரைகிமிஷமதுகளெல்லா மடைத்துச்சிறக்க
எரி-பசி த்தீ-சவத்தவாரம் எங்கும் திறக்க
பத்துதென்னசெய்வேனெணடு சொல்லிபறக்கவாரி
தென்னங்குருத்திளம்பில் தழை குழைகள் நருக்கி
ஊருதேங்காய்மாங்காய் பலாக்காய் பலகாயுமொருக்கி
லேசில்விடுவேனோபாரெண்டுசொல்லி வீளசமுருகி வாரி
மருவுங்க மாப்புள்ளைத்தோழன் வாய்த்தான்பாரெண்டு
வந்தமன்னர் வீண்ணோர் அதிசயிக்கமனவலுக்கொண்டு
தெருவெங்கெங்கும்கடகடெண்டு விழுந்துபுறண்டு
என்னசெய்வேனையொ அம்மாதாயெ
தேவியைக்கண்டு வாரி
அங்கயற்கண்வேணதுபோட்டலுத்துச்சலிக்க கண்ட
அனைவருக்கும்பயப்புடித்து அங்கம்வலிக்க
சங்கரனார்மகிழ்ந்து ஸபாசென்றுகலிக்க
கொஞ்சகதணிந்தபசிகொழுந்துவிட்டு வளர்ந்துஜ்வலிக்கவாரி

விருத்தம்.

வடமலைசேருனஅமுதும்வகைகதுகையில்லாதவஸ்துவாரிக்கொட்ட [ய்ந்து
கடல்மடுப்போல்கொண்டுபின்னுங்கதரிகுண்டோதரனெழுந்து சமரிட்பா
குடல்வெதும்பிசுருண்டழண்டுகுமரிப்பத்தியெரியுதையொ கூ-கூ-தேவி
அடமதுசெய்யாமல்பசிஆத்திவிடெண்டடித்துவிழுந்தலருவானெ

தரு.—உசானி, ரூபகம்.

அம்மாவயர்பசிக்குதெசும்மா பசிமிஞ்சிமிஞ்சி அம்மாவயர்பசிக்குதெசும்மா
இம்மாநிலம்போத்தும் அபிகைமீனாக்ஷி
ஈஸ்வரியெஇதுஎன்ன கண்காக்ஷிஅம்மா
தாரும்மாரும்விருதா வீபபும்வீணும்
ஸாம்பமூர்த்திமுன்னெ வீசினீர்காணும்
சோருபோட்டெண்பசி தீர்க்கவேணும்
சோம்பினுலென்பழி ஏற்கவேணும்அம்மா
எறந்தும்பறந்தவர்க்கிதுவோமுண்டு பறந்துதடித்துவிழுந்தழக்கண்டு

பார்க்குளுய்பச்சாத்தாபமில்லாமல் நின்டுதம்மா
கோடிஅண்டமெங்கும் மனதுநீண்டு
சோர்வையாய்ப்பொருளைதேடி எழில்பூண்டு
பாடிபரிசுபெருமல் மீண்டு
வரும்பாவலர்மனம்போல்பத்திப்பத்தி மூண்டுதம்மா
கண்டிக்குயிர்போகவதை வதைத்திட்டு
கரிவேடிக்கைபார்க்கும் நடத்தையைத்தொட்டு
பண்டுபேசியென்னைத் தெருவினில்விட்டு
பார்க்குளுமெயென்னை இருகண்களிட்டுதம்மா
கொண்டகொழுணனொரு பரஸ்த்ரிதன்னை
கூடிமருவிகுலாவுக்குதூஹலம் கண்டகுலஸ்த்ரீதன்மனதுபோலெ
கமரிக்கமரிகுமரி குமரிஅம்மா
அடுத்துத்தனகடக்கலமெண்டு எவத்தசொத்தை
ஆபத்தில்சேழ்க்கும்போ தார்கண்டாறெண்டுடில்
கொடுத்தகாடிவயறதுபோலெ குமரிகுமரிகமரிகமரிஅம்மா
கல்யாணப்பஞ்சம் கலப்பஞ்சமில்லையெண்டு
காசினியிலேலைகளுமிடுவ தண்டு
வலுமேவும்கல்யாணவாசலில் பசிச்சின்று
வதைத்துமடிவாயெண்டு வகுத்தானொஅயனெண்டுதம்மா

## விருத்தம்

புசிபலதும்மலைமலைபோல்பூவை மீனாக்ஷியம்பாள் போட்டதுக்க
பசியெரிவு திக திகென பத்தையில் குண்டோதரன்தான் பதரிக்கத்தி
உசருடலில்தரிகொள்ளாதமக்கு பழியொப்புமெண்டு
துசியதுவிட்டிளப்புயர்ந்து சொரனையத்து சளைபோட்டு சோகித்தானெ

தின்டதுண்டதெதும்மறந்து தெருவில்விழுந்தலரி எங்கும் சிறிக்கப்பேசி
வண்டகுண்டோதரன்படுத்திவாயசர்ந்து சோகமதுவாகிச்சாய
கண்டவுடன்விருந்திட்டுசடும்பகைவந்துத்ததெண்டு கலகலத்து
நின்றபடிஅங்கயற்கண்நீலகண்டர்ஸமுகம்வந்தகிற்கின்றாளெ

வந்துநிற்கும்தேவிமுகவாட்டமதும் விருந்துண்டவன்தன்னாலெ [ம்
சொந்தவெகுசள்ளைப்பட்டுசோக்கிவந்திங்குறைக்கநிற்கும் நுனுக்கப்பேச்சு
இந்துவணிஜகதீசர்ஹ்ருதயத்தில்தெரிந்திருந்தும் எதிரிவார்த்தை
மூந்துதர்க்குமிஞ்சிமொழிகுவார்விசித்திரமிகப்பொழிகுவாரெ

## தரு-கன்னி பந்துவராளி, ரத்தி

இந்துகுலமதில்வந்தவதாரம்செய்பெண்ணெ வெகு
இங்கிதமிஞ்சியஸ்ரீங்கார அங்கயற்கண்ணெ
சுந்தரமேவியசந்திரவதனமாம் மின்னெ வெல்லும்
செல்லும் செல்வாக்கும்கனமும் பொருந்திய பெண்னே
அஷ்டதிக்கும்ஜெயித்தண்டபுவனம் போத்தும் கீர்த்தி பெத்தாய்
அதைக்கூடதூக்குதெ கல்யாணவைபோகநேத்தி

இஷ்டமாகியபூஜாபலம்தந்தனுக்கிரகசட்டம் அதால்
இசைந்ததெஉனைதிருகல்யாணம்செய்ய மகத்திஷ்டம்
முன்னமெஇரண்டொருகல்யாணம் செய்தோம் நாம்தானெ இந்த
மேன்மைவரிசைக்குஈடல்லவேளதுவெல்லாம் நீதானெ
மன்னவரெவருக்கும் அவரவர்தேசம்மட்டும் செல்லுது உன்சொல்
வானோர்விண்திக்கெல்லாம் வழிகாத்தெதிர்காணவெல்லுது
இடம்பொருளேவல்முண்டுமொத்திருக்குதொருக்காலெ மனம்
இசைந்தபடிவிருந்துக்கிதமாய்சமைக்கிண்டாய்பேன்மேலே
குடல்புசிப்புள்ளவர் கூடிடனந்தம் கோடியுண்டு பின்னும்
குறையாமல்மலைபோலேகுமித்திருக்குதொமீதம்கண்டு
வானக்காமதேனுவைஈனப்படுத்தும்படி நினைந்து பல
வர்க்கத்துடனெ அன்னம்மலைமலையாய்ச்சமைத்தாய் முனைந்து
மீனக்கொடியுடனெ அன்னக்கொடியும்கட்டியிருக்குதொ இந்த
மேதினிச்செனமெல்லாம் மிகவும்வந்துஉண்டு செருக்குதெ
பசித்தொருசிறுதொண்டன்பறந்து வந்தவன்விருந்துண்டானொ வர்க்கம்
பலதும்தின்றுகுளிர்ந்துபழமையைமறந்திருக்கின்றானொ
பசித்தவயத்தைகொண்டசைத்துவரப்படவுமில்லையொ அல்லது
புருஷவயதுக்கும்உன்விருந்தெசதமாயெண்ணிவல்லையொ
எப்படிக்குமுண்டவன் இளப்பாறினஉடனெவாரானே வா
எண்ணமில்லாவிட்டால்எப்படிக்காகிலும்போறான்
குப்பலாயன்னம்மீந்ததுவிருந்துண்டாகுதொ இன்னம்
குவலயத்திலுள்ளோரனவரும்வரகிள்ளாக்கேருதொ
இன்னமும்வெகுதொண்டர்அன்னமன்னமெண்டெவந்திருக்கிறார்
உண்பதெவடம்சொல்லுமெண்டடிக்கடிவந்துநின்றெருக்கிறார்
அன்னமெஇன்னமீந்தஅன்னமத்தினைமலைகாணும் மனம்
அருக்களிப்பில்லாமல்உருக்கமாய்துகைசொல்லவேணும்
வெந்தசோரடங்கலும்மீந்திருந்தால்நொந்துபோகுமெ அப்படி
வீணாய்ப்போராது பெருபேருண்டால்பலனாகுமெ
வந்தவரைஅழைத்துவைத்துபடைத்திடும்இப்போதெ இன்னம்
வாரவாஅனுப்புறோம்மனவிஷனத்தைவிடுமாதெ

### விருத்தம்.

வலியவந்துவிலைகொடுத்துவஸத்துவலிவாங்கிக்கொண்டவாழ்வுபோலெ[ய்
ஜவலிபசி[illegible]டோதரனைசோருண்பதற்க்கழைத்திடத்தில்ஜோலிஉண்டா
கெலியதுகொ[illegible]ண்டிவடம்வரகேலிபண்ணும்படியானகெதிபாச்சென்று
கொலுவில்விளங்கிசர்தனைகும்பிட்டுப்பணிந்தேத்திக்கூருவாளெ

### தரு.—உசானி, ரூபகம்.

குண்டோதரனைகூப்பிடும் ஸ்வாமி
அவனுண்டதுபோதும் குவலயம்தப்பிப்பிழைக்களன்ஸ்வாமி
அண்டர்கள்துதித்தேத்தும்நீல கண்டரெஎன்கர்த்தரெஸ்வாமி
சண்டனைஉதைத்தபாதத்துக் காயிரம்
ஸாஷ்டாங்கம்தெண்டம்அபாருதம் ஸ்வாமிகுண்டோதரனை
மிச்சமிருந்தவெக்ஷம்மலைநேர்அமுதையுமுண்டு வாரி

மிளகுநீர், நெய், கழுநீர்கஞ்சி முழுதும்எடுத்துண்டு
பச்சைநெல், கொய், தவிடு முண்டு பனங்காய், தேங்காய், டலகாயுமுண்டு
வச்சதிமூண்டு உச்சம்கொண்டு
வந்தத்தையெல்லாம்வாரிவளைத்துண்ட குண்டோதரனை
அஷ்டயாமதில்சனிவயவருந்தி அளழத்தபாங்கதாய்தேடி
இஷ்டபர்திக்காள்வேணுமெண்டு இயப்பத்தீங்கதாய்
துஷ்டனுங்கவந்துவாச்சுது சொல்லுப்பல புதலத்துபோச்சுது
இட்டதெல்லாம் சாம்பலாகுதியாச்சுது
எவரும்கைசொட்டிகைக்கலாச்சுது குண்டோதரனை
கொடியபடைவாக்கினிலைய வயருய் குறித்துப்படைத்திட்டுஷேரில்
குழங்லைதர்காகாரம் இருந்தது கூட கொட்டி
அடைத்திட்டுமுடியஉலகை முழுங்கபார்த்து
முரடன்நிற்குருன் மூர்ச்சசம்கோர்த்து
அடியேன்குத்தம் பொருத்திடேர்த்து
ஆண்டவனேபொரும்அழகுள்ள கூத்த-குண்டோதரனை

விருத்தம்

திருமணம்பொருந்தானர்தம் திருப்தியாயளித்தன்பர்க்கு
மருமலர்பன்னீர்சொந்தம் மல்லிகை முல்லை சல்கி
கருவிழிகளித்து நோக்கிசருணைசெய்கருணாமூர்த்தி
தருணமிப்போதுஎன்னைதயவுசெய்தாளுவீரெ

தரு —இந்துஸ்தானி, காபி, ஆதி.

ஸமயமிதெகிருபைசெய்ஜெகதீசா ஸமயமிதெ
ஸனகாதிபர்துதிசெய்யும்மகேசா ஸமயமிதெ
இமையோர்புகழதி சுந்தரபாதா
இரவிபுனல்மதிசூடும் என்னுதா ஸமயமிதெ
நான்செய்தபூஜாபலன் வெகு சிலாக்கியம்
கன்றாகவாய்த்ததின்றை தினம்யோக்கியம்
வான்மதிகுலம்தழைத்தோங்கவோபாக்கியம் வளர்ந்திட
அளியும்வைபோகஸௌபாக்கியம் ஸமயமிதெ

விருத்தம்

செருவம்மிஞ்சிவிருந்துக்குசெணம்முழுதமனுப்பச்சொல்லி சேவிபண்ணி
சிருவன்வந்தவன்பசியைதீராமல் தேசமெங்கும் சிறிக்கவிட்டு [து
அருகங்கட்டை புளியங்கொட்டைஅகப்பட்டதைவாரிபோட்டலசல்செய்
விருவிரெண்டுவேந்துநிண்டுவீசாநு கியாயமோ விளம்புவாயெ

குடியோட்டுகொட்டமிட கொடிய குண்டோதரன்படுத்தும் கொள்கை
தன்னை, அடிசொட்டுநுணிவரையிலாகமமாய் சொல்வதர்க்காமடுக்கிடா
மல், இடிபட்டுகொந்ததலையினில்கொட்டருப்பெடுத்தடிக்கும் எழிலைப்
போலெ, வடிவுத்தமொடிசொல்வதுவண்மையல்ல காப்பது மெய்வரிசை
தானெ,

ஈட்டியிலுங்கூர்முனையாயிருக்கிற மீனாக்ஷிபடிந்தியம்பாசன்
ஆட்டியவிசித்திரம்விட்டடியவன் குண்டோதரனை அழைத்தமர்த்தி
கோட்டிகொள்ளும்பசிநீக்க கோதை அன்னபூரணியை உறித்துநோக்க
போட்டியதில்லையிரோடன்னம்பிசரிக்கொண்டோன்குழிபிறந்ததன்றே

புரிந்தகுழிகோன்கிலன்ன பூரணிஸம்பூர்ணமதாய் பொங்கும்போது
அருந்தவயோகியர்கள் போத்தாண்டவர்குண்டோதரன் மேலன்புகூர்ந்து
எரிந்தபசிதீர்த்துக்கொள்ளென்டியம்புகையில்மனம்பூரித்தெழுந்துபாய்ந்து
வரும்தயிர்சோரதைஅடுத்துவந்திட்டான்வாரியெடுத்துண்டிட்டானே

தரு—தன்யாசி, ரூபகம்.

உண்டானுண்டான் பசியை
குண்டோதரன் உண்டானுண்டான்ருசியாய்
உண்டானுண்டானன்னம் உண்டாகஉண்டாக
கொண்டாகொண்டாவெண்டு கொண்டாடிகொண்டாடிஉண்டான்
பாண்டியராஜேந்திரன் பாக்கியத்தலைச்செல்வி
பண்ணும்மாருபாட்டுக்கு அன்னபூரணவல்லி
பூண்டபசிப்பிணிபோக கிருபைபாலிக்க
பொங்கும்சோரதைவாரிபோடு போடெண்டுசொல்லிஉண்டானுண்டான்
லெக்ஷம்மலைபோல்மீந்திருந்த சோரதவுண்டு
இப்புவிவஸ்துவெல்லாம் தப்பறவாயுண்டு
அக்ஷயமாகபொங்கன்னக்குழி முன்னிண்டு
அனந்தப்பேரெடுத்திட அதட்டி
கொட்டுகொட்டெண்டு உண்டானுண்டான்
அங்கயற்கண்ணம்பாள் ஆள்விட்டுவரப்பட்ட
அமுதிலனந்தமலைக்கதிக மெடுத்துக்கொட்டி
பொங்கும்வடவாக்கினி புஜித்துச்சரிக்கட்ட
பூரித்துவீருட்டுபுகழ்ந்து கொட்டக்கொட்டஉண்டானுண்டான்

விருத்தம்.

உண்டகுண்டோதரன்பசியும்ஒருவழியாயொழிந்துவிடாயுழட்டநீல
கண்டரடியதில்பணிந்துகனதாகமெண்டியம்பகருணைகூர்ந்து
வண்டர்பூங்கொந்தளகவஞ்சிகெங்காபவானிதன்னைவையகத்தில்
அண்டர்துதித்தேத்தும் வைகை யாருக்கிமேர்க்கிலிருந்துஅழைக்கின்றாரே

தரு.—கல்யாணி, ரத்தி.

பெருகிவருகுதே வைகை பெருகிவருகுதே
பரிபூரணமாமதுராபுரிதன்னிலே பாங்கானசங்கரர்தன்னருளாகவே
இருபுறம்கரைபொங்கிப் பொழியவே
ஏகபிறவாகவைபோகமதாகவே பெருகிவருகுதே
சித்திரைச்சிலம்பனெண்டு போராகவே
தெளிவிலெகொஞ்சம் குழம்பலாகவே

| | |
|---|---|
| உத்திரசெங்காதிக் | இனையாகவெ |
| ஒக்கியெசொக்குநுரைகளுமாகவெ | பெருகிவருகுதெ |
| கெண்டையும்விராலும் | செபலும்சாயவெ |
| கெளிருவாளையும் | ளைச்பிப்பாயவெ |
| கண்டபேரைக்கண்டோர் | கர்மங்கள்தீயவெ |
| காசினியெங்கும்செல்விளைந்துகூறவெ | பெருகிவருகுதெ |
| அண்டர்முனிவர்கள் | தீர்த்தம்கொண்டாட |
| அஞ்சுடாதகமுப்பஞ்ச ய் | பரந்தோட |
| குண்டோதரன் | பசிகொடேக்கள்வாட |
| கோகிலங்கள்கூடிகூவிக்கூவிபாட | பெருகிவருகுதெ |

விருத்தம்.

பொய்கைகமுகெழில்தேங்குபூமலரும்த நஞ்சே லைபுனிதமேவும்
செய்கைநிறைமதுரைதனில்சிறந்தகெ கைபெருகிவெ ஜகதீசன்தான்
செய்கையதாய்கிருபைசெய்வதனதுத ோதரனெழுந்துசரணமெண்
ணைவகைவென்றுச்அதுகிமிஷம்வரும்கதிக் வந்திட்டானெ (டான்

வந்தகுண்டோதரனெழுந்துவைபோகமாகவரும் வைகையாத்தில்
முந்தஒருபெருக்கலுக்குமுளைத்துயர்ந்த உன்னதம்போல் முன்னிருந்து
பைந்தமிழ்செய் அகஸ்தியமுனிபகர்கடலை ஆசமனம் பண்ணினப்போல்
குந்தவைத்துவேண்டபடிகுடித்திட்டான் தமுகுமெண்டுகொள்ளுதன்றெ

தரு.—புன்னாகவராளி, ரூபகம்.

| | |
|---|---|
| கொள்ளுதுபார் | வைகைநதி |
| குண்டோதரன்வயத்தில் | கொள்ளுதுபார் |
| எள்ளளவுஜெலமுதலெடம் | வலம்பிசகாமல் |
| ஏகப்பிரவாகம்-வெகு-குமு-குமெண்டு | கொள்ளுதுபார் |
| கான்குதேசங்களும்பாய | கடுவிலேரிகட்டி |
| ஒக்குமலைவாரிவெல்லாம்ஒதுக்கிவிட்டால்போல்வந்து | கொள்ளுது |
| தேசப்புகழும்காவேரி | திருவலஞ்சுழிக்குள்ளெ |
| பாசம்வைத்துக்கொண்டது | போல் |
| பாசெக்கும்கிடுகிடெங்க | கொள்ளுதுபார் |
| குடிகொண்டவடவாக்கினி | கொழுந்துவிட்டெரிந்தது |
| தடிகண்டபாம்பதுபோலெதத்தளித்துபறந்தோட | கொள்ளுதுபார் |

விருத்தம்

இந்தவிதம்வைகைநதி இயம்பிரண்டுஜாமம் கொண்டெதிர்த்ததிப்பால்
வந்தகொடும்வடவைக்கனல்விலகிகுண்டோதரனுடைய மெய்மகிழ்ந்து
அந்தமிகுகுளிர்ச்சியுண்டாய்அதில் நீந்திவிளையாடி அமர்ந்தெழுந்து
சுந்தரஞ்சேர்மீனாக்ஷிதாந்தரிதன்பதம் பணிந்துதுதிசெய்வானெ

## தரு.—கல்யாணி, ரத்தி.

குளிர்ந்தது குளிர்ந்ததம்மா
அடியேன்வயர்
குளிர்ந்தது
குளிர்ந்ததம்மா
தளர்ந்திடாமலன்பர்தங்களை
தற்காத்தாதரிநயாமீனாக்ஷி
சங்கரிஉந்தனருளாலெ
எங்கலையன்தர்தவைகையாலெகுளிர்ந்தது
காதலும்நீரும்வாதுபேசி
நடுவிலெந்தனை வைதயவிட்ட
வேதனைதீர்ந்து பிழைக்கல்ல
வேளையாய்கெல்லை
ஏழைமுகம்பார்க்க
குளிர்ந்தது
தலையைத்தேடிவந்தசத்துரு
தலைப்பாகைகொண்டுதலைந்ததுபோலெ
குலையைப்பத்தி
எரிந்திடக்கினி
குளிர்ந்ததண்ணீராகுடித்துநீங்கி
குளிர்ந்தது

## விருத்தம்.

நீதிபெருந்தவமகிமைநிறைந்தகுண்டோதரன்டசிவிடாய்நிவர்த்தியாகி
பாதிமதிசிரமணிந்தபரமசிவன்ஸமூகம்வந்துபணிந்துநின்டான்
ஓதியவைவைகைநதியும் ஓங்குகடலதைநோக்கியோடினாளும்
மேதினியிற்சிறந்திருக்கமீனாக்ஷிமனமகிழ்ந்துவீற்றிருந்தாள்

இனஞ்சூழ்ந்து இவ் விதத்தில்திருக்கல்லியாணம்
இன்பமதாய்நிறைவேற்றிவற்றைகைசெய்து
மனமகிழ்ந்தனைவர்க்கும்மதுரைச்செங்கோல்
வளர்ந்தோங்குசெலுத்ததர்க்குமன்னருக
கனம்பொருந்துவாஸரானகடவுளை
ஸுந்தரபாண்டியகர்த்தரெண்டு
தினம்பொருந்திமகுடாபிஷேகம்செய்து
தேவர்களும்யாவர்களும்தெரிசித்தாரெ

## தரு.—கல்யாணி, ஆதி.

மகுடாபிஷேகம்
கொண்டார்
ஸுந்தரேஸ்வரர்
மகுடாபிஷேகங்கொண்டார்
ஜெகம்புகழ்ந்திடும்மதுராபுரி
மீனாக்ஷி
தேவியைகல்யாணம்செய்து ஸ்ரீநவைப் ஆக்ஷி மகுடாபிஷேகம்கொண்டார்
அன்புகந்தருபதனுயிரம்வளருண்டு ஆருமதுதித்திடஅரசாக்ஷியதையாண்டு
இன்பமதாய்பணிந்தேத்தடியவர்
வேண்டும்
இஷ்டகாமியமீந்துராக்ஷிக்கிருபைபூண்டு
மகுடாபிஷேகப்கொண்டார்
சந்திரகுலம்கீர்த்தி
சித்தங்கலங்கி
எரிந்தபசியால்தெரிந்துதெரியாமல்
பிதத்தினேன்
குத்தமெல்லாம்பொருத்தாளுப்லெக்ஷம்
கும்பிட்டேன்
கும்பிட்டேன்தேவி
மீனாக்ஷிகுளிர்ந்து
தழைத்திடவேணுமெண்டு
மகுடாபிஷேகபகொண்டார்
ஸகலபுவனத்துக்கும்தான்
சக்கிரவர்த்திஎண்டு
ஸஹஸ்தருஜர்களும்ஸமூகத்தில்
வந்துநிண்டு
ஸுந்தரபாண்டியதுரந்தரகர்த்தரெண்டு
சொல்லும்நாமகரணம்

ஸுந்தரமாய்வைத்துக்கொண்டு
மகுடாபிஷேகம்கொண்டார்
திங்கள்மும்மாரிபெய்ய
தேசமெங்கிலுமமோக
செல்வமும்தர்மமும்
சிறந்தோங்கி எழிலாக
மங்கைமீனாக்ஷி
மகாராஜிஸமேதராக
மதுராபுரியில்வாளும்
வாழ்க
ஸுந்தரமாக
மகுடாபிஷேகம்கொண்டார்

விருத்தம்.

தங்கர்துதித்தேத்தியஸ்ரீஸுந்தரபாண்டியர்மகுடம்சூட்டிக்கொண்டு
பங்கயன்மால்இமயவர்கள்பலருக்கும்வெகுமானபாகுசெய்து
சங்கம்புகழ்த்திடும்யோகசிவபூஜாமீனாம்பாள்ஸமேதராக
மங்களமாமதுரையதில்மகாராஜராஜராய்ஆளும்வாழ்கின்றாரே.

மங்களம் பூபாளம், திருபுடை.

ஸ்ரீசுந்தரேசுவரர்க்கும்
செல்வமீனாம்பிகைக்கும்
ஜெயமங்களம்
நித்தியசுபமங்களம்
பார்புகழ்மலயத்தவஜர்
பாண்டியமகாராஜருக்கும்
சீர்பெரும்பதிவிருதாசிரோமணிகாஞ்சனைக்கும்
ஸ்ரீசுந்தரேசுவர
ஐங்கரர்க்கும்-சேவலவர்க்கும்
அஷ்டதிக்குபாலகர்க்கும்
பங்கயர்க்கும்-மாயவர்க்கும் பாரதிக்கும் லக்ஷிமிக்கும்
ஸ்ரீசுந்த
சந்திர- ஸூரியருக்கும்
ஸத்குருசதாகர்த்தருக்கும்
மந்திரமாதவர்க்கும்
மன்னவர்க்கும்
விண்ணவர்க்கும்
ஸ்ரீசுந்தரேசுவரர்
தேவிஅம்பிகை
மீனாக்ஷிதிக்குவிஜயநாடகம்
மேவியஸ்ரீங்காரமதாய்
விளம்பசனத்தம்பிக்கும்
ஸ்ரீசுந்தரேசுவரர்க்கும்
செல்வமீனாம்பிகைக்கும்
ஜெயமங்களம்
நித்தியசுபமங்களம்

வாழி விருத்தம்.

மதிகதிரவைப்போல் மண் விண் வாழி மாதவர் மன்னர்வாழி
விதி ஹரி வேதம்வாழி விமலசெம்மலை வாழி
துதிசுந்தரேசுவரர்வாழி சோலை மீனாக்ஷி வாழி
இதுகதையைப்படிப்போர் யாவரும் வாழி வாழி

வாழி எம்மன்னர்வாழி வையகமெங்கும் வாழி
எழில்பெரும்யூராந்தன்னில் இலங்கிடும்விடையோன்வாழி
ஆழியிற்பள்ளிகொள்ளும் அன்பனும் மாயோன் மங்கை
வாழ்பெருமங்கையற்கண் வாழி நீடூழிவாழி

முற்றிற்று.

170148